தமிழ்மொழியைக் காப்பதற்கும் தமிழ்ப்பகையை அழிப்பதற்கும்
தக்கபடைக் கருவிகளைக் கையிற் கொள்வீர்
அமைந்தாய்ந்து பாவாணர் எழுதிய நூல்களெல்லாம்
அணுக்குண்டு அணுக்குண்டு! அவற்றைக் கற்றால்
உமித்தூளாய்ப் பகையெல்லாம் ஓடிவிடும் இலையென்றால்
ஒண்டவந்த பகைநம்மை அழித்துப் போடும்
நமதருமைத் தமிழன்பீர்! வாழ்தற்கு நினைப்பீரேல்
நாள்தோறும் பாவாணர் நூல்கள் கற்பீர்.

– கு.பூங்காவனம்


'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

41

# பாவாணர்

## தமிழ்க்களஞ்சியம்-41



இலக்கணக் கட்டுரைகள்

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்

## தமிழ்க் களஞ்சியம்

41

## இலக்கணக் கட்டுரைகள்

ஆசிரியர்

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | |
|---|---|
| நூற்பெயர் | : **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 41** |
| ஆசிரியர் | : மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : 2001 |
| மறு பதிப்பு | : 2009 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 8 + 144 = 152 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **140/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**“பெரியார் குடில்”**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,

35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,

சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in

இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்க்குடிமகன்*** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* ***இளவரசு*** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* ***இளங்குமரனார்*** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

*ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து* ***தங்கம்*** *ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து* ***முத்துக்*** *குளிக்கப் படுவது ஏன்?* ***பவழப்*** *பாளங்களை எடுப்பது ஏன்?* ***வயிரம்*** *முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?*

*அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய* ***வைப்பு வளமாக*** *இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு* ***அடிமணை யாகவும்*** *இவை இருப்பதால் தானே!*

*இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை* ***சான்றோர் நூல்கள்!***

*காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும்* ***அறிவுக் கருவூலமாம் நூல்கள்!***

*ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய* ***தாய் நூல்களாம்*** *பேறமைந்த நூல்கள்!* ***சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!***

*நுண் மாண் நுழைபுலத்* ***தாய் நூல்களாய் இருப்பினும்!*** *அவற்றைத் தாங்கிய* ***தாள்கள்,*** *எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!*

***கல்லெழுத்தே,*** *கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!*

***ஏட்டு வரைவுகள்,*** *நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்*

*பாட்டியர் வைத்த* **பழந்தேட்டென்ன** *அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது* **நூற்பதிப்பர்** *தவிராக் கடமையல்லவோ!*

*அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்நுணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆள்நரும் தத்தம் மூச்சுக் கடனாக,* **நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

**மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்** *ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் 32. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் 12. இன்னும்* **எட்டாத தொகுப்பும்** *அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!*

**கடித வரைவு பா வரைவு** *என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!*

*இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?*

*ஆதலால்,* **சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

*இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தகு* **கோ. இளவழகனார்,** *தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம்* **மீள்பதிப்பை வழங்குகிறார்!** *தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

**இன்ப அன்புடன்**

**இரா. இளங்குமரன்.**

# உள்ளடக்கம்


பக்கம்

பதிப்புரை ... iii

வான்மழை வளசிறப்பு ... v

**நூல்**

1. தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புரை ... 1
2. இலக்கணவுரை வழுக்கள் ... 7
3. உரிச்சொல் விளக்கம் ... 19
4. ஙம் முதல் ... 29
5. தழுவுதொடரும் தழாத்தொடரும் ... 32
6. நிகழ்கால வினை ... 35
7. படர்க்கை 'இ' விகுதி ... 43
8. காரம், காரன், காரி ... 50
9. குற்றியலுகரம் உயிரீறே (1) ... 56
10. குற்றியலுகரம் உயிரீறே (2) ... 64
11. ஒலியழுத்தம் ... 81
12. தமிழெழுத்துத் தோற்றம் ... 87
13. நெடுங்கணக்கு (அரிவரி) ... 92
14. தமிழ் எழுத்து மாற்றம் ... 99
15. தமிழ் நெடுங்கணக்கு ... 105
16. 'ஐ ஔ' 'அய் அவ்' தானா? ... 116
17. எகர ஒகர இயற்கை ... 126
18. உயிர்மெய் வரிவடிவுகளின் ஓரியலின்மை ... 136

தாய்மொழிப்பற்றே தலையாயப்பற்று ... 143

# இலக்கணக் கட்டுரைகள்

# 1

# தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புரை

தொல்காப்பியர் அகத்தியர் மாணவரேனும் தொல்காப்பியத்திற்கும் அகத்தியத்திற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. மக்களுக்கு அறிவும் ஆற்றலும் ஆயுளும் மிக்கிருந்த அகத்தியர் காலத்து நூல்களில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட பல இலக்கணங்கள், அவை குறைந்த தொல்காப்பியர் காலத்தில் விரிவாகக் கூறப்பட வேண்டியவாயின. அதற்கென்றே தொல்காப்பியர்,

**"தமிழ்கூறு நல்லுலகத்து**
**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ண"**

வேண்டியதாயிற்று. அல்லாக்கால் அகத்திய முள்ளிட்ட முதனூலாராய்ச் சியே அமைந்திருக்கும். இதுபோதுள்ள இலக்கண நூல்கள் எல்லா வற்றுள்ளும் தொல்காப்பியம் முழுமதி போன்ற ஒரு தனிச் சிறப்பினதேனும் அதனிடத்துள்ள களங்கங்களையும் 'உண்மை யுரைத்தல்' என்னுமோர் மதம்பற்றி ஈண்டெடுத்துக் கூறுதல் இழுக்காகாது. இஃதோர் அடக்க வழுவமைதி யென்றே கொள்க.

குறிப்புகள் வருமாறு:

1. **"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
**அஐ ஔஎனும் மூன்றலங் கடையே."** (தொல். எழுத்து. 62)

**"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி**
**சளிசகடு சட்டை சவளி - சவிசரடு**
**சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்**
**வந்தனவாற் சம்முதலும் வை."**

என்பது நன்னூல் மயிலைநாதர் உரை மேற்கோள். (நன். 51).

தமிழில் இதுபோதுள்ள சகரமுதற் சொற்கள் நூற்றுக்கு மேற்படு கின்றன. சொற்களெல்லாம் ஆதியிலேயே அமைந்துள்ளன. ஒலிக்குறிப்புச் சொற்களும் பிற குறிப்புச் சொற்களுமே புதிது புதிதாய்த் தோன்றுவனவாம்.

சங்கிலி, சந்தம், சலி, சடுதி, துப்பாக்கி, குடாக்கு, கிண்கிணி, சதங்கை, மிருதங்கம் போல்வன ஒலிக்குறிப்புச் சொற்கள் (onomatopoeia). சடை, சருச்சரை, சப்பாணி, பச்சை, மதர்ப்பு, மெத்தை முதலியன பிற குறிப்புச் சொற்கள். ஆங்கிலத்தில் சொற்கள் புதிது புதிதாய்த் தோன்றுகின்றனவே யெனின், அவை பிற மொழிகளினின்றும் கடன் கொண்ட திசைச்சொற்களே யன்றிப் புதுச் சொற்க ளாகாவென மறுக்க. ஒருசார் திரிசொற்களும் (Derivatives) புதிதாய்த் திரிக்கப்படுவனவாம். சட்டி, சக்கை, சண்டை, சதை, சப்பு, சமை, சரி, சற்று முதலிய செந்தமிழ்ப் பழஞ் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழிலில்லை யென்று சொல்லுதல் எள்ளளவும் பொருந்தா தென்பது அவற்றின் பொருளை ஆராய்வார்க்கு எளிதிற் புலனாகும்.

**2. "குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்"** (தொல். எழுத்து. 67)

என ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு குற்றியலுகரம் மொழிக்கு முதலாம் என்றாராலோ வெனின்,

**"நுந்தை யுகரங் குறுகி மொழிமுதற்கண்**
**வந்த தெனினுயிர்மெய் யாமனைத்துஞ் - சந்திக்**
**குயிர்முதலா வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின்றி**
**மயலணையு மென்றதனை மாற்று."**

இதை விரித்துரைத்து விதியும் அறிந்துகொள்க" என்பது நன்னூல் மயிலைநாத ருரை. (நன். 51)

**3. "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**
**னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப**
**புகரறக் கிளந்த அஃறிணை மேன"** (தொல். எழுத்து. 82)

என்று எகின், செகின், எயின், வயின், குயின், அழன், புழன், புலான், கடான் என வரும் ஒன்பதும் மயங்காதனவெனக் கொள்ளின், பலியன், வலியன், வயான், கயான், அலவன், கலவன், கலுழன், மறையன், செகிலன் முதலாயின மயங்கப் பெறாவென மறுக்க" என்பது நன்னூல் மயிலைநாதருரை (நன். 67).

**4. "ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
**ஒற்றிய தகரம் றகரம் ஆகும்."** (தொல். எழுத்து. 445)

ஒன்பதிற்கு முதலாவது வழங்கின பெயர் தொண்டு என்பது. தொண்டு + பத்து = தொண்பது - தொன்பது - ஒன்பது. ஒன்பது = 90. எழுபது எண்பது ஒன்பது என்று ஒப்புநோக்குக.

தொண்டு + நூறு = தொண்ணூறு = 900. எழுநூறு, எண்ணூறு, தொண் ணூறு என்று ஒப்புநோக்குக.

தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் = 9000. ஏழாயிரம், எண்ணா யிரம், தொள்ளாயிரம் என்று ஒப்புநோக்குக.

தொண்டு என்னும் பெயர் எங்ஙனமோ தொல்காப்பியர் காலத்தில் உலக வழக்கற்றது. ஆயினும் செய்யுள் வழக்கிலிருந்தது. தொல்காப்பியரே தம் நூலில் தொடைத்தொகை கூறுமிடத்து,

**"மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே**
**ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு**
**தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்**
**றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே"** (தொல். 1358)

என்று கூறியுள்ளார்.

தொண்டு என்னும் ஒன்றாம் தானப்பெயர் மறையவே பத்தாம் தானப் பெயர் ஒன்றாம் தானத்திற்கும் நூறாம் தானப்பெயர் பத்தாம் தானத்திற்கும், ஆயிரத்தாம் தானப்பெயர் நூறாம் தானத்திற்கும் கீழிறங்கி வழங்கத் தலைப்பட்டன. பின்பு ஆயிரத்தாம் தானத்திற்கு ஒன்பதாயிரம் என்ன வேண்டியதாயிற்று. சொற்படி பார்ப்பின் ஒன்பதினாயிரம் 90 x 1000 = 90000 ஆகும்.

ஒன்று முதல் பத்துவரை ஏனை யெண்ணுப் பெயர்களெல்லாம் தனி மொழிகளாகவும் ஒன்பதுமட்டும் தொடர்மொழியாயு மிருத்தல் காண்க. தொன்பது என்னும் பெயரே முதன்மெய் நீங்கி ஒன்பது என வழங்கும். தெலுங்கில் முதன்மெய் நீங்காது தொனுமிதி எனவே வழங்குகின்றது.

சொற்கள் எங்ஙனம் நிலைமாறினும் புணர்ச்சி செய்யுங்கால் சொற்றொடர்ப்படியே செய்யவேண்டும். அஃதன்றி ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் எனப் புணர்த்து விகார விதியுங் கூறுதல் புணரியலொடு மாறுபடுவ தொன்றாம்.

5. **"ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ ஆகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும்."** (தொல். எழுத்து. 463)

இதுவுமது.

6. **"நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே"** (தொல். எழுத்து. 325)

**"அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வயின் ஈவர**

**இய்யிடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை ஆகும்"** (தொல். எழுத்து. 326)

இவற்றைப் பிரயோகவிவேக நூலார் பற்றுக்கோடாகக் கொண்டு,

"இனித் தொல்காப்பியரும், தமிழில் 'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' என்றாராயினும், வடநூலில் எழுவாய்வேற்றுமை இவ்வா றிருக்குமென் றறிதற்கு நும் என்னுமொரு பெயரை மாத்திரம் எழுவாய் வேற்றுமை யாக்காது பிராதிபதிக மாக்கி, பின்னர் நும்மை நுங்கண் என இரண்டு முதல் ஏழிறுதியும் வேறுபடுத்து வேற்றுமை யாக்கினாற் போல, 'அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை' என்னுஞ் சூத்திர விதிகொண்டு நீயிரென வேறுபடுத்து, எழுவாய்வேற்றுமை யென்னும் பிரதமாவிபத்தி யாக்குவர். இவ்வாறு நின், தன், தம், என், எம், நம் என்பனவற்றையும் பிராதிபதிகமாக்கி, பின் நீ, தான், தாம், யான், யாம், நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய்வேற்றுமை யாக்காமையானும், 'எல்லா நீயிர் நீ' எ-ம். 'நீயிர் நீயென வரூஉங் கிளவி' எ-ம் பெயரியலுள் பெயர்ப் பிராதிபதிகமாகச் சூத்திரஞ் செய்தலானும், 'அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை' என்னுஞ் சூத்திரத்தை வடமொழிக்கு எழுவாய்வேற்றுமை இவ்வாறிருக்குமென்று தமிழ்நூலார் அறிதற்கே செய்தாரென்க. நிலைமொழி விகாரமொழி எட்டாம் வேற்றுமை யானாற்போல நும்மென்னு நிலைமொழி விகாரம் முதற் வேற்றுமையா மென்க" எனக் கூறியுள்ளார் (பிர. சூ. 7, உரை).

நீயிர் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர் வேற்றுமைப்படும் போது நும் என்று திரியுமேயன்றி, நும் மென்னும் வேற்றுமைத் திரிபு பெயர் நீயிரென்று திரியாது.

| **முன்னிலைப் பெயர்கள்** | **வேற்றுமைத் திரிபு** |
|---|---|
| நீன் - நீ | நின் - நுன் - உன் |
| நீம் | நும் - உம் |
| நீம் + கள் = நீங்கள் | நுங்கள் - உங்கள் |
| நீ + இர் = நீயிர், நீவிர் - நீர் | நும் - உம் |

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்னும் தென்னாட்டுலகவழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற்போல, நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப்படு கின்றது. நீனுக்குப் பன்மை நீம் என்பது. மகரம் பன்மைப் பொருளுணர்த் தலை ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம். நீங்கள் என்பது விகுதிமேல் விகுதி பெற்ற இரட்டைப் பன்மை. நீவிர் என்பது இலக்கணப் போலி. நீயிர் என்னும் சொல்லே நீர் என இடைக்குறைந்து நின்றது. இங்ஙனமன்றி நும் என்பது நீயிர் எனத் திரியுமென்றல் ஒன்பது + பத்து = தொண்ணூறு என்றதனோ டொக்குமென்க.

7. **"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
**றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே."** (தொல். சொல். 397)

**"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."** (தொல். சொல். 401)

இச் சூத்திரங்களால் மொழியாராய்ச்சி சிறிது முட்டுப்படுகின்றது.

வடசொற்கள் தொல்காப்பியர் காலத்து நூல்களில் வழங்கினவாகத் தெரியவில்லை. தொல்காப்பியத்தில் வடசொல்லென் றையுறக் கிடக்கும் சில சொற்கள் செந்தமிழ்ச் சொற்களே. இடப்பெயரும் இயற்பெயருமான சில வடசொற்களே வடவெழுத் தொருவியும் ஒருவாதும் வழங்கியிருத்தல் வேண்டும். அல்லாக்கால் தென்சொற்களே வடசொற்களாகத் திரிபுணர்ச் சியாற் கருதப்பட்டிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் சுருக்கமாகக் குறித்துள்ள வடசொல்லைப் பவணந்தியார் விரிவாகக் கூறிவிட்டனர்.

## வடசொல்லாகாத் தென்சொற்கள்

**ஐயன்** : தந்தையைக் குறிக்கும் தமிழ் முறைப்பெயர்; அரசன், ஆசிரியன், தந்தை, அண்ணன் என்னும் நாற்குரவரையுங் கடவுளையும் அந்தணனையும் முனிவனையும் பெரியோனையும் பொதுவா யுணர்த்துவது; ஆரியன் என்பதின் சிதைவன்று. பெண்பால் ஐயை.

**ஆசிரியன்** : ஆசு + இரியன். ஆசு = குற்றம், இரிதல் = போக்குதல்.

**அந்தணன் :"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்"** (குறள். 30)

**இராவணன்** : இராவண்ணன். இரா = இருள் = கருமை.

**"இருள்நிறப் பன்றியை ஏன மென்றலும்"** (தொல்.பொருள். 613)

**கும்பகர்ணன்** : கும்பகன்னன். கன்னம் = காது.

**இராக்கதன்** : இரா + கதன்; கதி + அன் = கதன்.

கதி = செலவு; இரவில் செல்லுபவன்; இதே பொருளில் நிசாசரன் என்பர் வடமொழியில். நிசி = இரவு; சரம் = செலவு. இராக்கதன் - இராக்கன் - அரக்கன். ராக்ஷஸன் என்பதன் திரிபன்று. அரக்கன் என்பதற்கு அழிப்பவன் என்றும் பொருள் கூறலாம்.

இத்துணையும் சில மாதிரிக் கெடுத்துக் கூறப்பட்டன. இங்ஙனமே ஏனையவும். இவற்றின் விரிவை யெல்லாம் எமது 'முதற்றாய்மொழி'யிற் கண்டுகொள்க.

1. **"உச்ச காரம் இருமொழிக் குரித்தே."** (தொல் எழுத்து. 42)

உசு, முசு என்ற இரு சொற்களே யன்றி, பசு, கொசு முதலிய பிறவும் உச்சகார வீற்றுச் சொற்களாதல் காண்க. பசுவென்பதை ஆரியச் சிதை வென்பர் நச்சினார்க்கினியர். அது அஃதன்று.

**2. "ஒன்றறி கிளவி தறட வூர்ந்த**
**குன்றிய லுகரத் திறுதி யாகும்"** (தொல். சொல். 491)

து ஒன்றுமே அஃறிணை ஒருமை விகுதியாம். ஏனைய அதன் புணர்ச்சித் திரிபாம்.

எ-டு : போ + இன் + து = போயிற்று.
போ + இன் + அ + து = போயினது.
பால் + து = பாற்று.
தாள் + து = தாட்டு, குறுந்தாட்டு.
கண் + து = கட்டு, குண்டுகட்டு.

**3. "அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்**
**அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்**
**விளியொடு கொள்ப தெளியு மோரே."** (தொல். சொல். 153)

அம்ம என்பது முறைப்பெயரோடு சிவணாமைக்கு எத்துணையோ காலஞ் சென்றிருத்தல் வேண்டும். அம்ம என்னும் முறைப்பெயர் விளியே கேட்பிக்கும் பொருளில் வரும். அம்மையும் அப்பனுமாகிய இருமுதுகுர வரும் ஒருவர்க்கு முன்னறி தெய்வமும் இன்றியமையாதவரு மாதலின், அவர் பெயரே பெரும்பாலும் விளி, வியப்பு, முறையீடு முதலிய பொருள்களில் வரும்.

எ-டு : அம்மை - அம்மே! அம்மா!
ஐயன் - ஐய! ஐயோ!
அன்னை - அன்னே! அன்னோ!
அப்பன் - அப்பா!
அச்சன் - அச்சோ!
அத்தன் - அத்தோ! அந்தோ! (மெலித்தல்)

**4. "ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த**
**குன்றிய லுகரத் திறுதி யாகும்."** (தொல். சொல். 217)

இது முன்னர்க் கூறப்பட்டது.

**5. "ஆஏ ஓஅம் மூன்றும் வினாஅ"** (தொல். எழுத்து. 32)

இதில் எ, யா கூறப்படவில்லை. எ, ஏகாரத்தினும், யா, ஆகாரத்தினும் அடங்குமெனக் கொண்டார் போலும். நச்சினார்க்கினியர் உரையும் அஃதே.

**6. "ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே"** (தொல். எழுத்து. 72)

இதில் நொ பகுதியாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நோ என்பதே பகுதியாகி நொ எனக் குறுகி நிற்கும்.

| **ஏவல்** | **இ.காலம்** | **நி.காலம்** | **எ.காலம்** | **பெயர்** |
|---|---|---|---|---|
| நோ | நொந்தான் | நோகிறான் | நோவான் | நோய் |
| காண் | கண்டான் | காண்கிறான் | காண்பான் | காட்சி |

**- "செந்தமிழ்ச் செல்வி" துலை 1931**

# 2
# இலக்கணவுரை வழுக்கள்

## 1. ஒற்றளபெடை

"ஙஞண நமன" என்னும் நன்னூற் சூத்திரத்திற்கு,

சூத்திரத்துக் கூறப்பட்ட பத்தொற்றும் ஆய்தம் ஒன்றுமாகப் பதினோ ரெழுத்தும், குறிற்கீழிடை, குறிற்கீழ்க்கடை, குறிலிணைக் கீழிடை, குறி லிணைக் கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுக்க ஒற்றள பெடை மொத்தம் நாற்பத்து நான்காம். அவற்றுள் ஆய்தமானது இயல்பீறாக வேனும் விதியீறாகவேனும் சொல்லுக் கீற்றில் வாராமையால் குறிற் கீழ்க்கடை குறிலிணைக் கீழ்க்கடை என்னும் இரண்டிடத்தையுங் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க என்றே முன்னைப் பின்னை உரையாசிரிய ரெல்லாம் உரைத்தார்.

குற்றியலுகரம் குறிற்கீழன்றிக் குறிலிணைக்கீழ் வாராதென்பது,

**"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே"**

என்னும் சூத்திரத்தாற் றெளிவாம். அதன் உரையிலும்,

**"விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத**
**ரிலஃஃகு முத்தி னினம்"**

என இவ்வாறு குறிலிணைக் கீழும் ஆய்தம் வருமாலோவெனின், அன்ன இயல்பாகவே ஆய்தமாய் நிற்பனவல்ல. ஓசை நிறைத்தற்பொருட்டு ஒற்றில்வழி ஒற்றாக்குதலின், ஈண்டு ஆய்தமும் ஒற்றாய் வருமெனக் கொள்க" என்றார் மயிலைநாதர். ஆகவே குறிலிணைக்கீழ் ஆய்தம் வாராதென்பது பெறப்பட்டது.

இனி, அல் + திணை = அஃறிணை, முள் + தீது = முஃடீது, அவ் + கடிய = அஃகடிய என விதியீறாய் ஆய்தம் வருதலின் ஈற்றில் வாரா தென்பதும் போலி யுரையென மறுக்கப்படும். ஆகவே, ஆய்தம் குறிற் கீழிடை குறிற்கீழ்க்கடை என்னும் ஈரிடத்தும் வந்து அளபெழும் என்றும், குறிலிணைக் கீழிடை குறிலிணைக் கீழ்க்கடை என்னு மீரிடத்தும் வாரா தென்றும், அவ் விரண்டிடத்தையுமே கழிக்க ஒற்றளபெடை மொத்தம் நாற்பத்திரண்டாம் என்றும் கண்டுகொள்க.

## 2. ஏவலொருமை

'நடவா மடிசீ' என்னும் ஏவல்வினைச் சூத்திர உரையில் செய் என்னும் பகுதியொடு ஆய் விகுதி புணர்ந்து செய்யாய் என நின்று, பின்பு அவ் விகுதி கெட்டு மீண்டும் செய் என நிற்பதே ஏவலொருமை யெனச் சிலர் உரைத்தார்.

விகுதி புணர்ந்து கெடுவது இங்கிலீசு சமற்கிருதம் போன்ற ஆரியமொழிகட் கியல்பேயன்றித் தமிழுக்கியல்பாகாது. Cut, set என்னும் வினைகள் இறந்த காலத்தில் விகுதி பெற்றிழந்து மீண்டும் பகுதி யளவாகவே யிருக்கும்.

விகுதி புணர்ந்து கெடுவதாயின், அங்ஙனம் கெடாத சில வினைகளு மிருத்தல்வேண்டும். அங்ஙன மின்மையின் செய் என்னும் வாய்பாடே ஏவலொருமை யென்று துணியப்படும்.

மேலும், செய்யாய் என்பது முன்னிலை எதிர்மறை ஒருமை எதிர்கால வினைமுற்றுச் சொல். அது ஓசை வேறுபாட்டான் வேண்டு கோளாங்கால் செய்யாயா என வினாப்பொருள் பட்டுப் பின்பு அவ் வினாவே செய் என உடன்பாட்டுப் பொருள் தந்து நிற்கும்.

ஏவலொருமை விகுதி புணர்ந்து கெடுவதாயின் ஏவற்பன்மையும் விகுதி புணர்ந்து கெடல் வேண்டும். அங்ஙனம் கெடாமையின், ஒருமை விகுதி மட்டும் புணர்ந்து கெடுமென்றல் பொருந்தாது.

இன்னோரன்ன இடங்களிலெல்லாம் வடமொழியியல் வேறு தென்மொழியியல் வேறு என்பதைத் தெற்றென வுணர்தல் வேண்டும். அங்ஙனம் உணராதாரே,

**"செய்என் ஏவல் வினைப்பகாப் பதமே"**

என வெள்ளிடையாய் ஆசிரியர் கூறினும் அதனையும் உணராது இவ்வாறு மயங்கக் கூறுவர்.

## 3. தொழிற்பெயர் விகுதி

பாடு என்பது ஒரு தொழிற்பெயர் விகுதி யென்றும், கோட்பாடு என்பது அதற்குதாரண மென்றும் மாணவர்க்குப் பாடமாயுள்ள இலக்கணங்க ளெல்லாம் மயங்கிக் கூறாநிற்கும்.

கோள் என்பது ஒரு முதனிலை திரிந்த தொழிற்பெயர். பின்பு படு என்னும் துணைவினை சேர்ந்து அதுவும் முதனிலை திரிந்து பாடு என்றாயிற்று. பாடு என்பது விகுதியாயின் கோள் என்பது பகுதியாதல் வேண்டும். அங்ஙனமாகாமையின் அஃதுரை யன்மை யறிக. புறப்படு, கடப்படு என்பவை புறப்பாடு கடப்பாடு என்றானாற்போலக் கோட்படு என்பதும் கோட்பாடு என்றாயிற்று.

வாய்பாடு என்பதிலோ வெனின் அதிலும் படு என்னும் துணை வினையே முதனிலை திரிந்ததாதல் வேண்டும்.

## 4. எழுவாயுருபு

**"அவற்றுள்,**
**எழுவா யுருபு திரிபில் பெயரே"**

என்னும் சூத்திர வுரையில், தமக்கென வாராய்ச்சி யின்றிச் சுவாமிநாத தேசிகர் போன்ற பிறர் கூற்றுகளையே கொண்டு கூறும் ஒருசார் ஆசிரியர்,

"எழுவாய் வேற்றுமைக்கு ஐ முதலானவை போன்ற உருபு இல்லா திருந்தாலும், உரையிற்கோடல் என்கிற உத்தியால் ஆனவன், ஆகின்றவன், ஆவான்; என்றவன், என்கின்றவன், என்பவன்; அவன் முதலாக ஐம்பாலி லும் வருகிற சொல்லுருபுகள் உண்டெனக் கொள்க" என்று வழுப்பட வுரைத்தனர். அவர் தமிழிலக்கணத்தையே அறியார்.

எழுவாய்க்கு இயற்கை வடிவன்றி வேறுருபில்லை யென்று தொல்காப்பியமும் நன்னூலும் துலங்கக் கூறும்.

ஆனவன் முதலிய மூன்றும், என்றவன் முதலிய மூன்றும் முறையே ஆ (ஆகு), என் என்ற வினைப்பகுதிகளினின்றும் பிறந்த வினையாலணை யும் பெயர்கள். வேற்றுமை உருபெல்லாம் பெயர்க்கு ஈறாயன்றித் தமித்து வாரா. இடைச்சொல்லாதலின் தமித்து வருவதும் பெயர்ச்சொல்லா யிருப்பதும், ஐம்பால் காட்டுவதும் அவற்றுக்கு இலக்கண மாகா. ஒரு பெயர்க்கு மற்றொரு பெயர் உருபாய் வருமென்றல் எட்டுணையும் பொருந்தாத தொன்றாம்.

கொண்டு, நிமித்தம் முதலிய வினையும் பெயரும் பிற வேற்றுமை களுக்குச் சொல்லுருபாய் வருமே யெனின், அவையும் அவ்வவ் வேற்றுமைப் பொருள்பட வருமே யன்றி அவைதாமே வேற்றுமையுரு பன்மையும், இடைச்சொல் லாகாமையும் அறிந்துகொள்க.

ஆனவன் முதலிய ஆறு பெயர்களும், சாத்தன், சாத்தி என்ற பெயர்களைப் போலவே ஆனவனை, ஆனவனால், ஆனவனுக்கு என எண் வேற்றுமைப்படுதலின், அவை பெயர்களேயன்றி வேற்றுமை யுருபாகாமை யறிக. பெயருக்கு வேற்றுமை யன்றி வேற்றுமை யுருபிற்கு வேற்றுமை யின்று.

சாத்தன், சாத்தி முதலிய பெயர்கள் மிகக் குறுகி யிருத்தலின், கட்டுரை வகையான் ஓசை நீடற்பொருட்டு சாத்தனானவன், சாத்தியானவள் என்று சிலராற் கூறப்படுவதன்றிப் பிற வேற்றுமை யுருபுகளைப் போல எவ்விடத்தும் எல்லாரானும் கூறப்படுவதல்ல.

ஆகவே முதல் வேற்றுமைக்கு உருபுண்டென்பது போலியுரையென மறுக்க.

## 5. எழுவாய்ச் சொல்

எழுவாய் பெயர்ச்சொல்லாகவே யிருக்குமென்று இதுகாறும் எல்லாச் சிற்றிலக்கணங்களுள்ளும் கூறப்பட்டது. அது ஆராய்ச்சியின்றி வழிவழி வந்ததோர் கூற்றாம்.

எழுவாய் நிகழ்கால வினையெச்சமாகவும் இருக்கும்.

எ-டு : அவனுக்குப் பாடத் தெரியும் = அவனுக்குப் பாட்டுத் தெரியும்.

பாட என்பது எழுவாய்.

ஆங்கிலத்தில் infinitive mood (நிகழ்கால வினையெச்சம்) எழுவாயாய் வருதலை ஒப்புநோக்குக. இன்னோரன்ன இடங்களிலெல்லாம் ஒத்துப் பார்வை இலக்கணமே (Comparative Grammar) பயன்படு மென்க.

இனிச் செயப்படுபொருளும் எழுவாய் போல நிகழ்கால வினை யெச்சமா யிருக்குமென்றறிக.

எ-டு : அவன் பாடத் தெரிந்துகொண்டான் = அவன் பாட்டைத் தெரிந்துகொண்டான்.

பாட செயப்படுபொருள்.

## 6. உரிச்சொல் (Poetic Diction)

**"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**

**.............................................................**

**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"** (தொல்.சொல். 782)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்குச் சேனாவரையர்,

"தமக்கியல்பில்லா விடைச்சொற் போலாது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமே யுரியவாதலின், உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாரு முளர்.

"இசை குறிப்புப் பண்பென்னும் பொருளவாய்ப் பெயர் வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தடுமாறி ஒரு சொல் ஒருபொருட் குரித்தாதலே யன்றி ஒருசொற் பலபொருட்கும் பலசொல் ஒருபொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல் லென்றும், அவை பெயரும் வினையும் போல ஈறுபற்றிப் பொருளுணர்த்த லாகாமையின் வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றோடு சார்த்தித் தம்மை யெடுத்தோதியே அப் பொரு ளுணர்த்தப்படு மென்றும், உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்து முறைமையு முணர்த்தியவாறு.

மெய்தடுமாறலும் ஒருசொற் பலபொருட் குரிமையும் பலசொல் ஒருபொருட் குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும்,

உரிச்சொற்கு இலக்கணமாவது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட் குரியவாய் வருதலே யாம்" என்று உரை வரைந்தார்.

நச்சினார்க்கினியரும் இவ்வாறே உரை கூறினார்.

எல்லாச் சொற்களும் பெரும்பாலும் இசை குறிப்புப் பண்புபற்றியே தோன்றி யிருத்தலின், இசை குறிப்புப் பண்பிற்குரியன உரிச்சொல்லென்பது பொருந்தாது; பொருந்துமாயின் இசை குறிப்புப் பண்புபற்றிய சொற்க ளெல்லாம் உரிச்சொல்லாதல் வேண்டும். அங்ஙன மாகாமையும், இசையுங் குறிப்பும் பண்பிலடங்குதலும், பண்புப் பெயர் அறுவகைப் பெயருள் ஒன்றாதலும், ஒருசார் தொழிலும் பண்பின்பாற்பட்டுத் தொழிற் பண்பெனப் படுதலும், வினைச்சொற்களிற் பெரும்பாலன இசையுங் குறிப்பும்பற்றி வருதலும், இலக்கண முணர்ந்தார்க் கெல்லாம் எளிது புலனாம்.

மெய்தடுமாறல் சொற்களுக்கெல்லாம் பொதுவியல்பாதலின் அதுவும் ஒரு சிறப்பிலக்கணமன்று.

ஒருசொற் பலபொருட் குரிமையும் பலசொல் ஒருபொருட் குரிமை யும் பெயர் வினை யிடை யுரி நான்கிற்கும் பொதுவான திரிசொல் இலக்கணமாதலை,

> **"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
> **வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
> **இருபாற் றென்ப திரிசொற் கிளவி"** (தொல். 882)

என்பதனாற் கண்டுகொள்க.

பெயர்க்கும் வினைக்கும் உரிமை பூண்டு நிற்பன உரிச்சொல் லெனின், இடைச்சொல்லும் அங்ஙனம் உரிமை பூண்டு நிற்றலின் அதுவும் இலக்கணமன்மை யறிக.

இனி, உரிச்சொல் இலக்கணந்தான் என்னையோ வெனிற் கூறுதும்:

> **"சொல்லெனப் படுப பெயரே வினையென்**
> **றாயிரண் டென்ப அறிந்திசி னோரே"** (தொல். 643)

என்பதால் இலக்கண வகையிற் சொற்கள் பெயர் வினை என இரண்டே யென்பதும், இடைச்சொல்லாவன அப் பெயரிடையும் வினையிடையும் வரும் உறுப்புகளென்பதும், அவ் வுறுப்புகளின்றிப் பெயர்ப் பகுபதங்களும் வினைப்பகுபதங்களுமில்லை யென்பதும், தனித்து வரும் இடைச்சொற்க ளெல்லாம் பெயர் வினை யொன்றனுள் அடங்கு மென்பதும், உரிச்சொல் லென்பதோர் இலக்கணவகைச் சொல்லன் றென்பதும், அது பெயராகவும் வினையாகவு மிருக்குமென்பதும், செய்யுட்குரிய திரிசொற்கட் கெல்லாம் பொருளுணர்த்துவதே உரியியலென்பதும், செய்யுட்குரிய சொற்களே உரிச்சொல் லெனப்பட்டன வென்பதும் அறியப்படும்.

நன்னூலாரும்,

**"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்"** (நன். 442)

எனத் தெள்ளிதிற் றெரித்தார்.

அதுவுமன்றி,

**"இன்ன தின்னுழி இன்னண மியலும்**
**என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்**
**சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா**
**நல்லோ ருரிச்சொலில் நயந்தனர் கொளலே."** (நன். 460)

எனவும் புறனடை யோதினார்.

இதில் பிங்கல முதலிய நிகண்டுகளை யெல்லாம் உரிச்சொல் லென்றமையும், அவை செய்யுட்குரிய பலவகை யருஞ்சொற்களுக்கும் பொருள் கூறுதலையும், அவற்றுள் காங்கேயர் நிகண்டு உரிச்சொல்லென்றே பெயர் பெற்றமையும் கண்டுகொள்க. தமிழறிவும் திரிசொல் வழக்கும் மிக்கிருந்த காலத்தில் செய்யுட் சொற்களெல்லாம் இயற்சொற்போல் எளிதாய்ப் பொருள் விளக்குவனவாயின. பின்பு அவை குன்றிய காலத்து அவற்றைத் தனித்தனி அகராதி யியல்பில் எடுத்தோதிப் பொருள்கூற வேண்டியதாயிற்று.

"பெயரும் வினையும்போல ஈறுபற்றிப் பொருளுணர்த்த லாகா மையின், தம்மை யெடுத்தோதியே அப் பொருளுணர்த்தப்படுதலானும்" என்றார் சேனாவரையரும். ஒவ்வொரு சொல்லையும் தனித்தனி யெடுத்தோதிப் பொருள் கூறுவதென்றால், அது செய்யுட் சொல்லாய் உலக வழக்கி லில்லாததென்பது எளிதிற் புலனாம். உரிச்சொற்கட்கெல்லாம் பொருள் கூறுவதைத் தொல்காப்பிய உரியியலுட் கண்டுகொள்க. உரியிய லென்பதே செய்யுட்குரிய அருஞ்சொற்கட் கெல்லாம் பொருளுணர்த்தும் அகராதித் தொடக்கம். பின்பு அது விரிவான நூலாய் நீண்டு 'நிகண்டு' எனப்பட்டது. நிகள்-நீள். அகலம் நிகளம் என்பதோர் பண்டை வழக்கு. நிகளம் - சங்கிலி; நீளமாயிருப்பது. நிகளம் நீளமென மருவிற்று.

**"பொருட்குப் பொருடெரியி னதுவரம் பின்றே"** (தொல். சொல். 874)

**"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"** (தொல். சொல். 877)

எனத் தொல்காப்பியர் உரியியலுட் பொதுப்படக் கூறுவதும் இதனை வலியுறுத்தும்.

பெயரும் வினையுமே முதன்முத லுண்டான சொற்கள். அவற்றி னின்றும் பிற்காலத்து இடைச்சொல் வகுக்கப்பட்டது. அதற்கும் பின்பு உரிச்சொற் பாகுபாடுண்டாயிற்று.

## 7. இடுகுறிப் பெயர்

‘அ, ஆ என்றற் றொடக்கத்தன, இடுகுறிச் சிறப்புப் பெயர்’ என்பது நன்னூற் பழையவுரை.

அ, ஆ என்பவை எழுத்துகளே யன்றி அவற்றின் பெயர்களாகா. எழுத்தாவது ஒலி. ஒரு பொருள் வேறு, அதன் பெயர் வேறு. குடம் என்பது ஒரு பொருள். அப் பொருள் வேறு; அதைக் குறிக்கும் குடம் என்னும் சொல் வேறு. அ, ஆ என்பவை எழுத்துகளாகிய பொருள்கள். உயிர், குறில், நெடில் என்பனவே அவற்றின் பெயர்கள், ஒரு பொருள் பெயரின்றியும் யாதானு மோர் புலனாகச் சுட்டப்படும். அ, ஆ என்பவை பெயர்களாயின் அவற்றாற் குறிக்கப்படும் பொருள்கள் அவையன்றி வேறாதல் வேண்டும். அங்ஙன மின்மையின் அஃதுரை யன்மை யறிக.

அன்றியும் இடுகுறியென்றோர் பெயர் யாண்டுமிலது.

**“எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே”,**

**“மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா”**

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

அற்றேல், மக்கட்கிடும் இயற்பெயர்களோவெனின், அவையும் முதலாவது இடப்படும்போது காரணப் பெயர்களாகவே யிருந்திருத்தல் வேண்டும். (எ-டு : முருகன் = இளைஞன். Victor = வெற்றி பெற்றவன்) பின்னரும் அவை, தெய்வப்பற்று, அதிகாரிமாட்டன்பு, இனமுறை, இன்னோசை, விழுமிய பொருள், உயர்நோக்கம் என்பவற்றுள் ஒன்று பற்றியே மக்கட்கிடப்பட்டு வருகின்றன.

மக்கட்கிடப்படும் இயற்பெயரெல்லாம் முதலாவது பொருள் குறித்தனவென்றும், பின்பு மக்கட்பன்மையால் மகன்றோறும் புதுப்பெய ரிடுதலருமைபற்றிப் பழம்பெயர்களே மீண்டும் மீண்டும் பிறர்க்கிடப்படு கின்றன வென்றும் பெயின் (Bain) என்னும் ஆங்கிலப் புலவர் தம் இலக்கணத்திற் கூறியுள்ளார்.

இடுகுறிப்பெய ருண்டென்னும் இழுக்குணர்ச்சியே சிலர் தவற்றா ராய்ச்சிக்கும் காரணமாயிருந்து வருகின்றது.

தாவரங்களுள் இடுகுறிப் பெயருடையவை யெல்லாம் தமிழ்நாட்டிற் குரியவென்றும், காரணப்பெய ருடையவை யெல்லாம் அயல்நாட்டிற் குரியவென்றும், வெற்றிலை (வெறுமை + இலை) மிளகாய் (மிளகு + காய்) முதலியவை காரணப் பெயருடைமையால் அயல்நாட்டினின்று வந்தவை யென்றும், வாழை, வேம்பு முதலியவை இடுகுறிப்பெயருடைமையால் தமிழ்நாட்டிற்குரிய வென்றும், ‘இயற்கைப்பொருட் கட்டுரை’ என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொருளுக்கும் தனிமொழியாயும் தொடர்மொழியாயும் ஒன்றும் பலவும் பெயரிருக்கு மென்றும், சொற்கள் தோன்றி ஊழிக் கணக்கான காலங்களாகி யிருத்தலின் அவற்றுட் பலவற்றின் பொருள்கள் இறந்தும் மறைந்தும் இருக்கின்றன வென்றும், வெற்றிலைக்கு 'அடை' என்ற மறுபெயர் பண்டை நூல்களிற் கூறப்பட்டுள்ளதென்றும், அவரை யினத்தைச் சேர்ந்த காய் கொத்தவரை யென்னப்பட்டாற்போல, மிள கினத்தைச் சேர்ந்த காய் மிளகா யென்னப்பட்டதென்றும், வழவழ வென் றிருப்பது வாழையென்றும், வெம்மையான காலத்தில் தழைப்பது வேம்பு என்றும் அந் நூலாசிரியர் அறிந்திலர் போலும்.

இக்காலத்திற் சிலர் ஆங்கிலமுணர்ந்த மாத்திரையானே தமிழு முணர்ந்தமென்று தமிழாராயத் தொடங்குகின்றனர். அது நால்வர் கண்ணிலார் நால்வாய் கண்ட தொக்கும்.

இதுகாறும் கூறியவற்றை 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்தியாற் கொள்க.

## 8. போலி: (நன். 122, உரை)

"முதற்போலி இடைப்போலிகளின்பின் முறையே சொல்ல வேண்டிய இவ் விறுதிப் போலியை முன்னே சொன்னதனால், சுரும்பு - சுரும்பர், வண்டு - வண்டர், சிறகு - சிறகர், இடக்கு - இடக்கர் எனச் சில குற்றியலுகரப் பெயரினிறுதி உகரத்துக்கு அர் என்பது போலியாக வருதலும்...... கொள்க" என்பது.

கடைப்போலியின் சிறப்புப்பற்றியும் அதன் பெருவழக்குப் பற்றியுமே அது முதலிற் கூறப்பட்டது. அது ஒருகால் ஒன்றைக் குறிப்பினும், பந்தல் - பந்தர், குடல் - குடர் போன்ற போலிகளே கொள்ளப்படுமல்லது வண்டு - வண்டர், சிறகு - சிறகர் என்பவை கொள்ளப்படா.

குற்றியலுகரங்கள் மிகக் குறுகிய ஓசையுடையனவாய்ச் சொல்லுக் கீற்றிலிருப்பது உச்சரிப்பிற் கெளிதாயிராமைபற்றி அவற்றை (நீட்டி) எளிதாக்குவதற்கு அம், அல், அர், இ முதலிய சாரியைகள் வருவதுண்டு. அவை போலியாகா. அர் என்பது போலியாயின் ஏனையவும் போலி யாதல் வேண்டும். அவை சாரியையாதலின் அஃது போலியுரையென மறுக்க.

| | | |
|---|---|---|
| எ-டு : | குன்று - குன்றம் | சுக்கு - சுக்கல் |
| | நெஞ்சு - நெஞ்சம் | குச்சு - குச்சி |
| | இடக்கு - இடக்கர் | குஞ்சு - குஞ்சி |
| | வண்டு - வண்டர் | |

'அர்' என்பது சாரியையாக நூல்களிற் கூறப்படவில்லை. ஆயினும், அது சாரியை யென்றே கொள்ளற்பாற்று. 'அல்' என்பதன் ஈற்றுப்போலி எனினும் அமையும்.

இனி, "பித்து - பிச்சு, வைத்த - வைச்ச எனத் தகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும் அடங்கும் வழியறிந்து அமைத்துக்கொள்க" என்பது மேற்சூத்திர முடிவுரையாகும்.

பிச்சு, வைச்ச என்பவை செய்யுள் விகாரமேயன்றிப் போலியாகா. அவை போலியாயின் கொச்சை (Barbarism) யென்பதொன்றின்றிக் கல்லா மாக்கள் பேசுவதெல்லாம் போலியுளடங்கு மென்றும்,

**"ஆச்சென்றா லாயிரம் பாட்டா காதா"**

**"ஆப்பிட்டுக்கொண் டடிபட்ட சொக்கேசருக் காசைப்பட்டு"**

என்னும் செய்யுளடிகளிலுள்ள 'ஆச்சு', 'ஆப்பிட்டு' என்பவும் உலக வழக்கில் திருந்திய மொழிகளாகுமென்றும் மறுக்க.

## 9. பதவியல்

**நன்னூற் பதவிய லுரைமுகத்தில்,** "இவ் வியலுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால் அது தோன்ற 'மொழியியல்' எனப் பெயர் குறியாமல் 'பதவியல்' எனப் பெயர் குறித்தார் போலும்" என்று ஆசிரியர் கருத்தை ஒருவாறு ஊடுருவி யறிந்தாற்போற் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற் பதவிய லென்றோர் இயலில் பகுபத உறுப்புக ளெல்லாம் தொகுத்துக் கூறப்படாவிடினும் எழுத்ததிகாரம் சொல்லதி காரமென்னு மீரதிகாரங்களிலும் ஆங்காங்கு வேறு வேறு கூறப்பட்டுள்ளன.

பகுதியும் விகுதியும் பெயரியல் வினையியல் இடையியல்களுள் ளும், சாரியையும் விகாரமும் புணரியல்களுள்ளும், இடைநிலையொன்றும் புணரியல் இடையியல்களுள்ளும் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளமை காண்க.

தொல்காப்பியக் காலத்து மக்கள் நுண்ணறிவினராதலின், அவர்க்குப் பலவியல்களுள்ளும் வேறு வேறு கூறப்பட்டுள்ள பகுபத வுறுப்புகளை மீண்டுமோரியலில் தொகுத்துக் கூற வேண்டாதாயிற்று. நன்னூற் காலத்தில் மக்களறிவு குறைந்தமையின் அவற்றைத் தொகுத்துக் கூறவும் வேண்டிய தாயிற்று. தொல்காப்பியத்திற் கூறப்படாத பகுபத விலக்கணத்தை வடமொழி தழுவிப் புதிதாய்ச் செய்தார் பவணந்தியாரெனின், அவர் காலம் வரையும் தமிழானது ஆங்கிலம்போலப் பதவியன் மொழியா யிருந்தில தெனவும், அவரது நன்னூலாலேயே வடமொழிபோலப் பதவியன் மொழியாயிற்றெனவும் இயற்கைக்கும் மொழிநூலுக்கும் முரண்படுமன்றோ? ஆதலால் தொல்காப்பியர் காலத்திலேயே பகுபத விலக்கண மிருந்ததென் றும், அது தொல்காப்பியத்தில் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளதென்றும், அதை மறுத்து மோரியலில் தொகுத்துக் கூறுவது அற்றை முறைப்படி கூறியது கூறலென்னும் குற்றமாகுமென்றும் உய்த்துணர்ந்து கொள்க.

## 10. திசைச்சொல்

திசைச்சொல்லானது பன்னிரு கொடுந்தமிழ் நாட்டினின்றும் வந்து செந்தமிழில் வழங்கும் கொடுந்தமிழ்ச் சொற்களேயன்றிப் பிறமொழிச் சொற்களாகா.

**"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"** (தொல். சொல். 883)

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். அதை யுணராது,

**"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"** (நன். 273)

என்று பதினெண்மொழி நிலங்களையும் கூட்டி யுரைத்தார் பவணந்தியார்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரிய ரெல்லாம் கொடுந்தமிழ்ச் சொற்களையே திசைச்சொற்கு உதாரணங் காட்டினர். தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளெல்லாம் பண்டைக் கொடுந்தமிழ்களாதலின் திசைச்சொற் குதாரணங் காட்டப்பட்டன. வடமொழியொன்றே தொல்காப்பியர் காலத்து இந்து தேசத்தில் வழங்கின பிறமொழியாகும். அது திசைச்சொல்லினின்றும் பிரிக்கப்பட்டு வடசொல் லென விதந்து கூறப்பட்டது. இதனால் கொடுந்தமிழ்ச் சொற்களே திசைச் சொற்களென்றும் பிற மொழிகளெல்லாம் வடசொற்போல அவ்வம் மொழிப் பெயராலேயே குறிக்கப்படுமென்றும், அவை திசைச்சொல்லு ளடங்கா வென்றும் பெறப்படுமாறு காண்க. இங்கிலீசு, இந்துத்தானி, போர்த்துக்கீஸ் முதலிய பிறமொழிச் சொற்களை யெல்லாம் திசைச்சொல்லாக இற்றைச் சிற்றிலக்கணங்கள் கூறாநிற்கும். அவற்றை ஆங்கிலச் சொல், இந்துத்தானிச் சொல், போர்த்துக்கீசியச் சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே குறித்தல் வேண்டும். இவை அக்காலத் தின்மையின் தொல்காப்பியத்திற் கூறப்பட்டில. பிறமொழிச் சொற்களையெல்லாம் தாராளமாய்த் தமிழில் வழங்குமாறு திசைச்சொல்லாக் கொள்ள இலக்கணிகள் இடந் தந்தாராயின், ஏராளமான பிறமொழிச் சொற்கள் யாதும் வரம்பின்றித் தமிழிற் கலந்து அதன் இனிமையையும் தனிமையையும் குலைத்துவிடுதல் திண்ணம். அதோடு அவை தமிழுக்கு இன்றியமையாதவை யென்றும், அவையின்றித் தமிழில் முற்றப் பொருளறிவுறுத்தலமையா தென்றும், எண்ணப்படும். ஆதலின் இலக்கணிகள் இடந்தந்திலர். இங்கிலீசு போன்ற மொழிகட்கே திசைச்சொற்கள் இன்றியமையாதவையாகும். தமிழிலிருந்த எத்துணையோ சொற்கள் வழக்கின்றி இறந்தொழிந்தன. ஆயினும் இற்றைக் காலத்தும், பிறசொற் கலவாது கருத்தெல்லாவற்றையும் உணர்த்த வல்லது தமிழ் ஒன்றேயாகும். ஆங்கிலத்தை வடமொழி யுதவியின்றித் தமிழில் மொழி பெயர்க்க முடியாதென்று சிலர் கருதுகின்றனர். மூலப்பகுதிகளினின்றும்

இயற்சொற்களினின்றும் திரிசொற்களும் தொடர்ச்சொற்களும் ஆக்குமாறு அவரறிந்தாராயின் அங்ஙனம் கருதார். ஒவ்வொரு மொழியினும் பிறமொழியைச் செவ்வையாய் மொழிபெயர்ப்பது அரிதாகும். ஆயினும், தமிழில் ஏனையவற்றிற்போல் அத்துணை அரிதன்று. இதுபோது நூல் வழக்கினும் உலக வழக்கிலுமுள்ள தமிழ்ச்சொற்களையே தமிழ்மக்கள் அறிந்திலர்.

தமிழுக்கு வடமொழி யுதவி வேண்டாதிருக்க, வடசொல்லை யேன் தமிழிலக்கணங் கூறவேண்டுமெனின், வடமொழி தமிழுக்கு இடத்தால் அணித்தாதலின் போக்குவரவுபற்றியும் மொழிபெயர்ப்புப்பற்றியும் வடமொழியிலுள்ள நூற்பெயர்களும் ஆட்பெயர்களுமாய்த் தமிழில் வந்து வழங்கிய சிறப்புப் பெயர்களே வடசொல்லெனப் பட்டனவென்றும், மொழி வழக்கிற்கும் கருத்தறிவிப்பிற்கும் வேண்டிய பிற பொதுச்சொற்கள் தமிழில் வந்து வழங்குமாறு கூறப்பட்டிலவென்றும் பண்டை நூல்களெல்லாம் வடமொழி விரவாத செந்தமிழ் நூல்களென்றும் கூறிவிடுக்க.

**“செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**

**..............................................................**

**.....................................திசைச்சொல்”** (நன். 273)

எனவே, செந்தமிழ் நாட்டை நாற்றிசையும் சூழ்ந்த பன்னிரு கொடுந் தமிழ்நாடுகளினின்று வந்து வழங்கும் கொடுந்தமிழ்ச் சொற்களே திசைச் சொற்களென்றும், பிறமொழிச் சொற்கள் தமிழுக்கு வேண்டுவ வல்லவென் றும், ஒருகால் வேண்டினும், வடசொற்போல அவ்வம் மொழியாற் குறிக்கப் படுமென்றும், அறிந்து கொள்க.

## 11. எதிர்மறையும்மை

“சாத்தன் வருதற்கு முரியன் என்பது வாராமைக்கு முரியன் என்னும் எதிர்மறையை ஒழிபாக வுடைத்தாய் நிற்றலின், எதிர்மறையும்மை” என்றார் சேனாவரையர்.

அதையே, “சாத்தன் வருதற்கு முரியன் என்பது வாராமைக்கும் உரிய னென எதிர்மறையை ஒழிபாக உடைத்தாய் நிற்றலின், எதிர்மறை. இஃது “அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே” எனப் பண்புபற்றியும் வரும். இது பிறிதோர் பொருளைத் தழுவாது ஒரு பொருளின் வினையை மறுத்து நிற்றலின் எச்சத்தின் வேறாயிற்று. மேல் ஆசிரியர் ‘எதிர்மறை எச்சம்’ என்றமையின் இஃது எச்சத்தின் கூறாகும்” என்று விரித்துக் கூறினார் நச்சினார்க்கினியர்.

இதே உதாரணத்தை ஏனைச் சிற்றிலக்கணத்தா ரெல்லாரும் வழிவழி காட்டி வந்தனர்.

சாத்தன் வருதற்கு முரியன் என்பது வராமைக்கு முரியனென்பதைத் தழுவி நிற்றலின், அது ஏனையது தழீஇய எச்சவும்மையன்றி எதிர்மறை யும்மை யாகாது. அது பிறிதொரு பொருளைத் தழுவாவிடினும் பிறிதொரு வினையைத் தழுவி நிற்குமாறறிக. சாத்தன் வருதற்கு முரியன் என்பது எதிர்மறை யும்மையாயின், சாத்தன் வராமைக்கு முரியன் என்பது உடன்பாட்டும்மை யாதல் வேண்டும், உடன்பாட்டை ஒழிபாயுடைத்தாய் நிற்றலின். அவ்வாறு உடன்பாட்டும்மை சூத்திரத்திற் கூறப்படாமையின் அஃதுரையன்மை யறிக. பின்னை யாதோதான் எதிர்மறையும்மை யெனின்; நாள் தவறினும் நாத்தவறான் என்புழி, நாள் தவறினும் என்பது தவறாது என்னும் ஒழிபை உடைத்தாய் நிற்றலின் அதுவே எதிர்மறையும்மை யென்க. கடல் வற்றினுங் கங்கை வற்றாது, தெய்வம் தீமை செய்யினும் கொற்றன் தீமை செய்யான் என்பனவும் இவை போன்ற பிறவுமதற் குதாரணம்.

**– ''செந்தமிழ்ச் செல்வி'' சுறவம் 1932**

## 3

# உரிச்சொல் விளக்கம்

**"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
**ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்**
**பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"** (தொல். 782)

என்பது தொல்காப்பிய உரிச்சொல் இலக்கணச் சூத்திரம்.

இதற்கு, 'இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமே யுரியவாதலின் உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரிய வாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர்' என்று **சேனாவரையர்** உரை கூறியுள்ளார். இதனால் சேனாவரையர் காலத்திலேயே உரிச்சொல் செய்யுட்குரிய சொல் என்று ஒருவரோ பலரோ உரை கூறியுள்ளதாகத் தெரிகின்றது.

நால்வகைச் சொற்களில் பெயர், வினை, இடை என்ற மூன்றே இலக்கண வகைச் சொற்களாகும். உரிச்சொல்லென்பது ஓர் இலக்கியவகைச் சொல்லே யன்றி இலக்கணவகைச் சொல்லன்று. அது பெயராகவு மிருக்கும், வினையாகவு மிருக்கும் , இடையாகவு மிருக்கும்.

எ–டு:

| **பெயர்** | **வினை** | **இடை** |
|---|---|---|
| மாலை (இயல்பு) | வார்தல் (நீடல்) | பே - அச்சக்குறிப்பு |
| எறுழ் (வலி) | இரங்கல் (வருந்தல்) | ஐ - வியப்புக்குறிப்பு |
| பண்ணை (விளையாட்டு) | பாய்தல் (பரத்தல்). | |

**சேனாவரை**யரும் 'கறுப்பு, தவ வென்பன பெயர் வினைப்போலி. துவைத்தல், துவைக்கு மென்பன பெயர் வினைக்கு முதனிலையாயின' என்று கூறியுள்ளார்.

சூத்திரத்தில், இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றல், பெயரினும் வினையினும் மெய்தடுமாறல், ஒருசொற் பலபொருட் குரிமையும்

பலசொல் ஒருபொருட் குரிமையும் தோன்றல், பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல் என உரிச்சொற்குக் கூறிய நான் கிலக்கணங்களுள் முதல் மூன்றும் எல்லாச் சொற்கும் பொதுவாம். இறுதி யொன்றே உரிச்சொற்குச் சிறப்பாம். பெயரும் வினையும் இடையும் பெரும்பாலும் இசை குறிப்புப் பண்பிற் றோன்றியவையே.

எ-டு:

| | இசை | குறிப்பு | பண்பு |
|---|---|---|---|
| பெயர் | ஒலி | துணி | வெள்ளை |
| வினை | ஒலித்தல் | துணித்தல் | வெளுத்தல் |
| இடை | ஒல் | துண் | வெள் |

'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்னும் பகுதிக்கு, "பெயரினும் வினையினும் மெய்தடுமாறி என்பது உரிச்சொல்லாகிய உருபு பெயரின்கண்ணும் வினையின்கண்ணும் தடுமாறி எ-று. அவை தடுமாறுங் கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக்கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்றவழிப் பெயர்க்கு அங்க மாயிற்று. 'உற்றான்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று", என்று உரை வரைந்தார் தெய்வச்சிலையார். இதனின்றும் பெயர் வினை இடைகள் மெய் தடுமாறுவதும் எளிதா யுணரப்படும். மெய்தடுமாறல் வடிவந் திரிதல்.

சேவடி என்பதிற் பெயர் பெயரைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

ஒருப்பட்டான் என்பதிற் பெயர் வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

கண்ணன் என்பதிற் பெயர் பெயருக்கு அங்கமாயிற்று,

(கடைக்)கணித்தான் என்பதிற் பெயர் வினைக்கு அங்கமாயிற்று.
வார்கயிறு என்பதில் வினை பெயரைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

சாக்குத்தினான் என்பதில் வினை வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

பாடகன் என்பதில் வினை பெயருக்கு அங்கமாயிற்று.

வந்தான் என்பதில் வினை வினைக்கு அங்கமாயிற்று.

தில்லைச்சொல் என்பதில் இடை பெயரைச் சார்ந்து மெய் தடு மாறிற்று.

ஒல்ல ஒலித்தது என்பதில் இடை வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

மற்றவன் என்பதில் இடை பெயருக்கு அங்கமாயிற்று.

என்றான் என்பதில் இடை வினைக்கு அங்கமாயிற்று.

இனி, ஒருசொற் பலபொருட் குரிமையும் பலசொல் ஒருபொருட் குரிமையும் ஒவ்வோர் சொல்லிலுமுள்ள பலபொரு ளொருசொல்லும் ஒருபொருட் பலசொல்லுமாகும்.

வேழம் என்பது கரும்பு, மூங்கில், யானை என்று பலபொருள்படும் பலபொரு ளொருசொற் பெயர்.

வரைந்தான் என்பது எழுதினான், மணந்தான், நீக்கினான் என்று பல பொருள்படும் பலபொரு ளொருசொல் வினை.

கொன் என்பது அச்சம், பயனின்மை, காலம், பெருமை எனப் பல பொருள்படும் பலபொரு ளொருசொல் இடை.

தாவு என்பது வலி, வருத்தம் எனப் பலபொருள்படும் பலபொரு ளொருசொல் உரி.

வேழம், கைம்மலை, ஓங்கல் என்பன யானையைக் குறிக்கும் ஒருபொருட் பலசொற் பெயர்.

நீக்கினான், அகற்றினான், விலக்கினான் என்பன ஒருபொருட் பலசொல் வினை.

ஆ, ஏ, ஓ என்பன வினாப் பொருளில் வரும் ஒருபொருட் பலசொல் இடை.

சால, உறு, தவ, நனி என்பன மிகுதிப் பொருளை யுணர்த்தும் ஒருபொருட் பலசொல் உரி.

ஒருபொருட் பலசொல், பலபொரு ளொருசொல் என்பன திரிசொற் பாகுபாடுமாகும்.

**“ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
**இருபாற் றென்ப திரிசொற் கிளவி”** (தொல். 882)

என்பது தொல்காப்பியம். ஆகவே மேற்கூறிய மூன்றும் உரிச்சொல் லிலக்கண மன்மை பெறப்படும்.

இனி உரிச்சொல் இலக்கணம் யாதெனின்,

**“பயிலாத வற்றை........பொருள்வேறு கிளத்தல்”** (தொல். சொல். 297)

என்பதேயாம். இதற்கு,

‘கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானு மொரு சொல்லாயினும் வேறுவேறு பொருளுணர்த்தப்படும் என்றவாறு’ என்று சேனாவரையரும்,

‘பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித் தத்தம் மரபிற் சென்று நிலை மருங்கின்’ என்பது உரிச்சொற்கள் தத்தம் மரபினாற் சென்று நிற்குமிடத்து,

வழக்கின்கட் பயின்று நடவாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி எ-று. பயிலாத சொல்லாவன: உறு, தவ, நனி. பயின்ற சொல்லாவன : மிகுதல், உட்கு, உயர்வு என்பன. சேர்த்துதலாவது இச்சொற்கள் இச்சொல்லின் பொருள்படும் எனக் கூட்டுதல். 'எச்சொல்லாயினும் பொருள்வேறு கிளத்தல்' என்பது யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக எ-று' என்று தெய்வச்சிலையாரும் உரை கூறியுள்ளனர்.

இதனால் உரிச்சொற்கள் வழக்கிற் பயிலாத சொற்களென்றும், அவை செய்யுட்கே யுரியவென்றும், அவற்றிற்கு இடம் நோக்கிப் பொருள்கொள்ள வேண்டுமென்றும், அவற்றுட் சில பகுதிப்பொருள் தராமற் பிறபொருள் தருமென்றும் அறிந்துகொள்க.

உரிச்சொல் செய்யுட் சொல் என்பது உறு, கெழு, மல்லல், அலமரல், மழவு, கதழ்வு, கெடவரல், தட, நிழத்தல், துவன்று, முரஞ்சல், பொற்பு, பணைத்தல், பையுள், தெவ், சும்மை, கழும், விழுமம், கமம், கவவு, இலம்பாடு, வியல், நாம்(அச்சம்), வய, துய, உசா, வயா, நொசிவு, புனிறு, யாணர், யாணு, வை (கூர்மை), எறுழ் முதலிய உரிச்சொற்களைக் கண்ட வளவானே அல்லது கேட்ட வளவானே அறியப்படும்.

உரிச்சொற்கள் செய்யுட் சொற்கள் ஆனமைபற்றியே ஒவ்வோர் உரிச்சொல்லையும் தனித்தனி எடுத்துக் கூறிப் பொருள் கூறினர் ஆசிரியர். பெயர் வினை இடையென்ற மற்ற மூன்று சொற்கட்கும் இலக்கணம் மட்டுங் கூறியவர் உரிச்சொற்குத் தனித்தனி பொருள் கூறிச் செல்கின்றனர். அக்காலத்து அகராதி யின்மையால், செய்யுளில் வரும் அருஞ்சொற் கட்கெல்லாம் ஆசிரியரே பொருள் கூறவேண்டியதாயிற்று. நிகண்டு களெல்லாம் நெடுங்காலத்திற்குப் பிற்பட்டவையே. முதன்முத லெழுந்த நிகண்டு திவாகரம். பின்பு பிங்கலந்தை,சூடாமணி முதலிய நிகண்டுகள் தோன்றின. திவாகரத்தின் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு.

தொல்காப்பியத்தின் காலமோ கிறித்துவுக்குப் பன்னூற்றாண்டு முந்தியதாகும். தொல்காப்பியக் காலத்தைக் கி.மு. பத்தாம் நூற்றாண்டென் றும், நான்காம் நூற்றாண்டென்றும் பலரும் பலவாறாகக் கூறுவர். ஆயினும், கிறித்துவுக்கு முற்பட்ட தென்பது மட்டும் தேற்றமாகும்.

உரிச்சொல் செய்யுட்சொல் என்பதை அறிந்தே,

**"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்"** (நன்.442)

என விளங்கக் கூறினர் பவணந்தியார்.

உரி என்பது உரிமை. உரிச்சொல் என்பது ஒன்றற்குரிய சொல். எதற்குரிய சொல் என்பதுமட்டும் குறிப்பிற் கூறினரேயன்றி வெளிப்படை யாய்க் கூறிற்றிலர் தொல்காப்பியர். அதோடு 'ஒருசொற் பலபொருட்

குரிமை', 'பலசொல் ஒருபொருட் குரிமை' என உரிச்சொல் லிலக்கணச் சூத்திரத்தில் பிற சொற்றொடர்களோடு உரி என்னும் சொல்லைப் புணர்த்தது, அதன் சிறப்புப் பொருள் குன்றிச் சிலர்க்குக் கவர்படு பொருள் நிலையாகத் தோன்றற்குக் காரணமாயிற்று. நன்னூலில் 'செய்யுட் குரியன' என்னும் ஒரே சொற்றொடரில் உரி என்னும் சொல்லைப் புணர்த்து அதன் சிறப்புப் பொருள் தோன்றச் செய்தார் பவணந்தியார்.

**''இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி''**

என்று தொல்காப்பியத்திலும்,

**''பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி''** (நன். 442)

என்று நன்னூலிலும் உரியென்னும் சொல்லைப் புணர்த்தாது உரிச்சொற் பொருட் பாகுபாடே அல்லது உரிச்சொல் நிலைக்களப் பாகுபாடே கூறியிருப்பதால், 'இசைகுறிப்புப் பண்பென்னும் பொருட்கு உரிய சொல் உரிச்சொல்' என்று சேனாவரையர் கூறுவது பொருந்தாது, 'ஒருசொற் பலபொருட் குரிமை', 'பலசொல் ஒருபொருட் குரிமை' என்று தொல் காப்பியர் உரியென்ற சொல்லைப் புணர்த்துக் கூறிய சொற்றொடர்களையும், 'ஒருகுணம் பலகுணந் தழுவி' என மாற்றிக் கூறினார் பவணந்தியார். இதனால் உரிச்சொல் செய்யுட்சொல்லே யென்பதை வெள்ளிடை மலைபோல் விளங்க வைத்தனர்.

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிற் கூறப்பட்ட உரியியலே செய்யு ளகராதிகளான நிகண்டுகட்குத் தோற்றுவாயாகும். செய்யுளிற் சிறப்பாக வழங்கிப் பொருள் விளங்காத அருஞ்சொற்களை யெல்லாம் தனித்தனி யெடுத்துப் பொருள் கூறினர் முன்னை யாசிரியர். மக்கட்கு அறிவாற்றலும் நினைவாற்றலும் குறைந்த பிற்காலத்தில் மிகப்பல செய்யுட் சொற்கட்குப் பொருள் கூறவேண்டி யிருந்ததினாலும், அவை யெல்லாவற்றையும் கூற ஓர் இலக்கண நூல் இடந்தராமையானும், அவற்றைக் கூறுதற்கென்றே நிகண்டு என்னும் சிறப்பு நூல் எழுந்தது. ஒரு மாணாக்கன் செய்யுள் வழக்கான சிறப்புச் சொற்களை யெல்லாம் முன்னமே யறிந்தானாயின் பின்பு செய்யுள் நூல்களைக் கற்கும்போது பொருளுணர்ச்சி எளிதாயிருக்கும். இதனால் செய்யுட் சொற்களிற் பெரும்பாலானவற்றை மாணாக்கர் மனப்பாடம் செய்ய வைத்தனர் பண்டைக் கணக்காயர். இதே நோக்கத்துடன்தான் நிகண்டுகளும் எழுதப்பட்டன. மக்கட்கு இளமையில் நினைவாற்றல் மிக்கிருப்பதால் அதைப் பயன்படுத்தக் கருதியே மாணாக்கர்க்கு நிகண்டுகளை மனப்பாடஞ் செய்வித்தனர். நிகண்டுகள் நிறைவும் விளக்கமும் பற்ற வரவர நீண்டு வந்தன. திவாகரத்தினும் பிங்கலமும், பிங்கலத்தினும் சூடாமணியும் நீண்டிருத்தல் காண்க. நிகண்டுகள் செய்யுட் சொற்களைக் கூறுவனவே யன்றி உலகவழக்குச் சொற்களைக் கூறுவனவல்ல. இற்றைய அகராதிகளே இருவகை வழக்குச்

சொற்களையும் எடுத்துக் கூறும். நிகண்டுகள் உரிச்சொல் லகராதிகள் அல்லது செய்யுட்சொல் லகராதிகள் என்பதை,

> **''இன்ன தின்னுழி யின்னண மியலும்**
> **என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்**
> **சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலாம்**
> **நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே''** (நன். 460)

என்னும் நன்னூல் உரியியற் புறனடைச் சூத்திரத்தானு முணர்க. உரிச்சொல் நிகண்டு என்றே ஒரு நிகண்டுமுள்ளது. அகராதி என்பது அகரமுதற் சொற்களைக் கூறுவதென்றே பொருள்படினும், இனவிலக்கணமாக நிகண்டிற்கும் பெயராகக் கொள்ளப்படும்.

இங்ஙனம் உரிச்சொல் செய்யுட் சொல்லா யிருக்கவும்,'உரிச்சொல்' என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது. அதனானே யன்றே ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்,பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும் என ஓதுவாராயினர். எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச்சொற் கிளவி என்று ஓதினமையால், வடநூலாசிரியர் தாது என்று குறியிட்ட சொற்களே இவை யென்று கொள்ளப்படும், அவையும் குறைச்சொல் லாதலான். அஃதேல், தொழிற் பொருண்மை உணர்த்துவன எல்லாம் இதனுள் ஓதினாரோ எனின், 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன' (சூ.2) என்றாராகலின், வழக்கின்கட் பயிற்சி இல்லாத சொற்கள் ஈண்டு எடுத்து ஓதப்படுகின்றன என்க.

'தொழிலாவது வினையுங் குறிப்புமாதலின், அவ் விருசொற்கும் அங்கமா.....ண்டுக் கூறப்படுகின்றன' என்றார் தெய்வச்சிலையார். இதையே சிவஞான முனிவருந் தழுவினர்.

உரிச்சொல் தாது(வினைப்பகுதி)ஆயின் தாதுவைக் குறியாது அலமரல், தெருமரல், கூர்ப்பு, வார்தல் என்று தொழிற்பெயர்களை ஏன் குறித்தல் வேண்டும்?

தொழிற்பெயர் தமிழில் தாதுவைக் குறிக்கும் வகைகளில் ஒன்றென்று கூறின்,

குரு, மல்லல், மழவு, பண்ணை, வம்பு, தெவ், நாம், வாள், எறுழ் முதலிய பெயர்ச்சொற்கள் ஏன் காட்டப்படுகின்றன? பெயர்ச்சொற்கட்குப் பிரதிபதிகமே யன்றித் தாதுவின்றே!

இனி, வினைச்சொற்களுள்ளும் பகுதிப்பொருள் ஒன்றும், உரிச்சொற் பொருளொன்றுமா யிருத்தலின், பகுதியைக் கூறி என்ன பயன்?

செல்லல் என்னும் தொழிற்பெயர் உரிச்சொல்லாகி இன்னாமையை உணர்த்தும்; செல் என்னும் பகுதி போதலையே உணர்த்தும்.

கருவி என்னும் தொழிற்பெயர் உரிச்சொல்லாகித் தொகுதியை உணர்த்தும்; கரு என்னும் பகுதி கருத்தலையே உணர்த்தும்.

எய்யாமை என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் உரிச்சொல்லாகி அறியாமையை உணர்த்தும்; எய்தல் என்னும் உடன்பாட்டு வினை அம்பு விடுத்தலையே உணர்த்தும். இதை,

'அறிதற் பொருட்டாய் எய்தலென்றானும், எய்த்தலென்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறை யன்மை யறிக' என்னும் சேனாவரைய ருரையானு மறிக.

உலக வழக்கினுள்ளும் உடன்பாட்டி லொன்றும் எதிர்மறையி லொன்றுமாக வெவ்வேறு பொருள்படும் வினைகளுள.

| எ-டு: **உடன்பாடு** | **எதிர்மறை** |
|---|---|
| பொறுமை (patience) | பொறாமை (jealousy) |

தொல்காப்பிய எழுத்ததிகார ஈற்றயற் சூத்திரத்தில்,

**''குறிப்பினும் பண்பினு மிசையினுந் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி''** (தொல். எழுத்து. 482)

என்றதனை வினைப்பகுதி யென்றும் உரிச்சொல்லென்றும் கூறினார் தெய்வச்சிலையார். நச்சினார்க்கினியரும் தம் உரையில், 'குறிப்பினானும் பண்பினானும் இசையினானும் பிறந்து, ஒருவழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய உரிச்சொற்களும்' என்றே முற்கூறினாரேனும்,

'கண் விண்ண விணைத்தது, விண் விணைத்தது, இவை குறிப்புரிச் சொல்; ஆடை வெள்ள விளர்த்தது, வெள்விளர்த்தது, இவை பண்புரிச்சொல்; கடல் ஒல்ல ஒலித்தது, ஒல்லொலித்தது, இவை இசையுரிச்சொல். 'ஒல்லொலி நீர் பாய்வதே போலுந் துறைவன்' என்றார் செய்யுட்கண்ணும். இவை உயிரீறாயும் புள்ளியீறாயும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்க லாகாமையின் நெறிப்பட வாரா என்றார். விண்ண விணைத்தது தெறிப்புத் தோன்றத் தெறித்ததென்றும், விண்விணைத்தது தெறிப்புத் தெறித்ததென்றும் ஆம். ஏனையவற்றிற்கும் இவ்வாறே உணர்க. இங்ஙனம் நிற்றலிற் றன்மை குறைந்த சொல்லாயிற்று. "வினையே குறிப்பே" (சொல். 258) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய என என்பதனை இவற்றோடு கூட்டியவழி இடைச் சொல்லாதலின் 'விண்ணென விணைத்தது எனப் புணர்க்கப்படுமாறு உணர்க' என்று பிற்கூறியதிலிருந்து, சூத்திரத்திற் குறைச்சொற் கிளவி யெனக் குறித்தது இடைச்சொல்லே யென்றும், விண்ண, வெள்ள என்று குறையாய் நிற்றலின் குறைச்சொற் கிளவியெனப்பட்டதென்றும் அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியர் குறைச் சொற்கிளவி என்னும் பெயரால் வினைப் பகுதியையே குறித்திருப்பாராயின், எச்சவியலில், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் மூவகைக் குறைகளைக் குறிக்குமிடத்து,

**"குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்"**

எனச் சூத்திரம் செய்திரார்.

**"குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல"**

என்னும் அடுத்த சூத்திரத்தினால் மூவகைக் குறைகளும் பெயர்ச்சொற்களே யென்பது பெறப்படும். ஆகையால், குறைச்சொல் என்பது குறைந்த சொற்கட் கெல்லாம் பொதுப்பெயரேயன்றி வினைப்பகுதிக்கே யுரிய சிறப்புக் குறியீடு அன்றென்பது தெரிந்துகொள்க.

உரிச்சொல் லென்பது வினைப்பகுதியே யாயின், வேற்றுமை மயங்கியலுள்,

"வினையே செய்வது" என்னும் சூத்திரத்தில் 'வினை' என்பதனாலும், எச்சவியலுள்,

**"செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்**
**செய்யென் கிளவி யாகிட னுடைத்தே"** (தொல். சொல். 593)

என்னுஞ் சூத்திரத்தானும் வினைப்பகுதியைத் தொல்காப்பியர் குறித் திருத்தலின், அதை மீண்டும் உரியியல் என்றோரியலிற் கூறுவது கூறியது கூறலாமென்க. இனி,

**"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா**
**வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன."** (தொல். சொல். 783)

என்று தொல்காப்பியர் உரிச்சொல்லை வெளிப்படு சொல், வெளிப்படாச் சொல் என இருவகைப்படுத்தி யிருப்பதால், உரிச்சொல் வெளிப்படாச் சொல்லாகவே யிருக்கின்ற செய்யுட் சொல்லன்று எனக் கூறுவர் சிலர்.

உலகத்திற் பல வகுப்பாருக்குள்ளும் பல குழூஉக்குறிகள் வழங்கி வருகின்றன. ஒரு குழுவினைப் பிறர்க்குத் தெரியாவண்ணம் மறை பொருளனவாகத் தமக்குள் வழங்கிக்கொள்ளும் குறிகளே குழூஉக்குறி யாகும். ஆயினும் நாளடைவில் சில குழூஉக் குறிகளின் பொருள்கள் பிறர்க்கு வெளியாகிவிடுகின்றன. அங்ஙனம் பொருள் வெளியான குழூஉக்குறிகள் உண்மையில் குழூஉக்குறி யல்லவேனும் அவை முன்னிருந்த நிலைமைபற்றிக் குழூஉக்குறி யென்றே கூறப்படுகின்றன. கள்ளைக் குறிக்கும் குதிரை யென்னுஞ் சொல்லும், பொன்னைக் குறிக்கும் பறி யென்னுஞ் சொல்லும் எல்லாரானும் பொருளறியப்படினும் இன்னும் குழூஉக்குறியாகவே கூறப்படும். அதுபோலச் செய்யுட் சொற்களான உரிச்சொற்களும் பொருளறியப்பட்ட பின்னும் உரிச்சொல் லெனவேபடும். ஆனால், உலக வழக்கிற்கு வந்தவைமட்டும் உரிச்சொல்லாகா.

சொற்கள் வழக்கு மிகுதிபற்றிப் பொருளறியப்படுவதும், வழக் கின்மைபற்றிப் பொருளறியப்படாமையுமுண்டு. வழக்குக் காலந்தோறும் மாறிக்கொண்டே யிருக்கும்.

தொல்காப்பியர் தம் காலத்தில் உலகவழக்கில் வழங்காதனவாகக் குறிக்கின்ற பசப்பு, அதிர்வு, தீர்தல், பழுது, முழுது, செழுமை, சேர் முதலிய சொற்கள் இக்காலத்துப் பெருவழக்காக வழங்குகின்றன. தொல்காப்பியர் காலத்தில் இவை வழங்கியிருப்பின் இவற்றுக்குப் பொருள் கூறியிரார். இனித் தம் காலத்தில் புதிதாய் வழங்கினவாக அவர் கூறும் கடுவன், கோட்டான், தத்தை, பூசை முதலிய ஏழு சொற்களில்,கோட்டான், பூசை என்னுமிரண்டே இக்காலத்து வழங்குகின்றன. ஏனைய வழக்கிறந்தன. பூசை என்பது இக்காலத்துப் பூனை என வழங்குகின்றது.

ஆகையால், தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்க ளெல்லாம் அக்காலத்துச் செய்யுட் சொற்களா யிருந்தன வென்றும், அவற்றுட் சில இக்காலத்து உலக வழக்கில் வழங்குகின்றன வென்றும், அவை இக்காலத்து உரிச்சொல் லாகாவென்றும் அறிந்துகொள்க.

இனி, உரிச்சொல்லென்பது எல்லோர்க்கும் பொருள்விளங்காத செய்யுட் சொல்லாயின், திரிசொல் என்பதும் எல்லோர்க்கும் பொருள் விளங்காத செய்யுட் சொல்லாயிருத்தலின் உரிச்சொல்லாமோ வெனின், கூறுதும்:

இயற்சொல், திரிசொல் என்பன இயல்பாய்ப் பொருளுணர்த்தும் சொல், இயற்சொற் றன்மையினின்றுந் திரிந்து அரிதாய்ப் பொருளுணர்த்தும் சொல் எனப் பொதுவாய்க் கூறப்படினும், சொற்பொருள் நோக்கின் இயல்பான சொல்(Primitive word), இயல்பான சொல்லினின்றும் திரிந்த சொல்(Derivative) என்றே கூறற்கேற்றன. இது திரிசொற் சூத்திரத்திற்கு,

1. திரிசொல்லாவது உறுப்புத்திரிதலும் முழுவதும் திரிதலுமென இரு வகைத்து. கிள்ளை, மஞ்ஞை என்ப உறுப்புத்திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன. ....... திரிபுடைமையே திரிசொற்கிலக்கணமாதல் 'சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல் என்பதனாற் பெறவைத்தார்' என்று சேனாவரையர் கூறிய உரையானும், இதையொட்டி நச்சினார்க்கினியர் கூறிய உரையானும் உணரப்படும்.

உரிச்சொல் செய்யுட் சொல்லாகவே யிருத்தலானும், ஓர் இலக்கண வகைச் சொல்லன்மையானும், பெயர், வினை, இடை என்னும் முச்சொல்லாயு மிருத்தலானும், பிரயோகம்பற்றியே இன்ன சொல்லெனக் கூறப்படுவதாகும். தொல்காப்பியர் எச்சவியலுள்,

இடைச்சொல்லெல்லாம் பிறிதோர் சொல்லை விசேடிக்கும் சொல்லே என்னும் பொருளில்,

**"இடைச்சொல் லெல்லாம், வேற்றுமைச் சொல்லே"**

என்று சூத்திரித்து, இப் பொருளை உரிச்சொல்லும் ஒருபுடை தழுவும்படி அதையடுத்து,

**''உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய''**

என்று கூறினார். இதற்குச் சேனாவரையர்,

'உரிச்சொல்லிடத்தும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கும் உரியன உரியவாம்; எல்லாம் உரியவாகா என்றவாறு. எனவே, உரிச்சொல்லுள் வேறு படுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையு முடையவாய் வருவனவே பெரும்பான்மை யென்பதாம்.

'வேறுபடுக்குஞ் சொல்லே யாவன உறு, தவ, நனி என்னுந் தொடக் கத்தன. இருநிலைமையுமுடையன குரு, கெழு, செல்லல், இன்னல் என்னுந் தொடக்கத்தன. உறுபொருள், தவப்பல, நனிசேய்த்து, ஏகல்லடுக்கம் என இவை ஒன்றை விசேடித்தல்லது வாராமையும், குருமணி, விளங்குகுரு, கேழ்கிளரகலம், செங்கேழ்; செல்லனோய், அருஞ்செல்லல், இன்னற் குறிப்பு, பெயரின்னல் என இவை ஒன்றனை விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய் வருமாறும், வழக்குஞ் செய்யுளு நோக்கிக் கண்டுகொள்க. குருவிளங்கிற்று; செல்லறீர எனத் தாமே நின்று வினை கொள்வன, விசேடிக்கப்படுந் தன்மை யுடையவாதலின், விசேடிக் கப்படுஞ் சொல்லாம். பிறவும் விசேடித்தல்லது வாராதனவும், விசேடித்தும் விசேடி யாதும் வருவனவும், வழக்குஞ் செய்யுளு நோக்கியுணர்க' என்று உரை கூறினர்.

இதனால், உரிச்சொல் என்பது பெயராகவும் வினையாகவும், அவற்றிற்கு அடையாகவும் வருமென்றும், பெயருக்கு அடையாங்கால் குறிப்புப் பெயரெச்சம் போல்வதென்றும், வினைக்கு அடையாங்கால் குறிப்பு வினையெச்சம் போல்வதென்றும், பெயருரிச்சொல் வினையுரிச் சொல் என்னும் இரு வகையுள் எல்லா வுரிச்சொல்லும் அடங்காவென்றும் அறிந்துகொள்க.

இதுகாறுங் கூறியவாற்றால் உரிச்சொல் என்பது செய்யுட் சொல்லே யென்றும், அதற்குப் பிறவாறு கூறுவதெல்லாம் போலியுரை யென்றும், உரிச்சொல் ஓர் இலக்கணவகைத் தனிச்சொல் லன்றென்றும், அது பிரயோகத்திற்கேற்ப இன்ன சொல்லென்று கூறப்படுமென்றும் தெற்றெனத் தெரிந்துகொள்க.

**- ''செந்தமிழ்ச் செல்வி'' கடகம் 1935**

# 4
# ஙம்முதல்

உலக வழக்கிலுள்ள ஒவ்வொரு மொழியிலும் சொற்களும் சொற்றொடர்களும் நாளடைவில் மாறுபடுகின்றன. அம் மாற்றம் தமிழில் மரூஉ, திரிபு, சிதைவு, போலி எனப் பல்பெயராற் கூறப்படும். மொழிகளின் வடிவு மாறவே அவற்றின் முதலிடைகடை யெழுத்துகளும் மாறுபடுகின்றன என்பது சொல்லாமே போதரும்.

பிறமொழிகளில் மொழிமுதலிடைகடை யெழுத்துகட்கு வரம்பில்லை. தமிழிலோ அவ் வரம்புண்டு. ஒரு தனிமொழியின் அல்லது தனித்து வழங்கக்கூடிய மொழியின் முதலெழுத்து மற்றோரெழுத்தாய்த் திரியின், அத் திரிபெழுத்தே முதலெழுத்தாய்க் கொள்ளப்படும், இலக்கணம் இடந்தரின்.

எ-டு: நண்டு - ஞண்டு.

அரைஞாண் (அரைநாண்), பைஞ்ஞீலி (பைந்நீலி), சேய்ஞலூர் (சேய்நல்லூர்) முதலிய தொடர்மொழிகளிலுள்ள வருமொழிகள் ஞாண், ஞீலி, ஞல்லூர் எனத் தம் திரிந்த வடிவிலும் தனித்து வழங்குந் தகுதி சிறிதுடைமையின் அவற்றின் முதலிலுள்ள திரிபெழுத்துகளும் மொழிமுதலெழுத்துகளாகக் கொள்ளப்படல் கூடும், ஆனால், ஒரு தொடர்மொழியிலுள்ள வருமொழியின் முதலெழுத்து மொழிமுதலல்லா எழுத்தாகத் திரியின், அவ் விதி முதல் இயல்புமுதலாகக் கொள்ளப்படாது. ஈண்டு இயல்புமுதல் விதிமுதல் என்பவற்றை இயல்பீறு விதியீறு என்பவற்றை யெண்ணி யுணர்க.

எ-டு : அல் + தாலம் = அற்றாலம்.

விண் + நாடு = விண்ணாடு.

இவற்றில் றா, ணா என்னும் விதிமுதல்கள் மொழிமுதலெழுத்தாகாமை யுணர்க.

தொல்காப்பியர் சிறந்த ஆராய்ச்சியுடைய ராதலின், ஙகரம் வருமொழியின் விதிமுதலாய் மட்டும் வருவது கண்டு அதை மொழிமுதலெழுத்தாகக் கூறியிலர். நன்னூலாரோ அவ் வாராய்ச்சியின்மையின், விதிமுதலாய் வந்த ஙகரத்தை இயல்புமுதலென மயங்கிக் கூறினர்.

ஙகரம் அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் எனச் சுட்டு வினாமுதற் றொடர்மொழிகளில் வருமொழி விதிமுதலா யிருக்குமே

யன்றி, யாண்டும் தனிமொழியில் இயல்பு முதலாய் வருவதன்று. அங்ஙனம், இங்ஙனம் என்பன அவ்விதம் இவ்விதம் என்று பொருள் படுவனவாகும். அவ்வண்ணம், அவ்வகை, அவ்விதம், அப்படி என்னும் தொடர் மொழிகளிலுள்ள வண்ணம், வகை, விதம், படி என்னும் சொற்கள் தனித்து வழங்குவதுபோல, ஙனம் என்னும் சொல் தனித்து வழங்குவதன்று. அவன் செய்த விதம், அவன் செய்த ஙனம் என்னுந் தொடர்களைக் கூறிக் காண்க.

அங்ஙனம், இங்ஙனம் முதலிய தொடர்மொழிகளில் மெல்லோசை சிறந்திருத்தலின், மெலித்தல் (Nasalization) ஓசை மிகுதியும் பயில்கின்ற மலையாள வழக்கில் ஒருகால் ஙனம் என்னும் சொல் தனித்து வழங்கலா மென்று கருதிப் பலவிடத்துமுள்ள மலையாளரைக் கேட்டதில் அவர்களும் ஙனம் என்னும்சொல் தமிழிற்போலவே மலையாளத்திலும் தொடர்மொழிப் பகுதியாய் வழங்குவதன்றித் தனித்து வழங்குவதன்று என ஒருபடித்தாய்ப் பகர்ந்துவிட்டனர்.

அங்ஙனம், இங்ஙனம் என்னும் சொற்றொடர்கள் பண்டைக் காலத்தில் அங்கனம், இங்கனம் என வழங்கியுள்ளமை சங்க நூல்களா லறியப்படும். இக்காலத்திலும் சிலர் அங்கனம், இங்கனம் என்றே கூறுவதை உலகவழக்கிற் காணலாம்.

சீவக சிந்தாமணி, விமலையாரிலம்பகம் 54ஆம் செய்யுளில்,

**''ஈங்கனம் கனையிருளெல்லை நீந்தினாள்''**

என்னும் ஈற்றடியிலும்,

புறநானூறு 208ஆம் செய்யுளில்,

**''ஈங்கனஞ் செல்க தானென என்னை''**

என்னும் அடியிலும், ஈங்கனம் என்ற வடிவம் வந்துள்ளது.

இங்கனம் எனினும் ஈங்கனம் எனினும் ஒன்றே. சுட்டும் வினாவும் நீள்வது இருவகை வழக்கினும் பெரும்பான்மை. அல்லது சுட்டுவினாப் பொருண்மையில் ஒரு குறிலும் அதன் நெடிலும் ஓரெழுத்தே யெனக் கொள்ளினும் அமையும். இனி, அங்கனம், இங்கனம் என்பவற்றின் முதல் வடிவுதான் யாதோவெனிற் கூறுதும்.

கண் என்னும் இடப்பெயர் சுட்டு வினாவொடு புணர்ந்து, அக்கண், இக்கண், எக்கண் என நிற்கும். பின்பு மெலித்தன் முறையால் அங்கண், இங்கண், எங்கண் எனத் திரியும்.

எ-டு :

**''கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்''** (புறம். 15)

அங்கண் எனினும் ஆங்கண் எனினும் ஒன்றே. முன்னதன் நீட்சி பின்னதெனினும் ஒக்கும். இங்ஙனமே பிறவும்.

அங்கண், இங்கண் என்பன அங்கன், இங்கன் என மருவி மீண்டும் அங்ஙன், இங்ஙன் என மெலியும்.

எ-டு : "தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் போர்த்திங்ஙன்"

(சிலப். )

தமிழ்ச்சொற்கள் பல இன்னோசைபற்றி அம்மீறு பெறுதல் பெரும்பான்மை. (இவ் வியல்பை இலத்தீன் மொழியிலும் காணலாம்.)

எ-டு : தூண் - தூணம், குன்று - குன்றம்,
கால் - காலம், நெஞ்சு - நெஞ்சம்,
புறவு - புறவம், கண்டு - கண்டம்.

இங்ஙனமே அங்ஙன், இங்ஙன் முதலிய மரூஉச் சொற்றொடர்களும் அம்மீறு பெற்று அங்ஙனம், இங்ஙனம் என வழங்கும்.

ஓரிடம் மற்றோரிடத்திற்கு வழியாயிருத்தல்பற்றிப் பொதுவாய் இடப்பெயர்கள் ஒரு வினை செய்யும் வழியை(அதாவது வகையைக்) குறிப்பதுண்டு.

எ-டு : ஆங்கு = அது போல, அப்படி.
அவ்வழி = அப்படி.

இவ் வியைபினால் வகைப்பெயர்கள் தடுமாறி இடத்தைக் குறிப்பது முண்டு.

எ-டு : இப்படிப் போ = இவ்வழியாய்ப் போ.

அங்ஙனம், இங்ஙனம் முதலிய பெயர்களும் சொற்படி முதலில் இடத்தைக் குறித்தனவேனும், பின்பு இடம்-வழி-வகை என்னும் இயைபுபற்றி ஆகுபெயர்த் தன்மையில் வகை, விதம் என்னும் பொருள் தருவவாயின.

இனி, அங்ஙனம், இங்ஙனம் முதலிய சொற்றொடர்த் திரிபுகள் அம்மட்டிலமையாது அன்னணம், இன்னணம் முதலிய திரிபுங் கொள்ளும். நன்னூலாரே,

**"இன்ன தின்னுழி யின்னண மியலும்"** (நன். 460)

எனத் தம் உரியியற் புறனடையிற் கூறியுள்ளார். ஆதலின்,

**"சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே"** (நன். 106)

எனச் சூத்திரித்தவர்,

**"சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி னவ்வு முதலா கும்மே"**

எனச் சூத்திரியாதொழிந்தது குன்றக் கூறலாமன்றோ? ஆதலான், தொல்காப்பியர்க்கு முற்காலத் தமிழிலன்றிப் பிற்காலத் தமிழில் ஙம்முதலே யில்லையென்று தெள்ளிதிற் றெளிக.

**- "செந்தமிழ்ச் செல்வி" கடகம் 1936**

# 5
# தழுவுதொடரும் தழாத்தொடரும்

**"வேற்றுமை யைம்முத லாறா மல்வழி**
**தொழில்பண் புவமை யும்மை யன்மொழி**
**எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி**
**தழுவு தொடரடுக் கெனவீ ரேழே."** (நன். 152)

இதன் உரையில், வை.மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ண மாசாரியாரும்,

"இவை தழுவுதொடர் எனவே, அவ் விருவழியிலும், தழாத்தொடரும் சில உள என்றாராயிற்று. 'நீர்க்குடம்' என்பது நீரையுடைய குடம் என விரிதலால், நீர் என்பது உடைய என்பதைத் தழுவிக் குடம் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாத்தொடராகிய வேற்றுமைத் தொகை.................. `மரத்தைச் சாத்தன் வெட்டினான்' என்பதில், மரத்தை என்பது வெட்டினான் என்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாத்தொடராகிய வேற்றுமை விரி. "சுரையாழ அம்மி மிதப்ப" என்பது சுரைமிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப என்பதையும் பொருளால் தழுவாமல் தொடர்ந்தன. இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி. தழாத்தொடராவது நிலைமொழி யானது வருமொழியோடு பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவுதொடர்" எனக் கூறியுள்ளனர்.

தழுவுதொடர், தழாத்தொடர் என்பன இலக்கணப் பொருத்தமுறத் தழுவுகின்ற தொடர், இலக்கணப் பொருத்தமுறத் தழுவாத தொடர் என்றே பொருள்படு மன்றி, பொருட் பொருத்தமுறத் தழுவுகின்ற தொடர், பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர் என்று பொருள்படா.

சூத்திரத்துட் கூறப்பட்ட பதினான்கு தொடர்களுள், முதற் பதின் மூன்றும் தழுவுதொடரும், கடையொன்றும் தழாத்தொடருமாகும் என்பதைக் குறித்தற்கே, அடுக்குத் தொடர்க்கு முன் தழுவுதொடர் என்பதைக் கூறிப் பிரித்தனர். ஏனைப் பதின்மூன்றும் தழுவுதொடர் எனவே, இறுதி

யொன்றும் அதற்கெதிராகிய தழாத்தொடரென்பது அறியப்படும், மெய்ம் மயக்குச் சூத்திரத்தில் ஒன்றை உடனிலை என்றதினால் இன்னொன்று வேற்றுநிலை யென்றறியப்பட்டாற்போல. இது சூத்திரமாதலின் சொற் சுருங்கற்கு இங்ஙனம் யாக்கப்பட்டது.

வேற்றுமைத்தொகை முதலிய ஆறு தொகைகளும், எழுவாய்த் தொடர் முதலிய எட்டுத் தொடர்களும், நிலைமொழியும் வருமொழியும் இலக்கணத்திற் சம்பந்தப்பட்டிருப்பதும், அடுக்குத்தொடர் ஒன்றுமட்டும் சம்பந்தப்படாது நிலைமொழி வருமொழிகள் தனித்தனி நிற்பதும் எடுத்துக்காட்டு வாயிலாய்க் கண்டுகொள்க.

எ-டு : சோறுண்டான்-வேற்றுமைத் தொகை - தழுவுதொடர்

இராமன் வந்தான் - எழுவாய்த் தொடர் - தழுவுதொடர்

பாம்பு பாம்பு - தழாத்தொடர்.

நீர்க்குடம் என்பது நீரையுடைய குடம் என்று விரியும்போது, நீரை என்பது உடைய என்பதையும், உடைய என்பது குடம் என்பதையும் தழுவுகின்றமை காண்க. நீர்க்குடம் என்று தொகையாய் நிற்கும் போதும், நீர் என்பது (தொக்குநிற்கும்) உடைய என்னுஞ் சொல்லையே அவாய் நிலையால் தழுவும். அல்லாக்கால், வந்தேன் என்னும் தொகை வாக்கியத்தில் நான் என்னும் எழுவாய் அவாய்நிலையால் வருவிக்கப்படாமை காண்க. சாத்தன் மரத்தை வெட்டினான் என்பதே இயல்பான தமிழுரை முறையாத லின், மரத்தைச் சாத்தன் என்பது ஒரு பயன் நோக்கிய முறை மாற்றாகும். சாத்தன் மரத்தை என்பதில் சாத்தன் என்பது எழுவாயும், மரத்தை என்பது எழுவாயின் தொழிலை யடைகின்ற செயப்படுபொருளாயும் எங்ஙனம் இயையுமோ, அங்ஙனமே மரத்தைச் சாத்தன் என்பதிலும் இயையும்.

வந்த சாத்தன் மகன் என்னுந் தொடரில் வந்த என்பது மகனைத் தழுவுமாயின், அஃது இடைப்பிறவரல் எனப் பொதுவியலில் வேறிலக் கணமாகக் கூறப்படுதலின் ஈண்டைக் கேலாதாகும். ஏற்பின், பொதுவியலின் கூறும் இடைப்பிறவரல் கூறியது கூறலாய்க் குற்றந் தங்கும்.

'சுரை யாழ அம்மி மிதப்ப' என்பது செய்யுட்குரிய மொழிமாற்றுப் பொருள்கோளாதலின், அதுவும் ஈண்டைக் கேலாது.

ஆங்கிலத்திலும் தழுவுதொடர் தழாத்தொடர்கட்கு இலக்கணப் பொருத்த முண்மை யின்மைகளையே இலக்கணமாகக் கொள்வர்.

Compound words (தொடர்மொழிகள்) are subdivided into two classes:

I. Unrelated (தழாத்தொடர்) or those in which the simple words are not connected together by any grammatical relation. (These have been also called Juxta-positional).

II. Related, (தழுவுதொடர்) or those in which there is some grammatical relation between the component words. (These have been also called syntactical.)

(Nesfield: Book IV)

பதினான்கு தொடர்களிலும் தழுவுதொடரும் தழாத்தொடரும் உண்டென்று நன்னூலார் கொண்டிருப்பின், அதை ஒரு தனிச் சூத்திரத்தில் விளங்க வைத்திருப்பாரேயன்றி, இத்துணை உய்த்துணர்விற்கும் மயக்கத்திற்கும் இடந் தந்திரார் என்க.

**- "செந்தமிழ்ச் செல்வி" மடங்கல் 1936**

# 6

# நிகழ்கால வினை

தொல்காப்பியர்,

**“நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்**
**வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட**
**அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய**
**செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.”** (719)

என்னும் பெயரெச்ச வாய்பாட்டு நூற்பாவில், ‘செய்கின்ற’ (‘செய்கிற’) என்னும் நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாட்டைக் கூறாமையானும்; வினையெச்ச வாய்பாட்டு நூற்பாவில் அவர் முக்கால வினையெச்சங்களை யும் கூறியிருப்பினும், நிகழ்கால வினையெச்சத்தில் நிகழ்கால இடைநிலை (கின்று-கிறு) இயல்பாய் அமையாமையானும்;

**“முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை**
**எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து**
**மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்”** (725)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு,

“மலைநிற்கும், ஞாயிறியங்கும்”

என்பன போன்றும்,

**“மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி**
**அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி**
**செய்வ தில்வழி நிகழுங் காலத்து**
**மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே”** (727)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு,

“தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான் நிரயம் புகும்” என்பன போன்றும், எதிர்காலத்திற்குரிய ‘செய்யும்’ என்னும் முற்றையே உரையாசிரியன்மார் எடுத்துக்காட்டி வந்திருப்பதானும், ‘செய்கின்றான்’ என்னும் வாய்பாட்டுச் சொல் உருத்தெரியாதவாறு திரிந்தன்றித் தொல் காப்பியத்தில் ஓரிடத்தும் வாராமையானும்; ‘செய்கின்ற’ என்னும் வாய்பாட்டுச் சொல்லோ அங்ஙனந் திரிந்தேனும் அதன்கண் வாராமையானும்; இடையியலில் முக்கால இடைநிலைகளைக் குறிப்பிடு மிடத்து,

**"வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்"** (735)

என்று தொல்காப்பியர் பொதுப்படவே தொகுத்துக் கூறியிருத்தலானும்; 'கின்று' என்னும் இடைநிலைபெற்ற நிகழ்காலவினை தொல்காப்பியர் காலத்து உண்டோ என்று சிலர் மருளவும், இல்லை என்று சிலர் பிறழவும் இடமாகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் முக்கால வினைகளும் இருந்தன என்பதும், நிகழ்காலத்திற்குத் தனிவினை இருந்திருத்தல் வேண்டும் என்பதும்,

**"காலந் தாமே மூன்றென மொழிப"** (தொல். 684)

**"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்"** (தொல். 685)

**"முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை**
**எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து**
**மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்"** (தொல். 725)

**"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்**
**ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி**
**இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்**
**விரைந்த பொருள என்மனார் புலவர்"** (தொல். 726)

**"மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி**
**அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி**
**செய்வ தில்வழி நிகழுங் காலத்து**
**மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே"** (தொல். 727)

**"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்**
**இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை"** (தொல். 730)

**"இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்**
**சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி"** (தொல். 732)

**"ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்"** (தொல். 733)

என்னுந் தொல்காப்பிய நூற்பாக்களானேயே பெறப்படும்.

இனி, சேனாவரையரும்,

உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம், உண்கின்றனேம்; உண்கின்றன, உண்கின்ற; நடக்கின்றது, உண்கின்றது என்னும் கின்றிடைநிலை வினைமுற்றுகளை நிகழ்கால வினைமுற்றுகளாகத் தம் உரையில் எடுத்துக்காட்டியுள்ளார் (தொல். வினை. 15, 19, 20 உரை).

பண்டைச் சேரநாடாகிய கேரள அல்லது மலையாள நாட்டில், இறந்தகால நிகழ்கால வினைமுற்றுகள் இன்று பாலீறு நீங்கிப் பகுதியும் இடைநிலையும் மட்டும் அமைந்த அளவில் வழங்குகின்றன.

எ-டு:

**இறந்தகாலம்**

| **தமிழ் முற்று** | **தமிழ் எச்சம்** | **மலையாள முற்று** |
|---|---|---|
| செய்தான் | செய்து | செய்து |
| அடித்தாள் | அடித்து | அடிச்சு |
| அறிந்தார் | அறிந்து | அறிஞ்னு |
| ஆயிற்று | ஆய் | ஆயி |
| வந்தன | வந்து | வந்நு |
| வாழ்ந்தேன் | வாழ்ந்து | வாணு |
| பாடினோம் | பாடி | பாடி |
| புறப்பட்டாய் | புறப்பட்டு | புறப்பெட்டு |
| வாங்கினீர் | வாங்கி | வாங்ஙி |

**நிகழ்காலம்**

| **தமிழ் முற்று** | **ஈறு நீங்கிய தமிழ் வடிவம்** | **மலையாள முற்று** |
|---|---|---|
| செய்கின்றான் | செய்கின்று | செய்யுந்நு |
| அடிக்கின்றான் | அடிக்கின்று | அடிக்குந்நு |
| அறிகின்றார் | அறிகின்று | அறியுந்நு |
| ஆகின்றது | ஆகின்று | ஆகுந்நு |
| வருகின்றன | வருகின்று | வருந்நு |
| வாழ்கின்றேன் | வாழ்கின்று | வாழுந்நு |
| பாடுகின்றோம் | பாடுகின்று | பாடுந்நு |
| புறப்படுகின்றாய் | புறப்படுகின்று | புறப்பெடுந்நு |
| வாங்குகின்றீர் | வாங்குகின்று | வாங்ஙுந்நு |

இதனால், 'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலை மலையாளத்தில் 'குந்நு' அல்லது 'உந்நு' என்று திரிந்திருப்பதைக் காணலாம்.

'செய்யும்' என்னும் வாய்பாட்டு எதிர்கால வினைமுற்று, பால் காட்டும் ஈறில்லாததாயும், பலபாற்குப் பொதுவான ஈறுள்ளதாயும், பலுக்கு வதற்கு எளிதாயும், இடைநிலையின்றிச் சுருங்கியதாயும், இருத்தலின்; அதுவே மலையாளத்திலும் (மூவிட) எதிர்கால வினைமுற்றாக வழங்கி வருகின்றது.

பண்டைச் சேரநாட்டுத் தமிழிற் போன்றே, முதற்கால மலையாளத் திலும் வினைமுற்றுகள் பாலீறுகொண்டு வழங்கியமை, பழைய மலையாளச் செய்யுளாலும், யூதருக்கும் சிரியக் கிறித்தவர்க்கும் அளிக்கப்பட்ட பட்டயத்தாலும், பழமொழிகளாலும் அறியக் கிடக்கின்றது. பாலீறுகொண்ட வினைமுற்றுகள் இன்றும் மலையாளச் செய்யுளில் ஆளப்பெறும்.

வினைமுற்றை அடிப்படையாகக் கொண்ட வினையாலணையும் பெயர்கள், மலையாள உலக வழக்கில் இயல்பாக வழங்குகின்றன. ஆதலால், 12ஆம் நூற்றாண்டிற்குமேல் சோழபாண்டித் தமிழரொடு உறவுவிட்டுப் போனபின், சொற்களைக் குறுக்கி வழங்குவதற் கேதுவான வாய்ச்சோம்பலாலும், புலவரின் இலக்கணக் கட்டுப்பாடு அற்றுப் போனமையாலும் **குடுதுறு - கும்டும் தும்றும்** விகுதி பெற்ற தன்மை வினைமுற்றுகளின் தொடர்ப் பாட்டினாலும், மலையாள நாட்டு மக்கள் வினைமுற்றுகளைப் பாலீறு நீக்கி வழங்கத் தலைப்பட்டுவிட்டனர்.

**“அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்**
**உம்மொடு வரூஉங் கடதற என்னும்**
**அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்**
**பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே”** (தொல். வினை. 5)

**“கடதற என்னும்**
**அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு**
**என்ஏன் அல்என வரூஉம் ஏழும்**
**தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே”** (தொல். வினை. 6)

என்று கி.மு. 7ஆம் நூற்றாண்டிற்கு முந்திய தொல்காப்பியத்திலேயே கூறப்பட்டிருப்பதாலும், குடுதுறு - கும்டும் தும்றும் ஈற்றுத் தன்மை வினை முற்றுகள் நெடுகலும் செய்யுளில் ஆளப்பெற்று வந்திருப்பதாலும், முற்காலத்தில் பாலீறில்லா முடிவிலேயே தமிழ் வினைமுற்று வழங்கி வந்திருப்பதாகத் தெரிகின்றது. இதுவே மொழிநூற்கும் பொருந்தும் முடிபாகும். ஆயினும், மலையாள நாட்டில் பாலீற்று வினைமுற்றே அவ்வீறு நீங்கிப் பழைய வடிவில் வழங்கி வருகின்றது.

நிகழ்கால வினையாலணையும் பெயர்களும் தொழிற்பெயர்களும் பெயரெச்சங்களும் உள்ள, சில மலையாளப் பழமொழிகளும் சொற்றொடர் களும் வருமாறு:

‘கடிக்குந்நது கரிம்பு, பிடிக்குந்நது இரிம்பு.’

‘அலக்குந்நோன்*றெ கழுத போல.’

பாபம் போக்குந்நோந் ஆர்?

‘பாரம் சுமந்நும் நடக்குந் நோரே!’ (மத். 11 : 23)

‘அஞ்சு எரும கறக்குந்நது அயல் அறியும், கஞ்சி வார்த்துண் ணுந்நது நெஞ்சு அறியும்.’

‘அந்நந்நு வெட்டுந்ந வாளிந்நு நெய்யிடுக.’

‘உறங்ஙுந்ந பூச்ச எலிபிடிக்க இல்ல.’

---

மலையாளத்தில் றன்னகரம் இல்லை. ஆயினும், மலையாள ஒலியைக் குறித்தற்பொருட்டு இங்கு றன்னகரம் ஆளப்பெற்றது.)

'கரயுந்ந குட்டிக்கெ பால் உள்ளு.'

'குரெக்குந்ந நாயி கடிக்க யில்ல.'

'மண்ணு திந்நுந்ந மண்டெலியே போல.'

இம் மலையாளப் பழமொழிகளிலும் சொற்றொடர்களிலும் வந்துள்ள நிகழ்காலச் சொற்கட்கு நேர் தமிழ்ச்சொற்கள் வருமாறு:

| மலையாளம் | தமிழ் | |
|---|---|---|
| கடிக்குந்நது | கடிக்கின்றது | (வி.மு.) |
| பிடிக்குந்நது | பிடிக்கின்றது | (வி.மு.) |
| அலக்குந்நோந் | அலக்குகின்றோன் | (வி.மு.) |
| போக்குந்நோந் | போக்குகின்றோன் | (வி.மு.) |
| நடக்குந்நோர் | நடக்கின்றோர் | (வி.மு.) |
| கறக்குந்நது | கறக்கின்றது | (தொ.பெ.) |
| உண்ணுந்நது | உண்கின்றது | (தொ.பெ.) |
| வெட்டுந்ந | வெட்டுகின்ற | (பெ.எ.) |
| உறங்ஙுந்ந | உறங்குகின்ற | (பெ.எ.) |
| கரயுந்ந | கரைகின்ற | (பெ.எ.) |
| குரெக்குந்ந | குரைக்கின்ற | (பெ.எ.) |
| திந்நுந்ந | தின்கின்ற | (பெ.எ.) |

இவ் எடுத்துக்காட்டுகளால், செய்கின்றான் என்பது 'செய்யுந்நாந்' என்றும், செய்கின்றது என்பது 'செய்யுந்நது' என்றும், 'செய்கின்ற' என்பது 'செய்யுந்ந' என்றும், மலையாளத்தில் திரிவது தெளிவு. வினையா லணையும் பெயர்களுள், அஃறிணைப் பெயர்களாயின் அவற்றின் அகரமுதல் ஈறுகள்(அ, அவ) திரியாதும், உயர்திணைப் பெயர்களாயின் அவற்றின் ஆகாரமுதல் ஈறுகள் (ஆன், ஆள், ஆர்) ஓகாரமுதலாகத் திரிந்தும்*, வழங்குகின்றன.

| எ-டு : | **தமிழ்** | **மலையாளம்** |
|---|---|---|
| | செய்கின்றது | செய்யுந்நது |
| | செய்கின்றான் | செய்யுந்நோந் |

'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலையைக் 'குந்நு' அல்லது 'உந்நு' என்று திரித்து வழங்கும் வழக்கம், சேரநாட்டில் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றது. அந் நாடு மழை மிகுதியாகப் பெய்யும் மலை நாடாதலின், அங்கத்துத் தமிழ்மக்கள் பேச்சில் மூக்கொலிகளான மெல்லின வெழுத்துகள் பேராட்சி பெற்றுவந்திருக்கின்றன.

---

ஆகாரத்தை ஓகாரமாக ஒலிப்பது மலையாளியர் இயல்பு. காலெஜ் (college) என்பதைக் கோலெஜ் என்றும், சாக் (chalk) என்பதைச் சோக் என்றும், அவர் ஒலித்தல் காண்க.)

| எ-டு : | **தமிழ்** | **மலையாளம்** |
|---|---|---|
| | நான் | ஞான் |
| | நாங்கள் | ஞங்கள் |
| | தந்து | தந்நு |
| | துடங்கி | துடங்ஙி |
| | வீழ்ந்து | வீணு |

நான் என்னுஞ் சொல்லின் முதலெழுத்து மெல்லினமேயாயினும், அது மேலும் ஒருபெரு மெல்லொலியான ஞகரமாகத் திரிந்திருப்பது, மலையாள மக்கள் பேச்சின் மெல்லோசை மிகுதியைத் தெளிவாக எடுத்துக் காட்டும். இங்ஙனம் மூக்கொலிகள், சேரநாட்டுத் தமிழிற் பேராட்சிபெற்று வந்திருப்பினும், நூன்மொழி அல்லது இலக்கிய மொழி செந்தமிழாகவே யிருத்தல் வேண்டுமென்னும் இலக்கண மரபுபற்றி, சேரநாட்டு இலக்கியமும் செந்தமிழாகவே இருந்து வந்திருக்கின்றது. கொங்குநாட்டைச் சேர்ந்த வடார்க்காட்டுப் பாங்கரில் இன்று கொச்சைத் தமிழே வழங்கிவரினும், அங்கும் இலக்கியத் தமிழ் செந்தமிழாகவே யிருந்துவருதல் காண்க.

வடார்க்காட்டுத் தமிழுக்கு எடுத்துக்காட்டு வருமாறு:

இசுத்து இசுத்து ஒச்சான். (இழுத்து இழுத்து உதைத்தான்.)

கொயந்த வாயப்பயத்துக்கு அய்வுது. (குழந்தை வாழைப்பழத்திற்கு அழுகிறது.)

பசங்க உள்ளே துண்ராங்க. (பையன்கள் உள்ளே தின்கிறார்கள்.)

கண்ணாலம் மூய்க்கணும். (கல்யாணம் முடிக்கவேண்டும்)

வந்துகினு போயிகினேக் கீரான். (வந்துகொண்டு போய்க்கொண்டே யிருக்கிறான்.)

சேரநாட்டுச் சொற்கள் பல செந்தமிழுக் கொவ்வாவிடினும், திசைச்சொல் வகையில் அவற்றுள் ஒன்றிரண்டு இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

**"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
**றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"** (தொல். 880)

**"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"** (தொல். 883)

என்று திசைச்சொல்லும் செய்யுளுக்குரியதென்றும், அது கொடுந் தமிழ்நாட்டு வழக்கென்றும், தொல்காப்பியத்திற் கூறப்பட்டிருத்தல் காண்க.

நிகழ்கால வினையாலணையும் பெயர்கள் சேரநாட்டியல்புபடி, முதலாவது பின்வருமாறு திரிந்திருத்தல் வேண்டும்.

| **செந்தமிழ்** | **சேரநாட்டுக் கொடுந்தமிழ்** |
| --- | --- |
| செய்கின்றான் | செய்குந்நான் - செய்குநன் |
| செய்கின்றது | செய்குந்நது - செய்குநது |
| செய்கின்ற | செய்குந்ந - செய்குந |

ண ந ன என்னும் மூவெழுத்துள்ளும்,முதல்முதல் தோன்றியது நவ்வே. ரகரத்தின் வன்னிலையாகிய றகரம் தோன்றிய பின்பே, அதற்கின மான னகரம் தோன்றிற்று. இதனாலேயே, றனக்கள் நெடுங்கணக்கில் பமக்களின் பின் வைக்கப்பெறாது, இடையினத்தின்பின் இறுதியில் வைக்கப்பெற்றுள. முதற்காலத்தில் தந்நகரமே றன்னகரத்திற்குப் பதிலாக வழங்கி வந்ததென்பதற்கு, பொருந், வெரிந், பொருநை முதலிய சொற்களே போதிய சான்றாகும்.

'செய்குந்நான்' என்னும் வடிவம், சற்றுப் பிற்காலத்தில் குகரம் நீங்கி, செய்யுந்நான்-செய்யுநன்-செய்நன் என முறையே திரிந்திருக்கின்றது. இங்ஙனமே, 'செய்குந்ந' என்னும் பெயரெச்சமும், செய்யுந்ந-செய்யுந-செயுந என முறையே திரிந்திருக்கிறது.

'செய்நன்' என்ற வாய்பாட்டு வடிவிலேயே, கீழ்க்காணும் பெயர்கள் அமைந்துள்ளன.

கொள்நன் - கொழுநன் = கணவன்[1]

பொருநன் = போர் செய்கின்றவன்.

மகிழ்நன் - மகிணன் = இன்புறும் மருதநிலத் தலைவன்.

வாழ்நன் - வாணன் = வசிக்கின்றவன்.

வருநர், பாடுநர், இகழுநர், வாழ்நர், அறைநர், அடுநை(முன்னிலை யொருமை), விடுநை(மு.ஒ.) தகுந, வல்லுநர், களையுநர், பருகுநர் , கூறுநர், பொருநர், மலர்க்குநர், உடலுநர், நுவலுநர், முயலுநர், வருந, தப்புந, பேணுநர், மேம்படுந!(விளி), கொய்யுநர், ஓம்புநன், அறியுநர், ஈகுநர், காமுறுநன், கொழுநன், வேண்டுநர், தொடக்குநர், செறிக்குநர், யாக்குநர், அறிநை(மு.ஒ.), வாணர் என்னும் புறநானூற்றுச் சொற்கள், 'செய்நன்' அல்லது 'செய்யுநன்' என்னும் வாய்பாட்டில் வந்த படர்க்கை முன்னிலை வினையாலணையும் பெயர்த்திரிபுகளாம். இத்தகைய சொற்களைப் பிற சங்க நூலினும் சங்க மருவிய நூலினும் பரக்கக் காணலாம். தொல்காப்பியத்திலேயே பல நூற்பாக்கள் இத்தகைய சொற்களைக் கொண்டுள்ளன. அவையாவன:

**"இயல்பா குநவும் உறழா குநவும்என்று"** (தொல். 151)

**"இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**உறழா குநவும் என்மனார் புலவர்"** (தொல். 158)

1. (கொள்கொம்பு என்பது கொழு கொம்பு என்று திரிந்திருத்தல் காண்க. கொள்நன் என்பது பற்றுகின்றவன் அல்லது கூடுகின்றவன் என்று பொருள்படுவது.)

**"வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்"** (தொல். 159)

**"நெடியதன் இறுதி இயல்பா குநவும்"** (தொல். 400)

**"கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்"** (தொல். 483)

**"சொன்முறை முடியாது அடுக்குந வரினும்"** (தொல். 718)

**"புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்என்று"** (தொல். 735)

**"தத்தங் கிளவி அடுக்குந வரினும்"** (தொல். 912)

**"பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மருங்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்"** (தொல். 932)

**"பாலறி மரபிற் பொருநர் கண்ணும்"** (தொல். 1021)

**"அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்"** (தொல். 1171)

**"நினையுங் காலைக் கேட்குநர் அவரே"** (தொல். 1452)

**"சொல்லுந போலவும் கேட்குந போலவும்"** (தொல். 1456)

இங்ஙனம், கின்றிடைநிலை பெற்ற நிகழ்கால வினையாலணையும் பெயர்களின், திரிந்த வடிவுகள் தொல்காப்பியத்திலேயே வந்திருக்க, 'செய்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாட்டைத் தொல்காப்பியர் கூறாதது குன்றக் கூறலேயாம்.

'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால உடன்பாட்டு வினையெச்சத்துடன், நிற்றல் இருத்தல் கிடத்தல் பற்றிய இறந்தகால எச்சமுற்றுகள் தொடர்ந்துவரும் தொடர்ச்சொற்களினின்று, 'ஆநின்று', 'ஆவிருந்து', 'ஆகிடந்து' என்னும் இடைப்பகுதிகளைச் செயற்கையாகப் பகுத்துக் கொண்டு, அவற்றையும் நிகழ்கால இடைநிலைகள் எனப் பிற்காலத்து உரையாசிரியரும் இலக்கணவாசிரியரும் கூறுவது பொருந்தாது. நிகழ்கால இடைநிலை 'கின்று' எனும் ஒன்றே. 'கிறு' என்பது அதன் தொகுத்தலே.

**- "செந்தமிழ்ச் செல்வி" மே 1953**

# 7

# படர்க்கை 'இ' விகுதி

தமிழிலுள்ள பெண்பால் விகுதிகளுள் ஒன்றான 'இ' என்பது 'ஸ்திரி' என்னும் வடசொற் சிதைவென்று, 1951 மார்ச்சில் வெளிவந்த மதுரைக் கல்லூரி ஆண்டு மலரில், அக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் இரா. கிருஷ்ணமூர்த்தி (B.A., B.O.L., L.T.) அவர்கள் வரைந் துள்ளார்கள் என ஒரு தமிழன்பர் எழுதியுள்ளார். அது ''புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி'' யாயினும், அதனால் பலர் மயக்குண் டிருப்பதாகத் தெரிகின்றதனால், அதற்கு உடனே மறுப்பெழுதாவிடின்,

**''பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்**
**மெய்போ லும்மே மெய்போ லும்மே''**

என்பதற்கிணங்க, அது ஒருகால் எதிர்கால இலக்கண நூலிலும் இடம் பெறலாமென்று கண்டு, இம் மறுப்பை எழுதலானேன்.

மதுரைக் கல்லூரி யிதழில் இகர விகுதியைப் பற்றி வரையப்பட்டுள்ள பகுதி வருமாறு:

**''தமிழில் பெண்பால் விகுதி''**

'இ' என்பது தமிழில் பெண்பால் விகுதி என்று கூறப்படுகிறது. உண்மையில் பெண்பால் விகுதி 'இ' அல்ல. அது பெண்பால் விகுதியாயின் 'வில்லி', 'நாற்காலி' முதலியவற்றில் அப் பொருளில் வராதிருப்பதேன்? உண்மை என்னவென்றால், 'இ' என்பது 'ஸ்திரி' என்பதன் சிதைவு. பெரும்பாலும், 'த்தி,' 'ச்சி', 'ட்டி' என்பவையே பெண்பால் விகுதிகளாக வருகின்றன. இவை 'ஸ்திரி' என்பதன் மாறுபட்ட உருவங்கள் என்பது தெளிவு. முதலில் 'ஸ்திரி' என்பதே 'பெண்பால் விகுதியாக இருந்து பிறகு அது சிதைந்து 'த்தி', 'ச்சி', 'ட்டி' என்று மாறியிருக்க வேண்டும்.

எ-டு:

| | |
|---|---|
| குற + ஸ்திரி = குறத்தி | புலை + ஸ்திரி = புலைச்சி. |
| வெள்ளான் + ஸ்திரி= வெள்ளாட்டி. | வலை + ஸ்திரி= வலைச்சி |
| வண்ணான் + ஸ்திரி = வண்ணாத்தி. | ஆய் + ஸ்திரி= ஆய்ச்சி. |
| பார்ப்பான் + ஸ்திரி= பார்ப்பாத்தி | பிராமண + ஸ்திரி= பிராமணத்தி. |
| ராஜா + ஸ்திரி = ராஜாத்தி | பறை + ஸ்திரி = பறைச்சி |

பெண்டு + ஆம் + ஸ்திரி = பெண்டாட்டி கண் + ஆம் + ஸ்திரி = கண்ணாட்டி, பொம்மனாட்டி. கம்மனாட்டி என்பவையும் இவ்வாறே வந்திருக்கவேண்டும்."

இனி இதன் மறுப்பு விளக்கம் வருமாறு :

தமிழில், ஆண்பால் பெண்பால் விகுதியேற்படாத முதுகாலத்தில், அதாவது உயர்திணை அஃறிணை என்னும் திணை வேறுபாடு தோன்றாத பழங்காலத்தில், ஒருமைப்பால் பன்மைப்பால் என்னும் இருபால்களே இரு திணைக்கும் பொதுவாக வழங்கி வந்தன. முதற்காலத்திலேயே பகுத்தறிவுள்ளதும் இல்லதும் எனப் பொருள்களைத் தமிழர் இரு பகுப்பாகப் பகுத்திருக்க முடியாது. நாகரிகமும் அறிவு வளர்ச்சியுமாகிய பண்பாடடைந்த பின்னரே, அவர் அவ்வாறு செய்திருத்தல் வேண்டும். இன்றும், இருதிணைக்கும் பொதுவாகப் பல சொற்களும் விகுதிகளும் வழங்கக் காண்கின்றோம். அவை முந்துகால மொழிநிலையைக் காட்டும் எஞ்சு குறிகளாகும்.

எ-டு :

**சொற்கள்**

ஆண், பெண், தாய், தந்தை, பிள்ளை, குட்டி, தான், தாம்.

**விகுதிகள்**

கத்தரிப்பான் = கத்தரிக்கின்றவன் (உயர்திணை ஆண்பால்)
கத்தரிப்பான் = கத்தரிக்கோல் (அஃறிணை ஒன்றன்பால்)

கண்ணி = கண்ணையுடையவள் (உயர்திணைப் பெண்பால்)
கண்ணி = கண்ணையுடையது (அஃறிணை ஒன்றன்பால்)

கொல்லி = கொல்கின்றவன் (உயர்திணை ஆண்பால்)
கொல்லி = கொல்கின்றவள் (உயர்திணைப் பெண்பால்)
கொல்லி = கொல்கின்றது (அஃறிணை ஒன்றன்பால்)

**"இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்**
**திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்**
**நினையுங் காலைத் தத்தம் மரபின்**
**வினையோ டல்லது பால்தெரி பிலவே"** (657)

**"இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி தாமே தானே**
**எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து**
**சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு**
**அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே"** (659)

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்கள் இங்குக் கவனிக்கத் தக்கன.

பால்காட்டும் விகுதிகள், இன்று எங்ஙனம் பெரும்பாலும் சுட்டுப் பெயர்களும் அவற்றின் குறுக்கமுங் குறையுமாயிருக்கின்றனவோ, அங்ஙனமே முற்காலத்தும் இருந்தன.

எ-டு : அது - வலது, தனது, உளது, நல்லது.

இது - வெளிது, வலிது, கரிது, புதிது

உது - விழுது, பழுது, எருது (ஏருது), மருது.

அவன் - ஆன் - அன்: நல்லவன் - நல்லான் - நல்லன்.

அவர் - ஆர் - அர்: வல்லவர் - வல்லார் - வல்லர்.

இவர் - ஈர் - இர்: (மகளிவர்) - (மகளீர்) - மகளிர்.

இகர வுகரவடி விகுதிகள் இக்காலத்துப் பெரும்பாலும் வழக்கிறந்தன.

தமிழின் அசைநிலைக் காலத்தில் (Monosyllabic or Isolating Stage), சுட்டுச்சொற்கள் விகுதி பெறாமல் சுட்டடியாகவே வழங்கி வந்தன. இன்று வழங்கும் பலவின்பால் அகரவிகுதி முந்துநிலையை யுணர்த்தும் அடையாளமாம்.

எ-டு : நல்ல = நல்லவை (பெயர்)

வந்த = வந்தன (வினைமுற்று)

**"ஒப்ப நாடி அத்தக வொறுத்தி"** (புறம். 10)

என்னும் அடியில், 'அத்தக' என்பது 'அதற்குத்தக' என்று பொருள்படுதலால், அசைநிலைக்காலத் துவக்கத்தில், சுட்டசைச்சொற்கள் எண்ணுணர்த்தாது சுட்டுப் பொருளொன்றே உணர்த்தி வந்தன என ஊகிக்க இடமுண்டு.

சேய்மை, அண்மை, முன்மை ஆகிய மூவகையிடங்களையும் முறையே சுட்டும் அ, இ, உ (அல்லது ஆ, ஈ, ஊ) என்பன, அசைநிலைக் காலத்தில் தனிச்சொல்லேயாகவும், அதற்கடுத்த புணர்நிலைக்காலத்தில் (Compounding Stage) தனிச்சொல்லும் கூட்டுச் சொல்லுமாகவும், அதற்கடுத்த விகுதிநிலைக்காலத்தில் (Inflexional stage) தனிச் சொல்லும் கூட்டுச் சொல்லும் விகுதியாகவும் வழங்கி வந்து, இன்று நாலாங்காலமாகிய கொளுவுநிலைக்காலத்தின் (Agglutinative Stage) பிற்பகுதியில், தனிச்சொல்லாய் வழங்குவதொழிந்து ஏனையிருவகை யாகவே வழங்கி வருகின்றன.

எச்சொல்லும் வேறொரு சொல்லின் விகுதியாக அமைந்தவுடன், தன் விதப்புப் பொருளை இழந்துவிடும். ஆகவே, சுட்டுச்சொற்களும் விகுதியா யமைந்தபின் தம் சுட்டுப்பொருளையிழந்து பால்மட்டும் உணர்த்தி நிற்கும்.

ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு விகுதிகள் வகுக்கப்பட்ட காலத்தில், இகரச்சுட்டு ஒருமை விகுதிகளுள் ஒன்றாகக் கொள்ளப்பெற்றது. அன்று ஆண் பெண் பால்வேறுபாடு குறிக்கப்பெறாத காலமாதலால், ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் ஆகிய முப்பாலுக்கும் பொதுவாகவே

இகரச்சுட்டு வழங்கத் தலைப்பட்டு, அன்றிருந்து அம்முறையே தொடர்ந்து வருகின்றது. (பெண்மகள் என்னும் மாறோக்கத்து வழக்கும் பெட்டைப் பையன் என்னும் வடார்க்காட்டு வழக்கும், ஆண்பால் பெண்பால் விகுதியேற்படாத முந்துகால மொழிநிலையை ஊகித்துணர வுதவும்.)

எ-டு : விறகுவெட்டி (ஆண்பால்)
மண்வெட்டி (ஒன்றன்பால்)
கயற்கண்ணி (பெண்பால்)
காடைக்கண்ணி (ஒன்றன்பால்)

ஆகவே, இகர விகுதி ஒருமை விகுதியேயன்றிப் பெண்பால் விகுதியன்று. அது ஒரு குறித்த சொல்லில் மேற்கூறிய முப்பாலுள் ஒன்றை உணர்த்துமே யன்றித் தனித்த நிலையில் உணர்த்தாது. கண்ணன் என்னும் ஆண்பாற் சொற்கு நேரான பெண்பாற் சொல், கண்ணள் என்பதே யன்றிக் கண்ணி என்பதன்று. கண்ணான் என்பது கண்ணன் என்று குறுகுவது போலக் கண்ணாள் என்பதும் கண்ணள் என்று குறுகும். வந்தான் என்பதற்கு வந்தாள் என்பது எங்ஙனம் பெண்பாலோ, அங்ஙனமே கண்ணன் என்பதற்கும் கண்ணள் என்பதே நேரான பெண்பாலாம். கண்ணாள் அல்லது கண்ணள் என்று சொல்வதற்குப் பதிலாகக் கண்ணி என்று சொல்வது வழக்கூன்றிவிட்டதனால், இகர விகுதியைப் பெண்பாற் சிறப்பு விகுதி யென்று பலர் மயங்க நேர்ந்துவிட்டது. அவ் விகுதி பெண்பால் விகுதியா யிருக்கக் கூடியதே யன்றிப் பெண்பாலுக்கே யுரிய விகுதியன்று.

'இ'வ் விகுதி 'அள்' விகுதியைவிடப் பலுக்குவதற்கு (உச்சரிப்பதற்கு) எளிதாயும் இன்னோசையுள்ளதாயு மிருத்தலே, அது பெருவழக்காய் வழங்குவதற்குக் காரணமாகும். கண்ணள் கண்ணி என்னும் இரு சொற்களையும் பலுக்கிக் காண்க. இக் காரணம் பற்றியே, தாயைக் குறிக்கும் சொற்களுட் சில 'அள்' விகுதியைவிட்டு 'இ'வ் விகுதியை ஏற்றுள்ளன.

எ-டு :

| ஆண்பால் (தந்தை) | பெண்பால் (தாய்) |
|---|---|
| அத்தன் | அத்தி |
| அச்சன் | அச்சி |

அத்தி என்பதொடு தொடர்புள்ள அத்தை என்னும் பெயர், அத்தனின் (தந்தையின்) உடன்பிறந்தாளைக் குறிக்கும். அத்தன் என்பதன் திரிபே அச்சன் என்பது. அச்சன் என்னும் ஆண்பாற்பெயர் சேரநாடான மலையாள நாட்டிலும், அச்சி என்னும் பெண்பாற் பெயர் பாண்டிநாட்டிலும், வழங்கி வருகின்றன.

அச்சி = அக்கை (பாண்டிநாட்டு வழக்கு)

அக்கை தாய் போன்றவளாதலால் அச்சி எனப்பட்டாள்.

ஒ.நோ : தம் + அவ்வை (தாய்) = தவ்வை = தமக்கை

அச்சு (அச்சன்) அச்சி என்னும் பெயர்கள், தொடர்மொழி யுறுப்பாக, முறையே தாய் தந்தைப் பொருளில் வழங்கிவருகின்றன.

அப்பச்சு = அப்பனின் தந்தை = பாட்டன் (பாண்டிநாட்டு வழக்கு)
அம்மாச்சி = அம்மையின் தாய் = பாட்டி (சோழநாட்டு வழக்கு)
அப்பச்சு என்பது அப்பச்சி எனத் திரிந்து வழங்குகின்றது.

அருமையும் பெருமையும்பற்றி, பருவமடைந்துள்ள ஆடவரையும் பெண்டிரையும் தாய்தந்தையரைக் குறிக்கும் முறைப்பெயரால் அழைக்கும் வழக்கம், நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருவதால், அப் பெயர்கள் ஆண்பாற் பெண்பாற் பெயரீற்றுத் தன்மையடைந்துள்ளன. ஓர் ஆடவரை ஐயா என்றும், ஒரு பெண்டை அம்மா என்றும் அழைத்தல் காண்க. அம்மை அல்லது அம்மா என்னும் பெயர், இயற்பெயரும் தொழில்பற்றிய பொதுப் பெயருமான பெண்பாற் பெயர்களின் ஈறாகப் பெருவழக்காய் வழங்கி வருகின்றது.

எ-டு : பொன்னம்மை, பொன்னம்மா } இயற்பெயர்
தாயம்மை, தாயம்மா
வாத்தியாரம்மா, டாக்டர் அம்மா - தொழில் பற்றிய பெண்பாற் பொதுப்பெயர்

இங்ஙனமே, அத்தி அச்சி என்னும் தாய்முறைப் பெயர்களும், குலமும் தொழிலும் குணமும் நிறமும் நிலைமையும் பிறவும் பற்றிய பெண்பாற் பொதுப்பெயர்களின் ஈறாக வழங்கி வருகின்றன.

எ-டு : குற + அத்தி = குறத்தி
தட்டா(ன்) + அத்தி = தட்டாத்தி } குலம்.
பறை + அச்சி = பறைச்சி
வலை + அச்சி = வலைச்சி

உபாத்தி + அச்சி = உபாத்திச்சி
மருத்துவ + அச்சி = மருத்துவச்சி } தொழில்
மடை + அச்சி = மடைச்சி - தன்மை
வெள்ளை + அச்சி = வெள்ளைச்சி - நிறம்
முண்டை + அச்சி = முண்டைச்சி
ஆண்டி + அச்சி = ஆண்டிச்சி } நிலைமை
பேய் + அச்சி = பேய்ச்சி
நெட்டை + அச்சி = நெட்டைச்சி
குள்ள + அச்சி = குள்ளச்சி } அளவு
குப்ப + அச்சி = குப்பச்சி - இடம்
சடை + அச்சி = சடைச்சி
சிற்றிடை + அச்சி = சிற்றிடைச்சி } உறுப்பு

வெள்ளைச்சி, பேய்ச்சி, குப்பச்சி, சடைச்சி முதலிய பெண்பாற் பெயர்கள், நாட்டுப்புறங்களில் இயற்பெயராக இடப்பட்டு வருகின்றன.

அத்தி அச்சி என்னும் பெயர்கள் ஈறாக நின்று புணரும்போது, அவற்றின் அகரமுதல் கெட்டுவிடுகின்றது. கெடாது நிற்பதும் உண்டு.

எ-டு : கள்ளவத்தி

வெள்ளைச்சி குப்பச்சி என்னும் பெயர்களை வெள்ளையம்மா குப்பம்மா என்பவற்றுடன் ஒப்புநோக்குக.

அத்தி என்னும் சொல்லின் குறையான 'தி' ஈறு, நிலைமொழியீற்று ளகர மெய்யோடு புணரும்போது, அவ் விரண்டும் 'ட்டி' எனத் திரியும். அது என்னும் சொல்லின் குறையான 'து'வ்வீறும், இங்ஙனமே 'டு'வ்வீறாகத் திரிதல். காண்க. (தாள் + து = தாட்டு.)

ஆளன் (ஆள் + அன்) என்னும் ஆண்பாலீற்றிற்கு எதிராக ஆட்டி (ஆள்+தி) என்பது பெண்பாலீறாய் வரும்.

எ-டு : வெள்ளாளன் - வெள்ளாட்டி

கண்ணாளன் - கண்ணாட்டி

மணவாளன் - மணவாட்டி

திருவாளன் - திருவாட்டி

குணவாளன் - குணவாட்டி

குணாளன் - குணாட்டி

வெள்ளாளன் என்பதை வெள்ளான் என்பது தவறு.

மகன் என்னும் ஆண்பாலீறு மான் என்று மருவுவது போல், மகள் என்னும் பெண்பாலீறு மாள் என்று மருவும்.

எ-டு : பெருமகன் - பெருமான், குறுமகன் - குறுமான், மருமகன் - மருமான், திருமகன் - திருமான், வெளிமகன் - வெளிமான்.

பெருமகள் - பெருமாள், வேண்மகள் - வேண்மாள், திருமகள் - திருமாள்.

'மாள்' என்னும் பெண்பாலீற்றொடு மேற்காட்டிய 'தி' என்னும் ஈறும் சேரும்போது, அவ் விரண்டுமே 'மாட்டி' எனத் திரியும்.

எ-டு :

| **ஆண்பால்** | **பெண்பால்** |
|---|---|
| பெருமான் | பெருமாட்டி |
| திருமான் | திருமாட்டி |
| சீமான் | சீமாட்டி |

பெருமான் என்பது பிரான் என்று மருவும்போது, பெருமாட்டி என்பது பிராட்டி என மருவும். பெருமாள் திருமாள் என்னும் ஒற்றையீற்றுப் பெண்பாற் பெயர்கள் இன்று வழக்கிறந்தன. விகுதிமேல் விகுதி வந்து

இரட்டைப்பன்மைப் பெயர்கள் வழங்குவது போன்றே, ஈற்றின்மேல் ஈறு வந்து இரட்டைப்பெண்மைப் பெயர்களும் வழங்கும்.

எ-டு : வெள்ளாட்டி + அச்சி = வெள்ளாட்டிச்சி.

பெண்டாட்டி (பெண்டு+ஆட்டி) என்பதிலுள்ள 'ஆட்டி' ஈறு மனைவிப் பொருள் குறிக்க வந்ததாகும். 'பெண்', 'பெண்டு' என்பன இடம்நோக்கி மனைவிப் பொருளுணர்த்தும் பெண்பாற் பொதுப்பெயராம்.

கை + பெண் = கைம்பெண்

கை + பெண்டு = கைம்பெண்டு

கை + பெண்டாட்டி = கைம்பெண்டாட்டி.

பெண்பெண்டாட்டி என்பது, ஆண்பிள்ளைப் பிள்ளை காரான்பசு அரைஞாண் கயிறு என்பன போன்ற மிகைபடு சொற்றொடர்.

**"ஒரு பெண்பெண்டாட்டி ஆணுடை யுடுத்து"** (ஈடு. 6 : 2)

கைம்பெண்டாட்டி பெண்பெண்டாட்டி என்பன, முறையே, கம்ம னாட்டி பொம்மனாட்டி எனக் கொச்சை வழக்கில் மருவி வழங்குகின்றன.

அத்தி அச்சி என்னும் ஈறுகள் பெண்பால் மட்டும் உணர்த்தி உயர்வு குறிக்காமையால், தட்டாத்தியம்மா, உபாத்திச்சியம்மா முதலிய பெயர்கள் உயர்வு குறிக்க வந்த இரட்டைப் பெண்பாற் பெயராகும்.

அப்பன், ஐயன் என்னும் தந்தை முறைப் பெயர்கள், அருளப்பன், கண்ணப்பன், செல்லப்பன், நாகப்பன், அருளையன், கண்ணையன், செல்லையன், நாகையன் என எவ்வாறு ஆண்பாற் பெயரீறுகளாய் ஆளப்பெறுகின்றனவோ; அவ்வாறே, அம்மை, அத்தி, அச்சி என்னும் தாய்முறைப் பெயர்களும் பெண்பாற் பெயரீறுகளாய் ஆளப்பெறும் என்க.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழில் பெண்பால் குறித்து வரும் 'த்தி', 'ச்சி', 'டி' ('ட்டி') என்னும் ஈறுகளெல்லாம், அத்தி அச்சி என்னும் தென் சொற்களின் குறையும் திரிபுமேயன்றி, 'ஸ்திரி' என்னும் வடசொற் சிதைவல்ல என்று தெற்றெனக் கண்டுகொள்க.

**– "செந்தமிழ்ச் செல்வி" ஆகத்து 1951**

# 4

# காரம், காரன், காரி

வடமொழியை அடிப்படையாகக்கொண்டு தூய தென்சொற்கட்கும் வேர்காணும் வழூஉ வழக்கம், தமிழகம் அகவிருளில் முழுக்கப்பட்டிருந்த இடைக்காலத்தில் தோன்றி, இன்றும் தொடர்கின்றது. இயல்பிலும் போக்கிலும், வடமொழியும் தென்மொழியும் வடக்கும் தெற்கும்போல் நேர் மாறானவை. தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு அடிப்படையுமாதலால், பல வடசொற்குத் தமிழை அடிப்படையாகக் கொண்டு வேர் காணமுடியுமேயன்றி வடமொழியை அடிப்படையாகக் கொண்டு எத் தமிழ்ச்சொற்கும் வேர் காணமுடியாது. இவ் வுண்மையை அறிந்தே, கால்டுவெல் கண்காணியாரும், தமிழ்ச்சொற்கட்கெல்லாம் தமிழ்முறையிலேயே அமைப்புக் கூறவேண்டு மென்றும், அங்ஙனம் கூற வியலாத போதே வடமொழித் துணையை நாடவேண்டு மென்றும், அங்கும் வடமொழித்துணையை நாடுவதைவிடத் தமிழ்வேர் அடையாளமின்றி மறைந்துவிட்டதென்று கொள்வதே பொருத்த மென்றும் கூறிப்போந்தார்.

மொழியாராய்ச்சி யில்லாதார் வடசொல்லென மயங்கும் தென் சொற்களுள், 'காரன், காரி' ஈறுகளும் அடங்கும். இவை 'காரம்' என்னும் தென்சொல்லடியாகப் பிறந்த ஆண்பால் பெண்பாற் பெயரீறுகள். செய் என்னும் ஏவற்பொருள்படும் 'க்ரு' என்னும் வடசொல்லினின்று, 'காரன் காரி' யீறுகள் பிறந்திருப்பதாக, வடமொழியாளரும் அவர் வழியினரும் கொள்வர். இதன் புரைமையை விளக்கிக் காட்டுவல்.

'காரன் காரி' யீறுகட்கு அடியான காரம் என்னும் தென்சொல், கடு என்னும் அடிவேரினின்று பிறந்ததாகும். கடுத்தல் மிகுதல். மிகுதற் கருத்தினின்று கடுமை, வன்மை, வலி, எரிவு, வெம்மை, விறைப்பு, சினம் முதலிய கருத்துகள் முறையே தோன்றும். உப்புக்கடுத்தல், கடுங்காற்று, வயிற்றுக்கடுப்பு, கடுவெயில், காட்டமாயிருத்தல், முகங்கடுத்தல் முதலிய வழக்குகளை நோக்குக.

கடு என்னும் சொல்லே கடி என்னும் உரிச்சொல்லாகத் திரியும். குற்றுகரமும் முற்றுகரமுமான பல ஈற்றெழுத்துகள் இகரமாகத் திரிதல் இயல்பு. எ-டு: பஞ்சு-பஞ்சி, வடு-வடி (மாம்பிஞ்சு). கடி என்னும் உரிச்சொற்குத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் பொருள்களெல்லாம், கடு என்னுஞ் சொல்லுக்கும் இடுத்தல் அல்லது பொருந்துதல் காண்க.

கடி என்னும் சொல்லும் பின்னர்க் கரி என்று திரியும். டகரம் ரகரமாதல் பன்மொழிக்குப் பொதுவான போலித்திரிபாம்.

| **தமிழ்** | **தமிழ்** | **தமிழ்** | **ஆங்கிலம்** |
|---|---|---|---|
| படவன் | - பரவன் | குடகு | - coorg |
| அடுப்பங்கடை | - அடுப்பங்கரை | கவடி | - coory |

கடு என்னும் சொற்குப் போன்றே அதன் திரிவுகளான கடி கரி என்பவற்றிற்கும், மிகுதல் என்பதே அடிப்பொருளாம். உப்புக்கரித்தல் என்னும் உலக வழக்கில், கரித்தல் என்பது மிகுதற் பொருள் தருதல் காண்க. கரித்தல் என்பது, தன்னளவில் மிகுதற்பொருளுணர்த்துமேயன்றி, சென்னைப் பல்கலைக்கழக அகராதியிற் குறித்துள்ளதுபோன்று உப்புக் கரித்தல் என்று பொருள்பட்டுவிடாது. அவ் அகராதியிற் குறிக்கப்பட்டுள்ள முதற்பொருள் வருமாறு:

"To be saltish to the taste; உப்புச்சுவை மிகுதல்.

இந்தக் கறி உப்புக்கரிக்கிறது."

இதில் விளக்க எடுத்துக்காட்டு, 'இந்தக் கறி கரிக்கிறது' என்றிராமல், 'இந்தக் கறி உப்புக்கரிக்கிறது' என்றிருப்பதே, கரித்தல் என்பதற்கு மிகுதற்பொருளே உண்மையைக் காட்டுதல் காண்க.

கரி என்னும் வினைப்பகுதி, முதனிலை திரிந்து விகுதியேற்கும் முறையில் காரம் என்று தொழிற்பெயராம்; படி என்பது பாடம் என்றாவது போல். காரம் என்னும் சொற்கு, மிகுதி, வன்மை, கடுமை, உறைப்பு, சினம் முதலியன பொருளாம். அவற்றுள், வன்மைக் கருத்தினின்று, முறையே வலிமை, ஆள்வினைத்திறன் (அதிகாரம்), உரிமை முதலிய பக்கக் கருத்துகள் தோன்றும்.

எந்தப் பொருளும் அளவில் மிகுவதாலேயே வலிமையடையும்.

**"நீர்மிகிற் சிறையு மில்லை தீமிகின்**
**மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை**
**வளிமிகின் வலியு மில்லை"** (புறம். 51)

என்று புறங்கூறுதல் காண்க.

அகக்கரண வாற்றலாகிய உளவலி புறக்கரண வாற்றலாகிய உடல்வலி ஆகிய இரண்டனுள், முதலில் தோன்றியது உடல் வலியே. பொதுவாக, உடற்பருமனே உடல்வலிக்குக் காரணமாகும். உடல்வலியால் ஒருவன் ஒரு பொருளைக் கைப்பற்றி யாளலாம். அவ் ஆட்சியே அவனுக்கு அப் பொருள்மேல் அதிகாரத்தைக் காட்டும். அவ் அதிகாரமே உரிமையாம். ஒருவன் தன் வலிமை மிகுதியால் இன்னொருவன் பொருளிற்குக் கூட அதிகாரியாகலாம். 'வலிமைக்கு வழக்கில்லை' என்பது இன்றும் உண்மையான பழமொழியாகும்.

அகக்கரண வாற்றலும், அறிவின் அல்லது ஊக்கத்தின் மிகுதியே யன்றி வேறன்று. ஆகவே, இருவகை வலியுள் எதுவாயினும் ஒன்றன் மிகுதியே. அம் மிகுதியினாலேயே அதிகாரம் அல்லது உரிமையுண்டாம். வலிய பகையை எளியவன் வெல்லுதற்குக் காரணமான சூழ்ச்சிவலியும் மதித்திற மிகுதியே.

ஓர் இடத்திற்கு அல்லது பொருட்கு எங்ஙனம் ஒருவன் தன் உடல் வலிமிகுதியால் அதிகாரியாவனோ, அங்ஙனமே ஒரு நூலிற்கும் அல்லது அறிவுச் செய்திகளுக்கும் ஒருவன் தன் அறிவு மிகுதியால் அதிகாரியாவன்.

இங்ஙனம், மிகுதிக் கருத்தினின்று உரிமைக் கருத்துத் தோன்றி யிருப்பதால், அவ் விரு பொருளையும் முறைப்படி யுணர்த்தும் காரம் என்னும் சொல்லினின்று, ஓர் இடத்திற்கோ பொருட்கோ தொழிற்கோ நிலைமைக்கோ அதிகாரம் அல்லது உரிமை யுணர்த்தும் ‘காரன்’, ‘காரி’ இருபாற் பெயரீறுகள் தோன்றியுள்ளன.

அம்பலகாரன், அருமைக்காரன், ஆட்டுக்காரன், ஆப்பக்காரி, ஆனைக்காரன், எண்ணெய்க்காரன், எழுத்துக்காரன், ஓடக்காரன், கட்சிக்காரன், கடன்காரன், கடைகாரன், கப்பற்காரன், கறிகாரன், காட்டுக் காரன், காய்ச்சற்காரன், காரியக்காரன், காவற்காரன், காவடிக்காரன், குச்சுக்காரி, குடிகாரன், குடிசைக்காரன், குடைகாரன், குதிரைக்காரன், குப்பைக்காரன், குழற்காரன், குறிகாரன், குறும்புக்காரன், கூலிக்காரன், கெட்டிக்காரன், கொட்டுக்காரன், கொடுமைக்காரன், கொத்துக்காரன், கொல்லத்துக்காரன், கொல்லைக்காரன், கொலைகாரன், கொள்ளைக்காரன், கோடரிக்காரன், கோபக்காரன், கோழிக்காரன், சட்டைக்காரன், சண்டைக்காரன், சவாரிக்காரன், சாணைக்காரன், சிரங்குக்காரன், சுண்ணாம்புக்காரன், செய்கைக்காரன், சேலைக்காரன், சொந்தக்காரன், தட்டுக்காரன், தடிகாரன், தண்டற்காரன், தண்ணீர்க்காரன், தயிர்க்காரி, தீட்டுக்காரன், துன்னகாரன், தையற்காரன், தொந்தரவுக்காரன், தொள்ளைக்காரன், தோட்டக்காரன், நாடகக்காரன், நிலத்துக்காரன், நுங்குக்காரன், நோவுக்காரன், பகைக்காரன், பட்டக்காரன், பண்ணைக்காரன், பணக்காரன், பன்றிக்காரன், பாற்காரன், பிள்ளைக்காரி, புள்ளிக்காரன், புளியங்காரன், புன்செய்க்காரன், பூக்காரன், பெரியதனக் காரன், பெருமைக்காரன், பேராசைக்காரன், பொடிக்காரன், பொறாமைக் காரன், மருந்துக்காரன், மாட்டுக்காரன், மீசைக்காரன், முட்டைக்காரன், முறைகாரன், மேளக்காரன், வண்டிக்காரன், வயிற்றுவலிக்காரன், வளையற்காரன், வாத்துக்காரன், வீட்டுக்காரன், வீணைக்காரன், வெள்ளைக் காரன், வேட்டைக்காரன், வேலைக்காரன், வேளைக்காரன் முதலிய நூற்றுக்கணக்கான பழம் பெயர்களும், இனிமேற் புதிது புதிதாகத் தோன்றும் இத்தகைய பிற பெயர்களும், ஒன்றற்குரிமை பூண்டவரை யுணர்த்துவனவே யன்றி, ஒன்றைச் செய்பவரை யுணர்த்துவன வாகா.

ஆப்பக்காரி, எண்ணெய்க்காரன், காரியக்காரன், சண்டைக்காரன், தையற்காரன், பெரியதனக்காரன், மருந்துக்காரன், வேட்டைக்காரன் முதலிய தொழில்பற்றிய பெயர்கள் ஒரு பொருளைச் செய்பவரை யுணர்த்துதற்குப் பொருந்தினும்; ஆட்டுக்காரன், காய்ச்சற்காரன், கோழிக்காரன், சிரங்குக்காரன், தண்ணீர்க்காரன், நிலத்துக்காரன், பாற்காரன், மீசைக்காரன், முட்டைக்காரன், வண்டிக்காரன், வீட்டுக்காரன் முதலிய பல பெயர்கள் அப் பொருட்கு எள்ளளவும் பொருந்தாமை காண்க. மேலும், ஆளின்றியிருக்கும் ஒரு பொருளை ஒருவன் கண்டவுடன், அப் பொருட்பெயரோடு காரன் அல்லது காரியீறேற்றி, அப் பொருட்கு உரியவரைப்பற்றி வினவுவதேயன்றி, அதனைச் செய்பவரைப்பற்றி வினவுவது இயல்பன்று. செய்பவரைப்பற்றி அறிய விரும்பின் செய்பவர் என்னும் வினையாலணையும் பெயரையே யன்றி, காரன் அல்லது காரியீற்றை அப் பொருட்பெயரொடு சேர்த்துக் கூறறார். மேலும் காலன் காலி, காதன் காதி, நாகன் நாகி, மருதன் மருதி என்பன போலக் காரன் காரி என்பனவும், தமிழ்ப் பாலீறை ஏற்று நிற்றல் காண்க.

வண்டிக்காரன், வீட்டுக்காரன் முதலிய பெயர்கள், சில விடத்து உண்மையான அல்லது நிலையான உரிமையாளரைக் குறியாவிடினும், வேலைக்காரனும் வாடகைக் குடித்தனக்காரனும் போல்வார் சிறு போதைக் கேனும் ஆட்சியளவில் உரிமையாளர் போன்றிருப்பதால், உரிமைக் கருத்தை விட்டவையாகா.

கரி என்னும் வினைச்சொல், அதி என்னும் முன்னொட்டுப் பெற்று அதிகரி என்றும் நிற்கும். அதி என்னும் முன்னொட்டு வடசொல்லாகவே தோன்றினும், அதிகன் என்றொரு கடைவள்ளல் பெயரிருந்தமையும், அதனம் என்னும் வடிவம் வடமொழியிலில்லாமையும், அதுங்குதல் (மொய்த்தல்), அதைத்தல் (வீங்குதல், பருத்தல்) முதலிய தொடர்புச் சொற்கள் தமிழிலிருத்தலும், அதிநுட்பம் என வள்ளுவரால் ஆளப்பெற்றமையும், சற்றுக் கவனிக்கத்தக்கன.

கரி என்னும் தனிச்சொற்போன்றே அதிகரி என்னும் கூட்டுச் சொல்லும், மிகுதிப் பொருளையே அடிப்படையாகக் கொண்டதாகும். அதிகரித்தல்-மிகுதல். அதிகாரம் என்பது, அதிகரித்தல் என்னும் தொழிற் பெயரின் ஏனைய வடிவம்.

பண்டை வழக்கில், ஒரு நூலின் பெரும் பகுதி படலம் என்றும், அதன் உட்பிரிவு ஓத்து என்றும் கூறப்பட்டன.

**"இனமொழி கிளந்த ஓத்தி னானும்**
**பொதுமொழி கிளந்த படலத் தானும்"** (தொல். செய். 1424)

என்பது தொல்காப்பியம். இதனையே நன்னூலாரும்,

**"நேரின மணியை நிரல்பட வைத்தாங்**
**கோரினப் பொருளை யொருவழி வைப்ப**
**தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்."** (நன்.16)

**"ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்**
**பொதுமொழி தொடரினது படல மாகும்"** (நன். 17)

என மேற்கொண்டனர்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து, படலம் என்னும் பெரும் பகுதி அதிகாரம் என்றும், ஓத்து என்னும் சிறு பகுதி இயல் என்றும், வழங்கி வருகின்றன. அதிகாரம் என்பது அதிகரித்தல் என்னும் அதன் அடிப்படைப் பொருள்பற்றியே படலம் என்னும் பெரும் பிரிவைக் குறிப்பதாகும். அதிகரித்த பகுதி அதிகாரம். சிலப்பதிகாரம் என்பதும், சிலம்பு காரணமாக அதிகரித்த செய்தியைக் கூறுவது என்னும் பொருளதே.

காரம் என்னும் சொற்போன்றே அதிகாரம் என்னும் சொல்லும், மிகுதிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, இருதிணைப் பொருள்களுள்ளும் ஒன்றையோ பலவற்றையோ ஆளுமுரிமையை அல்லது திறத்தை உணர்த்துவதாகும். வடமொழியில், அதிகாரம் என்னும் சொற்கு, ஆட்சி உரிமை முதலிய வழிப்பொருள்கள் கூறப்படுகின்றனவே யொழிய, மிகுதல் அல்லது அதிகரித்தல் என்னும் அதன் அடிப்படைப் பொருள் கூறப்படுகின்றிலது. அதோடு, மகனிலிருந்து தந்தை வந்தான் என்பதுபோல், அதிகாரம் என்னும் தொழிற்பெயரினின்று அதிகரி என்னும் வினைப் பகுதியைத் திரிப்பர் வடநூலார்.

இங்ஙனம் பின்னோக்கிய முறையிலேயே, அகங்கரி இளக்கரி என்பனவும், சென்னைப் பல்கலைக்கழக அகராதியில், முறையே அகங்காரம் இளக்காரம் என்னும் தொழிற்பெயர்களினின்று திரிக்கப்பட்டுள. அகங்கரித்தல் என்பது மனங்கடுத்தல் அல்லது தருக்குதல்; அகம்-மனம், கரித்தல்-மிகுதல். அகங்கரிப்பது அகங்காரம். வடமொழியில், அகங்காரம் என்பது நான் என்னும் அகப்பற்று. அகம் நான். காரம் செயல். எனது என்னும் புறப்பற்றை மமகாரம் என்பது போல, நான் என்னும் அகப்பற்றை அகங்காரம் என்பர். மம-எனது. இங்ஙனம் வடமொழி யகங்காரமும் தென்மொழி யகங்காரமும் சொல்லாலும் பொருளாலும் வேறுபட்டிருக்க, அவற்றை வடிவொப்புமை பற்றி ஒன்றெனக் கொள்வது அறியாமையே யாம். இளக்கரி என்பது இளம் கரி என்னும் இருசொற் கூட்டாகும். இளக்கரிப்பது இளக்காரம், இளம்-மென்மை, கரித்தல்-மிகுதல். உப்புக் கரித்தல் என்னும் கூட்டுச் சொல்லிலுள்ள வருமொழியே, அகங்கரித்தல் இளக்கரித்தல் என்பவற்றிலுள்ளதும் என அறிக. இளக்காரம் போன்றதே வலக்காரமும். வலக்கரிப்பது வலக்காரம். வலம்-சூழ்ச்சி, வலிமை.

அதிகாரம் அதிகாரி என்னும் பொருளிலேயே காரம் காரி என்பனவும் பண்டைக்காலத்தில் வழங்கிப் பின்பு வழக்கற்றுப் போனதாகத் தெரிகின்றது. காரன் அல்லது அதிகாரன் என்பது ஆண்பாற் பெயராகவும், காரி அல்லது அதிகாரி என்பது பெண்பாற் பெயராகவும் இருந்திருக்கலாம். காரன் காரி என்பன அதிகாரப் பொருளை இழந்தபின், இருபாற் பெயரீறு களாக வழங்கிவருகின்றன.

இதுகாறுங் கூறியவற்றால், காரன் காரி என்னும் உயர்திணைப் பெயரீறுகள், உரியவரை யுணர்த்தும் தென்சொல்லே யன்றிச் செய்யப் படுவதை யுணர்த்தும் வடசொல்லல்ல வென்பதைத் தெற்றெனத் தெரிந்து கொள்க.

காரம் என்னும் சொல், கடு என்னும் வினையின் திரிவான கரி என்னும் பகுதியடியாய்ப் பிறந்த தொழிற்பெயராய், வன்மை, அதிகாரம், வலி, எரிவு, வெம்மை, உறைப்பு, சினம் முதலிய கடுங்குணங்களை யெல்லாம் உணர்த்தும் தூய தென்சொல்லாயிருந்தும், க்ஷார என்னும் வடசொல்லின் திரிவென்று சென்னைப் பல்கலைக்கழக அகராதியிற் குறிக்கப்பட்டுள்ளது.

வரி(tax) என்னும் தென்சொல்லைப் பலி (sacrifice) என்னும் வட சொல்லின் திரிவாகக் காட்டுவதோடமையாது, அதைத் தன் சிறப்புகளுள் ஒன்றாகத் தன் முகத்திலேயே எடுத்துக்காட்டிப் பெருமைகொள்ளும் அகரவரிசைக் களஞ்சியம் வேறெதைத்தான் கூறாதென்க.

மொழிநூல் மனப்பான்மையும் நடுநிலையும் பொதுமதியும் (common sense) ஒருங்கே யுடையாரெல்லாம் காரம் என்னும் சொற்கு யான் காட்டியுள்ள பொருளடைவையும் அதன் பொருத்தத்தையும் ஒப்புக் கொள்வாரென்று நம்புகின்றேன்.

**– "செந்தமிழ்ச் செல்வி" திசம்பர் 1956**

# 9

# குற்றியலுகரம் உயிரீறே [1]

**"எழுத்தெனப் படுப,**

**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்பஃ தென்ப;**
**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"** (தொல். 1)

**"அவைதாம்**

**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"** (தொல். 2)

என்றார் தொல்காப்பியர்.

இரண்டாம் நூற்பாவில், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எனப் பிரித்துக் கூறாது "குற்றியலிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்" என்று 'முப்பாற் புள்ளி' என்பது மூவெழுத்தையும் பொதுப்படத் தழுவுமாறு உம்மைத்தொகை யாய்ச் சேர்த்துக் கூறியிருத்தலின், குற்றியலிகர குற்றியலுகரங்களும் ஆய்தம் போலப் பண்டைக்காலத்திற் புள்ளி பெற்றன என்பதுணரப்படும்.

நூற்பாவில் 'முப்பாற்புள்ளி' என்பது, புள்ளி பெற்ற மூவெழுத்து களையும் முப்புள்ளி வடிவான ஆய்தத்தையும் ஒருங்கே குறிப்பது "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்னும் நன்னூல் நூற்பாவின் 'ஆமா' என்பது போன்ற இரட்டுறலாகும்.

தொல்காப்பிய மரபியல் நூற்பா 110-ல், 'வாரா ததனான் வந்தது முடித்தல்' என்னும் உத்தியுரையில்,

"குற்றியலிகரத்தைப் புள்ளியென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவாகலின் அவையும் இனி வாராமையான் வந்துழி வந்துழி அவ்வாறு ஆண்டானென்பது, இனிப் புள்ளியென மேல் ஆள வாராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றோடு மயக்கங் கூறுதலென்பது, 'அவைதாங் குற்றிய லிகரங் குற்றிய லுகர - மாய்த மென்ற - முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன' (தொல்-எழுத்.-நூன். 2) என்புழிக் குற்றிய லிகரம். புள்ளியென்று யாண்டும் ஆள வாராமையானும் அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும் அங்ஙனம் புள்ளியென்று ஆள வருங் குற்றுகரத்

தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுதலாயிற்று. இங்ஙனம் உடன் கூறாக்காற் புள்ளியுங் குற்றிகரமுமெனச் சூத்திரம் பெறுதல் வேண்டுவ தாவான் செல்லுமென்பது'' என்றுரைத்தார் பேராசிரியர்.

சிவஞான முனிவர் தம் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில்,

''ஒரு மொழியைச் சார்ந்துவரு மியல்பின்றித் தனித்தியங்கு மியல்பு தமக்கிலவென்றலின், அவை தம்மையே யெடுத்தோதிக் காட்டலாகாமை யின், வருஞ் சூத்திரத்தான் அவற்றிற்கு வேறுவேறு பெயரிட்டு ''அவைதாங் குற்றியலிகரங் குற்றியலுகர மாய்தம் என்றும், அம் மூன்றும் புள்ளி பெறுதல் பற்றிப் பொதுப்பெயராக முப்பாற் புள்ளியும்'' என்றும், அவை தனித்தெழுதப்படா வாயினும் மொழியொடு சார்த்தி யெழுதப்படுதலின் எழுத்தென்னுங் குறியீட்டிற் குரியவென்பார்; 'எழுத்தோ ரன்ன' என்றும் ஓதினார்'' என்றார்.

நச்சினார்க்கினியரும், ''அவைதாம்... எழுத்தோ ரன்ன'' என்னும் சார்பெழுத்து நூற்பாவுரையின் இடையில்,

''ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற் புள்ளியுமென்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட் டெழுதுப. இதற்கு வடிவு கூறினார், ஏனை யொற்றுகள்போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றாக லின், எழுத்தியல் தழா ஓசைகள் போலக் கொள்ளினுங் கொள்ளற்க என்றற்கு எழுத்தேயா மென்றார். இதனைப் புள்ளி வடிவிற்றெனவே ஏனை யெழுத்துகளெல்லாம் வரிவடிவின வாதல் பெற்றாம்'' என்று கூறினாரேனும், தொடக்கத்தில்,

''அவைதாம் - மேற்சார்ந்து வருமெனப்பட்டவைதாம், குற்றிய லிகரங் குற்றியலுகரம் ஆய்தமுமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவுமாம்; எழுத்தோரன்ன - அவையும் முற்கூறிய முப்பதெழுத் தோடு ஒருதன்மையாய் வழங்கும் என்றவாறு'' என்று மூவெழுத்தும் புள்ளிபெறுமென ஒருதன்மைப்படவே உரைத்தார்.

மயிலைநாதர், ''தொல்லை வடிவின'' என்னும் நன்னூல் நூற்பா வுரையில்,

''ஆண்டு என்ற மிகையானே, தாது, ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு கொட்டு என்றற் றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது, நாடியாது எட்டியாண்டுளது என்றற்றொடக்கத்துப் புணர் மொழிப் பொருள் வேறுபாடுகளும், அறிதற்பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க'' என்று உரைத்தனர்.

''குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும்; என்னை?

**"குற்றிய லிகரமும் குற்றிய லுகரமு**
**மற்றவை தாமே புள்ளி பெறுமே"**

என்பது சங்க யாப்பாகலின் என்பது யாப்பருங்கல விருத்தி (ப. 27).

மேற்கூறியவற்றால், குற்றியலிகர குற்றியலுகரங்கள் பண்டைக் காலத்தில் புள்ளியிட் டெழுதப்பட்டனவென்றும் அங்ஙனம் எழுதினது அவற்றின் ஒலிக்குறுக்கத்தையும் 'நாடியாது', 'எட்டியாண்டு' முதலிய புணர் மொழிப் பொருள் வேறுபாட்டையும் காட்டற்கு என்றும் அறியப்படும்.

'நாடியாது', 'எட்டியாண்டு' என்பன, நாடி யாது, எட்டி யாண்டு என்றும் பொருள்படுமாதலின், அவை நாடு + யாது, எட்டு + யாண்டு என்னும் புணர்மொழிகள் என்று காட்டற்குக் குற்றியலிகரத்தின்மேற் புள்ளியிடப் பட்டதென்க.

குற்றுகரத்தை மேற்சுன்னமிட்டுக் காட்டுவது இன்றும் மலையாள (சேர) நாட்டு வழக்கம். குற்றிகர குற்றுகரங்கள் புள்ளி பெறுமென்று நன்னூலிற் கூறப்படாமையால், 12ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இவ் வழக்கு, சோழ பாண்டிய நாடுகளில் ஒழிந்தது என்பதை அறியலாம். எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் அவை சேர்ந்துள்ள உயிர் மெய்கட்கும் வரி வேறுபாடு தொல்காப்பியத்திலே கூறப்பட்டிருப்பினும் 17ஆம் நூற்றாண்டில் அவ் வெழுத்துகள் குறில் நெடில் வேறுபாடின்றி எழுதப் பட்டாற்போல, குற்றியலுகரமும் வேறுபாடின்றி யெழுதப்பட்ட தென்க.

ஒரு பொருள் குறுகின் அப் பொருளேயன்றி வேறுபொரு ளாகாது; அதன் குறுக்கம் அளவு வேறுபாடேயன்றிப் பொருள் வேறுபாடன்று. அதுபோல், குற்றியலுகரமும், முற்றியலுகரம் போல உயிரேயன்றி மெய்யாகாது. இதனாலேயே,

"இகர உகரங் குறுகிநின்றன, விகாரவகையாற் புணர்ச்சி வேறு படுதலின், இவற்றை இங்ஙனங் குறியிட்டாளுதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. **சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங் கோலாகாது அது போல உயிரது குறுக்கமும் உயிரேயாம்**. இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும்பற்றி வேறோர் எழுத்தாக வேண்டினார்" நச்சினார்க்கினியரும். பொருள் வேற்றுமை யென்றது பண்டைக் காலத்தில் கட்டு கொட்டு முதலிய சொற்கள் ஏவல் வினையாம் போது முற்றுகர வீறாயும் முதனிலைத் தொழிற்பெயராம்போது குற்றுகர வீறாயும், ஒலிக்கப்பட்டவை நோக்கி, "தருக்கு அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம்." (தொல். 36, உரை) "காது கட்டு கத்து முறுக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல" (தொல். 68, உரை). என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. தொல்காப்பியர் தம் காலத்தில் குற்றுகரமும் மெய்போலப் புள்ளி பெற்றதனாலேயே, புணரியலில்,

**“மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்”** (தொல். 104)

**“குற்றிய லுகரமும் அற்றென மொழிப”** (தொல். 105)

என்று மாட்டேற்றிக் கூறினார்.

இம் மாட்டேற்றைக் கவனியாது, “குற்றிய....மொழிப,” என்னும் நூற்பாவிற்கு “ஈற்றிற் குற்றிய லுகரமும் (புள்ளியீறு போல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்” என்று இளம்பூரணரும், “ஈற்றுக் குற்றியலுகரமும், புள்ளியீறு போல உயிரேற இடம் கொடுக்கு மென்று கூறுவர் புலவர்” என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவது பொருந்தாது. “அற்றென மொழிப” என்னும் மாட்டேறு, “புள்ளியொடு நிலையல்” என்பதையே தழுவுமாதலின் இவ் விருவரும் இங்ஙனம் உரைத்தற்கு இவர் காலத்திற்கு முன்பே குற்றியலுகரம் புள்ளி பெறும் வழக்கம் வீழ்ந்தமையே காரணமாகும். இவர் கூறிய உரை இங்குப் பொருந்துமாயின் தொல்காப்பியர் நூன்மரபில்,

**“மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்”** (தொல். 15)

**“எகர ஒகரத் தியற்கையும் அற்றே”** (தொல். 16)

என்று கூறியவிடத்தும் பொருந்தல் வேண்டும்.

எகர ஒகரம் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுத்த லின்மை யானும், “எகர... அற்றே’ என்னும் நூற்பாவிற்கு, “எகர ஒகரங்களது இயல்பும் அவ்வாறு புள்ளி பெறும் இயல்பிற்று” என்று இளம்பூரணரும், “எகர ஒகரங்களின நிலையும் மெய்போலப் புள்ளி பெறும் இயல்பிற்று” என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவதானும், “குற்றிய... மொழிப” என்னும் நூற்பாவிற்கும் குற்றுகரமும் மெய்போலப் புள்ளிபெறும் என்பதே உரையாகக் கோடல் பொருத்தமாம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுக்கு மென்று உரைத்தவிடத்தும், மாத்திரைக் குறுக்கத்தால் அங்ஙனம் இடங்கொடுக்கும் என்னும் கருத்தினரே அன்றி மெய்யீறாய் இருத்தலால் இடங்கொடுக்கும் என்னுங் கருத்தினரல்லர். “குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடிய அரை மாத்திரையாய் நிற்றலும், முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடியாமையும் தம்முள் வேற்றுமை” (தொல். 36, உரை) என்று நச்சினார்க் கினியர் கூறுதல் காண்க.

இனி, தொல்காப்பியர் கருத்தை நோக்கின், அவர் குற்றியலுகரத்தை மெய்யீறென்று கொண்டார் என்று கொள்ளுதற்கு எள்ளளவும் இடமில்லை. அவர்,

**“குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்”** (தொல். 67)

எனக் குற்றியலுகரம் மொழிமுதல் வருமென்றும் கூறினார். நுந்தை என்னும் சொல்லின் முதலில் (தொல்காப்பியர் கருத்தின்படி) உள்ள குற்றியலுகரம் மெய்யீறாயின், அச் சொல் **ந்ந்தை** என்று எழுதப்படல் வேண்டும். அங்ஙன மெழுதப்படாமையும், குற்றியலுகரத்தைத் தொல்காப்பியர் மெய்யென்று கொண்டிருப்பா ராயின், அது,

**"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்"** (தொல். 59)

**"உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா"** (தொல். 60)

என்று அவர் கூறியவற்றோடு முரணுதலும் நோக்குக.

மேலும், ஒரே யுகரம் ஓரிடத்துக் குற்றுகரமாகவும் ஓரிடத்து முற்றுகர மாகவும் ஒலிக்கப்படும். அங்ஙனம் ஒலிக்கப்படுபவற்றுள் சிலவற்றிற்குக் குற்றுகர முற்றுகரப் பொருள் வேறுபாடுண்டு. சிலவற்றிற்கில்லை.

**"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ**
**தப்பெயர் மருங்கின் நிலையிய லான"** (தொல். 68)

என்னும் நூற்பாவையும், அதன் உரையில்,

"காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகர முமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தை யென்று இதழ் குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறியவிடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தாயென்பதோ வெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனான் இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின் றென்று கொள்க" என்று நச்சினார்க்கினியர் உரைத்திருப்பதையும் நோக்குக. இதனால், குற்றிய லுகரம் மெய்யீறாயின் முற்றியலுகரமும் மெய்யீற்றாய் உகரம் என்னும் உயிரே தமிழுக்கில்லை யென்று பெறப்படுதலும் அங்ஙனமின்மையும் அறிக.

செய்யுளியலில், இருவகை யுகரமு மொன்றாகக் கொண்டே,

**"இருவகை யுகரமோ டியைந்தவை வரினே**
**நேர்பும் நிரைபு மாகு மென்ப"** (தொல். செய். 4)

என்றார் தொல்காப்பியர்.

இதன் உரையில், "இருவகை யுகரமென்பன, குற்றுகர முற்றுகரங்கள், அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒருசொல் விழுக்காடு பட இயைந்துவரின் நிறுத்த முறையானே நேரசையோ டொன்றி வந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றிவந்த முற்றுகரமும் நேர்பசை யெனப்படும்; நிரைபசையோ டொன்றிவந்த குற்றுகரமும் அதனோடொன்றி வந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும் என்றவாறு...."

"முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண்வகையான் அசைகூறி அவற்றுப்பின் இருவகை யுகரமும் வருமெனவே, அவை குற்றுகரத்தோடு எட்டும் முற்றுகரத்தோடு எட்டுமாகப் பதினாறு உதாரணப்

பகுதியவாய்ச் சென்றதேனும், அவற்றுட் குற்றெழுத்துப் பின்வரும் உகரம் நேர்பசை யாகா தென்பது “குறிலிணை யுகர மல்வழி யான” (தொல். செய்.4) என்புழிச் சொல்லுதும்; ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்குமாயின. உதாரணம் : வண்டு, நாகு, காம்பு, வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு; இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு” என்று உரைத்தார் பேராசிரியர். இதனால், குற்றுகரமும் முற்றுகரம் போல அலகு பெறுமென்றும் அசைக் குறுப்பாமென்றும் அறியப்படும்.

சொற்கள் இலக்கண முறையிலும் இலக்கிய முறையிலும் பல வகையாகத் திரிந்து, முன்பு முற்றுகர வீறாயிருந்தவை அல்லது உகரமல்லாத ஈறாயிருந்தவை பின்பு குற்றுகர வீறாகின்றன. அவ் வகைகளாவன :

1. **தொழிற்பெயர்** :- முதனிலை திரிந்த தொழில் பெயர் :

   எ-டு : படு - பாடு, சுடு-சூடு.

   விகுதிபெற்ற தொழிற் பெயர் :

   எ-டு : படி+பு = படிப்பு, முடி + சு = முடிச்சு.

2. **வேற்றுமைப் பெயர்** :

   எ-டு : யான்+கு = எனக்கு, அவர் + கு = அவர்க்கு.

3. **குறிப்பு வினைமுற்று** :

   எ-டு : தாள் + து = தாட்டு, கண் + து = கட்டு, பால் + து = பாற்று, அன் + து = அற்று.

4. **பிறவினை** :

   எ-டு : படு + து = படுத்து, நட + து = நடத்து, வாழ்+து = வாழ்த்து, பாய் + சு = பாய்ச்சு.

5. **போலி** :

   எ-டு : அடைவு - அடவு - அடகு.

6. **சொல் திரிபு** :

   எ-டு : திரும் - திரும்பு, பொருந் - பொருந்து, உரிஞ் - உரிஞ்சு, உடன் (உடல்) - உடம் - உடம்பு, பண் - பாண் - பாடு, குள்-கொள்-கோள்-கோண்-கோடு, ஒளி-ஒளிர்-ஒளிறு, போ-போது.

மேற்காட்டிய பாடு, படிப்பு, எனக்கு, தாட்டு, படுத்து முதலிய சொற்கள், குற்றுகர வீற்றை மெய்யீறாகக் கொள்ளின் பாட் படிப்ப் எனக்க் தாட்ட் படுத்த் என்ற முதல் வடிவங்களினின்று தோன்றினவாக வன்றோ கொள்ளல் வேண்டும்! இஃது எத்துணைப் பேதமையாகும்! மேலும், ஆட்டு பாட்டு கலக்கு விலக்கு முதலிய பிறவினைகளும் தொழிற்பெயர்களும் முதனிலை யீற்று வலியிரட்டியும் முதனிலை யிடைமெலி வலித்தும் முறையே ஆடு

பாடு கலங்கு விளங்கு என்னுஞ் சொற்களினின்று திரிந்திருக்கவும், அவற்றை ஆட்ட் பாட்ட் கலக்க் விளக்க் என்னும் வடிவங் களினின்று பிறந்தனவாகக் கொள்ளல் இளஞ்சிறாரும் எள்ளிநகையாடத் தக்க தொன்றன்றோ? ஒருசில ஒலியடிச் சொற்களொழிந்த எல்லாச் சொற்களும் ஓரசையான வேர்ச்சொற் களினின்றே பிறந்தவை யாதலின், குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொள்வாரெல்லாம் சொற்பிறப்பியலை எட்டுணையும் தாமறியாதிருத்தலை முற்றுறக் காட்டுபவரேயாவர்.

குற்றுகரவீறு மெய்யீறாயின், அறுவகைக் குற்றியலுகரத் தொடர் களும் வல்லின மெய்யீற்றினவாதல் வேண்டும்.

**"ஞணநம னயரல வழள என்னும்**
**அப்பதி னொன்றே புள்ளி யிறுதி"** (தொல். 78)

என்று தொல்காப்பியர் பிரிநிலை யேகாரங் கொடுத்துக் கூறினமையானும், குற்றுகரவீறு தமிழ்ச்சொல்லில் ஓரிடத்தும் மெய்யீறாக எழுதப்படாமை யானும், அஃதுண்மையன்மை வெள்ளிடைமலை.

கண் + யாது = கண்ணியாது என்பது போன்றே சுக்கு + யாது சுக்கியாது என்று குற்றுகரமும் புணர்வதால், குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொள்ளலாமே யெனின், கதவு + யாது = கதவியாது என்று முற்றுகரமும் அங்ஙனம் புணர்வதால் அதுவும் மெய்யீறாகக் கொள்ளப்பட்டு உகரவுயிரே தமிழுக்கில்லையென்றாகும் என்று கூறி விடுக்க. தொல்காப்பியர் மொழி மரபியலில்,

**"உச்ச காரம் இருமொழிக் குரித்தே"** (தொல்.75)

**"உப்ப காரம் ஒன்றென மொழிப"** (தொல். 76)

என்று வரையறுத்தது உசு முசு தபு என்னும் மூன்று முற்றுகர வீற்றுச் சொற்களையே யன்றிக் குற்றுகரவீற்றுச் சொற்களை யன்று. சு, பு என்னும் இரு முற்றுகர ஈறுகளைக் கொண்ட சொற்கள் எத்தனை என்று வரையறுப் பதே மேற்கூறிய நூற்பாக்களின் நோக்கம். கு, டு, து, று என்னும் நான்கு முற்றுகரவீற்றுச் சொற்களும் அறுவகைக் குற்றுகர வீற்றுச் சொற்களும் அளவிறந்தன வாதலின், அவற்றை வரையறுத்திலர் தொல்காப்பியர். இகு உகு செகு தகு தொகு நகு நெகு பகு புகு மிகு வகு விகு எனக் குகரவீறும், அடு இடு உடு எடு ஒடு கடு கெடு கொடு சுடு தடு தொடு நடு நெடு நொடு படு பிடு மடு வடு விடு என டுகரவீறும் கொண்ட முற்றுகரவீற்றுச் சொற்கள் பெருந்தொகையினவாயும் எண் வரம்பு படாதனவாயு மிருத்தல் காண்க. பிற முற்றுகரவீற்றுச் சொற்களும் இங்ஙனமே. குற்றுகரவீற்றுச் சொற்களோ வெனின், அகராதிகளாலும் வரையறுக்கப்படாத பல்லாயிரக் கணக்கின.

மேற்கூறிய நூற்பாக்களின் உரையில்,

"உகாரத்தோடு கூடிய சகாரம் இரண்டு மொழிக்கே ஈறாம் என்றவாறு"

“எ-டு : உசு, இஃது உளுவின் பெயர். முசு, இது குரங்கினுள் ஒரு சாதி. பசு என்பதோவெனின், அஃது ஆரியச் சிதைவு. கச்சு குச்சு என்றாற் போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இரு மொழிக்கு ஈறாமெனவே ஏனை உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறாமாயிற்று.” (தொல். 75, உரை) என்றும்,

“உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறாகாதென்று கூறுவர் புலவர்”

“எ - டு : தபு என வரும்....... உப்பு கப்பு என்றாற் போல்வன குற்றுகரம், உகரத்தோடு கூடிய பகரம் ஒன்றெனவே ஏனையுயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பல பொருள் தருமென்றாராயிற்று” (தொல். 76, உரை) என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலை நோக்குக.

இதுகாறுங் கூறியவாற்றால், குற்றியலுகரம் உயிரீறே யென்றும், தொல்காப்பியர் ஓரிடத்தும் குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொண்டில ரென்றும் இயற்கையும் எளிமையும் தனிமையும் தாய்மையும் சான்ற தமிழியல்பை யறியாத ஆரியவழி யியலாரே தம் மொழியைப் போன்றே தமிழும் ஆரிய வழித்தென்று மயங்கி, தமிழை வடமொழி வழித்தாகக் காட்டக் கருதி அதற்கு முதற்படியாகக் குற்றுகர வீற்றை மெய்யீறாகக் கூறி யிடர்ப்பட்டுப் பின்பு அவ் விடர்ப்பாட்டினின்று நீங்கப் பண்டைத் தமிழ்ச் சொற்கள் வல்லின மெய்யிலும் இற்றனவென்றும், வலியிரட்டல் என ஒரு திரிவு முறையும் அரவு என ஒரு தொழிற்பெயர் விகுதி இல்லையென்றும் சொல்லியல் நூலுக்கும் மொழிநூலுக்கும் முற்றும் மாறாகத் தத்தம் உளந் திரிந்தவாறே உரைப்பரென்றும் தெற்றெனத் தெரிந்துகொள்க.

**- தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியர் உரை 1944**

## 10

# குற்றியலுகரம் உயிரீறே [2]

'செந்தமிழ்ச் செல்வி' 36ஆம் சிலம்பு 10ஆம் பரலில், புலவர் திருமுதுகுன்றம் என்பார், குற்றியலுகரம் பற்றி வரைந்துள்ள கட்டுரையில், குற்றியலுகரம் மெய்யீறென்று பெரும்புலவர் வேங்கடராசுலு அவர்களும், அஃது உயிரீறென்று யானும், மாறுபட்டுக் கூறும் கூற்றிரண்டனுள் ஒன்றைத் துணிவார் போன்று தொடங்கி, பழமொழிக் கோமுட்டியார் போல் இருவர் மாறுகோள் இரண்டுந் தழுவல் என்னும் மதம் பற்றி, அஃது உயிரீறும் மெய்யீறுமல்லாத சார்பெழுத்தென்று முடிபு கட்டியதுமன்றி, அதைத் தொல்காப்பியர்மீது ஏற்றியுமுள்ளார்.

பெரும்புலவர் வேங்கடராசுலு புலமையில் என்னினும் மிகப் பெரியாரே. ஆயின், அவர் தமிழ்ப் பற்றில்லாத் தெலுங்கராதலின், ஆரிய அடிப்படையில் தமிழை ஆய்ந்து திரிபுணர்ச்சியால் சறுக்கினார்.

யான் திருச்சிப் புத்தூர் ஈபர் கண்காணியார் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியனாயிருந்த பொழுதே, திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ் மாணவர் விருப்பத்துக்கிணங்கி அங்குச் சென்று, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில், குற்றியலுகரம் உயிரீறே யென்று நிறுவினேன். அதன் பின்னர் தமிழ்நாடு முழுமைக்கும் பயன்படுமாறு ஒரு கட்டுரையும் வரைந்தேன்.

ஏறத்தாழக் கால் நூற்றாண்டிற்குப் பின், இன்று புலவர் முதுகுன்றனார் மாணவர் முதுக்குன்றுமாறு ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதற்கு மறுப்பே தேவையில்லை, ஆயினும், இந்நாள் மாணவர் மயங்கற்கிடமா யிருத்த லானும், இத்தகைய இலக்கணச் செய்திகளை வரையறுத்துக் கூறும் மதுகை தலைமைப் பதவித் தமிழ்ப் பேராசிரியர்க்கும் இன்மையானும், "தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பெருஞ்சண்டன்" என்றாத லானும், இம் மறுப்பை எழுதத் துணிந்தேன். தமிழ் ஆசிரியர், சிறப்பாகப் புலவர் கல்லூரி மாணவர், அனைவரும் இதை ஊன்றி நோக்கி உண்மை தெளிக.

1. "தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்துக்கும், நன்னூலார் கூறும் குற்றியலுகரத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. குற்றியலுகரத்தின் தன்மைபற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்துகள் இயற்கையோடு

இயைந்தனவாக இருக்க, நன்னூலார் கூறும் கருத்துகளோ இயற்கையோடு பொருந்தாதனவாய் இருக்கின்றன.''

தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்திற்கும் நன்னூலார் கூறும் குற்றியலுகரத்திற்கும், பெரிதும் வேறுபாடில்லை. "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்,'' (164) என்று நன்னூலார் கூறியதே வேறுபட்டதும் வழுவுற்றதுமாகும். உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடாது; அதற்கு (உயிருக்கு) இடந்தந்து உள்ளேயே அல்லது உடனேயே நிற்கும்; பேய் கோட்பாட்டான் அல்லது தெய்வமேறினான் உயிர் முன்போல் உடனேயே நிற்கும்; பேய்கோட்பட்டான் அல்லது தெய்வமேறினான் உயிர் முன்போல் உடனேயே நிற்பது போல்.

தொல்காப்பியர் குற்றியலுகரம் சொன் முதலிலும் வரும் என்று கூறிய கூற்றுதான், இயற்கைக்கும் உண்மைக்கும் முற்றும் மாறாகும். நன்னூலார் அங்ஙனம் கூறியிலர்.

**"குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்''** (எழுத்து. 67)

என்பது தொல்காப்பியம்.

சொன் முதலில் வரும் உகரத்தைக் குறுக்கியோ இதழ் குவியாதோ ஒலிக்கும் வழக்கம் தமிழருக்கு ஒருகாலத்தும் இல்லை. குற்றியலுகரத்தின் இயல்புகள் ஒலித்திரிபு ஒலிக்குறுக்கம் என இரண்டாகும். இவற்றுள் ஒலித்திரிபே மிக்கதாம். இதுபற்றிக் குற்றியலுகரத்திற்குச் "சாயும் உகரம்'' (நன் (107) என்று நன்னூலார் பெயரிட்டது மிகப் பாராட்டத் தக்கதாகும். இகரத்திற்கும் உகரத்திற்கும் இடைப்பட்டதே குற்றியலுகரம் அல்லது சாயுமுகரம். அதன் அளபு துல்லிபமாய் அரையென்பது பொருந்தாது. ஆயினும், குறுக்கங்களையெல்லாம் செம்பாகமாய்க் கொள்ளும் மரபுபற்றி, முற்றுகரத்திற் சரிபாதி குற்றுகரம் எனக் கொள்ளப் பெறும். உண்மையில் அஃது அரையளபினும் சற்றுக் கூடியதாகும்.

நுந்தை யென்பதின் மறுவடிவான உந்தை யென்னுஞ் சொல்லோ; உகப்பு, உங்கு, உச்சி, உஞ்சல், உணவு, உதவி, உப்பு, உம்பர், உயரம், உலக்கை, உவமை, உழவு, உள்ளம், உறவு, உன்னு முதலிய பிற உகர முதற் சொற்களோ; நுகர், நுங்கு, நுசுப்பு, நுடங்கு, நுணா, நுதல், நும்பி, நுரை, நுவல், நுழை, நுள்ளான், நுறுங்கு, நுனி முதலிய பிற நுகர முதற்சொற்களோ எல்லாம் முதலெழுத்து முற்றுகரமாயொலிக்கும்பொழுது, நுந்தை யென்னும் சொன் முதல்மட்டும் எங்ஙனம் குற்றுகரமா யொலிக்கும்? அங்ஙனம் ஒலிப்பார் இன்றொருவரும் இல்லையே! ஒருகால் அவர் காலத்து ஆசிரியர் சிலர் அங்ஙனம் திரித்தொலித்தார் போலும்! தமிழர் அங்ஙனம் ஒலியாமை கண்டே அவரும்,

**“முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ**
**தப்பெயர் மருங்கின் நிலையிய லான”** (எழுத். 68)

என்று அதற்கு விலக்குங் கூறியுள்ளார்.

இந் நூற்பாவுக்கு,

“காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தையென்று, இதழ் குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தா யென்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனான், இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலா மெழுத்துத் தொண்ணூற்று நான்கென்று உணர்க,” என்பது நச்சினார்க்கினியர் விளக்கவுரை. இளம்பூரணர் கருத்தும் இதே.

காது, கட்டு, கத்து முதலியன ஏவல் வினையும் தொழிற்பெயருமாய்ப் பொருள் வேறுபடுவது, முற்றுகர குற்றுகர வேறுபாட்டினாலன்று; ஒலியழுத்த (Accent) இடவேறுபாட்டினாலேயே. ஏவல் வினையாய் நிற்கும்பொழுது ஈற்றசையிலும், தொழிற்பெயராய் நிற்கும்பொழுது முதலசையிலும், ஒலியழுத்தம் விழும். ‘இதைக் கட்டு’ என்று ஏவல் வினையாய் ஆளும் பொழுது டுகரத்தின் மேலும், ‘கட்டுக் கட்டாய்க் கட்டினான்’ என்று வினைப் பெயராய் ஆளும்பொழுது ககரத்தின் மேலும், ஒலியழுத்தம் விழும். ஒலியழுத்தத்தினால் குற்றியலுகரம் இதழ் குவிந்தொலிக்கும் முற்றுகரமாகி விடாது. இதை ஒலித்துக் காண்க.

“நுந்தாய் என்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூற வேண்டுதலிற் குற்றுகரமன்று” என்பது, நுந்தை என்பதும் அத்தகையதே யென்னும் கொள்கைக்கு ஒருவாறு துணைபுரிதல் காண்க.

நன்னூலார் குற்றியலுகர வியல்பைத் தொல்காப்பியரினும் நன்குணர்ந்தவராதலின், அதை மொழிமுதலெழுத்துகளுள் ஒன்றாகக் கொண்டிலர்.

நன்னூலுரையாசிரியர் மயிலைநாதர். “குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்” என, ஆசிரியர் தொல் காப்பியனார் இவ்வாறு குற்றியலுகரம் மொழிக்கு முதலாமென்றாராலோ வெனின்,

**“நுந்தை யுகரங் குறுகி மொழிமுதற்கண்**
**வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும் - சந்திக்**
**குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி**
**மயலணையும் என்றதனை மாற்று”**

இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க." என்று உரைத்திருத்தலை நன்கு ஆய்ந்து தெளிக.

2. "நன்னூலார் மட்டுமல்லர். குற்றியலுகரம் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரைகண்ட இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகி யோரும் ஓரளவுக்குத் தொல்காப்பியர் கருத்தை நன்கு விளக்கினும், பெருமளவுக்கு உண்மைக்குப் பொருந்தா உரைகளே கூறினர்."

நன்னூலார் கூற்றுகள், ஒன்று தவிர ஏனைய வெல்லாம் உண்மைக்குப் பொருந்தியவை யென்பது மேற்கூறப்பெற்றது. இனியும் கூறப்பெறும்.

பெரு என்னும் குறிப்புப் பெயரெச்சம் வல்லின மெய்ம்முதலொடு புணரும் பொழுதே, பெருங்கதை, பெருஞ்சோறு. பெருந்தலை, பெரும் பானை என மகரவொற்று மிகும்; உயிரொடு புணரின், பேரளவு, பேராவல், பேரீந்து, பேரூர் என அடி நீண்டே புணரும்.

பெருமை அளவு எனப் பண்புப் பெயரை நிலைச்சொல்லாக நிறுத்திப் புணர்ப்பதும் தவறென்பதை, என் 'மொழித் திறத்தின் முட்டறுப்பது மொழி நூலே,' என்னும் கட்டுரையிற் காண்க.

3. "குற்றியலுகரம் தனிமொழி இறுதியில் நிற்கும்போது அரை மாத்திரை பெறும் என்பதும், அது மெய்யீறு போலப் புள்ளி பெற்றும் வருமொழி உயிரேற இடங் கொடுத்தும் நிற்கும் என்பதும், அரைமாத்திரை அளவுள்ள குற்றுகரம் இயல்பானதே என்பதும், இடமும் பற்றுக்கோடும் காரணமாக ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி அரை மாத்திரை யாக விகாரப்பட்டு நின்றது அன்று என்பதும், அஃது உயிரீறுமன்று; மெய்யீறுமன்று. அவ்விரண்டின் வேறுபட்டதான சார்பீறு என்பதும், தனிமொழி இறுதியில் அரை மாத்திரை பெற்று நிற்கும் குற்றுகரம் தொடர் மொழி இடைப்படும்போது ஒரு மாத்திரை பெறுகின்ற முற்றியலுகரமாக மாறிவிடும் என்பதும், ஆனால் விதிவிலக்காக வருமொழி முதலில் உயிர் வரும்போது நிலைமொழி இறுதியில் நின்ற ஆறு தொடர்க் குற்றியலுகரமும், வருமொழி முதலில் வன்கணம் வருகின்றபோது நிலைமொழி இறுதியில் நின்ற வன்றொடர்க் குற்றியலுகரம் மட்டும் அரை மாத்திரை பெறும் முற்றுகரமாகவே நிற்கும்" என்பதும் தொல்காப்பியர் கருத்துகளாகும்."

இவற்றுட் பல தொல்காப்பியர் கருத்துகளல்ல; புலவர் முதுகுன்றனா ருடையனவே. குற்றியலுகரமும், குற்றியலிகரமும் குறுகியொலிப்பவை யென்று காட்டுதற்கு அவற்றின்மேற் புள்ளியிடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்துவந்திருக்கின்றது. இதைத் தொல்காப்பியர்,

**"அவற்றுள் மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் "** (எழுத்து. 104)

என்று நெறியிட்டபின்,

**"குற்றிய லுகரமும் அற்றென மொழிப"** (எழுத்து. 105)

என்று மாட்டெறிந்ததினாலும், நூற்றொடக்கத்திலேயே,

**"அவைதாம்**
**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"** (எழுத்து. 2)

என்று சார்பெழுத்து மூன்றையும் "முப்பாற் புள்ளி" யெனத் தொகுத்துப் பொதுப்படக் கூறியதனாலும், அறியப்படும்.

"முற்கூறிய இரண்டும் உம்மை தொக்குநின்றன" என்று நச்சினார்க் கினியரும், "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன" என்று இளம்பூரணரும் உரைத்திருப்பது பொருந்தாது. உம்மை விரிந்து நிற்பினும் ஆசிரிய யாப்பு வழுவாமை யானும், விரிந்து நிற்பதே இன்னோசை பயத்தலானும், அவை உரையல்ல வென அறிக. உரையாயின், தொல்காப்பியம் முன்னொடு பின் முரண்படுதல் காண்க.

**"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்**
**டெய்தும் எகர ஒகரமெய்ப் புள்ளி"** (நன். 43)

என்னும் நூற்பாவுரையில், "ஆண்டு என்ற மிகையானே, தாது ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு கொட்டு என்றற் றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது நாடியாது, எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும் அறிதற் பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க" என்று மயிலைநாதர் அவர் காலத்தும் ஒரு சாராரிடை அவ் வழக்கமிருந்ததாகக் கூறியிருப்பதும் காண்க.

இனி, பழஞ்சேரநாடான மலையாள நாட்டின் தென்பாகத்தார், குற்றியலுகரத்தின் மேற்புள்ளியிட்டு எழுதி வருவதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

இதனால், குற்றியலுகரம் புள்ளி பெறுமென்பதல்லது மெய்யீறென்பது பெறப்படாது. பெறப்படின், எகர ஒகர உயிர்களும் மெய்யெழுத்தென்றாகும்.

**"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"** (தொல். எழுத்து. 15)

**"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"** (தொல், எழுத்து. 16)

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

குற்றியலுகரம் குறுகியும் சாய்ந்தும் ஒலித்தலினாலேயே, வருஞ் சொன் முதலுயிரேற இடங்கொடுக்கும்; அதன் மெய்த்தன்மையினாலன்று, குற்றியலுகரம் இருக்கும் எழுத்து உயிர்மெய்யாதலின், அது உயிரீ றென்பதை உணர்த்தற்கே.

**"குற்றிய லுகரமும் அற்றென மொழிப"** (எழுத்து. 105)

என மாட்டெறிந்த பின்,

**"உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே"** (எழுத்து. 106)

என அதையடுத்தே கூறினார் தொல்காப்பியர்.

குற்றிய லுகரமெல்லாம் திரிபெழுத்தே. அதனாலேயே அதனைச் சார்பெழுத்தென்றார் தொல்காப்பியர். சார்பென்பது பற்றுக்கோடே. அது நிகழ்வது சொல்லிறுதியிலேயே. ஆதலால், இடமும் பற்றுக்கோடும் துணைக் கொண்டே குற்றியலுகரம் தோன்றும். அது தோன்றுமிடத்து முற்றியலுகரம் தோன்றாது. நெடுங்கணக்கில் உகரமே யன்றிக் குற்றியலுகரமில்லை. உகரஞ் சேர்ந்து கு,சு,டு,து,பு,று எனத் தனி யுயிர்மெய்கள் தோன்றுவது போல், குற்றியலுகரஞ் சேர்ந்து ஒரு தனி யுயிர்மெய்யுந் தோன்றாது. சொன் முதலிடையிலும், மெல்லின இடையின மெய்யூர்ந்தும் குற்றியலுகரம் தோன்றாது. ஆதலால், குற்றியலுகரம் இயல்பென்பது, நேர்நின்று காக்கை வெளிதென்பார் கூற்றே. அதற்குக் கட்கோளாறு அல்லது உட்கோளாறே கரணியமாகும்.

குற்றியலுகரத்தை நெடுங்கணக்கிற் சேர்த்துள்ள வடமொழியும், அதனை ரகர லகர மெய்களோடு சேர்த்தே ரு, லு என வழங்குகின்றது. குற்றியலுகரம் வடமொழியிலில்லை யென்று, பெரும்புலவர் வேங்கடராசுலு அவர்கள் தம் 'இலக்கணக் கட்டுரைகள்' என்னும் நூலிற் கூறியிருப்பது பொருந்தாது. வடமொழி பிற்காலத் திரிமொழியாதலின், சொல்லிடை நிகழும் அசையினைச் செயற்கை முறையிற் பிரித்தெடுத்து, தனி யெழுத்துகள் போற் காட்டிவருகின்றனர். அம், அ: என்பனவற்றிற்கும் ஈதொக்கும். ரூ என்னும் நெடிலைக் குற்றுகர நீட்டமெனக் கொள்ளாது, சாயுமுகர நீட்டமெனக் கொள்ளல் வேண்டும்.

குற்றுகரம் தனிமொழி யிறுதியிற் போன்றே புணர்மொழியிடையும், குற்றுகரமாகவே நிற்கும். அதாவது, அரையளபாய்க் குறுகியும் இதழ் குவியாதும் ஒலிக்கும். அது புணர்மொழியிடை முற்றுகரமாய் மாறிவிடு மென்பது, குறளன் இருவரிடை நிற்பின் அளவனாய்விடுவான் என்பது போன்றதே. குற்றியலுகர இயல்பிற்கு எவ்வகையிலும் நெறியீட்டு விலக்கேயில்லை. வருஞ்சொன் முதலில் எவ்வெழுத்து வரினும், அதன் குற்றியலுகரத் தன்மை மாறாது. வலிமுதற் சொல் வருஞ்சொல்லாய் வரினோ, குற்றியலுகரம் மேலும் குன்றிக் கால் அளபாய் ஒலித்து நிற்கும். இது புலவர் முதுகுன்றனார் கொள்கைக்கு நேர்மாறாம்.

4. குற்றியலுகரம் அரை மாத்திரை பெறுமென்பதும், ஒரு மாத்திரை உள்ள உகரமே இடமும் பற்றுக்கோடும் காரணமாக அரை மாத்திரையாகக் குறுகியொலிக்கும் என்பதும், அவ்வாறு அரை மாத்திரையாகக் குறுகி யொலிப்பினும் அஃது உயிரீறே என்பதும், வருமொழி முதலில் உயிர் வரும்போது நிலைமொழி இறுதியில் உள்ள குற்றியலுகரம் மெய்யைவிட்டு ஓடும் என்பதுமே நன்னூலார் கருத்துகளாகும்."

இங்குக் கூறப்பட்டுள்ள நன்னூலார் கருத்துகளுள் குற்றியலுகரம் உயிர்முதல் வருமொழி முன் மெய்விட்டோடும் என்னும் ஒன்றே தவறான தாகும்.

**“குற்றிய லுகரமும் அற்றென மொழிப”** (புணரியல்.3)

என்னும் தொல்காப்பிய நூற்பா உரையில்,

“இம் மாட்டேறு ஒருபுடைச்சேறல். புள்ளி பெறாமையின் அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற் றென்று கொள்ளற்க. 'நாகரிது' என்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங் கூடிநின்றல்லது அப் பொரு ளுணர்த்த லாகாமையின், இஃது உயிரோடுங் கூடிநிற்கு மென்றார்.” என்று நச்சினார்க்கினியர் கூறியது, அந் நூற்பாவிற்குப் பொருந்தாதேனும், குற்றியலுகரம் கெடாது நின்றே உயிரொடு புணரும் என்னும் உண்மையை உணர்த்துவது கவனிக்கத்தக்கது.

ஊணில்லை என்னும் புணர்மொழியில் நிலைமொழியீற்று ணகரமெய் எங்ஙனம் கெடாது நிற்கின்றதோ, அங்ஙனமே உறவில்லை, உலகில்லை என்பவற்றுள்ளும் முறையே முற்றுகரமும் குற்றுகரமும் கெடாதே நிற்கும். இதை ஒலித்துக் காணலாம். ஆயின், சற்று எஃகுச் செவிவேண்டும். உறவ், உலக் என்னும் சொல்லின்மையும், உறவு இல்லை, உலகு இல்லை என்னும் பொருளுண்மையும் அத் தொடரிடை உகரங் கெடாமைக்குச் சான்றாம்.

**“குற்றிய லுகரமும் அற்றென மொழிப”**

என்னும் நூற்பாவிற்குக் குற்றியலுகரமும் மெய்யெழுத்துப்போற் புள்ளியிட்டெழுதப்படும் என்பதே போந்தவுரையாம். நச்சினார்க்கினியரது, வேண்டாது கூறலும் வேறொன்று கூறலுமாகும். 'புள்ளியோடு நிலையல்' என்பதற்கு உயிரேற இடங்கொடுத்தல் என்று அவர் பொருள் கொண்டதே அதற்குக் கரணியமாகும்.

குற்றியலுகரத்தின் சாயுந்தன்மையும் குறுக்கமுமே ஏனையுயிரேற இடந்தருமென வுணர்க.

5. 'தனிமொழி' இறுதியில் அரை மாத்திரை பெறும் குற்றுகரம், தொடர் மொழி இடைப்படினும் அரை மாத்திரையே பெறும் என்பது நன்னூலார் கருத்து. ஆனால்,

**“அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிலையும்”** (தொல். குற்று.8)

என்பது தொல்காப்பியம். “அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே முற்றுகரமாகி நிற்கும்” என்று இளம்பூரணர் இந் நூற்பாவிற்கு உரை யெழுதியுள்ளார். பேராசிரியரும் செய்யுளியல் 43ஆம் நூற்பாவுரையில்

இளம்பூரணர் கருத்தையே சார்ந்துரைத்துள்ளார். மேற்கூறிய நூற்பாவில் 'உகரம் நிறையும்' என்பதற்கு வேறாக "உகரம் நிலையும்" என்று பாடங் கொண்டு வேறுபட்ட பொருள் கூறினும், இதற்கு அடுத்த நூற்பாவுரையில் (குற்றியலுகரப் புணரியல், 4) இளம்பூரணர் கொண்ட 'நிறையும்' என்ற பாடத்தையும், அவர் எழுதிய உரையினையும் எடுத்துக்காட்டி மறுக்காது போனமையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. செவி கருவியாக உணர்ந்து பார்க்கும்பொழுது, நாகு என்பதன் இறுதியில் வரும் குற்றுகர வோசை நாகுகடிது என்பதனுள் வாராது. ஓசை மிக்கு ஒலிப்பது வெள்ளிடை மலையென விளங்கவும், நன்னூலார் முன்னூலாசிரியராகிய தொல்காப்பியரோடும், உரைகாரர்களோடும் தக்க காரணமின்றி மாறுபட் டுரைப்பது நமக்கு வியப்பாகவே உள்ளது."

சில செய்யுள்கட்கும் நூற்பாக்கட்குமுள்ள பாடவேறுபாடுகளுட் சிறந்ததைக் கண்டுபிடிப்பதே ஒரு சிறந்த புலமைத் திறனாகின்றது. பாட வேறுபாட்டினால் ஏற்படும் பொருள் வேறுபாடு ஆசிரியர் கருத்துக்கு நேர்மாறாகவும் நேர்ந்துவிடுகின்றது.

மன்னார்குடி நகராட்சிக் குடிதண்ணீர்க் குழாயொன்றின் மீது, 'குடிதண்ணீர்க்கு மட்டும்' என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய தொடர், எழுதினான் தவற்றால் ககரவொற்று விடப்பட்டு, தகையாற்ற வந்தாரெல்லாம் தவறாகப் பொருள்கொண்டு தண்ணீர் குடியாதுபோக நேர்ந்தது.

**"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிறையும்"**

என்னும் நூற்பா ஈற்றிலுள்ள "நிறையும்" என்னும் பாடத்தினும், "நிலையும்" என்னும் பாடமே சிறந்ததாகத் தெரிகின்றது. குற்றியலுகரம் மெய்யெழுத்துப் போல் அரையள பொலிக்குமென்றும் புள்ளி பெறுமென்றும் முன்னர்க் கூறப்பட்டதினால், புணர்ச்சியில் ஒரேவிடத்து மெய் கெடுதல் அல்லது திரிதல்போல் குற்றியலுகரமும் மெய்கெடுதலும் திரிதலுமுண்டோ வென்னும் ஐயம் நீக்குதற்கே எல்லா இறுதியும் உகரம் நிலையும்" எனக் கூற வேண்டியதாயிற்று.

இளம்பூரணர் இன்று எழுதப்பெற்றுள்ள தொல்காப்பிய வுரை யாசிரியருள் முதல்வர். எத்துறையிலும் முதன்முதல் எழுதப்பெற்றது குறைபாடுள்ளதாகவே யிருக்கும். இளம்பூரணர் புலமை அவர் பெயருக் கேற்ப இளநிறைவு பெற்றதே யென்பது "கொடிநிலை கந்தழி வள்ளி" என்ற புறத்திணை நூற்பாவிற்கும் (33) "பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப" என்னும் களவியல் நூற்பாவிற்கும் (13), அவர் கூறிய வுரையான் அறியப் படும். இளமையிலேயே நிறைவு பெற்றவர் என்பது அவர்க்கு ஏற்காது.

பேராசிரியரும் "உகரம் நிறையும்" என்று பாடங்கொள்ளத் தேவை யில்லை. சிறுவர் சிலவகையிற் கணக்கிற் சேர்க்கப் பெற்றும் சிலவகையிற்

சேர்க்கப்பெறாதும் போவதுபோல், குற்றியலுகரமும் சீர்நிலைக்கும் தளை வகைக்கும் எழுத்தெண்ணப் பெற்றும், ஐவகையடிகளின் பதினேழ் நிலைவகைக்கு எழுத்தெண்ணப் பெறாதும், தொன்றுதொட்டு இயங்கி வந்திருக்கின்றது. தளைவகைக்கு எழுத்தெண்ணப் பெறாக்கால்.

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்**
**தகநக நட்பது நட்பு"** (786)

என்னும் குறளும்,

சீர்நிலைக்கு எழுத்தெண்ணப் பெறாக்கால்

**"முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயும்"** (24 : 16)

என்னும் புறப்பாட்டடியும் வழுவாம்.

இனி, "உகரம் நிறையும்" என்னும் பாடத்தையே கொள்ளினும், குற்றுகரம் முற்றுகர மாகிவிடும் என்று பொருள் கொள்ளற்கிடமில்லை.

**"இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே**
**கடப்பா டறிந்த புணரிய லான"** (மொழிமரபு. 4)

என்று முன்னர்ப் பொதுப்படக் கூறியதனால், புணர் மொழியகத்துக் குற்றியலுகரமெல்லாம் அரையளபினுங் குறுகிக் காலா யொலிக்குமோ வெனும் ஐயத்தை அகற்றுதற்கே, "உகரம் நிறையும்" எனக் கூறவேண்டிய தாயிற்றெனக் கொள்க.

குற்றியலுகரப் புணரியல் 4ஆம் நூற்பாவுரையில், "முன்னின்ற சூத்திரத்து உகர நிறையுமென்று பாடமோதி, அதற்கு உகரம் அரை மாத்திரையிற் சிறிது மிக்கு நிற்குமென்று பொருள் கூறி, இச் சூத்திரத்திற்குப் பழைய அரை மாத்திரை பெற்று நிற்குமென்று, கூறுவாரும் உளர்" என்று நச்சினார்க்கினியர் கூறி அம்மட்டோடு விட்டொழிந்தது, இளம்பூரண ருரையை மறுக்கவியலாமை பற்றியன்று மறுக்க வேண்டாமை பற்றியே யென்க.

நாகு என்னும் தனிச்சொல்லின் இறுதியில் வரும் குற்றுகரமே, நாகு கடிது என்னும் தொடர்ச்சொல்லின் இடையும் நேர்கின்றது. அது ஒலியளவில் ஒருகாற் குன்றினும் குன்றுமே யொழியக் கூடுவதிலை. இதுவே தமிழரின் இயல்பான ஒலிப்பாம். இதற்கு மாறாக நீட்டியொலிப்பது வேண்டுமென்று செய்வதாகவோ வேற்று மொழியாரின் தொடர்பால் நேர்ந்ததாகவோதான் இருத்தல் வேண்டும். அல்லாக்கால் செவிப்புலக் கோளாற்றின் விளைவாயிருக்கலாம்.

தொடர்ச்சொல்லிடைக் குற்றியலுகரம் ஒலிமிக் கொலிப்பது வெள்ளிடை மலையென விளங்குவதாகப் புலவர் முதுகுன்றனார் கூறியிருப்பது நமக்கு வியப்பாகவேயிருக்கின்றது. வெள்ளிடை மலை யென்னும் தொடரைப் பன்மொழித் தொடர்வகைகளுள் ஒன்றான

அடையடுத்த பெயர்ச் சொற்றொடராகக் கொள்ளாது, அடையடுத்த எழுவாய்த் தொடராகக் கொண்டு ஒன்றுமில்லாத வெள்ளிடையே மலைபோல் உருக்கொண்டு தோன்றுவதாகப் பொருள் கொள்வதே இவ் விடத்திற்குப் பொருத்தமாம்.

6. "குற்றியலுகரம் என்பதற்குக் குறிதாகிய இயல்பினையுடைய உகரம் என்பது பொருள், எவ்வாறு அகரம் தன்னியல்பில் நிற்பினும், தன்னைக் காட்டிலும் நெடிய ஓசையை உடைய ஆகாரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றெழுத்து எனப்பட்டதோ, அவ்வாறே அரை மாத்திரை அளவுள்ள, விகாரப்படாத இயல்பான குற்றியலுகரமும் தன்னின் நெடிதாகிய ஒரு மாத்திரையுள்ள முற்றுகரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றியலுகரம் எனப்பட்டதே தவிர, முற்றுகரம் இடமும் பற்றுக்கோடும் காரணமாகக் குறுகி ஒலித்ததால் அன்று."

இதில் தன்முரணும் விடாப்பிடியுறழும் (விதண்டாவாதமும்) திரிபுணர்ச்சியும் விளங்கித் தோன்றுகின்றன. ஆகாரத்தை நோக்க அகரம் குறுகிக் குறிலெனப்பட்டாற்போன்று முற்றுகரத்தை நோக்கக் குற்றுகரம் குறுகிக் குற்றியலுகரம் எனப்பட்டதென்று கூறியவரே, இயல்பானதும் திரிபுறாததும் இடமும் பற்றுக்கோடும் அற்றதுமான ஓர் அரையளபுகரம் அந்தரத்தில் தனியாக நிற்பதாக ஒரு மயக்கக் காட்சி காண்கிறார். இடமும் பற்றுக்கோடுமற்று முற்றுகரம்போல் இயல்பான உகரம் எந்த நெடுங் கணக்கில் உள்ளது? குற்றியலிகரம் எங்ஙனம் முற்றியலிகரத்தின் திரிபோ, அங்ஙனமே குற்றியலுகரமும் முற்றியலுகரத்தின் திரிபாகவன்றோ உளது! சொல்லிறுதியாகிய இடமும் வல்லின மெய்யாகிய பற்றுக்கோடு மில்லாத குற்றியலுகரம் எத்தமிழில் எந்நூலில் வழங்குகின்றது? அதை யாருக்கேனும் புலவர் முதுகுன்றனார் காட்டவொண்ணுமோ? முற்றும் வழுவான ஒரு கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு. அதற்கேற்ப நூற்பாக்கட் கெல்லாம் உரைதிரித்துக் கூறுவது ஒல்வதொன்றோ? ஒருவர் தெளிந்த நிலையில் தம் தவற்றை உணரலாம். மயக்க நிலையில் எவ்வாறு உணர்தல் கூடும்? அந் நிலையில் அவர் கூறுவதெல்லாம் பொருளுள்ள தாகுமோ? ஏரண முறைப்படி சான்று காட்டித் தம் கொள்கையை நிறுவாது, தம்மொடு மாறுபடுவாரை நோக்கி, "இடமும் பற்றுக்கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரை மாத்திரை யாயிற்று என்று சாதிப்பார் பலருள்ர்" என்று கூறி என் பயன்?

7. "அவர் கூறும் காரணம் உண்மையாயின், இரண்டு மாத்திரை யளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி யொலிக்கும் பொழுது ஐகாரக்குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரை மாத்திரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்போது மகரக்குறுக்கம்

எனவும் பெயர் தந்த தொல்லாசிரியர் இச் சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றோ பெயர் தந்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் பெயர் கூறக் காணோமே!"

உயிரெழுத்துகள் பன்னிரண்டனுள், ஐ ஔ என்னும் இரண்டும் பிந்தி ஏற்பட்ட புணரொலிகள் (Diphthongs). அதனாலேயே, அவை தனியொலி களான பிற நெடில்கள்போல் காரச் சாரியை பெறாது கான் சாரியை சிறப்பாகப் பெற்றன. அவற்றிற்குக் காரச் சாரியையும் கொடுப்பது பிற்கால வழக்கு. குறிலுக்குக் கரமும் நெடிலுக்குக் காரமும் கொடுக்க வேண்டியதே நெறியாயினும், குறிலுக்கும் காரச்சாரியை கொடுப்பர் பிற்காலத்தார். இது வடமொழியைப் பின்பற்றின தவறான வழக்காகும். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் முந்தியே தோன்றியவை யாதலாலும், ஒழுங்குபட்டவை யாதலாலும், குறுகி இயல்கின்ற உகரம் என்றும் குறுகி இயல்கின்ற இகரமென்றும், பெயர் பெற்றன. இனிக் குறுகிய இயல்புள்ள இகர உகரம் என்றுமாம்.

**"அகர இகரம் ஐகாரம் ஆகும்"** (மொழி. 21)

**"அகர உகரம் ஔகாரம் ஆகும்"** (மொழி. 22)

என்று கூறிய தொல்காப்பியரே,

**"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**
**ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"** (மொழி. 23)

என்றும்,

**"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்**
**ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்."**

என்றும்,

**"ஓரள பாகும் இடனுமா ருண்டே**
**தேருங் காலை மொழிவயி னான"** (மொழி. 24)

என்றும், கூறியுள்ளார்.

ஐகாரம் அய் என்றும் ஔகாரம் அவ் என்றும் ஒலிக்கும்போதே, ஒன்றரையளபினவாகக் குறுகிவிடுகின்றன. இனி, இடையன், சடையன் போன்ற சொற்களின் இடையில், டகர ஐகான் டகரம் போல் ஒலித்து ஓரளபினதாகவும் குறுகிவிடுகின்றது.

ஐகார ஔகாரக் குறுக்கங்களைக் கூறும்பொழுதும்,

**"அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகும் தெரியும் காலை"** (நூன். 13)

என்று மகரக் குறுக்கத்தைக் கூறும்பொழுதும் அளபு குறுகுமென்றே கூறிச் செல்கின்றார் தொல்காப்பியர். இவற்றிற்கெல்லாம் குறுக்கமென்று பெயர் கொடுத்துச் சார்பெழுத்தாகக் காட்டியவர் நன்னூலாரே.

போலும், மருளும் என்னும் சொற்கள் போன்ம் மருண்ம் எனச் சிதைந்த நிலையிலேயே, அவற்றின் ஈற்று மகரமெய் குறுகியொலிக்கின்றது. வரும்வண்ணக்கன் என்னும் தொடரையும் பிரித்து, வரும் என்னும் நிலைமொழியை முந்திய அடியிறுதியிலும் வண்ணக்கன் என்னும் சொல்லைப் பிந்திய அடிமுதலிலும் நிறுத்திவிடின் மகரக்குறுக்கத்திற்கு இடமில்லை. இங்ஙனமே ஐகாரம் வரும் சொல்லையும் அசை பிரித்து வெவ்வேறு சீரிலும் அடியிலும் நிறுத்திவிடின், ஓரளபாகக் குறுகாது. குற்றியலுகர குற்றியலிகரங்களையோ இங்ஙனம் பிரித்து நிறுத்த முடியாது. ஆகவே, இகர வுகரம் முந்தித் தோன்றியவை என்பது மட்டுமன்றி, குற்றியலிகர குற்றியலுகரங்கள் ஒழுங்குபட்டவையாயு மிருக்கின்றன.

மேலும், குற்றியலுகர குற்றியலிகரங்கள் முந்தி அறியப்பட்டதினால் அப் பெயர் பெற்றனவென்றும், பிந்தி யறியப்பட்டவை யெல்லாம் குறுக்கமென வேறு வகையிற் பெயர் பெற்றன என்றும் கொள்வதில் யாதொரு இழுக்குமில்லை யென்றும், பெயர் வேறுபாட்டைக் குற்றியலுகரம் திரிபெழுத்தன்றெனக் கூறுவதற்குச் சான்றாகக் கொள்வது பொருந்தா தென்றும், கூறி விடுக்க.

7. (வேறு விளக்கம்) "இடமும் பற்றுக்கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரை மாத்திரையாயிற்று என்று சாதிப்பாரும் பலருளர். அவர் கூறும் காரணம் உண்மையாயின், இரண்டு மாத்திரையளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி ஒலிக்கும்போது ஐகாரக் குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்போது மகரக் குறுக்கம் எனவும் பெயர் தந்த தொல்லாசிரியர் இச் சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றோ பெயர் தந்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் பெயர் கூறக் காணோமே!"

ஐகார ஔகாரங்கள் முதன்முதலாகத் தமிழ் நெடுங்கணக்குத் தோன்றியபோதே பிறவுயிர்களோடு தோன்றிய தனியுயிர்களல்ல; சற்றுப் பிந்தியமைந்த புணரொலிகள் (Diphthongs).

**"அகர இகரம் ஐகார மாகும்"** (54)

**"அகர உகரம் ஔகார மாகும்"** (55)

**"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**
**ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"** (56)

**"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்**
**ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"**

என்னும் நூற்பாக்களே இதை வலியுறுத்தும்.

**"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்...தோன்றும்"**

**"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்...தோன்றும்"**

என்னும் நூற்பாக்கட்கிசையச் சில சொற்களும் தோன்றியுள்ளன.

வள் = கூர்மை, வள் (வய்) - வை = கூர்மை.

அள் = செறிவு, வன்மை, பெருமை (மிகுதி).

அள்- (அய்- ஐ = பெருமை, பெரியோன், தலைவன்), தந்தை, ஆசிரியன், அரசன்.

பொள்-பொய்-(பய்) பை = துளையுள்ளது, குழிவானது, உள்ளீடற்றது.

(பள்-(பய்)-பயம்பு = பள்ளம், குழி.

அம்மை - அவ்வை=தாய், பாட்டி, ஒ.நோ: செம்மை - செவ்வை.

அவ்வை - ஔவை.

வாவல்=சிறகால் வாவிச் செல்வது. வாவுதல்=தாவுதல்.

வாவல் - வவ்வால் - வௌவால். பெரு வௌவால் வாவிப் பறப்பதையே எங்கும் காண்க.

முதற் காலத்தில் தோன்றிய தனியொலி நெடில்கட்குக் காரச்சாரியை கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய புணரொலி நெடில்கட்கோ அதனின்றும் வேறான 'கான்' சாரியை கொடுக்கப்பெற்றது. புணரொலி நெடில்களையும் ஐகாரம் ஔகாரம் எனக் கூறுவது, வடமொழி வழக்கைப் பின்பற்றிக் குறில்களையும், அகாரம் இகாரம் எனக் காரச்சாரியை கொடுத்துக் கூறும் ஒருசார் தவற்று வழக்காகும்.

முந்தித் தோன்றிய தனியொலி நெடில்கட்கும், பிந்தித் தோன்றிய புணரொலி நெடில்கட்கும் வெவ்வேறு சொல்லாற் சாரியை யமைந்தது போன்றே, முன்னூலாசிரியர் கண்ட சார்பெழுத்துகட்கும் பின்னூலாசிரியர் கூறிய எழுத்துக் குறுக்கங்கட்கும் வெவ்வேறு சொல்லாற் பெயரமைந்தன என அறிக.

மேலும், குற்றியலுகரம் போல் ஐகார ஔகாரக் குறுக்கங்கள் புணர்ச்சி வேற்றுமைப் படாமையின், சார்பெழுத்துத் தன்மையைப் பெற்றனவாகா. ஆய்தம் என்பது மெல்லிய ககரமான ஒரு நுண்ணொலி. ஆய்தம் = நுணுக்கம்.

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"** (உரி. 32)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க.

சார்பெழுத்துகளென்று தொல்காப்பியங் கூறும் மூன்றனுள், இரண்டு உயிரெழுத்துகளும் ஒன்று மெய்யெழுத்துமாகும். உயிரெழுத்துகள் அளபிற் குன்றியது மட்டுமன்றி, ஒலியிலும் வேறுபட்டவை. மெய்யெழுத்தான

ஆய்தம் ஒலியில் மட்டும் வேறுபட்டது; அளபிற் குன்றியதன்று. அது ககரத்திற் கினமானதென்பது, அஃகேனம் என்னும் பெயரினாலேயே அறியப்படும். அஃது ஏனச் சாரியை பெறும்போது வேறெம் மெய்யோடும் புணராமை காண்க.

குற்றியலுகர குற்றியலிகரங்கள்; முற்றியலுகர முற்றியலிகரங்கள் போல் பதினெண் மெய்யொடும் கூடி வருவனவல்ல. ஆய்தம் ஒருயி ரொடும் கூடி வருவதன்று. ஐகார ஔகாரங்கள் குறுகுவது இடம்பற்றியே யன்றிப் பற்றுக்கோடும் சார்பும் பற்றியன்று. மகரக் குறுக்கம் 'போலும்', 'மருளும்' என்பன போன்ற சொற்களின் ஈற்றயல் உகரக் கேட்டினாலும், வருஞ்சொன் முதல் வகரத்தினாலுமே, நிகழும்; வருஞ்சொன் முதல் உயிரேறின் உகரக் கேட்டு மகரக்குறுக்கம் நீங்கிவிடும்.

எ-டு: போன்ம்+என்று=போன்மென்று.

இத்தகைய வேறுபாடும் சிறப்பியல்பும் நோக்கியே, முதனூலார் சார்பெழுத்து மூன்றே யெனக் கொண்டார். அதையே பல்லாயிரம் ஆண்டிற்குப் பிற்பட்ட தொல்காப்பியரும் தழுவிக் கூறினர். எழுத்துகளின் தகையும் தொகையும் பெயரும் அளவும் கூறும் எழுத்ததிகார முதலியலுக்கு நூன்மரபு என்று அவர் பெயரிட்டிருப்பதையும்,

**"எழுத்தெனப் படுப**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்பஃதென்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே."**

என்று வழிநூன் முறையிற் கூறியிருப்பதையும், கூர்ந்து நோக்குக.

8. "அன்றியும், ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரமே குறுகி அரை மாத்திரையாக ஒலிப்பதாயின் நன்னூலார் போலத் தொல்காப்பியரும்.

**"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்**
**தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம் அஃகும்"**

என்றன்றோ கூறியிருப்பர். அவர் அங்ஙனம் கூறிற்றிலரே! குற்றியலுகரம் தனி நெடிலுக்குப் பின்னரும், தொடர்மொழி இறுதியிலும் வரும் வல்லொற்றை ஊர்ந்து வரும் என்றுதானே கூறியுள்ளார்.

**"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்**
**குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே"** (மொழி. 3)

முன்னூலாசிரியர் இவ்வாறு தெளிவுறக் கூற, காரணமின்றி நன்னூலார் அவரோடு முரணுவானேன்?"

குற்றியலுகரம் குறுகியவியல்புடைய தென்பதும், அது நிற்குஞ் சொல் ஈற்றயலெழுத்துப் பற்றி அறுவகைப்பட்ட தென்பதும், தொல்காப்பியர் கூறிய கூற்றுகளே! நன்னூலாரும் இங்ஙனம் கூறியது அவரை முற்றும் தழுவியே.

**"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி**
**இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"** (மொழிமரபு. 12)

என்று தாம் வகுத்துக்கொண்டவாறே, தொல்காப்பியர் குற்றியலுகரச் சொற்களை ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என இரண்டாகப் பகுத்து,

**"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்**
**குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே"**

என்று தொகுத்தும், பின்னர்க் குற்றியலுகரப் புணரியலில்,

**"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்**
**ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன்"** (1)

என்று அவ்விரு தொடரையும் ஆறாக விரித்தும், கூறியுள்ளார்.

"உகரங் குறுகிடன்" என்னும் தொல்காப்பியத் தொடரை "வன்மை யூர் உகரம் அஃகும்" என்னும் நன்னூற்றொடரும்; "நெட்டெழுத் திம்பர்" என்னும் தொல்காப்பியத் தொடரை "நெடிற்றொடர்" என்னும் நன்னூற் றொடரும்; முற்றும் ஒத்திருத்தல் காண்க. ஆகவே,

**"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்**
**தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்**
**அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே"** (நன். 13)

என்று நன்னூலார் கூறியுள்ளது முற்றும் உண்மைக்கு ஒத்ததும் தொல் காப்பியத்தொடு இம்மியும் முரண்படாததுமாகும். ஓர் இலக்கணத்தைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறலே நூன்முறை யாதலின், தொல் காப்பியர் தம் நூலின் 1ஆம், 36ஆம், 466ஆம் நூற்பாக்களில், முறையே, குற்றியலுகர வியல்பைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறினார் எனவறிக.

9. "மேலும், இடமும் பற்றுக்கோடும் காரணமாக முற்றுகரம் குறுகி ஒலிப்பதாயின், காரணம் உள்வழியெல்லாம் காரியம் நிகழவேண்டுவது ஒருதலையாகலின் ஏது, தாது என்ற வடமொழிச் சொற்களில் உள்ள உகரமும் ஏற்ற இடமும் பற்றுக்கோடும் உடைமையின், குற்றியலுகரம் எனல் வேண்டும். ஆனால், அவ் வுகரம் முற்றுகரமாகவன்றோ உள்ளது. எனவே, இடமும் பற்றுக்கோடும் குற்றியலுகரம் வருவதற்குச் சார்பே தவிர, உகரம் குறுக்கம் பெறக் காரணங்கள் ஆகா."

இடமும் பற்றுக்கோடும் கரணியமாக முற்றுகரம் குறுகி யொலிக்கு மென்று இலக்கணியர் கூறியது, தமிழ்ச்சொற்களையே யன்றிப் பிறமொழிச் சொற்களை நோக்கியன்று.

மேலும், ஏது, தாது என்பவை வடசொற்கள் என்னும் பண்டைக் கொள்கை இனிச் செல்லாது. வடமொழி தேவமொழியென்றும், அது கடன்கொள்ளாதென்றும், அதிலுள்ள சொற்கள் யாவும் ஆரியச் சொற்களே யென்றும், குருட்டுத்தனமாக நம் முன்னோர் நம்பிய கருநாடகக் கொள்கை இன்று மொழிநூலாராய்ச்சியால் தகர்ந்து, வடசொற்களுள் ஐந்தி லிருபகுதி தென்சொல் என்னும் கொள்கை வலுத்துவருகின்றது.

ஏது, தாது என்னும் இரு சொற்களும் தென்சொல்லா என்பதை, சொற்பிறப்பியல், சொற்புணர்ச்சி என்னும் இரு கட்டளைக் கற்களில் உரைத்துக் காண்பாம்.

ஏது என்னும் சொற்கு வேர்ப்பொருள் ஏவுதல் அல்லது தூண்டுதல் ("Impulse") என்று, மானியர் உல்லியம்சு (Monier Williams) என்னும் மேலைச் சமற்கிருதப் பேரறிஞர் தம் வடமொழி-ஆங்கில அகரமுதலி யில் (Sanskrit-English Dictionary) குறித்துள்ளார்.

கரணியம் ஒரு கருமஞ் செய்யத் தூண்டுவதாதலாலும், ஏவு என்னும் சொல்லின் மூலமான 'ஏ' என்பதே ஏது என்னும் சொற்கும் மூலமாதலாலும், ஏது என்பது இடு என்னும் வினையொடு ஏதிடு எனப் புணர்ந்து ஏதீடு என்னும் வினைமுதல் நீண்ட தொழிற் பெயராதலாலும், இத் தொழிற்பெயர், "கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு" என்னும் தொல்காப்பிய அடியில் (பொருளியல், 13) ஆளப் பெற்றிருத்தலாலும், வடமொழிக்கு முந்தியது தென்மொழியாதலாலும், ஏது என்னும் சொல் தென் சொல்லே யென்று கொள்ளப்பெறும். அது குற்றியலுகரத்துடன் உயிரேறித் தென் மொழிப் புணர்ச்சி கொண்டதும், அதன் தென்சொற்றன்மை யினாலேயே என அறிக.

முத்து என்னும் தென் சொல் ஐயர் என்னும் சொல்லொடு புணரின் முத்தையர் என்றாவதே இயல்பாயினும் இக்காலத்துச் சிலர் அதை முற்றுகரமாக வொலித்து முத்துவையர் என்று புணர்ப்பது போன்றதே, "ஏதுவின் உணர்த்தலும்" என்னும் தொல்காப்பியத் தொடரும் (கற்பியல், 27) ஏதுவின் முடித்தல்" என்னும் நன்னூற்றொடரும் (14) என அறிக.

தாது என்னும் சொல்லின் வேர்ப்பொருள் நுறுங்கு அல்லது தூள் என்பதே.

தகைதல் = 1. சிதைதல். "சமந்ததைந்த வேல்" (பதிற். 70 : 3)

2. நுறுங்குதல்.

ததைந்தது தாது.

தாது = 1. நீறு, பொடி, (மதுரைக். 399, உரை)

2. பூந்தாது (பூஞ்சுண்ணம்)

"தாதுண் வண்டினம்" (மணிமே. 4 : 20)

3. உடலின் எழுவகைக் கூறு (பிங்.)

4. விந்து (பிங்)

வெயிலிற் காய்ந்து தூளாக உதிர்ந்துபோன சாணத்தைத் தாதெரு என்பது செய்யுள் வழக்கு.

**"தாதெரு மறுகின் மூதூ ராய்கண்"** (அகம்.165)

தாதெரு பரந்து கிடக்கும் ஊர்ப்பொதுவிடம் தாதெரு மன்றம் எனப்படும்.

**"தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ"** (கலித் : 103 : 61)

தாது + எரு = தாதெரு, இதுவும் தமிழிலக்கண நெறிப்பட்ட குற்றிய லுகரப் புணர்ச்சியே.

சில குற்றியலுகர வீற்றுச் சொற்களை வடசொல்லென வழுப்படக் கொண்டு நீண்டகாலமாக இதழ்குவித் தொலிப்பதனாலேயே, அவை வடசொற்போல் தோன்றிவிடுகின்றன.

ஏதீடு, தாதெரு என்பன இலக்கணப் போலியான மரூஉக்களல்ல. அவை முதற்காலத்துத் தோன்றிய நெறிப்பட்ட புணர்ச்சிகளே. இக்காலத்தும், கிட்டிணன் (கிருட்டிணன்) என்னும் பெயரின் மரூஉவான கிட்டு என்பதை யும் தம்பி என்பதன் கொச்சைத் திரிபான தம்பு என்பதையும் ஈற்றுகரத்தை இதழ் குவித்தொலித்தல் காண்க. அவற்றின் ஈற்றுகரங்களை முற்றுகரமாக ஒலித்தலாலேயே, அவை, கிட்டுவை, கிட்டுவினால், கிட்டுவிற்கு எனவும். தம்புவை, தம்புவினால், தம்புவிற்கு எனவும்; வேற்றுமை யேற்கின்றன. அவற்றை இலக்கண நெறிப்படி கிட்டை, கிட்டால், கிட்டிற்கு எனவும், தம்பை, தம்பால், தம்பிற்கு எனவும், வழக்கிற்கு மாறாக ஒலிப்பின், இன்னாவோசை தருதல் காண்க. இவ் விரண்டனுள், கிட்டு என்பதை வடசொற் றிரிபென வரைந்தொதுக்கினும், தம்பு என்பதை எங்ஙனம் தள்ளவியலும்?

ஆகவே, ஏது, தாது என்னும் சொற்களும், முற்றுகர வீறாக ஒலிக்கப்பட்டு வரும் நெடுங்கால வழக்கினாலேயே, வடசொற்றன்மை அல்லது வடசொற்போன்மை பெற்றுவிட்டனவென அறிக.

கருவி என்பது போன்ற கரணம் கருமம் என்னும் சொற்களும் தென்சொல்லாயிருப்பவும், கரணம் என்பதைக் கரண என்று ஈறுகெடுத்தும்; கருமம் என்பதைக் கர்மன் என்று வேறுபடுத்தும்; கரண என்பதை நீட்டிக் காரண என்றும் அதற்கேற்பக் கரு என்னும் முதனிலையினின்று கார்ய என்றும் வடவர் புதிதாய் வடசொல் ஆக்கிக்கொண்டது போன்றே, ஏது என்பதை ஹேது என்றும், தாது என்பதை dhatu என்றும், திரித்து ஆரிய மயமாக்கிக்கொண்டனர் என அறிக.

**- தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியர் உரை 1944**

## 11

# ஒலியழுத்தம்

ஏதேனும் ஒரு காரணம்பற்றி, சொற்களின் அசைகள் அல்லது எழுத்தொலிகள் **எடுத்தல், படுத்தல், நலிதல்** என்னும் மூவேறு வகையாய் ஒலிப்பது, எல்லா மொழிகட்கும் பொதுவாம். எடுத்தல் என்பது, ஒலிப்பு அல்லது பலுக்க (உச்சரிப்பு) முயற்சி வன்மையாய் அழுந்துதல்; படுத்தல் என்பது, அது மென்மையாய் அழுந்துதல்; நலிதல் என்பது, அது அவ் விரண்டிற்கும் இடைத்தரமாய் அழுந்துதல், இவற்றை, முறையே, Acute, Grave, Circumflex என்பர் ஆங்கிலேயர்; உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம் (ஸ்வரிதம்) என்பர் வடநூலார்.

ஒலியழுத்தம் வேறுபடுங் காரணங்கள், இயல்பு அல்லது வழக்கம் (Usage), அளவு (Quantity), ஒலி வடிவு, (Quality of sound), ஓசை (Rhythm), அலகுமட்டம் (Musical pitch), வன்புறை (Emphasis), பொருள் வேறுபாடு, சொற்பிரிப்பு (Open Transition or Juncture) எனப் பல திறத்தன. இவற்றுள் ஓசை செய்யுட்குரியது; அலகுமட்டம் பெரும்பாலும் இசைக் குரியது; ஏனையவெல்லாம் உரைநடைக்கும் செய்யுட்கும் பொதுவாகும்.

இயற்றமிழ் உரைநடையில் இயல்பு, பொருள் வேறுபாடு, சொற் பிரிப்பு என்னும் மூவகையில் ஒலியழுத்தம் நிகழும். இவற்றுள், இயல்பு தமிழ் இலக்கண நூல்களிற் கூறப்பட்டில. ஆயினும், மேலையிலக்கணத் துணைக்கொண்டு இலக்கியங் கண்டதற் கிலக்கணங் காணும் முறையில் அதனை அறிந்துகொள்ள முடியும். வன்புறையைப் பொதுவாக ஒலியழுத் தத்திற் சேர்ப்பதில்லை.

### இயல்பு

இயல்பு என்பது இயல்பாக அல்லது வழக்கமாக ஒலிக்கும் முறை. பொதுவாக, எவ் வினையிலும் தொடக்கத்தில் முயற்சி மிக்கிருப்பது, அனைவரும் அறிந்ததொன்று. ஒலிப்பு முறையிலும், சொற்களின் முதலசையில் அல்லது முதல் எழுத்தில் முயற்சி மிக்கழுந்துகின்றது. இவ் வுண்மையை எச்சொல்லையும் ஒலித்துக் காண்க. 'அழகன்', 'வந்தான்' முதலிய தனிச் சொற்களில் மட்டுமன்றி, 'செந்தமிழ்', 'மறைமலையடிகள்', 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்', 'ஆசிரியர் என்ன

சொன்னார்?' முதலிய தொடர்ச்சொற்களிலும், முதலசையிலேயே அல்லது முதலெழுத்திலேயே முதன்மையாக ஒலியழுந்துவதைக் காண்க. ஒலியழுத்தம் மூவகைப்படும் என மேற்கூறப்பட்டிருப்பினும், சிறுப்பாக, அது எடுத்தல் வகையையே உணர்த்தும். அண்ணாமலையரசர் என்னுஞ் சொல்லில் முதலசையில் அழுத்தம் எனின், முதலசையில் எடுப்பொலி என்பது பொருளாகக் கொள்க. பொருள் விளங்குமிடமெல்லாம், ஒலி யழுத்தம் என்னுங் குறியீட்டை அழுத்தம் எனச் சுருக்கியும் வழங்கலாம்.

தமிழில் ஒலியழுத்தம் இயல்பாக முதலெழுத்தைத் தாக்குவதனா லேயே கசதபக்கள் சொன்முதலில் ஏனையிடத்தினுஞ் சற்று வலிதாக ஒலிக் கின்றன வென அறிக.

## வன்புறை

வன்புறை என்பது பொருள்பற்றி அழுத்தி அல்லது வற்புறுத்திச் சொல்லும் முறை அது மகன் **வரவே** வருவான் எனத் தனி அசையை யேனும் **அவன்** என்ன செய்தான்? அவன் **என்ன** செய்தான்? அவன் என்ன செய்தான்? என முழுச்சொல்லையுமேனும், '**மாணவர் எல்லாரும் நாளைக் கூட்டத்திற்கு வரவேண்டும்**' என முழுச் சொற்றொடரையு மேனும் தழுவும். மகனா, மகளா என எழும் ஐய வினாவிற்கு விடையாக மகன் என ஆண்பால் உணர்த்தும் 'அன்'னீற்றை அழுத்திக் கூறுங்கால், னகர வொற்றே அழுத்தத்திற்குரியதேனும், ஒலியழுத்தம் தனி மெய்யின்மேல் விழுதல் கூடாமையின், மக**ன்** எனக் குறிக்கப்பெறாது **மகன்** எனக் குறிக்கப்பெற்றதென்க. ஒலியழுத்தத்திற்கும் (Accent) வன்புறைக்கும் (Emphasis) வேறுபாடுள்ளதேனும், ஒருபுடை யொப்புமைபற்றி, தனியசை வன்புறையை மட்டும் ஒலியழுத்தத்தின் பாற்படுத்திக்கொள்ளலாம்.

## பொருள் வேறுபாடு

> **"உப்ப காரம் ஒன்றென மொழிப**
> **இருவயின் நிலையும் பொருட்டா கும்மே"** (76)

என்பது தொல்காப்பியம். இதற்கு நச்சினார்க்கினியர் உரை வருமாறு :

"இஃது ஒரு சொல் வரையறையும் அஃது ஓசை வேற்றுமையால் இருபொருள் தருமெனவுங் கூறுகின்றது.

"உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறாகாதென்று கூறுவர் புலவர். அதுதான் தன்வினை பிறவினை யென்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம் என்றவாறு.

(எடுத்துக்காட்டு) : "தபு என வரும். இது படுத்துக்கூற, 'நீ சா'வெனத் தன்வினையாம். எடுத்துக் கூற நீ ஒன்றனைச் சாவப்பண்'ணெனப் பிறவினையாம். உப்பு சப்பு என்றாற் போல்வன குற்றுகரம். உகரத்தோடு

கூடிய பகரம் ஒன்றெனவே ஏனை யுயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பல பொருள் தருமென்றா ராயிற்று. மறந்தப துப்பா என எச்சமாயும், நம்பி செம்பூ பே பெதும்பை எனப் பெயராயும், போ என ஏவலாயும் வரும். இவற்றைப் பிற சொற்களோடும் ஒட்டுக. ஏனை ஈகார பகரம் இடக்கராய் வழங்கும்.''

இவ் வுரையால், தபு என்பது தன்வினையா யிருக்குங்கால் முதலெழுத்தில் (தகரத்தில்) அழுத்தமென்றும், பிறவினையாயிருக்குங்கால் இரண்டாம் அல்லது இறுதியெழுத்தில் (புகரத்தில்) அழுத்தம் என்றும், அறியப்படும். பிறவினை நிலையில் ஈரெழுத்தும் (அதாவது சொல் முழுதும்) எடுத்தொலிப்பின், அது சினத்தாலெழுந்த உச்ச அலகுநிலையென அறிக.

இனி, ஒட்டு, கட்டு, தட்டு, முட்டு; ஓட்டு, காட்டு, பூட்டு, மூட்டு முதலிய குற்றுகர வீற்றுச் சொற்கள், ஏவலாயிருக்குங்கால் ஈற்றிலும் சிறிது அழுத்தம் பெறுமென்றும், முதனிலைத் தொழிற் பெயராயிருக்குங்கால் அதனைப் பெறாதென்றும் அறிதல் வேண்டும்.

ஆயின், ''காது என்னுஞ் சொல்லை இதழ் குவித்துச் சொல்லுமிடத்து முற்றியலுகரமாம். அதற்குப் பொருள் கொல் என்பது. அதனை இதழ் குவியாமற் சொல்லுமிடத்துக் குற்றியலுகரமாம். அதற்குப் பொருள் காது என்னும் உறுப்பு. முருக்கு என்னுஞ்சொல் இதழ் குவித்துச் சொல்லு மிடத்து அடி எனவும், இதழ் குவியாமற் சொல்லுமிடத்து முருக்காகிய மரம் எனவும் பொருள் தரும். பிறவும் இவ்வாறே பொருள் வேற்றுமை உடையவாதல் அறிந்துகொள்க. குற்றியலுகரத்துக்கும் முற்றியலுகரத்துக்கு முள்ள பொருள் வேற்றுமை இவையே'' என்று திரு. சி. கணேசையர் தொல்காப்பிய இரண்டாம் நூற்பாவிற்கு அடிக்குறிப்பு எழுதியிருப்பது பொருந்தாது.

என்னை?

**''ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்**
**ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்** (தொல். 406)

என்றார் தொல்காப்பியராதலின்.

அறுவகைத் தொடரின் ஈற்றில் நிற்கும் உகரமெல்லாம் குற்றியலுகரமே யென்றும், அவை எக்காரணத்தையிட்டும் ஒருபோதும் இதழ்குவித் தொலியாவென்றும், திட்டமா யறிந்து கொள்க. ஒலியழுத்தம் வேறு; இதழ் குவிவு வேறு.

இனி, முற்றியலுகர, குற்றியலுகரங்கள் பொருள் வேறுபடுவதும், அளவு, அளபு; உருவு, உருபு முதலிய ஒருசில சொல்லிணைகளிடத்தே யென்க. உருவு என்பதன் ஈற்றிலுள்ளது முற்றியலுகரம்; அச் சொற்பொருள் வடிவம் என்பது. உருபு என்பதன் ஈற்றிலுள்ளது குற்றியலுகரம்; அச் சொற்பொருள் வேற்றுமைவடிவம் என்பது. இங்ஙனமே, அளவு என்பதன்

ஈற்றிலுள்ளது முற்றியலுகரம்; அச் சொற்பொருள் பொதுவகையான அளவு என்பது, அளபு என்பதன் ஈற்றிலுள்ளது குற்றியலுகரம்; அச் சொற் பொருள் எழுத்தை ஒலிக்கும் கால அளவு என்பது. இடு, சுடு, பகு, விடு, உறு, பெறு முதலிய முற்றுகர வீற்று வினைப்பகுதிகள், முதல் நீண்டு, முறையே ஈடு, சூடு, பாகு, வீடு, ஊறு, பேறு எனக் குற்றுகர வீறாங்கால் தொழிற் பெயரும் தொழிலாகு பெயருமாவதும், முற்றுகர குற்றுகரப் பொருள் வேறுபாடு குறிப்பதே. மறு, மாறு; நடு, நட்டு முதலிய சொல்லிணைகளும், இயற் சொல்லும் திரிசொல்லுமாய் நின்று உகர வேறுபாடுபற்றிப் பொருள் வேறுபாடு குறிப்பனவே. இனி, இதற்கு மாறாக, அது, ஆது; ஒடு, ஓடு முதலிய வேற்றுமையுருபுகளும், இது, ஈது; கொசு, கொசுகு; நாவு, நாக்கு முதலிய தனித்து வருசொற்களும், முற்றுகர குற்றுகர வேறுபாடுபற்றிப் பொருள் வேறுபடாததனை அறிக. வீடு என்னும் வினைச்சொல் விடு எனப் பொருள் படுவதுங் காண்க.

சார்பெழுத்துகளின் தொகை கூறும் தொல்காப்பிய நூற்பாவுரையில்; "இகர உகரங் குறுகி நின்றன, விகார வகையாற் புணர்ச்சி வேறுபடுதலின்.. இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும்பற்றி வேறோர் எழுத்தாக வேண்டினார்" என நச்சினார்க்கினியர் கூறியதில் 'பொருள் வேற்றுமை' என்பது இத்தகையதே யெனத் தெற்றெனத் தெரிந்து கொள்க.

## சொற்பிரிப்பு

சில சொற்கள் புணர்ந்து நிற்கும் நிலையில், இரட்டுறலும் கவர்படு பொருளுங் கொண்டு பல்வேறு சொற்களாகப் பகுத்தற் கிடந்தரும். சொல் வேறுபாட்டிற்கேற்ப அழுத்தநிலை மாறும். புணர்ந்து நிற்கும் சொற்கள் இன்னவென அறிதற்குப் புணர்ச்சியிடத்து ஒரு குறிப்புமில்லை. இடம் நோக்கியும் சொல்வான் குறிப்பறிந்துமே இன்ன சொற்கள் எனத் துணிதல் வேண்டும்.

இவற்றை,

**"எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே"** (தொல். 141)

**"அவைதாம்**
**முன்னப் பொருள புணர்ச்சி வாயின்**
**இன்ன வென்னும் எழுத்துக்கடன் இலவே"** தொல். 142)

என எடுத்தோதினார் தொல்காப்பியர்.

இவற்றிற்கு நச்சினார்க்கினியருரை வருமாறு :

"எழுத்து ஒரு தன்மைத்தான பொருள் விளங்க நிற்கும் புணர் மொழிகள், எடுத்தல், படுத்தல், நலிதல் என்கின்ற ஓசை வேற்றுமையாற் பொருள் வேறுபடுதல் நிலைபெற்ற குணம் என்றவாறு.

“செம்பொன்பதின்றொடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன்றேவன் போத்து, தாமரைக்கணியார், குன்றேறாமா என இவை இசையிற் றிரிந்தன.

“பல பொருட்குப் பொதுவென்ற புணர்மொழிகள்தாம், குறிப்பான் உணரும் பொருண்மையினையுடைய, புணர்ச்சியிடத்து இத்தன்மைய வென்னும் எழுத்து முறைமையை உடையவல்ல என்றவாறு.

“செம்பொன் பதின்றொடி என்றுழிப் பொன்னாராய்ச்சி யுளவழிப் பொன்னெனவும், செம்பாராய்ச்சியுளவழிச் செம்பெனவும், குறிப்பான் உணரப்பட்டது. இசையிற் றிரிதலென்றது ஒலியெழுத்திற்கெனவும், எழுத்துக் கடனில வென்றது வரிவடிவிற்கெனவும், கொள்க.”

செம்பொன்பதின்றொடி முதலிய எடுத்துக்காட்டுப் புணர்மொழி களை அல்லது தொடர்மொழிகளைப் பின்வருமாறு பல்வேறு வகையிற் பகுக்கலாம்.

செம்பொன்பதின்றொடி - 1. செம்பு - ஒன்பதின்றொடி

2. செம்பொன் - பதின்றொடி

(தொடி - பலம்)

செம்பருத்தி 1. செம் - பருத்தி

2. செம்பு - அருத்தி. (அருத்தி = விருப்பம்)

குறும்பரம்பு - 1. குறு - பரம்பு

2. குறும்பர் - அம்பு

நாகன்றேவன்போத்து -

1. நாகன் - தேவன் - போத்து

2. நாகன்றே - வன்போத்து

3. நாகன் - தே - அன்போத்து

4. நாகு - அன்று - ஏவு - அன்பு - ஒத்து.

(போத்து - ஆண்விலங்கு; ஒத்து - ஓதப்பெறும் நூல்.
நாகு - பெண்விலங்கு).

தாமரைக்கணியார் - 1. தாமரை - க(ண்)ணியார்

2. தாம் - அரைக்கு - அணியார்

3. தா-மரைக்கு-அ(ண்)ணியார்

(தா-தாவுகின்ற; மரை - ஒரு வகை மான்)

குன்றேறாமா - 1. குன்றேறு - ஆமா

2. குன்றேறா - மா

(ஆமா - காட்டுப் பசு. மா-விலங்கு)

செம்பொன்பதின்றொடி என்னும் சொற்றொடர் செம்பின் நிறையைக் குறிப்பின், 'ஒன் (பொன்)' என்னும் இரண்டாம் அசையிலும், பொன்னின் நிறையைக் குறிப்பின் 'பதின்' என்னும் மூன்றாம் அசையிலும் அழுத்தம் விழும். இங்ஙனமே பிறவும்.

இனித் தொடர்ச்சொற்களில் மட்டுமன்றி, தனிச்சொல் தொடர்ச்சொல் ஆகிய இரண்டிற்கும் பொதுவான பொதுச் சொற்களிலும், அவை தொடர்ச்சொல்லாங்கால் அழுத்த நிலைமாறும் என அறிக.

எ-டு :

1. பெருமான் - 1. பெரியோன் (தனிச்சொல்)
   2. பெரிய மான் (தொடர்ச்சொல்)
2. ஔவையார் - 1. ஒரு புலத்தியார் (தனிச்சொல்)
   2. ஔவை யார்? (தொடர்ச்சொல்)

பெருமான் என்பது தனிச்சொல்லாயின், இயல்பான முறையில் 'பெ' என்னும் முதலெழுத்திலும் அது தொடர்ச்சொல்லாயின் 'மான்' என்னும் இரண்டாம் அசையிலும் அழுத்தம் விழுவதைக் காண்க. இங்ஙனமே இத்தகைய பிறவும்.

இதுகாறுங் கூறியவற்றால், இயல்பு, பொருள் வேறுபாடு, சொற்பிரிப்பு ஆகிய மூவகையிலும் தமிழிலும் ஒலியழுத்தம் உண்டென்றும் இயல்பு வகையான ஒலியழுத்தம் நுண்மாண் நுழைபுலம் மிக்க முற்காலத்து மாணவர்க்கு வேண்டாவெனக் கூறப்படாது விடப்பட்டிருப்பினும் இக்கால நிலைக்கேற்ப அதனையுஞ் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்றும், ஐயந்திரிபற அறிந்துகொள்க.

**- "முல்லை" மே 1958**

# 12
# தமிழெழுத்துத் தோற்றம்

எம்மொழியாயினும், மொழி முந்தியதும் எழுத்துப் பிந்தியதுமாகு மென்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாம். தமிழ் உலக முதற்றா யுயர்தனிச் செம்மொழியாதலின், அதன் வரி வடிவெழுத்து பிற மொழிகளில் எழுத்துத் தோன்று முன்னரே தோன்றிய தென்பது சொல்லாமலேயே பெறப்படும். ஆயினும், ஒற்றுமையின்றி இடச் சார்பிலும் குலச்சார்பிலும் ஆங்காங்குத் தோன்றியுள்ள பல்குழுவும், பல்வகைப் பாழ்செய்யும் உட்பகையும், தொன்றுதொட்டுத் தமிழுக்கும் தமிழனுக்கும் கட்டுப்பாடாகக் கேடு செய்துவரும் கொல்குறும்பும் இருந்துவருவதால் வெள்ளிடை மலையாக வெளிப்பட்டவுண்மைகளையும் மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்க வேண்டியுள்ளது.

தலைக்கழகம் குமரிநாட்டுப் பஃறுளியாற்றங் கரைத் தொன் மதுரை யில் கி.மு. தோரா. 10000 ஆண்டுகட்கு முன் தோன்றி, முத்தமிழும் பிற பலகலையறிவியல் துறைகளும் பற்றிய முந்து நூல்களை ஆய்ந்தும் புது நூல்களை இயற்றியும், தமிழை வளர்த்து வந்தமையால், அதற்கும் முன்பே எழுத்துத் தோன்றியிருத்தல் வேணடும் என்பதற்குச் சான்று வேண்டுவ தில்லை.

"எழுதப்படுதலின் எழுத்தா கும்மே" (முத்துவீரியம், 1) ஒலியன் (Phoneme) என்னும் மொழித் தனியொலி எழுத்தென்றே பெயர் பெற்றிருப்ப தால் தலைக்கழகக் காலத்திற்கு முன்பே தமிழ் எழுதப்பட்ட மொழியா யிருந்தமை அறியப்படும்.

ஒலிவடிவு, வரிவடிவு என எழுத்தின் இருவடிவும் பிரித்துக் கூறப் படினும், எழுத்து என்னும் பெயர் ஒலிவடிவையே சிறப்பாகக் குறிக்கு மென்பதை,

**எழுத்தெனப் படுப**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்பஃ தென்ப**

"சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" (1) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் உணர்ந்துகொள்க.

தமிழ் தானே தோன்றிய உலக முதன்மொழியாதலால், அதன் எழுத்து, படவெழுத்து (Picture writing), கருத்தெழுத்து (Hieroglyph or Ideograph), அசையெழுத்து (Syllabary), ஒலியெழுத்து (Phonetic Alphabet) என முறையே நானிலைகளை யடைத்திருத்தல் வேண்டும். இன்றுள்ளது நாலாம் நிலையே.

எழுதும் வினை எழுதப்படும் கருவிக்கேற்ப வெவ்வேறு சொல்லாற் குறிக்கப்பெறும். கையினால் மணலிலும், மையினால் துணியிலும் சுவரிலும் எழுத்தாணியால் ஓலையிலும் ஒவ்வொரு வரிவடிவும் ஒரே தொடர்ச்சி யாகக் கோடிழுத்து வரையப்படுவதே எழுதுதல் எனப்படும். கல்லிலும், தகட்டிலும் உளிகொண்டு புள்ளி புள்ளியாக அல்லது குறுங்குறுங் கோடாகப் பொளித்து வரைவது வெட்டுதல், செதுக்குதல், பொறித்தல் என்னுஞ் சொற்களாற் குறிக்கப்பெறும்.

இக்காலத்துத் தாள் (Paper) அக்காலத்தில் இல்லை. ஓலையும் தாழைமடலும் மரப் பட்டையும் துணியும் தோலும்தான் தாள்போற் பயன் பட்டன.

போர்க்களத்திற் பொருதுபட்ட சிறந்த மறவனின் உருவமும் பெயரும் பீடு பொறித்த கல் நட்டு, அதைத் தெய்வமாகத் தொழுவது பண்டைத் தமிழர் வழக்கம் என்பது, ''நடுகல்'' என்னும் வஞ்சித்திணைத் துறையால் அறியப்படும்.

**''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்''** (தொல் 1006)

**''நடுகல் அல்லது தெய்வமு மில்லை''** (புறம்)

இங்குத் தெய்வம் என்றது பொதுமக்கள் வணங்கும் சிறுதெய்வத்தை. கண்ணகிபோலும் கற்பரசிக்குப் படிமஞ் சமைத்துப் பெயரும் பீடும் பொறித்து வழிபடுவதும் பண்டை வழக்கமே.

மேற்கூறியவற்றால் செய்திகளை எழுதுவதும் பொறிப்பதும் பண்டைத் தமிழ்நாட்டு வழக்கிலிருந்தமை அறியப்படும். இவ் விரு வகையுள் முன்னதே முந்தியதும் இயற்கையுமாகு மென்பதும், உய்த் துணர்வாற் புலனாகும்.

இன்றுள்ள தமிழ்நூல்களுள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். அதன் காலம் கி.மு.ஏழாம் நூற்றாண்டென்பது அகச்சான்றும், புறச்சான்றும் கொண்டு ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளது. அந் நூலில், நன்னூலார் கூறும்,

**''எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை**
**முதலீ றிடைநிலை போலி யென்றா**
**பதம்புணர் பெனப்பன் னிருபாற்று''** (நன். 57)

எழுத்திலக்கணங்களும் கூறப்பட்டுள. ஆறுறுப்புகளும் இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட பலவுமாகக் கூடியமையும் பகுசொல்லிலக்கணம்,

நன்னூலிற் பதவியல் என்னும் ஒரேயியலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திலோ, அஃது அக்காலத்து மாணவர்களுக்குத் தேவை யன்மையின், எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் பல்வேறியல் களில் பரக்கக் கூறப்பட்டதொடு நிறுத்தப்பட்டுள்ளது. எழுத்திலக்கணம் பன்னிரண்டனுள், முறையும் உயிர்மெய்க்குரிய கூட்டு வடிவமான உருவப் பகுதியும், முதன்முதல் தமிழிலேயே தோன்றின. அதைப் பின்பற்றியே, முதலில் வடமொழியிலும் பின்பு பிற மொழிகளிலுமாக இந்திய மொழிகள் பலவற்றில் நெடுங்கணக்கெழுந்தது. மேலை மொழிகளிலெல்லாம் இன்றும் முறையின்றி உயிரும் மெய்யுங் கலந்தும், உயிர்மெய்க்குத் தனிவடிவின்றிக் குறுங்கணக்காகவுமே அரிவரியென்னும் எழுத்துப் பட்டி யமைந்திருத் தலைக் காண்க.

**"இலக்கிய மின்றி இலக்கண மின்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே**
**எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல**
**இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்"**

என்பது பேரகத்தியத்தைச் சேர்ந்ததென வழங்கும் ஒரு பழைய நூற்பா. "இலக்கியங் கண்டதற்கு இலக்கண மியம்பலின்" என்றார் நன்னூலார். ஆதலால், தொல்காப்பியத்திற்கு முன்பே பல்துறைப்பட்ட இலக்கியம் இருந்திருத்தல் வேண்டும். இனி,

**"முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி"**

என்று பனம்பாரனாரும்,

**"ஔகார இறுவாய்ப்**
**பன்னீ ரெழுத்தும் உயி*ரென மொழிப*"** (8)

**"னகார இறுவாய்ப்**
**பதினெண் ணெழுத்தும் மெய்*யென மொழிப*"** (9)

**"உயர்திணை *யென்மனார்* மக்கட் சுட்டே**
**அஃறிணை *யென்மனார்* அவரல பிறவே"** (484)

**"சொல்லெனப் படுப பெயரே வினையென்**
**றாயிரண் *டென்ப அறிந்திசி னோரே*"**

**"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கில் தோன்று *மென்ப*"** (644)

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை *யென்ப*"** (947)

**"அகத்திணை மருங்கின் *அரில்தப வுணர்ந்தோர்***
**புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்"** (1002)

**"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ**
**..................................................**
**ஆறுதலை யிட்ட அந்நா லைந்தும்**
**..................................................**
**பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"** (1259)

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்**
**றப்பால் எட்டே மெய்ப்பா *டென்ப*"** (1198)

**"வினைபயன் மெய்யுரு என்ற நான்கே**
**வகைபெற வந்த வுவமத் தோற்றம்"** (1222)

**"விரவியும் வரூஉம் மரபின *வென்ப*"** (1223)

என்று சார்பிற் சார்புநூல் முறையில் தொல்காப்பியனாரும், கூறுவதால், தொல்காப்பியத்திற்கு முன்பே பற்பல முதல் நூல்களும் வழிநூல்களும் இருந்தமை பெறப்படும். வேறெம்மொழியிலும் இல்லாததும் மெய்ப் பொருளியல் அறிவு முதிர்ச்சியைக் காட்டுவதுமான பொருளிலக்கணம் கண்ட தமிழர், தமிழொலிகளைக் குறிக்கும் வரிவடிவுகளை அசோகன் கல்வெட்டெழுத்தினின்று அமைத்துக்கொண்டனர் எனக் கூறுவது எத்துணை ஏமாற்றும், அதை நம்புவது எத்துணை பேதைமையுமாகும் என்பதை அறிந்துகொள்க. கி.பி.13ஆம் நூற்றாண்டினரான பவணந்தியார்,

**"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்**
**டெய்தும் எகர ஒகரமெய்ப் புள்ளி"**

என்று, தமிழெழுத்தின் (வரலாற்று முன்னைத்) தொன்மையைக் குறித்தார். 'ஆண்டு' என்றது அவருக்கு முற்பட்ட பண்டை நிலையை,

இங்ஙனமிருப்பவும், உலகத்தமிழ்ப் பேரவையின் 2ஆம் கருத்தரங்கு மாநாட்டில், திரு. ஐராவதம் மகாதேவன் என்பார் தமிழெழுத்தை அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தோடு தொடர்புபடுத்தி முன்னது பின்னதினின்று தோன்றியதென்றும், அதன் பின்னரே தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்றும், கை கூசாது வரைந்து அச்சிட்ட சுவடியைத் தமிழ்நாட்டுத் தலை நகரில் தமிழரசின் முன்பும் தலைமைப் பேராசிரியர் நடுவிலும், அஞ்சாது படித்திருக்கின்றார்.

தமிழ்ப் பகைவர்கள், உலகில் முதன் முதல் தோன்றிய ஒப்புயர்வற்ற தமிழ் நெடுங்கணக்கை அசோகன் கல்வெட்டெழுத்தோடு தொடர்புபடுத்திக் கூறி வருகின்றனர். அசோகன் காலம் கி.மு. 272-231. தமிழெழுத்தின் தோற்றமோ வரலாற்றிற் கெட்டாத தொன்முது பழங் காலத்தது.

கி.மு. 2ஆம் நூற்றாண்டில் வடநாட்டினின்று வந்து வைகை மதுரையில் தங்கிய சில சமணரும், பவுத்தரும், தங்கள் வடநாட்டெழுத்தொடு தமிழுக்கேற்பச் சில புதுக் குறிகளையும் புனைந்து பொறித்த கல்வெட்டுகளைக் கொண்டு, முழுப் பூசணிக்காயைச் சோற்றுள் முழுக்குவதுபோல். தமிழ் நெடுங்கணக்கே அசோகப் பிராமியெழுத்தினின்று தோன்றியதாகக் கூறிவருகின்றனர், பிறவித் தமிழ்ப் பகைவரான ஆரிய வழியினர் சிலர். இதைத் தலைசிறந்த ஆராய்ச்சியெனப் போற்றி வருகின்றனர், சில தன்னலத் தமிழ்ப் பேதையரும்.

தமிழ்மொழி கி.மு. 50,000 ஆண்டுகட்கு முன்பும், தமிழெழுத்து கி.மு.20,000 ஆண்டுகட்கு முன்னும், தமிழிலக்கியம் கி.மு. 10,000 ஆண்டுகட்கு முன்பும் தோன்றியனவாகும். தமிழெழுத்தினின்றே முன்பு கிரந்தவெழுத்தும் பின்பு தேவநாகரி எழுத்தும் தோன்றியுள்ளன.

தமிழ், குமரிநாட்டில் தோன்றிய உலக முதன்மொழியென்றும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான முதற்றாய் மொழியென்றும், அறியப்படாததனாலேயே, பெயரன் பாட்டனைப் பெற்றான் என்பது போன்ற தவறான முடிவுகள் ஆராய்ச்சியின் பெயராற் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ் வடமொழிக் கிளையும் பன்மொழிக் கலவையுமான புன்சிறுமொழியெனக் காட்டப்பட்டிருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி, இதற்கு அடிப்படைக் கரணியமாதலின், அதை முதற்கண் திருத்துவது தமிழறிஞரின் தலையாய கடமையாம்.

**- முதன்மொழி உ.த.க. 2ஆவது மாநாட்டு மலர் 1971**

13

# நெடுங்கணக்கு [அரிவரி]

சென்ற ஜூன் மாதம் (1934) 10ஆம் 11ஆம் நாள்களில், நெல்லையில் நடந்த, சென்னை மாகாணத் தமிழன்பர் மாநாட்டில், பதின்மூவர்போல், தமிழ் நெடுங்கணக்குக் குறைவுள்ள தென்றும், அதிற் சில எழுத்துகளைப் புதிதாய்ச் சேர்க்கவேண்டு மென்றும், பேசினதாக அம் மாநாட்டறிக்கையிற் கண்டாம்.

ஒரு மொழியிலுள்ள அரிவரி நிறைவுள்ள தில்லதென் றறிதற்கு, அம் மொழியிலுள்ள ஒலிகளையெல்லாம் குறித்தற்கு வரிகளுண்டா என்று காண்டல் வேண்டும். தமிழில் அதன் ஒலிகளையெல்லாம் குறித்தற்குப் போதிய வரிகளுண்டென்றே சொல்ல வேண்டும்

மெய்யெழுத்துகளிற் சிலவற்றிற்கு ஈரொலியும் சிலவற்றிற்கு மூவொலியு மேலுமுள.

எ-டு :

**க** - 1. க், க்கா k. (வலிய ககரம்.)

2. உலகு, அகம் என்னும் சொற்களில் மெல்லிய ககரம், ' ககரத்திற்கும் ஆய்தத்திற்கும் இடைத்தர ஒலி.

3. தங்கம், என்னும் சொல்லில் g போன்ற தொனிப்பொலி (voiced letter).

ஙகரத்தை யடுத்த ககரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

**ச** - 1. ச், ச்ச ch வலிய சகரம்.

2. சட்டி, சட்டை என்னும் சொற்களில் s போன்ற மெல்லிய ஒலி.

3. பசி, கசி என்னும் சொற்களில் s அல்லது ஸ போன்ற மெல்லிய ஒலி.

4. பஞ்சம் என்னும் சொல்லில் j போன்ற தொனிப்பொலி.

ஞகரத்தை யடுத்த சகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

**ஞ** -1. ஞ், ஏறத்தாழ ய்ங் போன்ற ஒலி.

2. மஞ்சள் என்னும் சொல்லில் nj போன்ற ஒலி.

**ட**-1. ட், ட்ட, ṭ போன்ற வல்லொலி.

2. ட, ḍ போன்ற தொனிப்பொலி.

டகரம் உயிர்மெய்யாய்த் தனித்து வரும்போதெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

த- 1. த், த்த, t போன்ற வல்லொலி.

தட்டை, தண்ணீர் முதலிய சொற்களிலுள்ள தகரமும் வலித்தே ஒலிக்கும்.

2. விந்தை, மதி முதலிய சொற்களில் d போன்ற தொனிப்பொலி.

நகர மெய்யை அடுத்துவரும் தகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ப- 1. ப, ப், ப் ப , p வல்லொலி.

2. கம்பம், பண்பு, அன்பு, மரபு முதலிய சொற்களில் b போன்ற தொனிப்பொலி.

ம், ண், ன் என்ற மெய்களை யடுத்துவரும் பகரம் தொனித்தே யொலிக்கும்.

ற- 1. ற, ற், வலிய றகரம் (Hard or trilled r)

2. ற்ற, t போன்ற வல்லொலி.

3. கன்று என்னும் சொல்லில் (candle என்னும் சொல்லிலுள்ள ) d போன்ற மெல்லிய டகரம்.

னகரமெய்யை அடுத்துவரும்போதெல்லாம் றகரம் இங்ஙனமே ஒலிக்கும்.

றகரம் இரட்டிக்கும்போது இரண்டு மிசைந்து t போல ஒரே யொலியா யொலிக்கும்; னகர மெய்யை அடுத்துவரும்போது இரண்டு மிசைந்து, nd போல ஒலிக்கும். இதையறியாத ஆங்கிலரும், ஆங்கிலவழித் தமிழறிஞரும், வெற்றி என்பதை வென்றி என்றும் வென்றி என்பதை வென்றிறி என்றும் பிழைபட உச்சரிப்பர்.

எழுத்துகள் இடமும் சார்பும்பற்றிப் பற்பல விதமாக ஒலிப்பதைக் குறித்தே,

**"எடுத்தல் படுத்தல் நலித லுழப்பின்**
**திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்"** (நன்.)

என்றார் பவணந்தியார். இங்ஙனம் ஓரெழுத்தே பற்பல விதமாக ஒலிக்கினும், எவ்விடத்தில் எவ்வொலியென் றறிய ஏதும் இடர்ப்பாடில்லை. ஏனென்றால் ஒவ்வோ ரொலியும் இயல்பாகவே இடமும் சார்பும்பற்றி வெவ்வே றொலியாய் ஒலிக்கின்றது. தமிழருள் எவர் பேசினும் இவ் வியல்பு மாறு வதின்று. பேசும்போது மட்டுமன்றி ஒரு நூலை வாசிக்கும்போதும் இவ் வியல்பு மாறுவதின்று. இதைக் கால்டுவெல் கண்காணியாரும் தமது ஒப்பியல் நூலிற் குறித்துள்ளார்.

இயல்பாகவும் எளிதாகவும் இருக்கிற தமிழ்மொழியைப் போன்றே, அதன் எழுத்துமுறையும் இயல்பாகவும் எளிதாகவு மிருக்கவேண்டி நம் நுண்மாண் நுழைபுல முன்னை யாசிரியர் ஒரு வரியானேயே பல ஒலிகளைக் குறிப்பித்தனர். என்னே! அவர் அறிவின் மாண்பு!

இனி, தமிழிலுள்ள இசையும் குறிப்பும்பற்றிய பல்வகை யொலிகளை யுங் குறிக்க வரியில்லை யென்னலாம்.

எ-டு : கும் கும் (gum gum) மிருதங்கத் தொனி.

உஸ் - நாயை உஸ் காட்டல் அல்லது வேட்டைமேல் ஏவல்.

ஜல்ஜல் - சலங்கை யொலி.

ஜம் - கம்பீரத் தோற்றக் குறிப்பு.

இஸ்ஸ்ஸ் (ezzz) - பாம்பு, வண்டு முதலியவற்றின் இரைச்சல்.

உஷ் (ush - hush) அமைத்தற் குறிப்பு. இவையெல்லாம் எழுத்து முறைக் கேலாத புறவொலிகளாகக் கொண்டனரேயன்றி, பொருண் மொழிக்கு வேண்டும் எழுத்தொலிகளாகக் கொண்டில ரென்க.

அற்றேல் பிற மொழிகளில் இவ் வொலிகளைக் கொண்டதென்னை யெனின், அவையெல்லாம் செயற்கை மொழிகளாதலின் அவற்றுக்குக் கொள்ளப்பட்டன வென்றும், அவற்றுள்ளும் முற்கு, வீளை, கனைப்பு, கத்து, அழுகை, தும்மல் முதலிய ஒலிகளையெல்லாம் குறிக்க வரியில்லை யென்றும், எல்லா ஒலிகளையும் குறிக்க வரியுள்ள மொழி உலகத்தில் ஒன்றுமேயில்லை யென்றும் கூறி விடுக்க.

எ, ஒ, ழ, ற என்ற ஒலிகள் வடமொழிக்கில்லை. ஆகையால் ஒட்டெலும்பு என்பதை ஓட்டேலும்பு என்றும், வாழைப்பழ வற்றல் என்பதை வாலபல வர்ரல் என்று மல்லவோ எழுத வேண்டும்?

ஞ, ண, ழ, ள என்ற ஒலிகள் ஆங்கிலத்திற் கில்லை. இவ் வொலிகள் வருகின்ற சொற்களை எங்ஙன் ஆங்கிலத்தில் எழுத முடியும்? கண்ணியைக் கன்னியென்றும் மூளையை மூலையென்று மல்லவோ எழுத வேண்டும்?

இங்கிலீஷில் உள்ள f, z, zh முதலிய ஒலிகள் எத்துணையோ ஒலிகளையுடைய வடமொழிக்கும் இல்லையே! இங்ஙனம் ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்பெழுத்துக ளிருப்பதால், ஒருமொழிச் சிறப்பெழுத்துச் சொற்களைப் பிறமொழியி லெழுத வொண்ணாதாகும். இதை யறியாத வடமொழிவாணன் ஒருவன், ஒரு தமிழனை நோக்கிச் சகஸ்திரதளாம்புஜம் என்பதைத் தமிழில் எழுதுக என்று பழித்தானாம், பின்பு வாழைப்பழவற்றல் என்பதை வடமொழியில் எழுதுக என்று தமிழன் சொன்னதும் விழித்தா னாம். ஆகையால் ஒரு மொழிச் சிறப்பெழுத்துச் சொற்களை இன்னொரு மொழியில் விகாரமின்றி யெழுத வொண்ணா தென்றும், எல்லா மொழிச் சொற்களையும் தற்சமமாக எழுதும் மொழி உலகத்தே ஒன்று மில்லை யென்றும் தெரிந்துகொள்க.

இதை யறியாதார் F தமிழில் இல்லையென்றும், ஜ தமிழிலில்லை யென்றும், இன்னோரன்ன எழுத்துகளைப் புதிதாய்ச் சேர்த்தல் வேண்டு மென்றும் ஓலமிட்டுத் திரிவர். உலக முழுமைக்கும் பொதுமொழியாய் வந்து கொண்டிருக்கின்ற இங்கிலீஷில், ஏனைமொழிச் சிறப்பெழுத்துகளைச் சேர்க்கக் காரணமிருப்பினும், எவரேனும் ஞ, ண, ழ, ள முதலிய எழுத்துகளை இங்கிலீஷில் சேர்க்கவேண்டுமென்று கூறின துண்டா? அன்றி, மிக நிறைவுள்ளதாகக் கருதப்படும் வடமொழி யரிவரியை இன்னும் நிறைவாக்க வேண்டி எ, ஒ, ழ, ற என்ற எழுத்துகளைச் சேர்க்க வேண்டு மென்று. எவரேனும் கூறினதுண்டா? இவரெல்லாம் அமைந் திருக்கவும் தமிழர்மட்டும் முனைந்து நிற்பதேன்? இதனாலேயே பிறர்க்குத் தாய்மொழிப் பற்றுள தென்றும் தமிழர்க்கில தென்றும் விளங்குகின்றதே!

ஒரு மொழியின் அரிவரி அம் மொழியொலிகட்குமட்டும் அமைந்ததா? பிறமொழியொலிகட்கும் அமைந்ததா? ஒருமொழி யரிவரியால் அம் மொழிச் சொற்களை மட்டும் எழுதாது, பிறமொழிச் சொற்களை எழுதி நகைப்பது பெரும் பேதைமையாகும். ஒரு மொழிக்கு அதிலுள்ள ஒலிகளை யெல்லாம் குறிக்க வரியின்றெனின் அதுவே உண்மையான குறையாகும்.

தமிழில் ஒவ்வோரொலிக்கும் ஒவ்வோர் வரியுண்டு. உலகமொழிக ளெல்லாவற்றின் அரிவரிகளையும் ஒவ்வொன்றாய் உற்றுநோக்கின், தமிழரிவரியே பிறமொழிகள் அழுக்கறுமாறு அத்தனை நிரம்பினதும் வரம்பினதுமா யிருக்கின்றது. உயிரெழுத்துகள் பன்னிரண்டிற்கும் தனித்தனி வரியுள்ளது. குறில் குறிலாகவும் நெடில் நெடிலாகவும் உச்சரிக்கப்படும். மெய்யெழுத்துகள் எல்லா மொழிகட்கும் பொதுவாக இயற்கையான எளிய வொலிகள் பத்தொன்பதே. g ககரத்தின் பேதமும், T சகரத்தின் பேதமுமின்றித் தனியொலிக ளாகா.

இங்கிலீஷில் 5வரிகளால் 18 (20 Nesfield) உயிர்ஒலிகளைக் குறிப்பிடுகின்றனர். ஓரொலிக்குப் பல வரியும், ஒரு வரிக்குப் பல வொலியு முள்ளன. C.g x (ks) w என்பன மிகை வரிகள். ங(ng), ஷ(sh), த(th), zh என்னும் ஒலிகளைக் குறிக்கத் தனி வரியில்லை, இணைவரி(digraph)களே.

அரபி மொழியில் ஏ, ய என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் ஒ, வ என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் உள்ளன.

தமிழில் ஒரு வரி பலவொலிப் பேதங்களைக் குறிப்பினும் அப் பேதங்கள் இடமும் சார்பும்பற்றி இயற்கையாலேயே தோன்றுவதால் வேண்டாத வரிகளைப் பெருக்கி நம்மை வருத்தியிலர் நம் முன்னோர்.

இனி, இசை விளி புலம்பல் ஆதியில், எழுத்துகள் எத்துணையும் நீண்டொலிப்பதைக் குறிக்கத் தமிழில் இருவகை யளபெடைகளுள. பிற மொழிகட் கிவையில்லை. வடமொழியில் உயிரளபெடையே யுண்டு; ஒற்றள பெடை யில்லை.

தமிழில் வரிகள் எளிதாய் விளங்குமாறு வெவ்வேறு வடிவாயுள்ளன. ஔ என்பதிலுள்ள ள வடிவைச் சிறிதாயெழுதாதது அச்சுவார்ப்பார் குற்றமே யன்றி எழுத்தாசிரியர் குற்றமன்று. தெலுங்கு, அரபி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் மாணவர் மயங்குமாறு பல வரிகள் ஏறத்தாழ ஒரேவடிவா யுள்ளன.

தமிழ்வரிகள் இங்கிலீஷ் வரிகள்போல மிக நுண்ணிய (Diamond, Brilliant) வடிவிலு மெழுதப்படும். சமற்கிருதம், அரபி, தெலுங்கு முதலிய வற்றின் வரிகள் அத்துணை நுணுக்கியெழுத இடந்தரா. இதனாலேயே சமற்கிருத வெழுத்துகளைக் கூட்டெழுத்துக் (சம்யுக்தாக்ஷரம்)களாக எழுதுவர்.

இனி, உயிரொலியும் மெய்யொலியும் உயிரும் மெய்யும்(life and body) கூடிய உயிர்மெய்(பிராணி) போல ஒன்றி ஒலிப்பது உயிர்மெய் வரிகளாற் குறிக்கப்பட்டது. உயிர், மெய், உயிர்மெய் முதலிய குறியீடுகள் தமிழரின் தத்துவவறிவை யுணர்த்தும். உயிர்மெய் வரிகளால் ஒலி நூலறிவும் வரிச்சுருக்கமும் பயனாம்.

தமிழ் அரிவரியில் உயிர் முன்னும் மெய் பின்னும் ஆய்தம் இடையும், உயிருள் குறில் முன்னும் நெடில் பின்னும், மெய்யுள் வலி முன்னும் மெலி பின்னும் இடை இடையும் வைக்கப்பட்டன.

உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் தமிழுக்கே சிறப்பாகும். இந்திய மொழிகட்கெல்லாம் இவை பிற்காலத்தே தமிழைப் பின்பற்றி யேற்பட்டன. அரபி, ஹீப்ரு முதலிய சேமியக் (Semitic) கவைமொழிகள் எல்லாவற்றிற்கும், சமற்கிருத மொழிந்த ஆரியக் கவைமொழிகள் எல்லா வற்றிற்கும் இவையில்லை. எழுத்துகள் இங்கிலீஷிற் போல உயிரும் மெய்யும் வேறு வேறு அடுத்தடுத் தெழுதப்படுவதுடன், அரிவரியில் உயிரும் மெய்யும் முறையின்றி மயங்கிக் கிடக்கும். ஆரியமும் சேமியமு மாகிய மேலை மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வடிவும், எழுத்து முறையும் இல்லாதிருக்கவும், சமற்கிருதத்திற்கு மட்டும் அவை எங்ஙன மிருந்திருத் தல் கூடும்? சமற்கிருதத்திற்கு அவை இருந்தனவெனின், அதன் இனமாகிய செருமன், டச்சு, கிரேக்கு, இலத்தீன் முதலிய மொழிகட்கும், அவற்றை அடுத்து வழங்கும் சேமிய மொழிகட்கும் ஏன் அவையில்லை? வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி.மு. 3000. அவர் வருகைக்கு முன்னரே தமிழில் எழுத்திருந்தது . அவ் வெழுத்துகள் உயிர்மெய் நீங்கலாக 31.

ஒலிமுறையினும் சொன்முறையினும் தமிழுக்கு அடுத்துள்ள கிரேக்க, இலத்தீன் மொழிகளில் முறையே எழுத்துகள் 24, 25; வடமொழியில் 48. இலத்தீன் எழுத்துகள் 24 என்றும், 23 என்றும் கணக்கிடுவதுமுண்டு. தமிழிலில்லாத சில செயற்கை யொலிகள் இலத்தீன், கிரேக்கு மொழிகளி லுள. ஆனால், அவற்றிற் பலவற்றிற்குத் தனி வரிகள் இல்லை. B,G, முதலிய

தொனிப்பொலிகட்குத் தனி வரியுள. bh, gh முதலிய மூச்சொலி சேர்ந்த தொனிப்பொலிகட்குத் தனிவரி யில்லை. சமற்கிருதத்தில் அவற்றிற் கெல்லாம் தனிவரி யுண்டு. அதோடு ஞ, ண முதலிய தமிழ் எழுத்துகளும் சேர்க்கப்பட்டுள. மேலை மொழிகட்கும் தமிழுக்குமுள்ள எழுத்துகளிற் பெரும்பாலனவற்றிற்குத் தனிவரி யமைத்து வடமொழி யெழுத்துகளைப் பெருக்கிக் காட்டினர் வடமொழிவாணர். க, ச, ட, த, ப என்று தமிழ்முறையில் வல்லின மெய்யெழுத்துகளிருப்பதும், k, kh, g, gh என ஒவ்வொரு வல்லின மெய்யும் தொனிப்பதும், தொனியாததும், மூச்சொலி சேர்ந்ததும் சேராததுமாக நந்நான்காக உறழப்பட்டிருப்பதும், சமற்கிருதத்தின் செயற்கையான எழுத்துப் பெருக்கைக் காட்டும்.

சமற்கிருதம், கிரேக்க இலத்தீன் மொழிகளின் திரிபு அல்லது வளர்ச்சி யென்பதற்குப் பல ஆதாரங்களுள. கிரேக்க இலத்தீன் மொழிகள் ஆரிய மொழிகளில் மிகப் பழைமையானவை. கிரேக்க இலத்தீன் எழுத்துகளினும் சமற்கிருத எழுத்துகள் மிகுதி. கிரேக்க இலத்தீனிலுள்ள பல சொற்கள் சமற்கிருதத்தில் மிகத் திரிந்துள்ளன. சமற்கிருதம் என்னும் பெயருக்கே நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள். உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றினும் எழுத்துப் பெருக்கமும் செயற்கையொலிப் பெருக்க முள்ளது சமற்கிருதமொன்றே. அதனானேயே அது வழக்கற் றொழிந்தது.

வடமொழி யெழுத்துகளை 48 ஆகப் பெருக்கி யிருப்பினும், ஒலி முறைப்படி பார்ப்பின், அவற்றிற் புணரொலிகள் அல்லது கூட்டெழுத்துகள் பலவாகும்.

'ரு', 'லு' என்பவை குற்றியலுகரம் சேர்ந்த ரகர லகரங்களாகும். 'ரூ' என்பது ரு என்பதன் நீட்டம். 'அம்' என்பது அம் என்னும் அசை; அகர உயிரும் மகரமெய்யும் சேர்ந்தது. இவை உயிர்மெய்களும் அசையுமாக விருந்தும் உயிரெழுத்துகளிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எ, ஒ என்ற உயிர்கள் வடமொழிக்கில்லாதது ஒரு பெருங் குறையாகும்.

மெய்யெழுத்துகளில் ஐ வருக்கத்தில் h சேர்ந்த எழுத்துகளெல்லாம் இரட்டை யெழுத்துகளாகும். சந்தியக்ஷரங்கள் சில தனி யெழுத்துகள்போற் காட்டப்படும். இதனால் வடமொழி யெழுத்துப் பெருக்கினால் ஒரு சிறப்பு மில்லை யென்க.

வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்த பின்னரே உயிர்மெய் வரியும் எழுத்துமுறையும் வடமொழிக்கு ஏற்பட்டன. வடமொழி வரிகள் தென்மொழி வரிகளின் திரிபே என்பது இருமொழி வரிகளையும் ஒப்பு நோக்குவார்க்கு இனிது புலனாம். வடமொழி யரிவரி யேற்பட்ட பின் அதை யொட்டி அதன் கிளைமொழிகட்கும் பின்பு தமிழ்க் கிளைமொழிகட்கும் அரிவரிகள் ஏற்பட்டன. இதனால் பெர்சியன் அரபி வரிகளைக் கொண்ட இந்துஸ்தானி யொழிந்த ஏனை யிந்திய மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வரியும் எழுத்துமுறையும் ஏற்பட்டுள.

ஆதியில் ஏனைய மொழிகட்கெல்லா மில்லாது உயிர்மெய் வரிகள் தமிழுக் கிருந்ததினாலேயே, அதன் அரிவரி நீண்டு நெடுங்கணக் கெனப்பட்டது. ஏற்கெனவே நெடுங்கணக்கா யிருக்கும் அரிவரியை (செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கூறியபடி) இன்னும் நெடுங்கணக்காக்க நினைப்பது என்னே பேதைமை!

இனி, ஒரு மொழிக்கு நிரம்பின அரிவரி யிருப்பினும், பிறமொழிச் சொற்களை அதில் மொழிபெயர்க்கப் போதிய சொற்களுளவா என்று பார்த்தல் வேண்டும். இலவெனின் பிறமொழிச் சொற்களையும் பிறமொழி யெழுத்துகளையும் அதிற் புதிதாய்ச் சேர்க்க இடமுண்டு. தமிழில் எல்லாப் பொருள்களையும் வெளியிடத்தக்க எண்ணிறந்த சொற்களுள்ளன. ஆதலின் பிறமொழிச் சொற்களையேனும் எழுத்துகளையேனும் புதிதாய்ச் சேர்க்க எட்டுணையும் இடமின்று. பொருள்களின் சிறப்புப் பெயர் (Proper Name) களே எழுத்துப் பெயர்ப்பிற்கும்(Transliteration) தற்பவத்திற்கும் இடமாகும். இதற்குப் பிறமொழி யெழுத்துகள் வேண்டுவவல்ல. தமிழில் இயன்றதுணை எழுதல் தகும். ஏதேனுங் குறையிருப்பின் அது எல்லா மொழிகட்கும் பொதுவாகும். இதற்கென்றே தமிழிற் புத்தெழுத்துகளைச் சேர்ப்பின் தமிழின் தூய்மையும் இயல்பும் எளிமையும் இனிமையும் கெடும். அங்ஙனம் தமிழைக் கெடுத்து வழங்குவதினும், அதை விட்டுவிட்டு அயன் மொழியை வழங்குவதே சாலச் சிறந்ததாம். அதனாற் புத்தெழுத்துகளைத் தமிழிற் புகுத்தவேண்டும் என்னும் பொருந்தாக் கூற்றைப் புறத்தே விடுக்க.

**– "செந்தமிழ்ச் செல்வி" நளி 1934**

# 14

# தமிழ் எழுத்து மாற்றம்

விடுதலைபெற்ற இந்தியாவில், தமிழ்நாடு போம்போக்கும் தமிழ்ப்புலவர் போம்போக்கும் தமிழாக்கத்திற் கேதுவாய்த் தோன்றவில்லை. தமிழதிகாரம் மெல்லமெல்லத் தமிழறியாத பெருமாளர் கைக்கும் தமிழ்ப் பகைவர் கைக்கும் நழுவிக்கொண்டிருக்கின்றது. "ஊருக் கிளைத்த வன் பிள்ளையார் கோயி லாண்டி" என்பதுபோல், தமிழும் தமிழ்ப் புலவரும் எவராலும் எங்ஙனமும் மாற்றப்படற் குரியராயினர். தமிழைப் பல துறையிலும் மாற்றுவதற்கே எல்லோரும் முழுவுரிமை எய்தியுள்ளனர்.

## தமிழ் வளர்ப்பிற்கு ஒரு பொதுக்கழகம் இல்லாமை

பண்டைக்காலத்தில் பாண்டிநாட்டுத் தமிழ்க்கழகம் ஒன்றே தமிழகம் முழுமைக்கும் பொதுவாயிருந்து, குல மத வேறுபாடற்றுத் தமிழாக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, முதுநூலாராய்ச்சியும் புதுநூலாக்கமு மாகிய இருவகைத் தொண்டாற்றி, தொல்லாசிரியர் நல்லாணை வழியே எவ்வகையிலும் எள்ளளவும் தமிழ்மரபு கெடாது, தமிழை வளர்த்து வந்தது. தமிழகத்திலுள்ள பெரும்புலவர் எல்லாரும் அதில் சேர்ந்திருந்தனர். பரிசளிப்பு முறையில் பாண்டியர் அவரைப் போற்றி வந்தனர். ஆரியம் தமிழகத்து வேரூன்றும்வரையும், பாண்டியர் தொன்று தொட்டுக் கழகம் நிறுவித் தமிழை வளர்த்துவந்ததாகத் தெரிகின்றது. கடல்கோள்களால் நேர்ந்த இடவேறுபாட்டால் கழகம் மூன்றெனப்பட்டதே யன்றி, அதன் குலைவால் நேர்ந்த இடையீட்டாலன்று. மொழியும் இலக்கியமும் பற்றிய முழு அதிகாரமும் கழகத்திற்கே இருந்தது.

தற்காலமோ, அதிகாரமற்ற முறையில், தமிழை வளர்த்தற்கோ தளர்த்தற்கோ, 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'நெல்லைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'சென்னைத் தமிழ்ச்சங்கம்' என்றும், பிறவாறும், பற்பல சங்கங்கள் தோன்றி வெவ்வேறு கொள்கையுங் கோட்பாடுங் கொண்டு, ஒவ்வாத முறையில் பற்பல வினைகளும் வேலைகளும் செய்துவருகின்றன. இவை போதாவென்று இன்று 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும் ஒன்று தோன்றியுள்ளது. இவற்றின் தொழில்களை நோக்குங்கால், குல மத கட்சிச் சார்பான தமிழ்ச் சங்கங்களாய்த் தோன்று கின்றனவே யொழிய, எல்லார்க்கும் பொதுவான தமிழ்ச்சங்கங்களாய்த்

தோன்றவில்லை. அவை அங்ஙனமிருப்பின், ஒன்றாயிருக்கும்; அல்லது இணைக்கப்பட்டிருக்கும்.

இனி, அதிகார முறையில், அரசியலார் பாடப்புத்தகக் குழுவும், பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடக் குழுவும் உள்ளன. இவற்றால் ஒப்பம்பெறும் புத்தகங்கள் சிலவற்றில் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப்பிழை இருப்பினும் இருக்கும்.

இங்ஙனம், தமிழ்ப்புலவர் குழாங்கள் பல்வேறுபட்டுக் கிடப்பதாலும், தமிழ்ப்புலமையும் தமிழ்ப்பற்றும் இல்லாதாரும் பல தமிழ்ச்சங்க வுறுப்பினராயிருப்பதாலும், சில தமிழ்ப் பெரும்புலவர் ஒரு சங்கத்திலும் சேராதிருப்பதாலும், குற்றம்பட நூலியற்றுவாரைக் குட்டுதற்கும் வெட்டு தற்கும் ஒருவருமின்மையாலும்; வரிவடிவை மாற்றுவாரும், புணர்ச்சியைத் திரிப்பாரும், செய்யுள்களைக் களைவாரும், அயலெழுத்தையும் சொல்லை யும் புகுத்துவாரும், பாடவேறுபாடு செய்வாரும், தன்சொல்லை அயற் சொல்லாகக் காட்டுவாரும், முதனூலை வழிநூலாக்குவாரும், சொல்லுக்கும் செய்யுட்கும் ஒவ்வாத பொருள் கூறுவாருமாய்; 'பல்குழுவும் பாழ்செயும் உட்பகையும் கொல்குறும்பும்' தமிழுக்குத் தோன்றியுள்ளன. இங்ஙனம் ஆளாளுக்கோர் அம்பலம் பண்ணுவதால், தமிழை மரபுநெறி வழாது வளர்த்தற்கில்லை. சில தான்றோன்றித் தம்பிரான்மார் தமக்குச் சற்று அரசியலதிகாரம் வாய்த்தவுடன், 'நாதையற்ற கோவிலுக்கு நான்தானடா பூசாரி' என்று சில குழுக்களைக் கூட்டிச் சில நிதிகளையும் திரட்டித் தமக்குப் பேரும் புகழும் வருவதையே பயனாகக்கொண்டு, பல தமிழ்த் தளர்ச்சி வேலைகளைச் செய்துவருகின்றனர்.

திருக்குறளைப் புறக்கணிப்பவரும் தமிழ்ப்புலவரைப் பழிப்பவரும் கூடத் தமிழ்த்தலைவராய்க் கிளர்ந்தெழுவது விந்தையினும் விந்தையே!

## இருவகை யதிகாரம்

அறிவதிகாரம்(Literary Authority), ஆட்சியதிகாரம்(Administrative Authority) என அதிகாரம் இருவகைத்து. இவற்றுள், அறிவதிகாரம் கல்வியால் தானாய் வருவது; நிலைத்தது: ஆட்சியதிகாரம் பிறர் அமர்த்தத்தால் அல்லது தேர்தலால் வருவது; நிலையற்றது. அறிவதிகாரி ஆட்சிவகையில் ஆட்சியதிகாரிக்கு எங்ஙனம் அடங்குதல் வேண்டுமோ, அங்ஙனமே ஆட்சியதிகாரியும் அறிவுவகையில் அறிவதிகாரிக்கு அடங்குதல்வேண்டும். இது என்றும் செல்லும் உலகப் பொதுவிதி. அறிவதிகாரிகளெல்லாம் ஆட்சியதிகாரிகளாக இருக்க முடியும்; ஆயின் ஆட்சியதிகாரிகளெல்லாம் அறிவதிகாரிகளாக இருக்க முடியாது.

## ஆங்கிலத் தமிழ்ச் செய்தித்தாளாசிரியர் ஏற்றத்தாழ்வு

மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலும் ஆங்கிலச் செய்தித்தாளாசிரிய ரெல்லாரும் சிறந்த இலக்கிய அறிஞர்; அல்லது குறைந்த பக்கம் நல்ல

மொழியறிஞர். தமிழ்ச் செய்தித்தாளாசிரியரோ பெரும்பாலும் இலக்கண விலக்கியப் பயிற்சியில்லாதவர்; புலவர் தேர்வு தேறாதவர். ஆயினும், புலவர்வழித் தாம் நிற்காது தம்வழிப் புலவர் நிற்க விரும்புகின்றனர்.

தூய தமிழ்ச்சொற்க ளிருப்பவும், அவற்றுக்குப் பதிலாகப் பிற சொற்களை யாண்டு கலவைநடையில் எழுதி வருவதே, தமிழ்ச் செய்தித் தாளாசிரியர் வழக்கமா யிருந்துவருகின்றது. இலக்கிய அறிவும் மொழிப் பற்றும் இல்லாதவர் தமிழுக்கு எங்ஙனம் அதிகாரிகளாக முடியும்?

## ஓரிரு புலவர்க்குத் தமிழெழுத்து மாற்ற அதிகாரமின்மை

**இனி, பெரும் பட்டமும் பெரும் பதவியும் பெருஞ் சம்பளமும் பெற்றிருத்தல் காரணமாக, இரண்டொரு புலவர் மட்டும் தமிழுக்கு முழு அதிகாரிகளாகிவிடார். கலியாணசுந்தரனார், பண்டிதமணியார், பாரதியார் முதலிய பெரும்புலவரையும் பிறமொழி யறிஞரையும் கேட்டே, தமிழ் எழுத்தில் மாற்றஞ்செய்தல் வேண்டும்.**

தமிழெழுத்து மாற்றும் முழுவதிகாரமும் தமக்குண்டென்று ஓரிரு புலவர் தருக்குவரேல், அவர் பல்கலைக்கழகத் தமிழகராதியில் தமிழ் வடமொழி வழித்தாகக் காட்டப்பட்டிருப்பதை ஒட்டியோ வெட்டியோ பேசித் தம் கருத்தை நாட்டித் தம் அதிகாரத்தைக் காட்டுக.

வினையின் இயல்பையும் பின்விளைவையும சிறிதும் கருதாது, ஒரு குழுவில் இடம் பெற்றதே போதுமென்று மகிழ்வது, புலமக்களும் பொது மக்களுமாகிய இருசார் தமிழர்க்கும் இக்காலத்தியல்பா யுள்ளது.

## தமிழெழுத்தின் சீர்மையும் பிறமொழி யெழுத்துகளின் குறைபாடும்

இதுபோது வழக்கிலுள்ள தமிழ் அரிவரியைப் பிறமொழி யரிவரிகளோடு ஒப்புநோக்கினால்தான், முன்னதின் சீர்மை விளங்கும்.

வடமொழி யரிவரியில், gh, bh; ங, ட; bh, m ஆகிய இவ் வீரெழுத்துகள் சிறிதே தம்முள் வேற்றுமையுடையன. kh என்னும் எழுத்தும் ஸ்வ என்னும் கூட்டெழுத்தும், ‘ரவ’ போலும் தோன்றும். முன்னும் பின்னும் கீழும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துகள் (சம்யுக்தாக்ஷரம்) 160-க்கு மேலுண்டு. இதனால் மிக நுணுக்கியும் வரிநெருக்கியும் எழுதமுடியாது. கூட்டெழுத்துகள் பலவற்றிற்குத் தனி அச்சுருக்கள் (types) வேண்டும். உயிர்மெய் வரிகள் (33 x 12) 462.

வடமொழி யரிவரியையே கொண்ட இந்தி யெழுத்துகளில் இக் குறைபாட்டோடு இடை கடை வரும் அகர வூமையெழுத்துகளும் (Silent Letters) உண்டு. உயிர்மெய் வரிகள் (33 x 12) 396.

தெலுங்கரிவரியில், ஒ, bh; ப, வ; ந, ஸ ஆகிய இவ்வீரெழுத்துகள் தம்முள் மிகச்சிறிதே வேறுபட்டு மயக்கத்திற்கிடமாவன. முன்னும் பின்னுங்

கீழும் சேர்த்தெழுதுங் கூட்டெழுத்துகள் இடத்தை அடைப்பன, மொ, மோ, யி, யீ, யொ, யோ, ஹொ, ஹோ ஆகிய உயிர்மெய்யெழுத்துகள் ஏனைய வற்றினும் வேறுபட்ட உயிர்க்குறி யுடையன. உயிர்மெய் வரிகள் (35 x 35) 455. இவையல்லாது, 'நகாரப்பொல்லு' என்னும் ஒரு தனி னகரமெய் வரியும், 'பண்டிர' அல்லது 'சகட்டிரேப்ப' என்னும் றகரமெய்யும், ஒரு மெய்க்கு அல்லது உயிர்மெய்க்குப்பின் எழுதி முன் பலுக்கப்பெறும் 'வெலப்பல கிலக' என்னும் ரகரவரியும் உள்ளன.

கன்னட அரிவரி தெலுங்கரிவரியைப் பின்பற்றியதாதலின், அதிலும் இத்தகைய குறைபாடுண்டு. கன்னட உயிர்மெய்வரிகள் (34 x 14) 476.

மலையாள அரிவரியில், (குற்றியலுகர) லு, ஞ என்னும் ஈரெழுத்தும் kh, ch, p, v ஆகிய நாலெழுத்தும், மயக்கத்திற்கிடமாவன. கு, கூ என்னும் ஈரெழுத்தும் நுணுக்கெழுத்தில் கூர்ங்கண்ணருக்கன்றி வேறுபாடு தெரியா. உகர ஊகாரமேற்ற உயிர்மெய்கள் ஓரியல் (uniform) வடிவு கொண்டன வல்ல. முன்னும் பின்னும் கீழும் மேலும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துகள் 300-க்கு மேற்பட்டன. இவற்றுட் சிலவற்றுக்கேனும் தனி அச்சுருக்கள் வேண்டும். ch, b, y, v ஆகிய நாலெழுத்தும் இரட்டிக்கும் கூட்டெழுத்து களில் கீழெழுத்து ஒன்றாகவே இருக்கும். உயிர்மெய் வரிகள் (36 x 16) 576.

தமிழிலோ ஒவ்வோர் எழுத்தும் எளிதாய் வேறுபடுத்தறியக்கூடிய தனி வடிவுள்ளது. மெய்கள் பதினெட்டே. இதனாலும், கூட்டெழுத்தின்மை யாலும் தமிழெழுத்துத் தொகை பிற இந்திய மொழியெழுத்துத் தொகை யினும் எத்துணையோ குறைகின்றது. உயிர்மெய்வரிகள் (18 x 12) 216. ஆய்தம் ஒன்று. ஆக, தமிழெழுத்துகள் மொத்தம் 247தாம்.

சில உயிர்மெய்வரிகள் தமிழில் ஓரியல் வடிவு கொண்டனவல்ல வெனின், இக் குறைபாடு தெலுங்கு கன்னட மலையாளத்திலும் உள்ளதே! அதற்கென் செய்வது?

உருதுவிற்குரிய பாரசீக-அரபி யரிவரியில் உயிர்மெய் வரிகள் இல்லாவிடினும், பலவெழுத்துகள் ஒரே வடிவுகொண்டு மேற்கீழ்ப் புள்ளித்தொகை வேறுபாட்டாலேயே வேறுபடுக்கப்படுகின்றன. பெரும் பாலும், ஒவ்வோரெழுத்திற்கும் சொல்லின் முதலிடை கடைக்குரிய மூவேறு வடிவுண்டு. யகரவரி இகரத்தையும், வகரவரி உகரத்தையும் குறிக்கின்றன.

நுணுக்கியும் நெருக்கியும் அழகாகவும் தெளிவாகவும் மணிபோல் எழுதப்பெறும் எழுத்துகளுள் தலைமையானது ரோம (Roman) எழுத்து. அதற்கடுத்தது தமிழே. தமிழ் எழுத்து வடிவை மாற்றினால், பல இன்னலும் அழகிழப்பும் நேரும்.

பிறமொழி யெழுத்துகளில் எத்துணையோ குறைபாடிருக்கும்போது, அவற்றையெல்லாம் கவனிக்காமல் தமிழெழுத்தை மட்டும் மாற்றுவது எற்றுக்கு? மேலும், ஒரு அல்லது சில செய்தித்தாளில் எழுத்தை மாற்ற

விரும்பின், அதுபற்றிப் பாடப்புத்தகங்களிலும் இலக்கியத்திலும் ஏன் மாற்றவேண்டும்? ஏற்கெனவே தமிழெழுத்துப் பலமுறை தகுந்த முறையில் சீர்திருத்தப் பெற்றே இற்றை வடிவெய்தியுள்ளதென்பதை, தமிழ் எழுத்து மாற்றக் கோட்பாட்டினர் அறிவாரா? அவர் விரும்புவது சீர்திருத்தமா? அல்லது (சீர்கேடான) மாற்றமா?

## தமிழெழுத்தில் செய்யவேண்டிய திருத்தம்

தமிழெழுத்தில் இப்போது செய்யவேண்டிய திருத்தம் இரண்டே. ஒன்று 'ஈ'யை நீக்கி '   ' யை வைத்துக்கொள்வது; இன்னொன்று ஔகார உயிரிலும் அதனையேற்ற உயிர்மெய்களிலும் 'ள' வரியைச் சற்றுச் சிறிதாக்குவது. '   ' வரிதான் முதலாவது இருந்தது. பின்பு இடைக்காலத்தில் அது விலக்கப்பட்டுக் கிரந்த வரியாகிய 'ஈ' புகுத்தப்பட்டது. ஔகார வரியிலுள்ள 'ள' வரியும் 'ஊ' வரியிற்போல் முதலாவது சிறிதாகவே யிருந்து பிற்காலத்தில் தவறாகப் பெரிதாக எழுதப்பட்டது.

## தமிழ்ப்புலவர் செய்த தவறு

இந் நூற்றாண்டில் எழுத்துப்பற்றித் தமிழுக்கு இருவகையில் ஊறு நேர்ந்தபோது தமிழ்ப்புலவர் தடுத்திலர். ஒரு மொழியில் பல கருத்துகட்கும் சொல்லிருக்கும்போது, அவற்றுக்குப் பதிலாகப் பிறமொழிச் சொற்களை யும், எழுத்துகளையும் வேண்டாது புகுத்துவது, ஒரு மொழியைக் கெடுக்கும் வழியாகும்.

தமிழில் ஒரே யுயிர்கொண்ட உயிர்மெய் வரிகளெல்லாம் ஓரியல் வடிவுகொண்டிருத்தல் வேண்டுமென்பது திருந்திய கருத்தன்று. எடுத்துக் காட்டாக ஐகார உயிர்மெய்களை எடுத்துக்கொள்ளின், அவை ஓரியல் வடிவுகொண்டிராமைக்குத் தகுந்த காரணமுண்டு. '   ' என்பதற்குப் பதிலாக 'னை' என்று எழுதின், கூட்டெழுத்தாயெழுதுங் கையெழுத்தில் அது இரு னகரம்போல் தோன்றும். இம் மயக்கத்தை நீக்குதற்கே, ஐகார வுயிர்க்குறி, பல சுழிகளும் வளைவுகளுங் கொண்ட எழுத்துகட்கெல்லாம் மேலிடப் பெற்றுள்ளது. இங்ஙனமே ஆய்ந்து நோக்கின், ஓரியல் வடிவு பெறாத பிற உயிர்மெய் வரிகட்கும் காரணம் தோன்றும். அச்சுவடிவு ஒன்றையே கவனித்துக் கையெழுத்து வடிவை நோக்காதவர்க்கே, தமிழ் உயிர்மெய் வரிகள் ஒழுங்கில்லாதனவாகத் தோன்றலாம். கையெழுத்தும் முக்கியம்; ஆங்கிலத்தில் அதனையும் அச்சு வடிவில் அமைத்திருக் கின்றனர்.

'ெ' என்னும் பழைய ஐகார வுயிர்மெய்க் குறியை 'ை' என்று இணைத்தும், கு ஙு சு ஞு டு ணு முதலிய உயிர்மெய் வரிகளை ஒரே முறையில் வரையும் ஒற்றைக் குறியாகவும் எழுதுவதெல்லாம் எளிமையும் தெளிவும் மட்டுமன்று, காலச் சிக்கனமும் பற்றியதாகும். ஆதலால், எவ்வகையிலும் (மேற்காட்டிய இரு வரிகளையன்றி) மாற்றம் செய்யத்

தேவையில்லை. புதிய எழுத்துமாற்றம் செய்தித்தாள்கட்கு இன்றியமையாத தாயின், அவைமட்டும் அதை ஆளட்டும். ஏனையர்க்கு வேண்டா.

## இன்று செய்ய வேண்டியது

புதிய எழுத்து மாற்றம் புகுத்தப்படின், பல்கலைக்கழகப் பாடப் புத்தகக் குழுவையும், தனிப்பட்டவர்க்கும் பொதுமக்கட்குமுரிய எல்லா நூல்நிலையங்களையும், தமிழ்நூல் வெளியீட்டாளரையும், தமிழ்ச் சங்கங் களையும், பலவகை ஆவணங்களையும், மாணவரையும், தாக்கிப் பல இடர்ப்பாட்டை விளைவிக்கும். ஆதலால், இதைப் புகுத்தாதவாறு அரசிய லாரை வேண்டிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழர் புதிய எழுத்துமாற்றத்தை ஒப்புக்கொள்ள வில்லை யென்றும், பழைய எழுத்தையே கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ள னர் என்றும் சொல்லப்படுகின்றது. தமிழ்ச்சொற்களைப் போன்றே தமிழ் எழுத்தையும் தூய்மையாகப் பேணத் துணிந்த யாழ்ப்பாணம் தழைத் தோங்க!

**– "செந்தமிழ்ச் செல்வி" நவம்பர் 1951**

15

# தமிழ் நெடுங்கணக்கு

**(கவனிப்பு:** நான் கடந்த அரை நூற்றாண்டாகச் செய்து வந்த சொல்லாராய்ச்சி மொழியாராய்ச்சியின் பயனாகக் கண்ட உண்மைகளையும் கொண்ட முடிபுகளையும், நூலாக உருவாக்குமுன் பல கட்டுரைத் தொடர்களாக வெளியிடக் கருதிச் 'செந்தமிழ்ச் செல்வி'க்கு விடுத்து வந்தேன். அவற்றுள் இறுதியாக வெளிவந்த தொடர், "தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்" என்பது. அது ஐம்பது கட்டுரை கொண்டது. அவற்றுள் பதினான்கு மட்டும் வெளிவந்துள்ளன.

இன்று திடுமென எதிர்பாராத ஒரு நிலைமை நேர்ந்து, 'ஐ ஔ' 'அய் அவ்' தானா? என்றும், தமிழுக்கு எழுத்து மாற்றம் இன்றியமையாததா வென்றும், பலர் நேரிலும் எழுத்து வாயிலாகவும் மேன்மேலும் வினவி வருவதால், அவரனைவர்க்கும் விடையிறுக்கு முகமாக, (1) தமிழ் நெடுங்கணக்கு, (2) 'ஐ ஔ' 'அய் அவ்' தானா? (3) எகர ஒகர இயற்கை, (4) உயிர்மெய்க் குறிகளின் ஓரியலின்மை, (5) அறியாமை யகற்றல். (6) பகுத்தறிவின் பயன் என்னும் அறு தலைப்புக் கட்டுரைகளை இன்று ஒவ்வொன்றாகச் செல்வியில் வெளியிடத் துணிந்தேன்.

தமிழ்நா டெங்கணுமுள்ள புலவர் கல்லூரி ஆசிரியரும் மாணவரும் ஊன்றிக் கவனிக்க.

தமிழ்ப் பற்றாளர் ஆயிரக் கணக்காக அச்சிட்டுப் படிக்கத் தெரிந்த தமிழர் அனைவர்க்கும் ஆங்காங்கு வழங்குக.

'செந்தமிழ்ச் செல்வி' வாங்காத கல்வி நிலையங்களிலும் நூலகங்களிலும், ஆண்டுக் கையொப்பங் கட்டி ஒரு படியேனும் ஒழுங்காக வருவிக்குமாறு, பொறுப்புள்ள தமிழ்ப் புலவரும் தமிழ்ப் பற்றாளரும் முயற்சி மேற்கொள்க.)

தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழி. இவ் வுண்மையை முன்னமே ஒரு பழம்பெரும் புலவர் கண்டு,

**"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்"**

என்று தெள்ளத் தெளிவாகப் பாடிவைத்திருக்கின்றார். இது உண்மை நவிற்சியே யன்றி உயர்வு நவிற்சியன்று.

குமரிமுனைக்குத் தெற்கே மடகாசுக்கர்த் தீவுவரை பரவியிருந்த பழம்பாண்டி நாடான குமரிக்கண்டம் முழுதும் மூவேறு கடல்கோள்களால் முழுகிப் போனமையாலும், முதலிரு கழகப் பல்துறையிலக்கிய விலக்கணப் புலவிய மனைத்தும் இயற்கையாலுஞ் செயற்கையாலும் அழியுண்டமை யாலும், தமிழின் தொன்மையை ஆழ்ந்த மொழியாராய்ச்சியின்றி அறிய வியலாவாறு, மொழியொழிந்த பிற சான்றுகளெல்லாம் முற்றும் இறந்து பட்டன என்பதை, இற்றைத் தமிழ்ப் புலவர் முதற்கண் அறிதல் வேண்டும். ஆகவே, தொல்பொருட் கலை (Archaeology), ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழந்தமிழக வரலாற்றிற்குப் பயன்படா தென்பதைத் தமிழ்நாட்டு வரலாற்றுத் துறைத் தலைவரும் கல்வெட்டுத் துறைத் தலைவரும் தொல் பொருளாராய்ச்சித் துறைத் தலைவரும் அறிதல் வேண்டும்.

தமிழ் தென்னாட்டு மொழியா நண்ணிலக் கடற்கரை மொழியா என்றும், குமரிநில மொழியா இற்றைநில மொழியா என்றும், திரவிட மொழிகட்குத் தாயா உடன்பிறப்பா என்றும், ஆரிய மொழிக் குடும்பத்திற்கு மூலமாக வுள்ளதா இல்லதா என்றும், தமிழன் பிறந்தகமும் மாந்தன் பிறந்தகமும் ஒன்றா வேறா என்றும், மொழி நூல் வரலாறு மாந்தனூல் ஆகிய முத்துறையிலும், நடுநிலையுடனும் பொறுமையுடனும் நீண்டகால ஆராய்ச்சி செய்தாலன்றி, தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமை முதலிய தன்மைகளை முற்றும் அறியமுடியாது.

தொல்காப்பியம், முதலிரு கழகமும் இருந்த பழம் பாண்டிநாடு முழுதும் முழுகிய பின்பும், ஆரியப் பூசாரியர் தென்னாடு வந்து ஆரியச் சொற்களும் கருத்துகளும் தமிழிலக்கியத்திற் புகத் தொடங்கிய பின்பும், வைகை மதுரையும் கடைக்கழகமும் தோன்றுமுன் கி.மு. 7ஆம் நூற்றாண்டில், பாண்டியன் வயப்பட்ட தென் சேரநாட்டில் தோன்றிய பன்மாண் சார்பிற் சார்பான தொகுப்பு நூலாதலின், அதனையே முதனூலாகக் கொண்டு அது தோன்றிய காலமே தமிழிலக்கியப் பொற்காலமென்று கூறுவது, ஒரு பெருங்கோவிலின் திருவுண்ணாழிகையையும் இடை மண்டபத்தையும் முகமண்டபத்தையும் பாராது, கொடிக்கம்பத்தடியிலுள்ள சிற்றுருவத்தையே கோயிற்படிமையாகக் கருதித் தொழுவது போன்றதே.

**"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"**

என்று பனம்பாரனார் கூறியதும்;

**"எழுத்தெனப் படுப................முப்பஃ தென்ப"**

என்று எழுத்ததிகாரத் தொடக்கத்திலும்,

**''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே''**

என்று சொல்லதிகாரத் தொடக்கத்திலும்,

**''கைக்கிளை முதலா............எழுதிணை யென்ப''**

**''அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்**
**................**
**திறப்படக் கிளப்பின்''**

**''நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.''**

**''மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்''**

என்று முறையே பொருளதிகார அகத்திணையியல் புறத்திணையியல் செய்யுளியல் மரபியல் தொடக்கத்திலும், கூறியதோடு, நூல் நெடுகலும் “என்மனார் புலவர்”, “என மொழிப”, “வரையார்”, “என்ப உணருமோரே”, “என்ப சிறந்திசி னோரே”, “என்மனார் புலமை யோரே”, “எனமொழிப உணர்ந்திசி னோரே'', ''கிளப்ப'', ''என்றிசி னோரே'' என்றும் பிறவாறும் அடிக்கடி இடையிடை தொல்காப்பியர் கூறிச் செல்வதும்; தொல்காப்பியம் தொகுப்பு நூலேயன்றிப் புதிய வகுப்பு நூலன்று என்பதைத் தெளிவாகக் காட்டும்.

மேலும், தொல்காப்பியம் நன்னூலும் அஷ்டாத்யாயீ என்னும் பாணினீயமும் போல எழுத்துஞ் சொல்லும் மட்டுங் கூறாது, தமிழுக்கே சிறப்பாகவுள்ள யாப்பணி யுட்கொண்ட தொல்வரவுப் பொருளிலக்கணமுங் கூறுதலின், அதனாலும் அது தொல்காப்பியர் புதுப்படைப்பன்றென்பது வெள்ளிடை மலையாம். வடசொற் கலப்பும் சில ஆரியக் கொள்கைகளும் பற்றிய கூற்றுகளே தொல்காப்பியரின் புதுச் சேர்க்கையாகும். இதை யறியாத சில தமிழாசிரியர், தொல்காப்பியர் தாமே தமிழ் எழுத்திலக்கணத்தைத் திறம்பட வகுத்துக் கூறியதாக அவரைப் போற்றியுரைத்துத் தம் ஆராய்ச்சி யின்மையைப் புலப்படுத்துவர்.

பொருளிலக்கண மரபு குமரிநிலைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கைச் செய்திகளைப் போற்றிக் காத்துவருவதால், அவ் வகையிலேயே தொல்காப்பியம் பழந்தமிழ் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுவதாகின்றது. இங்ஙனமே, புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய சில பாத்தொகைகளிலும் வனப்பு களிலும் இலக்கண நூல்களிலும் உள்ள குறிப்புகளும் பயன்படுகின்றன.

ஆராய்ச்சி யென்பது எல்லாருஞ் செய்யக்கூடிய எளிசெயலன்று. மதிநுட்பம், பரந்தகல்வி, நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறி யவா என்னும் ஆறும் ஆராய்ச்சியாளர்க்கு இன்றியமையாத பண்புகளாகும்.

உலகத்திலுள்ள மூவாயிரம் போன்ற மொழிகளுள், தமிழைப் போன்று அடிமுதல் முடிவரை தருக்கப் பொருளாக விருப்பது வேறொன்றுமில்லை. பண்டை ஆரியப் பூசாரியர், தம் போன்றே தம் வழியினரும் காலமெல்லாம் தமிழரை அடிப்படுத்தி மேனத்தாக வாழ்தற் பொருட்டு, தம்மை நிலத் தேவரென்றும் தமிழ்வழிப்பட்ட தம் இலக்கிய மொழியைத் தேவமொழி யென்றும் கூறி மூவேந்தரையும் ஏமாற்றித் தமிழரே தம் இனத்தைப் பகைக்கவும் தம் மொழியைப் புறக்கணிக்கவும் குமுகாயத் துறையிலும் இலக்கியத் துறையிலும் வழிவகுத்து வைத்திருக்கின்றனர். காலப்போக்கில் பிராமணர் இதன் புரைமை கண்டு திருந்த நேரினும், காட்டிக் கொடுக்குந் தன்னலக்காரரான வையாபுரிகள் அதைத் தடுப்பதிற் கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகின்றனர். எல்லா நாட்டிலும் காட்டிக் கொடுப்பார் இருக்கவே யிருக்கின்றனர். ஆயினும், வெற்றித் தொகையினர் தமிழ்நாட்டிலேயே உள்ளனர்.

ஓர் எழுத்தைக் குறித்தால் ஒலியிலும் வரியிலும் அது வடவெழுத்து; ஒரு சொல்லைச் சொன்னால் அது வடசொல்; ஒரு மண்டிலத்தை யாத்தால் அது வடமொழி யாப்பு (விருத்தம்); ஒரு நூலைப் போற்றினால் அது வடநூலின் வழிநூல்; ஒரு புலவரைப் பாராட்டினால் அவர் பிராமணருக்குப் பிறந்தவர்; ஒரு தெய்வத்தைத் தமிழ்த்தெய்வ மென்றால் அது ஆரியத் தெய்வம்; ஒருவன் தன் முன்னோர் தெய்வத்தை வழிபடச் சென்றால், அவன் எட்டத்தில் நிற்க இன்னொருவனே அவனுக்காக விளங்காத அயன் மொழியில் வழிபடவேண்டும்; ஒருவன் தன் தாய்நாட்டைத் தன்னா டென்றால், அவனும் பிறனைப்போல் வெளிநாட்டினின்று வந்தேறியே என்பது பல்கலைக்கழக வெளியீடு. இங்ஙனம் எதையெடுத்தாலும் தமிழனுக்கு உரிமையில்லாவாறு வரலாறு திரித்தெழுதப்பட்டுள்ளது.

கடந்த மூவாயிரம் ஆண்டாக அடிமைத்தனத்திற் பிறந்து வளர்ந்து வந்திருப்பதனால், அறிவாராய்ச்சியும் உரிமையுணர்ச்சியும் விடுதலைப் பேறும் மிக்க இவ் விருபதாம் நூற்றாண்டிலும், தமிழினத்தில் தலைமையான வகுப்பானும் அயலானைத் தன் இல்லத்தில் உண்பிக்கும் துப்புரவும் உயர்வும் தனக்கில்லையென்று நம்பித் தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டிருக்கின்றான். இவ் வேற்றத் தாழ்வு வெளிப்படையாகவும் தகுதி யுடையது போன்றும் இருப்பதால், தமிழை மீண்டும் அரியணை யேற்றும் தமிழாராய்ச்சியாளனுக்கு நெஞ்சுரத்தின் தேவை பன்மடங்கு மிகுகின்றது.

தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழியாயினும், ஆரியத்தாற் கட்டுப்பாடாகவும் வெற்றித் திறமாகவும் மறைக்கப்பட்டு வருவதனாலும், தமிழ் ஆசியாவின் தென்கோடியில் வழங்குவதனாலும், தமிழர் எல்லா வகையிலும் ஆரியத்திற்கு அடிமைப்பட்டிருப்பதனாலும், இதுவரை தமிழின் பெருமையைத் தமிழர் வெளியுலகத்திற்குப் போதிய அளவு எடுத்துக்காட்டாமையாலும், உட்பகைவரான வையாபுரிகளின் கையே

இன்றும் ஓங்கியிருப்பதனாலும், மேலையர் என்னும் ஐரோப்பியர் கீழை நாட்டு நாகரிகத்தை ஆரிய அடிப்படையிலேயே ஆய்ந்து வருவத னாலும், பண்டை எகிபதிய நாகரிகமும் சுமேரிய நாகரிகமும் அவருக்கு அண்மை நாடுகளில் தோன்றி வளர்ந்திருந்தமையாலும், அவ் விரு நாகரிகத்தையே உலக முதுநாகரிகமாகக் கொண்டு அவற்றை ஆராய் வதிலேயே பெருங் கவனத்தைச் செலுத்தி வந்திருக்கின்றனர்.

## பிறமொழி யெழுத்துகள்

எகிபதிய சுமேரிய நாகரிகத் தோற்றம் கி.மு. 3000 ஆண்டுகட்கு முற்பட்டது. எகிபதிய எழுத்து முதற்கண் படவெழுத்து (Pictograph); பின்னர்க் கருத்தெழுத்து (Ideograph or logograph).

சுமேரிய நாகரிக வழிப்பட்ட சேமிய வெழுத்து முதற்கண் அசை யெழுத்து (Syllabary கி.மு. 2000); பின்னர் ஒலியெழுத்து (Alphabet கி.மு. 1500).

கிரேக்கர் சேமிய ஒலியெழுத்தைப் பினீசிய (Phoenician) வணிகர் வாயிலாகக் கற்றுத் தமக்கேற்றவாறு திருத்திக்கொண்டதாகச் சொல்லப்படு கின்றது. கிரேக்க எழுத்தினின்று இலத்தீன் எழுத்தும், இலத்தீன் எழுத்தி னின்று ஆங்கிலம் முதலிய பிற ஐரோப்பிய மொழி யெழுத்துகளும் அமைந்துள்ளன.

கிரேக்க எழுத்துகள் அல்பா (Alpha), பேற்றா (Beta) என்று தொடங்குவதால், அவ் வண்ணமாலை 'அல்பாபேற்று' (Alphabet) எனப் பெயர் பெற்றது. இது தமிழில் உலக வழக்கில் 'அஅன்ன ஆவன்னா' (அ ஆ, அவ்வா) என்று வழங்குவது போன்றது.

**கிரேக்க வண்ணமாலை முதற்கண்,**

A (short and long) B, G, D, E (short), W, Z, E (long). TH. I (short and long), K,L,M,N,X,O (short), P,R,S, T,U (short and long), PH, KH. PS, O (long) என்னும் 25 எழுத்துகளைக் கொண்டிருந்தது. பின்னர்த் திகம்மா (Digamma) என்னும் W நீக்கப்பட்டுவிட்டது.

**இலத்தீன் வண்ணமாலை, முதற்கண்,**

a, b, c, d, e, f, g, h, i, k, l, m, n, o, p, q, r, s, t, u, x என்னும் 21 எழுத்துகளையே கொண்டிருந்தது. பின்னர் j, v, y, z என்னும் 4 எழுத்துகள் சேர்க்கப்பட்டன.

கிரேக்க எழுத்துகளுட் பலவற்றின் வடிவம் வேறு. அவற்றை இங்குக் காட்டலாகாமையால் ஆங்கில வடிவிற் குறிக்கப்பட்டுள்ளன.

சீன எழுத்து, கி.மு. 1000 ஆண்டுகட்கு முற்பட்டது. அது 4000 கருத் தெழுத்துகளைக் கொண்டது.

சப்பானியர் கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் சீனக் கருத் தெழுத்துகளைக் கடன் கொண்டனர். அவை ஐயாயிரமாகப் பெருகி ஈராயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சொற்களின் முதனிலைகளைக் குறிக்கக் கருத்தெழுத்துகளும், ஈறுகளைக் குறிக்க 'இரகன'(Hiragana), 'கற்றகன'(Katakana) என்னும் இருவகை அசையெழுத்துகளும் கையாளப் படுகின்றன வென்றும், இதனால் சப்பானிய மாணவன் 1500 சீனக் கருத் தெழுத்துகளையும் (ஏறத்தாழ 100) இருவகை அசையெழுத்துகளையும் கற்க வேண்டியுள்ள தென்றும், பாடுமேர் (Bodmer) கூறுகின்றார். (The Loom of Language, p. 438).

அரபி யிலக்கியம் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தொடங்கிற்று. அதன் எழுத்தும் அக் காலத்ததே. அது 28 எழுத்துகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்று அ (Fatha), இ (Kasra), உ (Damma) என்னும் முக்குறிற்கும் பொதுவான குறி. வகர வெழுத்து உகரத்தையும் யகரவெழுத்து இகரத்தையும் இடத்திற்கேற்ப உணர்த்தும். இருவேறு குறிகள் சேர்ந்து ஆ, ஈ, ஊ என்னும் நெடில்களைக் குறிக்கும். சில இணைப்பெழுத்துகளும் (Ligatures) உண்டு.

அரபிக்கு இனமான எபிரேய இலக்கியம் கி.மு. 12 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அது 22 எழுத்துகளைக் கொண்டது. உயிரொலிகளை யுணர்த்தும் முறையில் அது அரபியொத்ததே. அவ்விரு மொழிகளின் வண்ணமாலைகளும் வெவ்வேறு வடிவுகொண்டனவேனும், கிரேக்கத்தைப் போன்று கானானிய மூலப் பினீசிய வண்ணமாலையினின்று திரிந்தவையே.

## தமிழின் தொன்மை

கி.மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட ஊர் என்னும் பாபிலோனிய நகரகழ்வில், கி.மு. 3000 ஆண்டுகட்குமுன் சேரநாட்டினின்று ஏற்றுமதி செய்யப்பட்ட தேக்குமர உத்தரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஊர் என்பது நகர் என்று பொருள்படும் அக்கேடியச் (Akkadian) சொல். அதுவே பண்டைத் தமிழகத்தில் மருதநில நகரைக் குறித்த பொதுச்சொல்.

அப் பாபிலோனிய நகரிற் பிறந்து வளர்ந்த ஆபிரகாமின் பெயர், அப்பன் என்னும் தமிழ்ச்சொல்லின் சிதைவான ஆப் என்பதை நிலைச் சொல்லாகக் கொண்டது. அவனே அரபியர்க்கும் இசரவேலர்க்கும் பொதுவான முன்னோன். அவன் காலத்தில் அவ் வீரினத்தாரும் தோன்றவே யில்லை. ஆகவே, அரபியும் எபிரேயமுமான அவர் மொழிகளுந் தோன்ற வில்லை. ஆபிரகாம் பேசின மொழி அக்கேடியன்.

## தமிழர் தோற்றமும் பரவலும்

குமரிநாட்டு மக்கள் தமிழின் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு திசை சென்று பரவியுள்ளனர். தமிழின் முச்சுட்டுகளினின்று தோன்றிய மூவிடப் பெயர்கள் ஒரு காலத்தில் குமரிநாட்டு மக்களொடு ஆத்தி

ரேலியர்க்கும் சீனருக்கும் இருந்த உறவைக் காட்டுகின்றன. கால்டுவெல் திரவிட ஒப்பியல் இலக்கணம் (சென்னைப் பதிப்பு) 361 ஆம் பக்கம் பார்க்க.

எ-டு :

| தமிழ் | ஆத்திரேலியம் |
|---|---|
| ஏன், யான், நான் | nga, ngali, ngatsa, nganya |
| நீன், நீ | ninna, nginne, ngintoa, ningte |
| நீம், நீயிர், நீவிர், நீர் | nimedoo, nura, niwā, ngurle |

| தமிழ் | சீனம் |
|---|---|
| நான், நாம் | ngo wo; womēn |
| நீன் - நீ, நீம் | ni, nimēn |
| தான், தாம் | ta, tamēn |

நகரம் ஞகர மகரமாகவும், மகரம் வகரமாகவும், திரிதல் இயல்பே. தன்மைப் பன்மைப் பெயர் ஆங்கிலத்தில் `we' என்றும் வடமொழியில் வயம் என்றும் திரிந்திருத்தல் காண்க.

'மேன்' (mēn) என்பது சீனத்தில் வகுப்பைக் குறிக்கும் தொகுதிப் பெயர். அது மன் என்னும் தென்சொல்லோடு தொடர்புடையதாயிருக்கலாம்.

மன் - மன்று - மந்து - மந்தை. மன்னுதல் = கூடுதல், மிகுதல், பெருத்தல்.

ஐம்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் தோன்றுமுன் தான் தாம் என்பன படர்க்கைச் சுட்டுப் பெயர்களாகவே யிருந்தன.

பர். (Dr.) (N.) இலாகோவாரி (Lahovary) தம் 'திரவிடத் தோற்றமும் மேற்கும்' (Dravidian Origins and the West) என்னும் ஒப்பியன் மொழிநூலில், தமிழொடு தொடர்புள்ள மேலையாசிய மேலையைரோப்பிய இடப் பெயர்கள், பூதப் பெயர்கள், மக்கட் பெயர்கள், உறவுப் பெயர்கள், பல்வகை உயிரினப் பெயர்கள், நிலைமைப் பெயர்கள், பல்வேறு வினைச்சொற்கள், பெயரெச்சங்கள் முதலிய நூற்றுக்கணக்கான சொற்களின் மூலத்தை அறியாது, அவற்றைத் தம் கொள்கைக்குச் சான்றுபோல் எடுத்துக் காட்டி, உண்மையில் தம் கொள்கையைத் தாமே மறுத்திருக்கின்றார்.

எ-டு: மல்=வளம். மல்-மல்லல்=வளம். "மல்லல் வளனே" (தொல். உரி.7). மல்-மலை= இயற்கை வளம் மிக்கது. "வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே" (நன்.பாயி.28). இப் பொருளை மேலை மொழிகளிற் காண முடியாது, இங்ஙனமே ஏனையவும்.

``Compare Cymri (Wales). ``It is stated that the original home of the Cwmry, Cumri, or Cymry was in Southern Hindustan, the Southern extremity of which Cape Comorin, takes the name from the same root" - From a Historical Souvenir issued on the occasion of the meeting of the British Medical Association at Swansea, 1903-Editors."-

A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Third Edition, Introduction, p., foot-note

பேரா. V.R. இராமச்சந்திர தீட்சிதரின், Origin and Spread of the Tamils, Pre-Historic South India என்னும் வரலாற்று நூல்களைப் பார்க்க.

## தமிழன் பிறந்தகமே மாந்தன் பிறந்தகம்

“ஏதேன் தோட்டத்தை (மாந்தன் பிறந்தகத்தை) மடகாசுக்கர்த் தீவின் பாங்கர்க் காணவேண்டும்'' என்பது எக்கேல் (Ernest Haeckel) கூற்று- History of Creation.

கென்யாவிற் (Kenya) கண்டெடுக்கப்பட்ட மாந்தன் மண்டையோடு இதுவரை கண்டவற்றுள் மிகப் பழைமையானதா யிருக்கலாம் என்பது, இலீக்கி (Richard Leakey) என்னும் ஆங்கில மாந்தனூலாராய்ச்சியாளர் கருத்து.

மடகாசுக்கர் மட்டத்திற் சற்றுக் கிழக்கே தள்ளியிருந்ததே தமிழன் பிறந்தகம்.

**“பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு**
**தென்றிசை யாண்ட தென்னவன் வாழி.''** (சிலப். 11: 19-22)

## தமிழ் எழுத்துத் தோற்றக் காலம்

தலைக்கழகத் தோற்றம் கி.மு. 10,000 ஆண்டுகட்கு முந்தியது. அதற்குமுன் மூவதிகார இலக்கணமும் வகுக்கக் கால்நூற்றாண்டேனுஞ் சென்றிருத்தல் வேண்டும். இலக்கணத்திற்கு முன் பல்துறை இலக்கியம் தோன்ற அரை நூற்றாண்டு சென்றிருக்கும். அதற்குரிய எழுத்துத் தொகுதி அல்லது வண்ணமாலை, படவெழுத்து, கருத்தெழுத்து, அசையெழுத்து, ஒலியெழுத்து என்னும் நால்நிலை கடந்து திருந்திய நிலைபெறக் கால் நூற்றாண்டாயிருக்கும்.

இலக்கிய விலக்கணப் புலவியம் பனையேட்டில் எழுத்தாணி கொண்டு சுழித்துக் கீச்சி எழுதப்பட்டது. ஏட்டின் இடப்பக்கம் (அடிப்பக்கம்) அகன்றும் வலப்பக்கம் (நுனிப்பக்கம்) சிறுத்தும் இருப்பதனால், இடம் வலமாக எழுதப்பட்டது. பட்டவன் பீடு கல்லிலும், வேந்தன் பட்டயம் கல்லிலும் செம்பிலும், பொறிக்கப்பட்டன. ஏட்டெழுத்து வளைகோடும் வெட்டெழுத்து நேர்கோடும் மிக்கிருப்பதே இயற்கை.

உயிரும் மெய்யும் மட்டும் உள்ள வண்ணமாலை குறுங்கணக்கு என்றும், உயிர்மெய்யொடுங் கூடியது நெடுங்கணக்கு என்றும், பெயர் பெற்றன. பிறநாட்டு வண்ணமாலைகளெல்லாம் குறுங்கணக்கே. அதோடு உயிர், மெய், உயிர்மெய்; குறில், நெடில்; வலி, மெலி, இடை, என்னும்

வரிசையொழுங்கும் பிறப்பியல் முறையும் இல்லாது ஒன்றோடொன்று கலந்திருப்பன. உலகில் முதன்முதல் உயிர்மெய்யோடு கூடியதும்,

**"எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை**
**முதலீ றிடைநிலை போலியென் னகமும்**
**கிளவி புணர்ச்சி யெனுமிரு புறமும்"**

ஆகப் பன்னிருவகையில் இலக்கணங் கொண்டதுமாகத் தோன்றியது தமிழ் நெடுங்கணக்கே.

இனி, 'அலெக், பேத்' என்றோ, 'அல்பா, பேற்றா' என்றோ, 'ஏ, பீ' என்றோ சொல்லாது, குறிலுக்கு **அன்ன** என்னுஞ் சாரியையும் நெடிலுக்கு **அன்னா** என்னுஞ் சாரியையும் கொடுத்து, 'அ அன்ன, ஆ அன்னா' என்று ஒலியியல் முறையிலேயே தமிழர் தம் சிறுவர்க்குத் தொன்றுதொட்டுப் பயிற்றி வந்ததும் சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

## வடமொழி திரவிட வண்ணமாலைகள்

கிரேக்கத்திற்கும் பழம் பாரசீகத்திற்கும் நெருங்கிய ஒரு மொழியைப் பேசிய வகுப்பார், எழுத்தும் எழுதப்பட்ட இலக்கியமுமின்றி, கன்றுகாலி மேய்க்கும் முல்லை நாகரிக நிலையில் கி.மு. 2000 ஆண்டுகட்குப் பின் சிறுசிறு கூட்டமாக வடஇந்தியா புகுந்து சிந்துவெளியில் தங்கித் தம் சிறு தெய்வ வழுத்துகளை எழுதாக் கிளவியாகக் கொண்டிருந்து, தமிழரின் தலைமையான நாகரிகத்தைக் கண்டபின், அவர் மதங்களாகிய சிவனியத்தை யும் மாலியத்தையும் தழுவி, தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி வடமொழி வண்ணமாலையை அமைத்துத் தமிழிலக்கியத்தைத் தொடர்ந்து மொழி பெயர்க்கவும் தம் மேம்பாட்டை நாட்டுதற் கேற்றவாறு தொன்மங் (புராணங்) களைப் புனையவும் தலைப்பட்டனர்.

பிற்காலத்தில், வடமொழி வண்ணமாலையைப் பின்பற்றிப் பல திரவிட இனத்தாரும் தத்தமக் கேற்றவாறு வண்ணமாலை வகுத்துக் கொண்டனர்.

## வடமொழி வண்ணமாலையின் பின்மை

1. வடமொழி காலத்தால் தமிழுக்குப் பல்லாயிரம் ஆண்டு பிந்தியது. தமிழ் திரிந்து திரவிடமாகித் திரவிடம் ஆரியமாக மாறியபின், அதன் ஒரு பகுதி வடஇந்தியப் பிராகிருதத்துடன் கலந்து வேதமொழியாயிற்று. அவ் வேதமொழி தமிழுடன் கலந்து சமற்கிருதந் தோன்றிற்று.

2. கிரேக்கத்தில் Th, Ph, Kh என்ற மூவெழுத்துகளே மூச்சொலியுடன் கூடியவை. சமற்கிருதத்தில் க ச ட த ப ஆகிய ஐந்து வல்லெழுத்துகளும் மூச்சொலியுடனும் எடுப்பொலியுடனும் சேர்த்து, வலிப்பொலி, உரப்பொலி, எடுப்பொலி, கனைப்பொலி என நந்நான்காக வகுக்கப்பட்டுள்ளன.

3. ஆ, ஈ, ஊ (அ,இ,உ) ஆகிய மூன்றும் தமிழில் முதன்முதல் தோன்றிய சுட்டெழுத்துகள்.

ஆரியச் சுட்டுச் சொற்கட்கெல்லாம் மூலம் தமிழ்ச் சுட்டெழுத்துகளே. கால்டுவெல் திரவிட ஒப்பியலிலக்கணம் (சென்னைப் பதிப்பு) 421 மற்றும் 422ஆம் பக்கம் பார்க்க.

4. 'ரு', 'லு' என்பவை உயிரெழுத்துகளல்ல; குற்றியலுகரத்தொடு கூடிய ரகர லகர மெய்கள்.

5. கிரேக்கத்தில் க்ஸ் (ks, x) என்றுள்ள இணைமெய் வடமொழியில் க்ஷ் (க்ஷ, ksh) என்று வளர்ச்சியடைந்துள்ளது.

6. தமிழ் ஆய்தமே வடமொழி விஸர்க்கம்.

7. வண்ணமாலை வரிசையமைப்பிலும் உயிர்மெய் யமைப்பிலும், வடமொழி முற்றும் தமிழைப் பின்பற்றியதே.

8. அம், அ: என்று இறுதியிற் சேர்த்திருக்கும் இரண்டும் தனிக்குறிலை யடுத்த மெய்யான அசைகளே யன்றித் தனி யெழுத்துகளாகா; ஒருபோதும் தனி உயிர்களாகா.

## தி. நா. சுப்பிரமணியன் தவறு

திரு. தி. நா. சுப்பிரமணியனார் தமிழின் தொன்மை முன்மைகளை அறியாது, கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் வடநாட்டினின்று வந்து தமிழகத்தில் தங்கிய சமண புத்தக் குகைவாணர், வேலையின்றி வெட்டி வைத்த பிராமிக் கல்வெட்டெழுத்துகளையும் பிற்காலக் கல்வெட்டுகளையும் துணைக் கொண்டு, நரி தன் வாலால் கடலாழத்தைக் கண்டதுபோல, பண்டைத் தமிழ் எழுத்துகளைப் பற்றி வரைந்து 1938ஆம் ஆண்டில் வெளியிட்டிருப்பது உண்மைக்கு முற்றும் மாறாகும்.

ஆரியர்க்கு முற்றும் அடிமையாய்ப் போன முதுகுடுமிப் பெருவழுதி காலத்திலிருந்து, தமிழ் எழுத்திலும் இலக்கியத்திலும் தமிழர் வாழ்க்கை வழிபாட்டு முறைகளிலும், பல தவறுகளும் தாறுமாறுகளும் நேர்ந்துள்ளன. தமிழ்க்காப்புத் தமிழர் கையினின்றும் நழுவிவிட்டது. வடசொற்களும் சொற்றொடர்களும் வடவெழுத்துகளும் கல்வெட்டிற் கலந்ததொடு, வடமொழிக் கல்வெட்டுகளும் படிப்படியாய்த் தோன்றியுள்ளன. இரண்டோரிடத்தில் வடமொழிக் கல்வெட்டே தோன்றியுள்ளது.

கிறித்துவிற்கு முற்பட்ட அல்லது கிறித்தவ ஊழித் தொடக்கத்தில் எழுதப்பட்ட ஏட்டுச்சுவடி ஒன்றும் இன்று இன்மையால், கல்வெட்டெழுத்தைக் கொண்டு பண்டைத் தமிழெழுத்தைக் கணித்தறிய முடியாது.

யாப்பருங்கல விருத்தியில் கூறப்பட்ட உருவெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மை யெழுத்து என்னும் நான்கையும், திரு. தி. நா. சுப்பிர மணியனார் பிறழ வுணர்ந்திருக்கின்றார்.

தி. நா. சு. வின் பண்டைத் தமிழெழுத்துகளை நம்பி, தமிழறியாத சிலர் எழுத்துச் சீர்திருத்தம் என்று எழுத்துச் சீர்கேடான வரிவடிவுகளை வெளியிட்டிருப்பது, எள்ளி நகையாடத் தக்கது. 'l' என்னும் ஒற்றை நேர் கோட்டினின்று திடுமென்று முச்சுழி 'ண' தோன்றியதென்றும், ஆய்த முப் புள்ளியினின்று 'இ' தோன்றிய தென்றும் காட்டியிருப்பதை நம்புவார், கடுகளவும் பகுத்தறி வுள்ளவராகார்.

## வரலாற்றின் மாறாத்தன்மை

மக்கள் விரும்பின், மறைநூல்களையும் மாற்றலாம். ஆயின், உண்மையான வரலாற்றை எல்லாம் வல்ல இறைவனும் மாற்ற முடியாது. மாற்றின், மெய்யனான இறைவன் பொய்யனாகித் தன் இறைமையை முற்றும் இழந்துவிடுவான்.

**– "செந்தமிழ்ச் செல்வி" சனவரி 1979**

## 16

# 'ஐ ஔ' 'அய் அவ்' தானா?

'ஐ ஔ' வரிவடிவுகள் முன்போன்றே யிருக்கலாமென்று திருவள்ளுவர் விழா முடிப்புரையில், தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரனார் என்னும் அழகமதியர் குடியரசு முறைக்கேற்ப முடிபு கூறியது, தமிழுலகம் அனைத்தும் மகிழ்ச்சியொடும் நன்றியறி வொடும் பாராட்டத் தக்கதாகும். இனி அதுபற்றிக் கவல எள்ளளவும் இடமில்லை.

ஆயின், தமிழ் உலகமுதல் உயர்தனிச் செம்மொழியென்று, கால் நூற்றாண்டாகச் சொல்லியும் எழுதியும் விளக்கியும் வரினும், தமிழின் தொன்மை முன்மைகளைப் புலவர் சிலர் இன்னும் அறியாது, பேரனே பாட்டனுக்குமுன் பிறந்தான் என்பது போன்று, வடமொழியினின்றே தமிழுக்கு ஐகார ஔகாரங்கள் வந்தன என்று சொல்வதனாலும், அதுகண்டு மாணவர் பலர் மயங்குவதனாலும், அம் மயக்கறுக்கவே இதனையும் இனிவரும் நாற்கட்டுரைகளையும் விடாது எழுதத் துணிந்தேன்.

திரவிட ஒப்பியல் இலக்கணம் ஆய்ந்தெழுதிய கால்டுவெலாரே, தமிழ் நெடுங்கணக்கு வடமொழியைப் பின்பற்றியதென்று கூறியிருக் கின்றாரே யென்று, சிலர் வினவலாம். அவர் தமிழாய்ந்த கால நிலைமை களை நோக்கினால், அவர் அங்ஙனங் கூறியதற்குக் காரணம் தெளிவாகப் புலனாகும்.

அந் நிலைமைகளாவன:

1. தொல்காப்பியமும் பதினெண் மேற்கணக்கும் சிலப்பதிகாரமும் தமிழ்ப் புலவர்க்குந் தெரியாது மறைந்து கிடந்தமை.
2. மறைமலையடிகள் போன்ற வழிகாட்டி எவருமின்றி அவர் தன்னந் தனிமையாகத் தமிழாய்ந்தமை.
3. அரசியல் துறையிலோ, குமுகாயத் துறையிலோ, இலக்கியத் துறையிலோ, மொழித் துறையிலோ, தமிழரிடை இன்றிருக்கும் விழிப்பு அக்காலத் தில்லாதிருந்தமை.
4. எல்லா வகையிலும் தமிழர் ஆரியர்க்கு முற்றும் அடிமைப் பட்டிருந்தமையும், தென்சொற்கு வடசொன் மூலங்காட்டுவதிற் பெருமை கொண்டமையும்.

5. பிராமணர் நிலத்தேவரென்றும், வடமொழி தேவமொழியென்றும் தமிழ்ப் பொதுமக்களால் நம்பப்பட்டமை.
6. மாக்கசுமுல்லர் கூட்டம் சமற்கிருதமே ஆரிய மூலமொழி யென்றும், அனைத்துலகத் தாய்மொழியென்றும், கொட்டமடித்துக் கொண்டிருந்தமை.
7. கால்டுவெலார் குமரிநாட்டுண்மை யறியாது, கொற்கையே தமிழ் நாகரிகத் தோற்றகம் என்று கொண்டமை.
8. அவர் ஏதேன் தோட்டக் கதையை எழுத்துப்படி உண்மை யென்றும், தமிழரின் முன்னோர் மேனாட்டினின்று வந்தவ ரென்றும், நம்பியமை.

அரை நூற்றாண்டு தமிழ்நாட்டு நடுவில் வாழ்ந்து தமிழ் பேசித் தமிழாய்ந்த பின்பும், தமிழில் அண்ணன் தம்பி அக்கை தங்கையென்று மூத்தவரையும் இளையவரையுந்தான் குறிக்கச் சொல்லுண்டென்றும், brother, sister என்பதுபோல உடன்பிறந்தாரைக் குறிக்கும் பொதுச்சொல் இல்லை யென்றும், அவர் கூறியிருப்பதை நோக்கும்போது, தமிழ் நெடுங்கணக்கைப் பற்றிய அவர் தவற்றுக் கூற்று தானாக வலியிழத்தலைக் காண்க.

உடன்பிறந்தான் உடன்பிறந்தாள் என்னும் உலக வழக்கும்,

**''உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா''** (மூதுரை. 20)

என்னும் இலக்கிய வழக்கும், அவர்க்குத் தெரியாமற்போனது மருட்கை விளைப்பதே.

சிலப்பதிகாரக் காடுகாண் காதையில் ''அடியிற் றன்னளவு..... தென்னவன் வாழி'' (17-22) என்னும் பகுதிக்கு வரைந்த உரையில், அடியார்க்குநல்லார்,

''........கடல் பொறாது... அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்க மலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொண்டதனால், வடதிசைக்கண்ணதாகிய கங்கையாற் றினையும் இமயமலையினையும் கைக்கொண்டு ஆண்டு, மீண்டும் தென்றிசையை ஆண்ட தென்னவன் வாழ்வானாக வென்க....கடல் எறிந்து கொண்ட எல்லையளவும் வடபால் தனதாக்கி மீண்டும் தென்றிசையை ஆண்டவனென ஒப்பாக்கலு மொன்று....''

என்று கூறியிருப்பதால், பனிமலை வரைப்பட்ட அளவு (எழுநூற்றுக் காவதவாறு) ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு தெற்கே நீண்டிருந்த நிலப்பரப்பு முழுகிப் போயிற்றென்று அறியப்படும். இங்ஙனம் முழுகிப் போனது முற்றும் முத்தமிழ் நாட்டுள் பாண்டிநாடென்னும் ஒரு நாடே.

"அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட் டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வானாக வென்றவாறு" என்றதனால், இன்றுள்ள முகவை மதுரை நெல்லையாகிய மும் மாவட்டப் பாண்டிநாடு பழம்பாண்டி நாடன்றென்பதும், சேர சோழ நாடுகள் முதற்காலத்தில் பனிமலை வரை பரவியிருந்து பின்னர்ப் படிப்படியாய்த் தெற்கே தள்ளி வந்துவிட்டன என்பதும், பெறப்படும்.

பழம் பாண்டி நாடான குமரிக்கண்டம் முழுதும் முழுகிப் போனமை யினாலும், தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தனித் தமிழிலக்கியம் அனைத்தும் அழிக்கப்பட்டுப் போனமையினாலும், தமிழ்நாட்டு முதற்கால வரலாற்றிற்குத் தொல்பொருட் கலைத்துறை துணைசெய்யாதென்று தெற்றெனத் தெரிந்துகொள்க.

ஆகவே, திரு. தி. நா சுப்பிரமணியன் குறித்த கி.மு. 3ஆம் நூற்றாண்டுப் பிராமிக் கல்வெட்டுகளும், 19-1-1979ஆம் பக்கல் இந்துச் செய்தித்தாளில் வெளியிடப்பட்ட தகடூர் மாவட்ட அம்மன்கோயிற்பட்டிப் பிராமிக் கல்வெட்டும், வடவரும் வடநாட்டு மதங்களும் தென்னாட்டிற் புகுந்த இடைக் காலத்தனவாதலாலும், வடவர்க்கு இடப்பட்ட தானங்களைக் குறிப்பனவாதலாலும், வடவெழுத்திற் பொறிக்கப்பட்டன வாதலாலும், பண்டைத் தமிழெழுத்தை யறிவிக்குஞ் சான்றுகளாகா.

குமரிநாட்டுத் தொடக்கக் கால வரலாற்றை அறிதற்குத் துணையாக, இன்று எஞ்சியுள்ள பழம்பொருட்டுறைச் சான்று தமிழ் என்னும் மொழி ஒன்றே. ஏட்டெழுத்தும் வெட்டெழுத்தும் கருவி வேறுபாட்டால் வடிவு வேறுபடுதற்கு இடமிருத்தலாலும், பொதுவாக ஏட்டெழுத்து பெருவழக்கும் வெட்டெழுத்து அருவழக்கும் உடையனவாதலாலும், வடவர் தென்னாடு வந்ததிலிருந்து தமிழைக் கெடுத்தும் குறைத்தும் மறைத்தும் வருவதனாலும், மூவேந்தரும் ஆரியப் பூசாரிகட்கு அடிமையராகிக் கல்வித் துறையிலும் மொழித் துறையிலும் அவர் விருப்பம்போற் செய்துகொள்ள விட்டு விட்டமையாலும், தமிழையும் தமிழரையும்பற்றித் தமிழரால் தமிழில் எழுதப்பட்ட பண்டை ஏட்டுச்சுவடி ஒன்றும் இன்றின்மையால், சமண புத்தக் கல்வெட்டுகளைக் கொண்டு குமரித் தமிழெழுத்தைக் காண முயல்வது, ஆமணக்கு விதைத்து ஆச்சா விளைப்பது போன்றதே.

பிராமியெழுத்துப் பல்வேறு வடிவத்தில் வழங்கி அசோகன் காலத்தில் வளர்ச்சியடைந்ததாகத் தெரிகின்றது.

திரு. தி. நா. சுப்பிரமணியனார், தம் 'பண்டைத் தமிழ் எழுத்துகள்' என்னும் பொத்தகத்திற் பின்வருமாறு வரைகின்றார்:

"சரித்திர வாயிலாக நாம் அறியும் காலத்திலேயே பிராமி நெடுங் கணக்கு நிலையை அடைந்துவிட்டது. அஃது அந்த நிலையை எப்பொழுது

அடைந்தது என்பது தெரியவில்லை. ஆயினும், பழைய காலத்திலேயே இந் நாட்டில் பலவகை லிபிகள் வழங்கி வந்தனவென்பது, பண்டை நூல்களினின்றும் தெரியவருகின்றது.

“சற்றேறக் குறைய கி.மு. 300 ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் ஸமவாயாங்க ஸூத்ரம் கி.மு. 168ஆம் ஆண்டில் எழுதப் பட்டதாகக் கொள்ளப்படும் பண்ணாவணா ஸூத்ரம் முதலிய ஜைன நூல்களில், அக் காலத்தில் பதினெட்டு வகை லிபிகள் வழங்கி வந்தன வென்பது கூறப்பட்டிருக்கின்றது. மஹாவஸ்து என்னும் நூலில், முப்பது வகை லிபிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. லலிதவிஸ்தரம் என்னும் நூலோ, புத்தர் காலத்தில் அறுபத்து நான்கு வகை லிபிகள் இருந்தனவென்று தெரிவிக்கின்றது....

“அந்த நூல்களில் உள்ள அட்டவணைகளில் காணப்படும் பெயர்களுள் பல ஒத்திருக்கின்றன. அவற்றுள் நான்கு முக்கியமானவை களாகவும், சரித்திர உண்மைக் கேற்பனவாகவும் உள்ளன. அவை பின்வருமாறு:

1. ப்ராஹ்மீ (Brāhmi) அல்லது பம்பி (Bambhi)
2. கரோஷ்டீ (Kharoṣthi) அல்லது கரோட்டி (Kharotthi)
3. த்ராவிடீ (Dravidi) அல்லது டாமிலீ (Damili)
4. யவணாணியா (Yavaṇāṇiyā) அல்லது யவணாலியா (Yavanaliya)" (ப.95).

நெடுங்கணக்கு வண்ணமாலை முதன்முதல் தமிழிலேயே தோன்றிற்று. அதைப் பின்பற்றிய வடநாட் டெழுத்தே பிராமி.

சமணமும் புத்தமும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றின. அவற்றிற்கு முந்தினது ஆரிய வேதமதம் அல்லது வேள்வி மதம். ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்தது கி.மு. 2000. ஆரிய மொழிகட்கு அடி மூலம் வட திரவிடம். அது தென்றமிழின் திரிபு.

கரோட்டி வடமேலையிந்தியாவிற் சில நூற்றாண்டு வழங்கிக் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் மறைந்தது.

யவனானி என்பது கிரேக்க எழுத்து. யவனம் என்பது கிரேக்க நாட்டிற் கொரு பெயர். கிரேக்கம் உள்ளிட்ட மேலையாரியம் வடதிரவிடத் திரிபென்பது மேற்கூறப்பட்டது.

பிராமி என்பது தமிழ் நெடுங்கணக்கின் வடநாட்டுத் திரிபென்பதும் மேற்கூறப்பட்டது. அல்லாக்கால், திராவிடீ என்று ஏன் தமிழெழுத்தைப் பிரித்தல் வேண்டும்? இவையெல்லாம் தமிழர் அடிமைத்தனத்தின் விளைவே.

தலைக்கழகக் காலத்திலேயே, இற்றைத் தமிழெழுத்தைப் பெரும்பாலும் ஒத்த எழுத்துமுறை தோன்றிவிட்டது. தமிழெழுத்தினின்றே கிரந்தமும் தேவநாகரியும் திரிந்துள்ளன. அதனால், தமிழெழுத்துப் பல நூற்றாண்டுக் கல்வெட்டுத் தமிழுக்கு விலக்கப்பட்டிருந்ததாகத் தோன்றுகின்றது.

சமற்கிருதமும் வேதமொழியும் உட்பட ஆரிய மொழிகளெல்லாம் அடிப்படையில் தமிழாயிருப்பதால், அதற்கு முரணான எழுத்து வரலாறு இனிச் செல்லாது.

தமிழல்லாத பிற பெருமொழிகள் பிற்காலத்தனவாதலால், அவற்றின் வண்ணமாலைகள் படவெழுத்து, கருத்தெழுத்து, அசையெழுத்து, ஒலியெழுத்து என்னும் நால்வகை நிலைகளைக் கடந்தமை வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. தமிழோ வரலாற்றிற்கெட்டாத தொல்பழங் காலத்திலேயே நெடுங்கணக்கு வண்ணமாலை தோன்றப் பெற்றதினால், அதன் வளர்ச்சி நிலைகளை இறைவன் தவிர வேறெவரும் அறிய முடியாது.

இவ் வுண்மையை அறியாததனால், தி. நா. சுப்பிரமணியனார், எழுத்தின் ஒலிவடிவு வரிவடிவு என்னும் இருவகை வடிவுகளின் இருவேறு நிலைமைகளைப் பற்றிய யாப்பருங்கல விரிவுரை மேற்கோள் நூற்பாக்களைப் பிறழவுணர்ந்து, அவை எழுத்தின் நால்வகை வளர்ச்சி நிலைகளைக் குறிக்கின்றன வென்று எழுதிவிட்டார்.

அந் நூற்பாக்கள் வருமாறு:

1. **"உருவே யுணர்வே யொலியே தன்மையென**
   **இருவகை யெழுத்தும் ஈரிரண் டாகும்."**

2. **"காணப் பட்ட உருவம் எல்லாம்**
   **மாணக் காட்டும் வகைமை நாடி**
   **வழுவி லோவியன் கைவினை போல**
   **எழுதப் படுவ துருவெழுத் தாகும்."**

3. **"கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை**
   **உண்டென் றுணர்த்துவ துருவெழுத் தாகும்."**

4. **"இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்**
   **செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்."**

5. **"முதற்கா ரணமுந் துணைக்கா ரணமும்**
   **துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்**
   **அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்**
   **மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே."** (யா.வி. பக். 535)

இவற்றின் பொருள் விளக்கம் வருமாறு:

1. வரியெழுத்து ஒலியெழுத்து என எழுத்து இருவகைப்படும். அவற்றுள், வரியெழுத்து உருவும் உணர்வும் என்றும், ஒலியெழுத்து ஒலியும் தன்மையும் என்றும், இவ்விரு வகைப்படும்.

2. ஓவியம் வரைதலும் எழுத்து வரைதலும் எழுதுதல் எனப்படும். எழுத்தும் ஒருவகை ஓவியமே. ஓவியன் ஓர் உருவத்தை உட்புலனாகக் கொண்டு அதைக் கட்புலனாக எழுதுவது போன்று, எழுத்தாளன் ஓர் ஒலியை உட்புலனாகக் கொண்டு அதைக் கட்புலனாக எழுதுவது உருவெழுத்து.

எழுத்து என்பது உண்மையில் ஒலியே. "எழுதப் படுதலின் எழுத்தா கும்மே." (முத்து. 1). காலத்தாலும் இடத்தாலும் நெட்டிடையிட்டவர்க்குப் பயன்படுமாறு, செவிப்புல வொலி கட்புல வரியாக எழுதப்பட்டது.

தேர்ச்சி பெற்ற வழுவாத ஓவியன் வரைவே உண்மையான உருவத்தைக் காட்டும். அல்லாக்கால், குதிரை யோவியம் கழுதையும் நாயும் பன்றியும் போலத் தோன்றலாம். எழுத்து வரிவடிவம் திருத்தமாய் எழுதப்படல் வேண்டும். இன்றேல், குறித்த ஒலியை உணர்த்தாது; அல்லது வேறோர் ஒலியை உணர்த்தும்.

3. கட்புலனான வரிவடிவு, எழுதினானுக்கும் பிறருக்கும் உட்புலனாக ஓர் ஒலியை உணர்த்துவது உணர்வெழுத்து.

4. ஒருவன் ஒலித்த எழுத்தொலி, அவனுக்கும் பிறருக்கும் செவிப்புல னாவது ஒலியெழுத்து.

5. ஒருவன் ஓர் எழுத்தொலியைத் தானே ஒலித்து அது பிறக்குந் தன்மையறிவது தன்மை யெழுத்து.

மயிலைநாதர் உரையிலும் இலக்கண விளக்கப் பாயிரத்திலும் மேற்கோளாக வரும் நூற்பாக்கள், ஒலியைப் பெயர் என்று மாற்றியும், உணர்வை உண்முடிவு என்றும், குறிக்கின்றன. இம் முறையையே திவாகர மும் பிங்கலமும் தழுவுகின்றன.

தமிழ் உலக முதன்மொழி யென்பது மட்டுமன்று; அதன் செம்மை யான அமைப்பும், பொருளிலக்கணச் சிறப்பும், உரைநடை வேண்டா எழுநிலச் செய்யுளிலக்கியமும், முத்தமிழ்ப் புணர்ப்பும், நாற்பொருள் நோக்கும், பல்புலத்துறையும், தமிழர்க்குத் தனியெழுத்தில்லையென்று கருதுவாரைப் பகுத்தறிவற்ற அஃறிணை யாக்குகின்றன.

## நெடுங்கணக் கமைப்பு (உயிரெழுத்து 12)

ஆ - அ (சேய்மைச்சுட்டு)

ஈ - இ (அண்மைச்சுட்டு)

ஊ - உ (முன்மைச்சுட்டு)

இம் மூன்றே முதன்முதல் மாந்தன் வாயிலும் தமிழன் வாயிலும் பிறந்த உயிரெழுத்துகள். இவையே, ஆரியமொழிக ளெல்லாவற்றிலுமுள்ள சுட்டுச் சொற்களின் அடிவேர்கள்.

ஈ – ஏ, இ–எ.

ஊ – ஓ, உ–ஒ.

அ + இ = ஐ. அ + உ = ஔ.

ஐ, ஔ இரண்டும் புணரொலிகள் (diphthongs).

**''அகர இகரம் ஐகார மாகும்.''** (தொல். 21)

**''அகர உகரம் ஔகார மாகும்.''** (ஷை. 22)

**''ஆஈ ஊஏ ஐஓ ஔஎனும்**
**அப்பால் ஏழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.''** (தொல். எழுத்து. 4)

இவை தொல்காப்பியர் வகுத்தன வல்ல. ''நூன்மரபு'' என்னும் இயற்பெயரை நோக்குக. ''மொழிமரபு'', ''தொகைமரபு'', என்னும் இயற்றலைப்புகளையும் நோக்குக.

'நூன்மரபு' முதல் 'மரபியல்' வரை தொல்காப்பியம் முழுதும், முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தவையே.

**''ஐவியப் பாகும்.''** (தொல். சொல். 385)

**''ஈரள பிசைக்கும் இறுதியி லுயிரே**
**ஆயியல் நிலையுங் காலத் தானும்**
**அளபெடை நிலையுங் காலத் தானும்**
**அளபெடை யின்றித் தான்வருங் காலையும்**
**உளவென மொழிப பொருள்வேறு படுதல்**
**குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.''** (தொல். சொல். 766)

(சேனா. உரை) 'ஔஔ வொருவன் றவஞ்செய்த வாறு என்றவழிச் சிறப்புத் தோன்றும். ஒரு தொழில் செய்வானை ஔஔ வினிச்சாலும் என்றவழி மாறுபாடு தோன்றும். ஔஉ வொருவ னிரவலர்க் கீந்தவாறு, ஔஉ வினிவெகுளல் எனவும்; ஔவவன் முயலுமாறு, ஔவினித் தட்டுப்புடையல் எனவும்; அளபெடுத்தும் அளபெடாதும் வந்த வழியும், அப்பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க. இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப."

இதனால், குமரிநாட்டு வழக்குகள் மட்டுமன்றி, இற்றைத் தமிழ் நாட்டுப் பண்டை வழக்குகளும் பல இறந்தொழிந்தன என அறிந்துகொள்க.

வடவர், குமர+ஈசன்=குமரேசன், குல+உத்துங்கன்= குலோத்துங்கன் என்னும் புணர்ச்சிகளை யடிப்படையாகக் கொண்டு, ஏகார ஓகாரங்களையும் புணரொலிகளாகக் கொள்வர். அவை ஈகார ஊகாரத் திரிபுகளேயன்றிப் புணரொலிகளல்ல.

இனி, ஐகார ஔகாரங்கள் வடமொழியினின்று தமிழுக்கு வந்தன வென்று கூறும் தமிழ்ப் புலவரும் உளர். இது பழைய பாண்டியன் தமிழ்க் கழகம் போன்ற ஓர் அறிவரவையின் தேவையையே வலிதாய் உணர்த்து கின்றது.

வேத ஆரியரின் முன்னோர் எழுத்தறியாத முல்லை நாகரிக மக்களாய் இந்தியாவிற்குட் புகுந்தனர். முதன்முதலாகத் தோன்றிய ஆரிய இலக்கியமான இருக்கு வேத மந்திரங்கள், எழுதாக் கிளவியாகவே செவிமரபாக நீண்டகாலம் வழங்கிவந்தன. இதனைச் சுருதி (கேள்வி) என்னும் வேதப் பெயரே தெரிவிக்கும். ஆரியப் பூசாரியர் தமிழரொடு தொடர்புகொண்டு வேதமொழி விரிவடைந்த பின், தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி யமைக்கப்பட்ட ஆரிய வண்ணமாலையொடு சமற்கிருதந் தோன்றிற்று.

வடமொழி வண்ணமாலையின் பின்மை முந்திய கட்டுரையிற் கூறப்பட்டது. குறிலுக்குக் கரச் சாரியையும், நெடிலுக்குக் காரச் சாரியையும், ஐகார ஔகாரங்கட்குக் கான்சாரியையும், மெய்யெழுத்திற்கு அகரச் சாரியையும் (அ) ஆய்தவெழுத்திற்கு அ - கேனச் சாரியையும், தமிழிலேயே தோன்றின.

வடமொழியிற் கான்சாரியையும் அ- கேனச் சாரியையும் இல்லை; காரச் சாரியையைக் குறிலுக்குங் கொடுப்பர். தமிழில் “தாமினிது பிறக்கும் தகார நகாரம்.” (தொல். பிறப். 11) என்று செய்யுளில் இசைநிறைக்கவன்றி, வேறுவகையில் வராது.

ட, ட்ட, ண என்னும் வருடொலிகளும் (Linguals or Cerebrals) ளகரமும் வடமொழி தமிழினின்று கடன் கொண்டவை. இவை ஆரிய மொழிக் குடும்பத்திற் குரியனவல்ல.

பிராதிசாக்கியங்கள் என்னுங் கிளை வேத இலக்கணங்களும், ஐந்திரம் என்னும் வடமொழி முதற்பேரிலக்கணமும், தமிழிலக்கணத்தைப் பின்பற்றி யெழுந்தவையே. ஐந்திரம் தமிழகத்திலேயே தோன்றித் தமிழகத்திலேயே அழிந்ததாகத் தெரிகின்றது.

> **“புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்**
> **விண்ணுவர் கோமான் விழுநூ லெய்துவிர்”** (11 : 98 - 9)

என்னும் சிலப்பதிகார அடிகள் கவனிக்கத்தக்கன.

ஐந்திரத்திற்கு முந்தியது அகத்தியம் என்னும் முத்தமிழிலக்கணம். அகத்தியரே தென்னாடு வந்து தமிழ்கற்ற முதல் ஆரியர். அவர் வந்த காலத்தில் மகேந்திரம் என்னும் மாவேந்தமலை கடலில் முழுகிக் கிடந்தது. அது குமரியாறு தோன்றிய மலையா யிருந்திருக்கலாம். அகத்தியர்க்கு முந்திய காலமெல்லாம் தனித் தமிழர் காலமென்றும், அவரொடு தொடங்கியது ஆரியத் தொடர்பு கால மென்றும் அறிதல் வேண்டும்.

ஐகார ஔகாரங்கள் தமித்து நில்லாது சொல்லுறுப்பாக வரும்போது, முறையே அய் அவ் என்றொலித்துத் தனித்தனி ஒன்றரை மாத்திரை கொள்ளும்.

**"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**
**ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்."** (மொழி. 23)

**"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்**
**ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"**

ஐகாரம் சொல்லிடையில் யகரத்தை யடுத்து வரும்போது, ஒரு மாத்திரையாகவுங் குறுகும்.

**"ஓரள பாகும் இடனுமா ருண்டே**
**தேருங் காலை மொழிவ யினான."** (தொல். மொழி. 24)

எ-டு : இடையன், அரையன்.

தமிழிற் போன்றே பிறமொழிகளிலும் புணரொலிகள் உள.

எபிரேயம் (Hebrew) - ai, au

அரபி (Arabic) - ai, au

இலத்தீனம் (Latin) - ae, oe, au, ei, eu, ui

கிரேக்கம் (Greek) - ai, au, ei, eu, oi, ou, ui (முதலெழுத்துக் குறில்)
ai, ei, oi (முதலெழுத்து நெடில்)

சமற்கிருதம் - (ஏ, ஓ), ஐ, ஔ.

பழையாங்கிலம் (Old English) - ea. eo, ie, io (குறும்புணரொலி)
ea, eo, ie, io (நெடும்புணரொலி)

ஆங்கிலம் (English) - i (ai), u (i+ōō) - ஒருவரிப் புணரொலிகள்)
oi, ou - இருவரிப் புணரொலிகள்.

இந்த மொழிகளிலெல்லாம் புணரொலிகளை நீக்க ஒருவரும் கருதவில்லை. உயிர்மெய் யெழுத்திற்குத் தனிவடிவு வகுத்தது போன்றே, புணரொலிகட்கும் தனிவடிவு வகுத்தனர் தமிழர். இது அவரது மேனிலைப்பட்ட மெய்ப்பொருளறிவையே காட்டுகின்றது. மேலையர் இற்றை அறிவியல் கம்மியத்தில் உயரியரேனும், மொழித்துறையிற் குமரித் தமிழருக்குச் சமமானவ ரல்லர். ஓரோலிக்குப் பல வரியும் ஒரு வரிக்குப் பல வொலியும் வகுத்திருப்பதும், ஒலிக்காத வரியை நீக்காதிருப்பதும், இடையிட்ட இரு வரிகளைக் கொண்டு ஓரொலி புணர்ப்பதும், எத்துணை கற்பினும் ஆசிரியனுதவியின்றி ஒரு சொல்லைப் பலுக்க முடியாவாறு மொழியமைத் திருப்பதும், இவ் வுண்மையை எளிதாய் மெய்ப்பிக்கும். ஆதலால், இனிமேலாயினும், ஆங்கில முறையில் தமிழைக் கெடுக்க

முனையாதிருக்க. மேலும், மெய்முன்னும் உயிர் பின்னும் வரும்போ தெல்லாம் எல்லா மொழியிலும் இணைந்தே யொலிக்குமென்றும் எழுத்தென்பது உண்மையில் ஒலியேயன்றி வரியன்றென்பதும், உயிர் மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிப்பது ஓர் உயிரியை (பிராணியை), உயிர் வேறு மெய் (உடம்பு) வேறாகப் பிரிப்ப தொத்ததென்றும், ஆங்கில எழுத்துமுறை விரும்பியர் தம் அறியாமையை யுணர்ந்து அமைந்திருப் பாராக.

ஈ - ஏ, இ - எ. எ-டு: ஈனொரு - இன்னொரு, ஈன் - ஏன்.
ஏனோர் = மற்றோர். ஏன் - ஏனை; சீ - சே. சிவப்பு - செவப்பு.

ஊ - ஓ, உ - ஒ. எ-டு: ஊது - ஓது (காதில் மெல்லச் சொல்). உய் - ஒய். குத்து - கொத்து.

**- "செந்தமிழ்ச் செல்வி" பெப்பிரவரி 1979**

17

# எகர ஒகர இயற்கை

தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமை முதலிய தன்மைகள், கடந்த மூவாயிரம் ஆண்டாகத் தமிழ்ப் பகைவரால் மறைக்கப் பட்டும், ஆராய்ச்சியின்மையால் தமிழரால் அறியப்படாதும் இருப்பதால், எழுத்து என்னும் அடிப்படை நிலையிலேயே, மாணவர்க்கு மட்டுமன்றி ஆசிரியர்க்கும் மயக்கமுண்டாமாறு, பல்வேறு கூற்றுகள் தமிழுக்கு மாறாகவும் உண்மைக்கு முரணாகவும் அடுத்தடுத்துத் தமிழரென்பாரும் நிகழ்த்தி வருகின்றனர். இங்ஙனம் தம் செயலை அறியாது காட்டிக் கொடுப்பாரும் அறிந்தே காட்டிக் கொடுப்பாரும் ஆகிய இருவகை வையா புரிகளை அல்லது கேள்போற் பகைவரைத் துணைக்கொண்டே, வாள்போற் பகைவரும் தமிழைக் கெடுக்கத் துணிந்து முனைகின்றனர்.

''தொல்காப்பியனார் தமது நூலில், அக்காலத்தில் வழங்கி வந்த எழுத்துகள் எவ்விதம் வரிவடிவில் எழுதப்பட்டு வந்தனவென்பதைக் குறிப்பிடவில்லை; ஆயினும் சில எழுத்துகள் புள்ளிபெற்று நிற்பதை மாத்திரம் குறிப்பிட்டுள்ளார். அவ் வெழுத்துகள் குற்றியலுகரம், குற்றிய லிகரம், மகரக்குறுக்கம், ஆய்தம், மெய்யெழுத்து, எகரம், ஒகரம் என்பன.

"உயிரெழுத்துகளுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் தமக்கு இனமான நெடில்களை உடையன. அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் இனமாகிய நெடிலைத் தெரிவிக்க அக் குறில் உருவத்துக்கு ஓர் அதிகப்படியான குறி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் எகரம் ஒகரம் ஆகிய இரண்டின் விஷயத்தில் குறிலைக் குறிக்கும்பொழுது அதிகப்படியான புள்ளி சேர்க்கப்பட்டுள்ளன. குறிலின் நீட்சியே நெடில். ஆதலின் நெடிலின் வேறுபாடு விளங்கக் குறிலுருவத்துக்கு அதிகப்படியான குறியிட்டு நெடிலை உணர்த்துவதே இயற்கை. எகர ஒகரங்கள் அந்தப் பொதுவிதிக்கு மாறுபட்டுள்ளன. ஆசிரியரும் அ, இ, உ ஆகியவற்றுக்குரிய நெடிலுருவத்தைக் குறிப் பிடாமல், இவ் விரண்டை மட்டும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

''ஆதலின், எகர ஒகரங்களுக்குக் குறில் இல்லாமல் நெடிலே வழங்கும் ஒருவகையினின்றும் இவ் வெழுத்துகளின் உருவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது. வடமொழியில் எகர ஒகரங்கள் நெடிலையே குறிக்கும். அவற்றிற்கு

வடநாட்டார் இட்ட குறிகளை அவ்வாறே தமிழிலும் நெடிலுக்கு மேற் கொண்டு, அந் நாட்டாரால் வழங்கப்படாத குறிலையுணர்த்த வேறு குறிகளை அமைக்க வேண்டி வந்தது போலும். புள்ளியினால் மாத்திரைக் குறைவை அறிவித்தலைப் பிற புள்ளியிட்ட எழுத்துகளால் அறியலாம். அதைப் போலவே எகர ஒகரங்களின் திறத்திலும் நெடிலினின்றும் குறைந்த குறிலை உணர்த்தப் புள்ளியிட்டனர் என்றே கொள்ள வேண்டும்" என்று திரு. தி. நா. சுப்பிரமணியனார் தம் "பண்டைத் தமிழ் எழுத்துகள்" என்னும் சுவடியில் (பக். 86-7) வரைந்துள்ளார்.

இலக்கண நூலார் எழுத்துகளின் வரிவடிவுகளைக் குறிப்பதேயன்றி, அவற்றை வரணிக்கும் வழக்கம் எங்குமில்லை; அவற்றை வரணிக்கவும் முடியாது. டகர பகரம் போன்ற இரண்டொரு நேர்கோட்டு வரிவடிவுகளை மட்டும் ஓரளவு வண்ணிக்கலாம். ஆயின், அதனாற் பெறும் பயனில்லை. எழுத்துகளை எழுதுதலே, அவற்றின் வரிவடிவைக் காட்டுதலன்றி வேறாகாது.

புள்ளியென்பது எழுத்துகளின் வேறுபாட்டுக் குறியேயன்றி உண்மையான வரிவடிவாகாது. இதை யுணராது, பெரும்புலவரும் சிறந்த உரையாசிரியருமான நச்சினார்க்கினியரும், மகர வடிவைப்பற்றி வழுப்பட வுரைத்துவிட்டார்.

**"உட்பெறு புள்ளி யுருவா கும்மே"** (தொல். எழுத்து. 14)

மகர வரிவடிவின் அடைப்புள்ளிட்ட புள்ளி, மகரக் குறுக்கத்தின் வடிவாம் என்பதே இதன் பொருள்.

மகரக் குறுக்க வடிவு, தெலுங்கு கன்னட வண்ணமாலைகளில் இரண்டாம் டகரத்திற்குள்ள வரிவடிவை ஒருபுடை யொத்தது. தமிழ் மகர வடிவு இன்று போன்றே அன்றும் இருந்தது. மேற்குறித்த நூற்பா மகரக் குறுக்க வரிவடிவு பற்றியதேயன்றி, மகர வரிவடிவு பற்றியதன்று. அதைப் பிறழவுணர்ந்து, பகர வரிவடி வுள்ளிட்ட புள்ளியே மகர வரிவடிவம் என்று உரைத்ததொடு, அதை வரைந்தும் காட்டிவிட்டார் நச்சினார்க்கினியர். அவர் உரை வருமாறு:-

**"உட்பெறு புள்ளி யுருவா கும்மே."** (நூற்பா)

இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது.

மகரம் அதிகாரப்பட்டு நிற்றலின் ஈண்டுக் கூறினார்.

**இதன் பொருள்:** உட்பெறுபுள்ளி-புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி, உருவாகும்-மகரத்திற்கு வடிவாம் என்றவாறு.

எனவே, புறத்துப் பெறும் புள்ளியாவது மேற்சூத்திரத்தான் மெய் கட்குக் கூறும் புள்ளி. ஈண்டு உருவென்றது காட்சிப் பொருளை உணர்த்தி நின்றது.

**"உதாரணம்:** கப்பி கப்பி (கம்மி) என வரும் இஃது எதிரது போற்றல்."

இனி, உயிர்மெய் வடிவு பற்றிய "புள்ளி யில்லா...ஆறே" (17) என்னும் நூற்பாவுரையிலும்,

"அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார்" என்று தம் வழுவைக் கோடிட்டுக் காட்டிவிட்டார். ''உருவுதிரிந் துயிர்த்தல்'' என்பது உயிர்மெய் வடிவுகட் குரியதே யன்றி, மகர வடிவிற் குரியதன்று.

**''மெய்யின் அளவே அரையென மொழிப,''** (எழுத்து. 11)

**''அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.''** (ஷை 12)

**''அரையளவு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகும் தெரியுங் காலை''** (ஷை 13)

என்று முன்வரும் நூற்பாக்களையும்,

**''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.''** (ஷை 15)

**''எகர ஒகரத் தியற்கையும் அற்றே.''** (ஷை 16)

எனப் பின்வரும் நூற்பாக்களையும், புள்ளி பெறுதலன்றி ஓரெழுத்திற்கும் தொல்காப்பியர் வடிவு கூறாமையையும் நச்சினார்க்கினியர் நோக்கியிலர்.

மேலும், மகரவடிவிற்கு அகத்தும் புறத்தும் புள்ளியிடுவது ஏட்டெழுத்திற்கு இடர்ப்பாடான தென்பதையும், பகர வுட்புள்ளியை வளைத்தெழுதும் பகுத்தறிவுகூடப் பண்டைத் தமிழறிஞர்க்கு இல்லா திருந்திருக்காது என்பதையும் அவர் கருதியிலர்.

இலக்கணப் புலமையில்லாத் தி. நா. சுப்பிரமணியனாரும் மகரக் குறுக்க வடிவு கூறும் நூற்பாவென்று கண்டபோது, நச்சினார்க்கினியர் காணாது போனது ஆனையடிச் சறுக்கலே.

நச்சினார்க்கினியர் வழூவுரை, தமிழெழுத்துகள் ஏற்கெனவே பன்முறை வடிவு மாறின என்று கூறும் எழுத்துமாற்றக்காரருக்கு, ஒரு போலிச் சான்றாகவும் வாய்த்துவிட்டது.

மகரக் குறுக்கம் பற்றிய தொல்காப்பிய நூற்பாவும் அதற்கு இளம்பூரணர் உரைத்த வழூவுரையும் வருமாறு:

**''உட்பெறு புள்ளி உருவா கும்மே''** (தொல். எழுத்து. 14)

"இது, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

''(இ-ள்.) உள்பெறு புள்ளி உருவு ஆகும் - புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம். (அஃதின்மை பகரத்திற்கு வடிவாம்.)

"எ-டு: ப், (ப்) எனக் கண்டுகொள்க. கப்பி, கப்பி (கம்மி) எனவரும்."

இவ் வுரையைக் கண்டே நச்சினார்க்கினியரும் மயங்கினார் போலும்! இன்றுள்ளபடியே மகர வடிவம் முன்பும் இருந்தது. மகரங் குறுகும் போதே உட்புள்ளி பெறும். எ-டு: ம்.

மகரக் குறை வட்டத்திற்குள்ளேயும் ஒரு புள்ளியிருத்தல் காண்க.

கீழையாரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலம் தோரா. கி.மு. 2000. அவர்க்கன்று இலக்கியமும் இல்லை; எழுத்துமில்லை; தமிழரோ கி.மு. 10,000 ஆண்டுகட்குமுன் தலைக்கழகக் காலத்திலேயே முத்தமிழிலக்கிய விலக்கணங் கண்டவர். மேலும், உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகை யெழுத்துக் கொண்ட நெடுங்கணக்கு முதன்முதல் தமிழிலேயே தோன்றிற்று. இனி, சமற்கிருதத்திற்கு முந்திய வேதமொழி யுட்பட ஆரிய மொழிகட் கெல்லாம் தமிழ் முந்தியதும் மூலமுமான மொழியென்று, அதன் முச்சுட்டெழுத்துகளே முழுச்செவிடனுக்குங் கேட்குமாறு முழங்கிப் பறையறைகின்றன.

இனி, கிரந்த எழுத்தும் தேவநாகரியும் தமிழெழுத்தினின்றே திரிந்துள்ளன என்பது, ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகாமற் போகாது. இந்நிலையில், தமிழ் ஏகார ஓகார எழுத்துகளை வடமொழியினின்று கடன் கொண்ட தென்பது, பாட்டன் திருமணத்தைப் பேரனே நடத்தி வைத்தான் என்பது போன்றதே.

ஒரு மொழியிலுள்ள சொற்களினின்றே அம் மொழிக்குரிய எழுத்துகள் அமைக்கப்படும். அயன்மொழியிலுள்ள சிறப்பெழுத்துச் சொற்கள் கடன் கொள்ளப்படினும், அச் சொற்களேயன்றி அவற்றின் சிறப்பெழுத்துகள் முதற்கண் வழக்குப் பெறா. ஏகார ஓகார வடிவுகள் வடமொழியினின்று வந்தனவெனின், அவ் வீரெழுத்துகளையும். உயி ராகவோ உயிர்மெய்க் கூட்டிலோ, முதலாகவோ இடையாகவோ கடையாக வோ கொண்ட சொற்கள் தமிழில் இல்லாதிருந்திருத்தல் வேண்டும்.

ஏ, ஏக்கம், ஏங்கு, ஏசு, ஏடாசி, ஏடு, ஏணி, ஏணை, ஏது (வினா), ஏந்து, ஏப்பம், ஏமா, ஏமாளி, ஏய், ஏர், ஏராளம், ஏரி, ஏல், ஏல, ஏலம், ஏவு, ஏழு, ஏழை, ஏற்பாடு, ஏற்றம், ஏற்று, ஏறு, ஏன் முதலிய ஏகார முதற்சொற்களும்;

ஓ, ஓக்காளம், ஓடு (பெயர்), ஓடு (வினை), ஓடி, ஓங்கு, ஓசை, ஓட்டம், ஓட்டு, ஓட்டி, ஓட்டை, ஓடம், ஓணான், ஓதம், ஓது, ஓமல், ஓய்தல், ஓர்படியாள், ஓரம், ஓரி, ஓலை, ஓவியம் முதலிய ஓகார முதற்சொற்களும்;

அவ் வீருயிரும் மெய்யோடுகூடி மூவிடத்தும் வரும் நூற்றுக் கணக்கான சொற்களும், கல்லா மக்களும் வழங்கும் அடிப்படை யுலக வழக்குச் சொற்களாயிருப்பதை நோக்கும்போது, தி.நா. சுப்பிரமணியனாரின் அறியாமை எத்துணை அளவற்றதென்று கண்டுகொள்க.

முதற்காலத்தில் மாந்தன் வாயில் முதற்கண் தோன்றிய நெடிலுயிர்கள் பின்னர்க் குறில்களாகக் குறுகிய பின்பே மொழி வளர்ச்சியடைந்திருப்பதால்,

எகர ஒகரக் குறில்களை இருவகையிலும் முதலிலும் மூவிடத்துங் கொண்ட இருவகை வழக்குச் சொற்களும், ஆயிரக்கணக்காகப் பெருகியுள்ளன. ஏகார ஓகார நெடிற்சொற்களினும், எகர ஒகரக் குறிற்சொற்கள் ஏறத்தாழ இருமடங்கு பெருகியிருப்பது கவனிக்கத் தக்கது.

ஆ ஈ ஊ என்னும் நெடில்களையும் அ இ உ என்னும் அவற்றின் குறில்களையும் அமைக்கத் தெரிந்த தமிழர்க்கு, ஏ ஓ என்னும் நெடில் களையும் அவற்றின் எ ஒ என்னும் குறில்களையும் அமைக்கத் தெரிய வில்லை யென்பது, முன் பிறந்த மும்மகவையும் வளர்த்த பெற்றோர்க்கு, பின்பிறந்த இருமகவை வளர்க்கத் தெரியாது போயிற்றென்பது போன்றதே.

தொல்காப்பிய முதலதிகார முதலியலாகிய நூன்மரபிலுள்ள 33 குறு நூற்பாவிற்குள்ளேயே, எகர ஏகார ஒகர ஓகாரச் சொற்கள் எங்ஙனம் இயல்பாக வந்துள்ளன என்பதைப் பின்வரும் நூற்பாக்களாலும் அடிகளாலும் உணர்ந்து கொள்ளலாம்.

**எழுத்தெனப் படுப...............**
**முப்பஃ தென்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.** (1)

**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.** (2)

**அஇஉ எஒ என்னும்........**
**ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.** (3)

**ஆஈ ஊஏ ஐஓ ஔஎனும்**
**அப்பா லேழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.** (4)

**மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே.** (5)

**நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.** (6)

**கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.** (7)

**பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.** (8)

**பதினெண் ணெழுத்தும் மெய்யென மொழிப.** (9)

**மெய்யோ டியையினும் உயிரியல் திரியாது.** (10)

**மெய்யின் அளபே அரையென மொழிப.** (11)

**அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.** (12)

**அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகுந் தெரியுங் காலை.** (13)

**உட்பெறு புள்ளி யுருவா கும்மே.** (14)

**மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.** (15)

**எகர ஒகரத் தியற்கையும் அற்றே.** (16)

**புள்ளி யில்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்**
**ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்**
**ஆயீ ரியல வுயிர்த்த லாறே.** (17)

**மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.** (18)

**வல்லெழுத் தென்ப கசட தபற.** (19)

**மெல்லெழுத் தென்ப ஙஞண நமன.** (20)

**இடையெழுத் தென்ப யரல வழள.** (21)

**மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை.** (22)

**டறலள என்னும் புள்ளி முன்னர்க்**
**கசப என்னும் மூவெழுத் துரிய.** (23)

**லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.** (24)

**ஙஞணந மனவெனும் புள்ளி முன்னர்**
**தத்தம் இசைகள் ஒத்தன நிலையே.** (25)

**கசஞப மயவவ் வேழும் உரிய.** (26)

**ஞநமவ என்னும் புள்ளி முன்னர்**
**யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே.** (27)

**மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.** (28)

**யரழ என்னும் புள்ளி முன்னர்**
**முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.** (29)

**மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்**
**தம்முன் தாம்வரும் ரழஅலங் கடையே.** (30)

**ஆஏ ஓஅம் மூன்றும் வினாஅ.** (32)

**அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்.** (33)

அகர ஆகார முதற்சொற்களும் இகர ஈகார முதற்சொற்களும் உகர ஊகார முதற்சொற்களும் போன்று அத்துணை ஏராளமாக இல்லாவிடினும், அவற்றிற்கு அடுத்தபடியாக எகர ஏகார முதற்சொற்களும் ஒகர ஓகார முதற்சொற்களும், நூற்றுக்கணக்கினவும் இயற்கையானவும் இன்றியமை யாதனவும் பிற்கால நூல்களிற் போன்றே தொல்காப்பியத்திலும் பயின்று

வருவனவாகவும் இருக்கும்போது, எகர ஒகரக் குறில்கட்கு மட்டும் ஏன் அதிகப்படியான புள்ளியிட்டார்கள் என்பது விளங்கவில்லை.

பிறமொழியாளர் காணாத பொருளிலக்கணம் கண்டும் இயலொடு இசை நாடகங்களை இணைத்து முத்தமிழ் புணர்த்தும், எழுநிலச் செய்யுள் யாத்தும், எழுத்தினங்கட்கு உயிர், மெய், உயிர்மெய் என்று பெயரிடுமளவு மெய்ப்பொருளறிவு விஞ்சியும், ஆம்பல் தாமரை வெள்ளம் என்று அடுக்கிய கோடியும் முந்திரி கீழ்முந்திரி இம்மி யென்று நுணுக்கிய பின்னமுங் கணித்தும், உலக முழுதும் வழங்குமாறு எழுநாட்கிழமை வகுத்தும், ஏரணமும் மறையும் இயற்றியும், முக்கரணமுங் கடந்த முழுமுதற் கடவுளைக் கண்டும், தம் தெய்வப் புலமையை வெளிப்படுத்திய குமரித் தமிழர்க்கு, ஆ ஈ ஊ போன்றே ஏ ஓ நெடில்கட்கு அதிகப்படியான வரி வடிவமைக்கும் அறிவில்லாது போயிற்றென்பது, இம்மியும் நம்பத் தக்கதன்று.

சூரசேனி மாகதி முதலிய நாட்டுப் பிராகிருத மொழியாளர், ஏகார ஓகாரங்கள் எகர ஒகரமாகக் குறுகுமுன் குமரிநாட்டினின்று வடபாற் சென்றோ, ஏன்(என்) நிலம், ஓன் (உன்-ஒன்) வீடு என்று குறில்களை நெடிலாக்கிப் பேசினதினாலோ, எகர ஒகரம் இல்லாத அல்லது வழங்காத மொழிகளைப் பேசி வந்தனர். மேலை யாசியாவினின்று கி.மு. 2000-ற்குப்பின் இந்தியாவிற்குட் புகுந்த சிறுபான்மைக் கூட்டமான வேத ஆரியரின் மொழி, வழக்கற்றுப் பெரும்பான்மைப் பழங்குடி மக்களின் பிராகிருத மொழி களுடன் கலந்துபோனதினால், அவரது வேதமொழியான இலக்கிய மொழி யும் எகர ஒகரக் குறில்கள் இல்லாததாயிற்று. மேலையாரிய மொழிகளி லெல்லாம் எகர ஒகரக் குறில்கள் தொன்றுதொட்டு வழங்கி வருவதால், வேத ஆரியரின் முன்னோர் மொழியிலும் அவை வழங்கி யிருத்தல் வேண்டும்.

நெடிலுக்குரிய அதிகப்படி குறியை எகர ஒகரக் குறில்கட்கு இட்டது போன்றே, ஏனை முந்நெடில்கட்குப் போன்று ஏகார ஓகார நெடில்கட்குச் சுழிக்குறியிடாமையும்; இயற்கைக்கு மாறாகத் தோன்றுவதால்,

**ஏகார ஓகாரத் தியற்கையும் அற்றே.**

என்று தொல்காப்பியர் கூறியதைப் பிற்காலத்தார் எகர ஒகரத்தியற்கையும் அற்றே என்று திரித்துவிட்டனர் என்று கொள்வதற்கும் இடமில்லை.

புள்ளி யென்பது குத்து என்றே பொருள்படுவது. புள்ளுதல் குத்துதல், அலகாற் குத்தி (கொத்தி)த் தின்பதனாலேயே பறவை புள் எனப்பட்டது.

எழுத்தாணியால் ஏட்டிற் குத்தினால் துளை விழும். அதனால், ஏட்டுப்புள்ளி யெல்லாம் சிறு சுழியாகவே யிருக்கும். இச் சுழி ஆகார ஈகாரத்திற்குப்போல் இன்று ஓகார வடிவிற்கு இறுதியில் இடப்பட்டுள்ளது. பண்டை நாளில் ஈகார வடிவும் இறுதியிற் சுழி பெற்ற இகர வடிவாகவே யிருந்தது. அதைப் புதுப்பித்தல் வேண்டும்.

தேவநாகரி தோன்றுமுன் வடமொழிக்குப் பயன்படுத்தப்பட்ட கிரந்தவெழுத்தில் உள்ள ஒகார வடிவு, இன்று தமிழில் உள்ளது போன்றதே. கிரந்தவெழுத்து, தமிழெழுத்தினின்றே திரிந்ததென்பது முன்னரே பன்முறையும் கூறப்பட்டது.

தொல்காப்பியர் கூற்றுகளிற் சில மறுப்பிற் கிடமானவை. "எகர ஒகரத் தியற்கையும் அற்றே" என்று அவர் சேரநாட்டு வழக்கையே கூறியுள்ளார்; அவர் வாழ்ந்ததும் சேரநாடே. அவர் காலத்தில் அங்ஙனம் வழங்கி யிருப்பினும், காலமெல்லாம் அது தொடரவேண்டு மென்னும் யாப்புற வில்லை. அவர் காலமாகிய கி.மு. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின் இன்று 24 நூற்றாண்டு கடந்துள்ளது. இலக்கண விலக்கியங்களிலுள்ள தவறான அல்லது பழைமைபட்ட கருத்துகளைத் திருத்துவதற்கு, அதிகாரமுள்ள நூலாசிரியனுக்கு எக்காலத்தும் உரிமையுண்டு. எகர ஒகரம் பற்றிய தொல் காப்பியர் கூற்றையும் நன்னூலார்க்கு முன்பே ஒருவர் மாற்றியிருத்தல் வேண்டும். அதனையே,

**''தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்(டு)**
**எய்தும் எகர ஒகரமெய் புள்ளி''** (நன். 98)

என்று 13 ஆம் நூற்றாண்டினரான பவணந்தி முனிவர் கூறினார்.

இதன் பொருள், எல்லா எழுத்துகளின் வடிவும் தொன்றுதொட்டு வழங்கி வருவனவே. ஆயின், அக்காலத்தில் (பண்டைக் காலத்தில்) எகர ஒகர உயிர்களும் அவற்றைக் கொண்ட உயிர்மெய்யெழுத்துகளும் புள்ளி பெற்றன; என்றே தெள்ளத் தெளிவாகக் கொள்ளக் கிடக்கின்றது. இங்ஙனங் கொள்ளாக்கால், ''ஆண்டு..........புள்ளி'' என்பது மிகைபடக் கூறலாகவும், சிறிதும் பயனற்றதாகவும் இருத்தல் காண்க. "தொல்லை வடிவின எல்லாம்" என்பதிலேயே, எகர ஒகர மெய் புள்ளிபெற்றமை அடங்கியிருக்க அதனை யேன் மீண்டும் எடுத்துக் கூறவேண்டும்! ஆகவே, தொல்லை வழக்கிற்கும் உள்ள வழக்கிற்கும் வேறுபாடு காட்டவே, பிற்கூற்றெழுந்த தென்க.

இதை நோக்காது, "எல்லா வெழுத்துகளும் பல்வேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினையுடையவாம். அவ் வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து, எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளியைப் பெறும்'' என்றுரைத்தார் ஆறுமுக நாவலர். (19ஆம் நூற்றாண்டு)

இதனையே ஒட்டியுரைத்தார் வை. மு. சடகோபராமானுசாச்சாரியார்.

மயிலைநாதரும், ''எல்லாவெழுத்தும் பழையதாக வருகின்ற வரி வடிவினவே யாம்; அவ்விடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளிபெற்று நிற்பனவாம்." என்றே கூறி,

" 'ஆண்டு' என்ற மிகையானே, தாது, ஏது என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும்; எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப் பொதுமொழிகளும்; குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப்

புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும்; அறிதற்பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்குமேற் புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க" என்று சிறப்புக் குறிப்பு வரைந்தார்.

இனி, சங்கர நமச்சிவாயரோ, "எல்லா வெழுத்தும் பல்வேறு வகைப்பட வரைந்து வழங்கும் பழைய வடிவினையுடையவாம். அவ் வடிவினவாய் வழங்குமிடத்து, தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமுந் தனிமெய்களும், இயல்பாய புள்ளியைப் பிற்காலத்து ஒழித்து வரைந்து ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்பட வழங்கும் வழக்கினை யுடையவன்றி, துணியப்படுந் தொல்லை வடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்" என்று நூற்பாவின் பிற்கூற்றை விளக்குவார் போன்று இடைக்கால நிலைமையைச் சுட்டி விரித்துரைத்தார். இவர் காலம் 18ஆம் நூற்றாண்டு.

இவரெல்லாரும் இவ்வாறு வெவ்வேறு வகையில் ஒரே கருத்துப்பட வுரைக்க, இராமானுசக் கவிராயரோ வெனின்,

**"தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்(டு)**
**எய்தும்ஏ காரம்ஓ காரமெய் புள்ளி"**

என்று நூற்பாவையே மாற்றியமைத்து,

"எல்லா எழுத்துகளும் பலவேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவையே யுடையனவாம். அவ்வாறு வழங்குமிடத்து, ஏகார ஓகாரங்களும் தனி மெய்களும் பழைய புள்ளியைப் பெறும்.

சந்தேகப்பட வழங்கிவந்தன ரென்பதாயிற்று.

வரலாறு: எ, ஏ; ஒ, ஓ; கெ, கே; கொ; கோ; க், க; ங், ங என வரும். மற்ற வுயிர்மெய்களுந் தனிமெய்களும் இவ்வாறே புள்ளி பெறுமெனக் காண்க. தொல்லாசிரியர் முதலாயினோர்

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே"**

என்றும், "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" எனவுங் கூறினமையால், 'ஏகாரம் ஓகார மெய் புள்ளி பெறும்' எனத் திருப்பவேண்டிற்று. என்னெனின், இக்காலத்தார் ஏகார ஓகாரங்களுக்கே புள்ளியிட்டெழுவது பெரு வழக்காயினமையா லென்க."

என்று உரை வரைந்திருப்பது, பெரிதும் போற்றத்தக்கதாம். இவர் காலம் 19ஆம் நூற்றாண்டு.

முதுகுடுமிப் பெருவழுதி காலத்திற்குப்பின், தமிழ்க் காப்பும் கல்வெட்டுத் தொடர்பும் தமிழத் தமிழ்ப் புலவர் கையினின்று கடந்து விட்டமையாலும், போற்றுவாரின்றிப் புலவர் மரபு வரவர அருகி வந்தமை யாலும், வீரமாமுனிவர் காலத்திற் (18 ஆம் நூற்றாண்டு) புலமையில்லாதவர் படியெடுக்கவும் ஓலையெழுதவும் நேர்ந்துவிட்டமையால், குறில் நெடிலாகவும் மெய் உயிர்மெய்யாகவும் படிக்க முடியாவாறும் படிப்பார்க்குப்

பொருள் விளங்காவாறும் தாறுமாறாக எழுதப்பட்டது கண்டு, அம் முனிவர் எகர ஒகரக் குறிலுக்கு மேற் குறுங்கீச்சும் மெய்க்கு மேற்சுழியும் வைத்தெழுது மாறு ஏற்பாடு செய்தார்.

**"நீட்டல் சுழித்தல்**
**குறின்மெய்க் கிருபுள்ளி"** (12)

என்பது அவரது தொன்னூல் விளக்க நூற்பா.

இனி, ஏகார ஓகார உயிர்மெய்கட்குக் கே, கோ என்று இரட்டைச் சுழிக்கொம்பு அமைத்ததும் தாமேயென்று அவர்தம் கொடுந்தமிழ் நூலிற் கூறியிருக்கின்றார்.

எகர ஒகரக் குறில்களும் உயிர்மெய்களுமோ, இன்று தொல் காப்பியரின் புள்ளிபெறாதும், வீரமாமுனிவரின் நெடும்புள்ளி (நீண்ட புள்ளி) யென்னும் குறுங்கீச்சுப் பெறாதும், ஏகார வடிவு கீழ்ச்சாய்ப்புக் கீச்சும் ஓகார வடிவு கீழ்ச்சுழியும் பெற்றும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஏனைக்குறில் நெடில்கள்போல இயற்கையாக வேறுபட்ட வடிவங் கொண்டதுபோலத் தோன்றுகின்றன.

இதுகாறுங் கூறியவற்றால், "தொல்லை வடிவின எல்லா எழுத்தும்" என்றும், ஒரு தமிழெழுத்தும் பிராமியெழுத்தினின்றோ வடவெழுத்தி னின்றோ தோன்றவில்லை யென்றும், தொல்காப்பியம், இசைநுணுக்கம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலிய கிறித்துவிற்கு முற்பட்ட பண்டை நூல்களெல்லாம் தமிழெழுத்திலேயேயன்றிப் பிராமியெழுத்தில் ஏட்டுச் சுவடிகளில் எழுதப்படவில்லை யென்றும், கி.மு. 3ஆம் நூற்றாண்டுப் பிராமிக் கல்வெட்டுப் பண்டைத் தமிழெழுத்திற்குச் சான்றாகாதென்றும், பிராமியெழுத்தும் வடவெழுத்தும் தமிழெழுத்தினின்றே திரிந்தனவென்றும், தமிழே உலக முதல் உயர்தனிச் செம்மொழியென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

**"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீள்மரமாம்**
**நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம் - சீரணவு**
**காட்டொன் றொழிப்ப இசையாம் அதனளவு**
**மீட்டொன் றொழிப்ப மிடறு."**

**"நீண்மரத்தி லொன்றேற நேரிழையார் கூந்தலாம்**
**பூநெருப்பி லொன்றேறப் பூங்குளமாம் - பேணுங்**
**கழுத்திலொன் றேற இசையாம் இசையின்**
**எழுத்திலொன் றேறவாங் காடு"**

என்பன, தொல்காப்பியர் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக இடைக்காலத் தெழுந்த மாத்திரைச் சுருக்கம், மாத்திரைப் பெருக்கம் என்னும் சொல்லணிப் பாட்டுகள்.

**- "செந்தமிழ்ச் செல்வி" மார்ச்சு 1979**

18

# உயிர்மெய் வரிவடிவுகளின் ஓரியலின்மை

தொடக்க வகுப்பில் எழுத்து எழுதிப் பயிலும் சிறுபிள்ளைக்கு, க, கா; ங, ஙா; ச, சா; ஞ, ஞா; ட, டா என்று எழுதிக்காட்டி, ணவ்விற்கு அடுத்த எழுத்தை எழுதச் சொன்னால், 'ணா' என்றுதான் எழுதும். இதனால், ஓரியலாக எழுதுவதே இயற்கை யென்றும், முந்திய வகையென்றும், சிறுபிள்ளைக்கும் சொல்லாமலே தெரியும் என்றும், அறிந்துகொள்ளலாம்.

இவ் வியற்கை முறையை மாற்றி ஏன் ' ' என்று எழுதினர் முன்னோர் அல்லது இலக்கண ஆசிரியர் எனின், கூட்டெழுத்தில் அல்லது விரைவெழுத்தில் ணவ்வடிவுங் காலுஞ் சேர்த்தெழுதின், காலும் ஒரு கோணச் சுழிபோல் தோன்றி ணகர ஆகாரத்தை இரு னகரமாகக் கருதி மயங்க இடந்தரு மாதலின், அதை நீக்குதற்கே என்க.

இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஔ என்னும் ஏழுயிரும் ஏறும் ணகர மெய் வடிவுகள், அத்தகைய மயக்கத்திற்கு இடந்தராமையால், தி, தீ, து, தூ, தெ, தே, தௌ என்பன போன்றே ணி, ணீ, ணு, ணூ, ணெ, ணே, ணௌ என்று இயற்கையான முறையில் எழுதப்படுகின்றன.

ஐகார வுயிர்மெய்க்கு னகரம்போல் தோன்றும் இரட்டைக் கொம்பும், ஒகர ஓகாரமெய்கட்குக் கொம்புங் காலும், இயற்கை முறையில் வரின், பல சுழிகள் போல தோன்றி மேற்கூறிய மயக்கத்தை மிகுக்குமாதலின், அவ் வுயிர் மெய்கள் என்று வேறுபட்ட வடிவில் எழுதப்படு கின்றன.

இரு அல்லது முக்கோணச் சுழியெழுத்துகள் போன்றே இருவளை வுள்ள எழுத்துகளும் சிலவிடத்து மயக்கந் தருவனவா யிருத்தலால், அத்தகைய இடங்களில் அவையும் இயற்கைக்கு மாறான வடிவில் எழுதப்படுகின்றன.

றகர வடிவு இருவளைவுள்ளதா யிருந்தும், ஏன் ஐகார வுயிர்மெய் வடிவில், றை என்றே இயற்கை வடிவில் எழுதப்படுகின்ற தெனின், அதற்குக் கோடு கீழிறங்கியிருப்பதால் மயக்கத்திற்கிடமில்லாது தடுக்கின்ற தென்க. இதனால், இன்றியமையாத இடங்களிலேயே ஐகார வுயிர்மெய்க்குக் கொக்குக் கழுத்துப் போன்ற மேற்கொடுக்குக் கொண்டிருக்கின்றனர் என்பதை அறிக.

இனி, ஆங்கிலத்தில் இல்லாத உயிர்மெய்யெழுத்துகள் தமிழில் இருப்பதால், எழுத்துகள் பல்கித் தட்டச்சடிப்பில் மிகுந்த இடர்ப்பா டுண்டாக்குகின்றன வென்றும், தொலைவரி யடிப்புக் காலத்தை நீட்டிக் கின்றனவென்றும், குறைகூறித் தமிழெழுத்துகளைக் குறைக்க வேண்டும் என்பர் சிலர்.

வடமொழி நெடுங்கணக்கிலும் அதைப் பின்பற்றிய வடநாட்டு மொழிகளிலும் திராவிடமொழிகளிலும் உள்ள வண்ணமாலைகளிலும், வல்லினம் ஐந்தும் நந்நான்கு வகையா யிருப்பதொடு, சகரத்திற்கினமான இசுப்பொலிகளும் (sibilants) மூன்றாக வுள்ளன.

உயிர்மெய்களின் உகரக்குறி, எழுத்து வடிவிற்கேற்பத் தெலுங்கிலுங் கன்னடத்திலும் இருவேறு வகையாயும், மலையாளத்தில் நால்வேறு வகையாகவும் உள்ளது.

சேமிய மொழிகளில் உயிர்மெய்க்குத் தனிவடிவில்லாவிடினும், மெய்வடிவு சொன் முதலிடைகடை யென்னும் மூவிடத்திற்கேற்பப் பெரும்பாலும் வேறுபடுகின்றது. மேலும், பற்பல எழுத்துகளின் வடிவுகள் ஒவ்வொன்றாகவே யிருந்து, புள்ளிகளின் மேல்கீழ்உள் என்னும் இடவேறுபாட்டாலும், ஒன்று இரண்டு மூன்று நான்கு என்னும் தொகை வேறுபாட்டாலுமே, வேறு பகுத்தறியப்படுகின்றன. இனி, அ இ உ என்னும் முதன் மூவுயிர்க்கும் தனி வடிவுகளில்லையென்று கருதப்படுகின்றது. ஒரு குறுங்கீச்சு மேலும் கீழும் தடித்தும் எழுதப்படுவதால், முறையே முதன் மூவுயிர்க் குறில்களும் குறிக்கப்படுகின்றன. அவற்றின் நெடில்களைக் குறிக்க 'அலிப்' (அலெப்), 'வா,' 'யே' என்னும் எழுத்துகள் முறையே சேர்க்கப்படுகின்றன, 'வா' என்னும் ஒரேயெழுத்து வகரமாகவும் உகரமாக வும், 'யே' என்னும் ஒரேயெழுத்து யகரமாகவும் இகரமாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

ஆங்கில வண்ணமாலையின் ஒழுங்கின்மை அனைவரும் அறிந்ததே.

**``In the English tongue we speak**
**Why is break not rhymed with freak**
**Well you tell me why it's true**
**We say sew but likewise jew.**

**``Beard sounds not the same as heard**
**Cord is different from word**
**And since pay is rhymed with say**
**Why not paid with said I pray.**

**``Cow is cow but low is low**
**Shoe is never rhymed with foe**
**And in short it seems to me**
**Sound and letter disagree."**

என்று Lord Cromer என்னும் ஓர் ஆங்கிலப் பெருமகனாரே பாடியுள்ளார். ஆயினும், ஒருவரும் அதைத் திருத்தக் கருதவில்லை.

ெ ே ெ ே என்னும் எழுத்துகள் ஈரிடமே கொள்கின்றன. இவற்றை ணொ, ணோ, றொ, றோ என்றெழுதின் மூவிடங் கொள்ளும். கால் சேர்க்காமையால் அவை முடம்பட்டு நடக்க முடியாது வருந்தவுமில்லை; கால்வேண்டுமென்று நம்மிடம் முறையிடவுமில்லை.

எழுத்து மாற்றம் எவ் வகையிலுந் தமிழுக்குத் தேவையேயில்லை.

இன்று எழுத்தை மாற்றின், மனையகங்களிலும் அலுவலகங்களிலும் நூலகங்களிலுமுள்ள கோடிக்கணக்கான மரபெழுத்து நூல்களையெல்லாம் மாற்றியாகல் வேண்டும். அவற்றிற்கு ஈடு செய்ய இறைவனும் வரான். புதிய மாற்றெழுத்து நூல்களையெல்லாம் அச்சிட ஒரு தலைமுறையாகும்; கோடிக் கணக்கான பணமுஞ் செலவழியும். அவற்றைக் கொடுக்கும் வள்ளல்கள் இனிமேல்தான் பிறக்க வேண்டும்.

ஏற்கெனவே யுள்ள நூல்களை வேண்டுமாயின், கரிவலம் வந்த நல்லூரிற் போல் எரியூட்டுவதற்குத் தோன்றியங்கள் (ஆகமங்கள்) துணை செய்யலாம். ஆயின், அதற்கும் ஆரியமறை யோதுவார்க்குப் பணங் கொடுத்தல் வேண்டும்.

எழுத்து மாற்றுவதால் ஒரு நன்மையுமில்லை. கேடோ அளவற்ற தாகும்.

இனி, எழுத்து மாற்றமும் ஒருவகைப்பட்டதன்று. பெரியார் எழுத்துமுறை ஒன்று; புலவர் குழந்தை எழுத்துமுறை ஒன்று; பிறர்கூறும் எழுத்துமுறை வெவ்வேறு. உயிர்மெய் வரிவடிவுகளை, ஒருவர் கிரந்தம் போற் புணர்க்க வேண்டும் என்பர்; ஒருவர் வடமொழிபோற் புணர்க்க வேண்டும் என்ப. ஒருவர் பிராமிபோற் புணர்க்க வேண்டும் என்பர்; பிறர் வெவ்வேறு வகையிற் புணர்க்க வேண்டும் என்பர். ஒருசிலர் உயிர்மெய்யே வேண்டியதில்லையென்றும், ஆங்கிலம்போல் மெய்யையும் உயிரையும் அடுத்தடுத் தெழுதினாற்போதும் என்றும் கூறுவர்.

இங்ஙனம் வடிவுபற்றிய கருத்து வேறுபாடுகள் ஒருபக்கம் இருக்க, சிலர் பிறமொழிச் சிறப்பெழுத்துகளைத் தமிழிற் புகுத்த வேண்டுமென்பர். அவரும், வடமொழிச் சிறப்பெழுத்துகளை மட்டும் புகுத்த வேண்டும் என்பாரும், ஆங்கிலச் சிறப்பெழுத்துகளையும் புகுத்த வேண்டும் என்பாரும், பிறமொழிச் சிறப்பெழுத்துகளையுஞ் சேர்க்கவேண்டும் என்பாருமாய்ப் பல திறத்தர்.

பாண்டியர் முதலிரு கழகம் போன்ற தொன்றின்மையால், இங்ஙனம் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் வரம்பின்றிப் பாழாக்கப்பட்டு வருகின்றன.

இன்று எழுத்து மாற்றத்தை விரும்புவார் தகுதி நோக்கின், பெரும் புலமையும் மரபுகாக்கும் பொறுப்புத்தன்மையும் ஒருவர்க்கு மில்லை யென்றே தெரியவரும்.

**தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,**

10, 11-6-1934 அன்று, திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் முதல் மாநாட்டில் தலைமை தாங்கி, ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதி வருமாறு:

"பழந்தமிழ்க் காலமுதல் வடசொற்களும் திசைச்சொற்களும் தமிழில் இன்றியமையாதவிடத்து வழங்கி வந்திருக்கின்றன. ஆனால், அவ்வாறு வழங்கி வருகின்றபோது, அவை தமிழியலுக்கு ஏற்ப உருமாறித் தொழில் புரிய வேண்டுமென்பது ஆன்றோர் வகுத்த தமிழ்மரபு. "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்பது நூற்பா. வடவெழுத்துகளிற் பல தமிழியலுக்கு முரண்படுதலின், அவற்றை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட பிற்காலத்திலும், இவ் வியலுக்கு மாறுபடா வண்ணம் நன்னூலார் விதி வகுத்தார். சங்ககால முதல் இதுகாறும் தோன்றிவரும் சிறந்த நூல்கள் யாவும், இம் மொழிமரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன. ஒரு சிலர், தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்துள்ளனவென்றும், அவற்றை அகற்ற வேண்டுமென்றும், கூறுகின்றனர். 'குரோமர்' என்ற ஆங்கிலப் புலவர் தம் மொழியின் எழுத்திலக்கணத்திற் காணப்பெறும் சில குறைகளைத் தொகுத்து ஒரு கவியில் விளக்கியுள்ளார். எனினும், ஆங்கில மொழியின் வளர்ச்சி சிறிதுங் குன்றவில்லை. அச்சுக்கோப்போரின் துன்பத்திற்காகச் சிலர், தமிழ் எழுத்துகளிற் சிலவற்றை அகற்ற விரும்பு கின்றனர். வேறு சிலர் `f' என்ற ஆங்கில எழுத்தையும் தமிழிற் சேர்க்கக் கருதுகின்றனர். இவை எம்மொழியாளரும் கைக்கொள்ளாதவை. வீரமா முனிவர் போப்பையர் போன்ற அயல்நாட்டார்கூட இவ்வாறு சொல்லத் துணியவில்லை. வடகலை தென்கலை உணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றார், வடநூலார் கொள்கையில் அடிப்பட் டிருந்தும், தமிழமரபு இழுக்கா வண்ணம் உரைநூல்கள் இயற்றினார்களே! ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாதபோது, தமிழ்மொழியைத் திருத்தலா மென்பது பேதைமையாகும். கலைநூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் நூலிலோ வழக்கிலோ கிடைத்தால், அவற்றைப் பயன்படுத்த வேண்டும்; இல்லாதபோது தமிழில் படைத்துக் கொள்ள வேண்டும்..................செருமானியர் அறிவுநூற் பொருள்களைக்

குறிப்பதற்கான சொற்களைத் தம் தாய்மொழியிலேயே ஆக்கிக்கொண்டனர். இம் முறையைத் தமிழரும் பின்பற்றலாம்.”

பெரும் புலவரும் பெருந் தமிழ்க்காவலரும் இங்ஙனம் எழுத்து மாற்றத்தை எதிர்ப்பது கவனிக்கத்தக்கது.

பெரியார் ஒரு பெரியார். அவர் தொண்டு எழுத்துமாற்றமன்று. செயற்கரிய செய்வதே பெரியார் இயல்பு. பிராமணியத்தைப் போக்குவதும் பகுத்தறிவைப் புகட்டுவதும் மூடப் பழக்கவழக்கங்களை ஒழிப்பதும் தமிழரைத் தன்மானத்தொடு வாழச்செய்வதுமே பெரியாரின் உண்மைத் தொண்டு. ‘விடுதலை’, ‘குடியரசு’ முதலிய கிழமையன்களின் எழுத்து மாற்றம் சிக்கனம் பற்றியதே. இன்று பெரியாரின் படைத்தலைவர்போல் தம்மைக் காட்டிக் கொள்பவர் இளையரும் முளையருமாயிருந்த காலத்தே, நான் பெரியாரொடு நெருங்கிய தொடர்புகொண்டவன். என்றைக்கு இந்தி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டதோ, அன்றைக்கே எனக்குப் பெரியார் தொடர்பு தொடங்கிற்று. நான் தமிழ்நலம்பற்றி ஏதேனுஞ் சொன்னால், “அதெல்லாம் நீங்களே தமிழ்ப் பண்டிதர்களாகச் சேர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்யுங்கள். நான் உங்களைப்போலப் பண்டிதனல்லேன். படியாத (பாமர) மக்களிடம் சென்று அவர்களுடைய அறியாமையை எடுத்துக்காட்டி என்னாலியன்றவரை சமுதாயத்தொண்டு செய்பவன்” என்பார். ஒருமுறை என் ஒப்பியன் மொழிநூல்பற்றி ஈரோட்டிலிருந்து 5 பக்கம் தம் கைப்பட எழுதியிருந்தார். அப் பொத்தகமும் 100 படிகள் என்னிடம் விலைக்கு வாங்கினார். சிலமுறை அவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியு மிருக்கிறேன்.

ஒருமுறை, நான் காட்டுப்பாடியிலிருந்தபோது, எனக்கு வருவா யில்லை யென்று தெரிந்து, என் வீடு தேடிக் கொஞ்சம் பணங்கொடுக்க வந்து, நான் ஊரில் இல்லாததால் அக்கம்பக்கத்திலுள்ளவரிடம் செய்தியைச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பின்பு, நான் திருச்சிராப்பள்ளி சென்றிருந்தபோது நண்பருடன் சேர்ந்து பெரியாரைக் காணச் சென்றேன். அவர் என்னைத் தனியாய்த் தம் மாளிகைக்கு உள்ளே அழைத்து, இருநூறு உருபா நன்கொடையாகத் தந்தார். அது ஒரு சிறு தொகையே யாயினும் பிறரிடத்திற் பெறும் ஈராயிரத்திற்குச் சமம் என்பது, அவர் சிக்கனத்தை யறிந்த அனைவரும் உணர்வர்.

நான் பெரியாரை மதிப்பதெல்லாம், எவருக்கும் அஞ்சாமையும் எதையும் பொதுமக்கட்கு எடுத்து விளக்கும் ஆற்றலும் பற்றியே. கோடிக்கணக்கான மக்களொடு கூடிக்கொண்டு கும்பலில் கோவிந்தா போடுவதுபோல், பேராயத்தார் ஆங்கிலராட்சியை எதிர்த்தது அத்துணை ஆண்மையன்று. கும்பகோணமாயினும் குமரிக்கோட்டக் காசியாயினும்,

சற்றும் அஞ்சாது பிராமணியத்தைச் சாடுவதிலும் அதன் கொடுமைகளைக் கல்லா மாந்தர்க்கு விளக்கிக் கூறுவதிலும், ஓய்வு சாய்வின்றி இனநலத்தைப் பேணுவதிலும், அவருக்கு ஈடானவர் இதுவரை இருந்ததுமில்லை; இனியிருக்கப் போவதுமில்லை. பிரித்தானியத்தை யெதிர்த்ததிலும் பிராமணியத்தை யெதிர்த்ததே பேராண்மை.

கலப்பு மணம், பகுத்தறிவுச் செயல், தன்மான வாழ்வு முதலிய உயிர்நாடிக் கொள்கைகளை விட்டுவிட்டு, எழுத்து மாற்றம் ஒன்றையே மேற்கொள்வது, பண்டத்தை விட்டுவிட்டுப் படிவத்தைப் பற்றுவதே யாகும். தனித்தமிழை வெறுப்பவரும் உண்மையான வரலாற்றை ஒப்புக் கொள்ளாதவரும் இந்தியைப் பொதுமொழியாக ஏற்பவருமான வையா புரிகளுடன் கூடிக்கொள்வதும், தமிழுக்கு மாறான ஆரிய அமைப்பகங் களுடன் ஒத்துழைப்பதும், மூலமும் படியும் என்பதை அசலும் நகலும் என்றெழுதுவதும், பகுத்தறிவுக் கொள்கையின் அல்லது தன்மான வாழ்வின்பாற்பட்டன வாகா.

பெரியாரின் நடத்தையைப் பின்பற்றாது, பெரியார் விழாக் கொண்டாட்டத்தில் ஊர்தொறும் ஊர்வலத்திற் கலந்துகொள்வதும், விடிய விடியச் சொற்பொழிவாற்றுவதும், பெரியார் படிமைக்கு மாலையணிவதும், பெயர் விளம்பரத்திற்கே யன்றி வேறெதற்குப் பயனாம்?

இதுகாறும் தமிழ்நாட்டில், தமிழர்க்கு மூவேறு வகையில் வழிகாட்ட மூவேறு பெரியார் தோன்றியுள்ளனர். அவருள் ஒருவர் ஈ.வே. இராமசாமிப் பெரியார். எழுத்து மாற்றத்தையே அவர் தொண்டாகக் காட்டுபவர், அவர் பெருமைக்கு இழுக்கே தேடுபவராவர்; தம் சிறு கொள்கைக்குப் பெரு வெற்றி பெறவே, பெரியார் விழாவைப் பெருவாய்ப்பாகக் கொண்டுள்ளனர்.

அறநூற் பெரியாரும் தனித்தமிழ்ப் பெரியாரும் தன்மானப் பெரியாரும் ஆகிய,

### முப்பெரியார் அகவல்

தமிழகத் தீரே தமிழகத் தீரே
மொழிவர லாறு மொழிவது கேண்மின்
பிராமணி யம்மெனும் பெருங்கொடு நஞ்சு
நாவலம் முழுதும் நலங்கெடப் பரவிப்
பைந்தமிழ் திரவிடப் பழங்குடி மக்கள்
நைந்தமை தடுக்க நன்மருந் துவராய்
**வள்ளுவர் மறைமலை** வன்மறப் **பெரியார்**
தெள்ளிய மூவர் தென்னகந் தோன்றினர்
நாற்பொருள் விளக்கும் நடுநிலை யறநூல்
நானிலப் பொதுவாய் நல்கினார் தேவர்

அயற்சொல் களைந்த அருந்தமிழ் நூல்களால்
மயற்கை யறுத்தார் மறைமலை யடிகள்
அடிமையு மதமும் அளைந்தமை கண்டே
விடுதலை பெறவழி வேறிலை யென்றே
கடவுள் இலையெனுங் காரங் கலந்து
மடந்தவிர்த் தனர்தன் மானப் பெரியார்
மூவர் குறிக்கோள் முடிபும் ஒன்றே
அடிமை யொழித்த லல்லதை எழுத்தின்
வடிவை யொழித்தல் பெரியார்க் கில்லை
குறுகிய நோக்கிற் கொள்கை பிறழ்ந்து
பண்டம் விட்டுப் படிவம் பற்றித்
தமிழர் ஒற்றுமை தடுத்துப் பகைவரைத்
தம்மொடு சேர்த்துத் தமிழுணர் விழந்து
பெரியார் பெயரைக் கெடுப்பார்
தெரியார் தம்மால் தீதுறல் அவர்க்கே.

**– "செந்தமிழ்ச் செல்வி" ஏப்பிரல் 1979**

*****

# தாய்மொழிப்பற்றே தலையாயப்பற்று

தாய்மொழிப் பற்றில்லாத் தன்னாட்டுப் **பற்றே**
  தன்னினங் கொல்லவே தான்கொண்ட **புற்றே**

மொழியொன் றில்லாமலே இனமொன்று **மில்லை**
  இனமொன்றில் லாமலே நாடொன்று **மில்லை!**

மதியுணர் வின்றியே மடிவெனுந் தூக்கம்
  மயங்கிக் கிடக்கின்றாய் மறுத்தெழு **தமிழா!**

கரந்தும் அண்டைவீட்டுள் கால்வைத்த லின்றிக்
  கண்மூடித் தூங்குவாய் கடிதெழு **தமிழா!**

வருமானங் குன்றியே வறியவ னானாய்
  வாழ்நாள் வீணாகாமல் வல்லெழு **தமிழா!**

அருசுவை யுண்டியே ஆக்கிடின் உன்கை
  அருந்த மறுக்கின்றார் ஆய்ந்தெழு **தமிழா!**

ஒலியொடு வரியும்பின் ஒழியவே அண்மை
  உறும்தேவ நாகரி உணர்ந்தெழு **தமிழா!**

பார்முதல் பண்பாடு பயின்றவன் **தமிழன்**
  பலரையும் உறவெனப் பகர்ந்தவன் **தமிழன்**.

பிறப்பாலே சிறப்பில்லை **தமிழா** – இதைப்
  பெருநாவ லன்சொன்னான் **தமிழா!**

மறத்தாலும் திறத்தாலும் **தமிழா** – மேன்மை
  மதியறி வொழுக்கத்தால் **தமிழா!**

தமிழினுக் குலகினில் தகுவதே தலைமை
தமிழரும் அடையவே தாழ்விலா நிலைமை

இமிழ்தரு மொழியியல் எய்துக நலமே
எமதுமெய் வரலாறே எழுகவே வலமே.

வேனிலிற் கான்மலை வெம்மைகொள் பாலையின்
விளைநில மாவதிந் **நாடு**

மின்னும்பல் மணிகளும் மிகுவிலை யாற்பெற
மேலுலகும் விரும்பும் **நாடு**

கொன்றுதன் மகனையே கொடுமையை நிமிர்த்துச்செங்
கோன்முறை குலவிய **நாடு**

நீலியின் கணவற்கு நிகழ்த்திய வாய்மொழி
நிறைவேற்றின வேளாளர் **நாடு**

அறியாது முரசணை அயர்ந்திடும் புலவர்க்கும்
ஆலவட்டம் விசிறும் **நாடு**

சித்தரின் மருத்துவம் சிறந்தபொன் னாக்கமும்
சிலம்பொடு திகழ்ந்ததிந் **நாடு**

❖❖❖❖❖